# ஆதி திராவிடன்

## இதழ்த் தொகுப்பு

தொகுப்பாசிரியர்
இரா. பாவேந்தன்



# ஆதி திராவிடன்

இதழ்த் தொகுப்பு



733

சந்தியா பதிப்பகம்

தமிழகத்திலிருந்து இலங்கைக்குப் புலம்பெயர்ந்த தாழ்த்தப்பட்ட தமிழர்களால் கொழும்பு நகரிலிருந்து வெளியிடப்பட்ட மாதஇதழ் ***'ஆதிதிராவிடன்' (1919 - 1921).*** திராவிட இயக்கத்தின் முன்னோடி அமைப்பான நீதிக்கட்சியின் கருத்தியல்களோடு இந்த இதழ் தொடக்க காலகட்டத்தில். நல்லுறவு கொண்டிருந்தது. இவ்விதழ் வைதிகசார்புக் கருத்துக்களை வெளியிட்டு வந்த போதிலும் சாதி ஒழிப்பு மனுதர்ம எதிர்ப்பு, தாழ்த்தப்பட்டோர் விடுதலை முதலிய குறிக்கோள்களில் எவ்விதக் கருத்தியல் சமரசத்தையும் மேற்கொள்ளவில்லை. தமிழகத்தில் நடைபெற்ற முதல் சாதிமறுப்பு மணம், மதமாற்றம் பற்றிச் சில புதிய தகவல்களை ***ஆதிதிராவிடன்*** பதிவு செய்துள்ளது.

இத்தொகுப்பில் தாழ்த்தப்பட்டோர் அரசியல், கல்வி, சமயம், இலக்கியம், பெண்கள் முன்னேற்றம் தொடர்பாக ***ஆதிதிராவிடன்*** இதழில் வெளியிடப்பட்ட கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. மகாத்மா ஜோதிராவ் ஃபூலே இயக்கத்தைச் சார்ந்த மன்னர் சாகுமகாராசர் உரையின் தமிழ்வடிவம். ஃபூலே இயக்கத்திற்கும் தமிழகத்திற்கும் இடையேயான தொடர்பை விளக்கும் ஓர் அரிய ஆவணமாக இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.

# ஆதி திராவிடன்

## இதழ்த் தொகுப்பு

தொகுப்பாசிரியர்
இரா.பாவேந்தன்

சந்தியா பதிப்பகம்
நியூடெக் வைபவ்,
57 - 53ஆவது தெரு, அசோக் நகர்,
சென்னை - 600 083.
தொலைபேசி: 24896979, 65855704

ஆதி திராவிடன்
தொகுப்பாசிரியர் : இரா. பாவேந்தன்
முதற்பதிப்பு : 2008 • பிரதிகள் : 1000
தாள் : 16 கி. கிராஃபிக் ஒயிட்
அளவு : டெமி 1 × 8 • பக்கம் : 304
அச்சாக்கம் : சென்னை மைக்ரோ பிரிண்ட் பி.லிமிட்
பதிப்பாளர்: சந்தியா நடராஜன்
சந்தியா பதிப்பகம்,
57 - 53ஆவது தெரு,
அசோக் நகர்,சென்னை - 600 083.
24896979, 65855704

**I S B N - 978-81-907453-4-5**

**ADIDRAVIDAN**
Author
**ERA. PAVENDAN**

Typeset
Nithya Krishnamurthy

Published by
**Sandhya Publications**
57 - 53rd Street, Ashok Nagar,
Chennai - 600 083
Tamilnadu
Ph : 044 - 24896979, 65855704

**Price Rs. 150/-**

sandhyanatarajan@yahoo.com
www.sandhyapublications.com

இந்திய தலித் சிறுத்தைகள் (Dalit Panthers of India)
அமைப்பை தமிழகத்தில் நிறுவிய

அவனியாபுரம் **அ.மலைச்சாமிக்கும்**

சமுதாய நீதி எழுத்தாளர்

**அ.பு.வள்ளிநாயகத்துக்கும்**

## நன்றி

அண்ணல் அம்பேத்கர் நூற்றாண்டு விழாவைத் தொடர்ந்து இந்தியா முழுவதும் ஒடுக்கப்பட்ட / விளிம்புநிலை வரலாற்றை ஆவணப்படுத்தும் முயற்சிகள் புதிய வேகம் கண்டுள்ளன. தமிழகத்திலும் இதன் தாக்கம் ஏற்பட்டதன் காரணமாக மள்ளர் / ஆதிதிராவிடர் / அருந்ததியர் உள்ளிட்ட பல பிரிவினரும் தங்கள் கடந்த கால வரலாற்றைத் தொகுத்து ஆவணமாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு பல நூல்களை வெளியிட்டுள்ளனர்.

இந்நிலையில் பண்டித அயோத்திதாசர் *தமிழன்* இதழில் எழுதியவற்றைத் தேடித் தொகுத்து தோழர் ஞான அலாசியஸ் வெளியிட்ட மூன்று தொகுப்பு நூல்கள் தாழ்த்தப் பட்டவர் களின் இதழியல் அச்சுஊடகப் பணிகளைப் பற்றிய புதிய வெளிச்சங்களைக் கொடுத்தது. இம்முயற்சியின் தொடர்ச்சியாக *'ஆதிதிராவிடன்' (1919 - 1921)* இதழின் இரண்டாமாண்டு இதழ் கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடுவதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

இத்தொகுப்பை வெளிக்கொணர வேண்டும் என கடந்த பல ஆண்டுகளாக வற்புறுத்திவரும் நண்பர் திரு. தமிழ்ச்செல்வனுக்கு என் முதல் நன்றி. இத்தொகுப்பை 1995 ஆம் ஆண்டு வெளிக் கொண்டுவர முயற்சித்து அணுகியபோது பதிப்பகங்கள் சில வெளியிட முன்வராததால் இத்தொகுப்பு தற்போது வெளிவரு கின்றது. ஆதிதிராவிடன் இதழ்கள் அனைத்தையும் ஒட்டு மொத்தமாக முழுவதும் வெளியிட வேண்டும் என நான்

காலதாமதப்படுத்திய நிலையில் 'முதலில் தற்போது கிடைத்துள்ள இரண்டாமாண்டு தொகுப்பை வெளிக்கொணரலாம்; பிறகு மற்ற தொகுப்புக்களை வெளியிடலாம்' என ஊக்கமும் உற்சாகமும் கொடுத்தவர் சந்தியா பதிப்பகத்தின் உரிமையாளர் திருமதி சந்தியா நடராஜன் அவர்கள். அவருடைய ஆர்வமும் உற்சாகமுமே இந்தத் தொகுப்பு வெளியீட்டைச் சாத்தியப்படுத்தியுள்ளது. அவருக்கு தமிழகத் தாழ்த்தப்பட்ட சமூகம் என்றும் கடமைப் பட்டுள்ளது.

அயோத்திதாசரின் *'தமிழன்'* இதழுக்கு அடுத்த நிலையில் வெளிவரும் தாழ்த்தப்பட்டோர் இதழியல் ஆவணமான இத் தொகுப்பை வெளியிட பல வகையிலும் காரணமாக இருந்த வர்களில் முக்கியமானவர்கள் மானமிகு குஃவெ.கி. ஆசான், முனைவர் தொ. பரமசிவன், முனைவர் க. நெடுஞ்செழியன் - சக்குபாய், முனைவர் கரு. அழ. குணசேகரன், முனைவர் கு. முருகேசன், தோழர் பாமரன், ஓசை இணையதள செல்லா, *தலித்முரசு* புனிதப்பாண்டியன், தோழர் ஆ. நீலகண்டன், முனைவர் டி. தர்மராஜ், முனைவர் சுந்தர்காளி, திருச்சி தி. ம. சரவணன் ஆகியோர். இவர்கள் அனைவருக்கும் என் அன்பும் நன்றியும் என்றும் உரியது.

பதிப்புரைப் பற்றி கருத்து தெரிவித்த முனைவர் தே. ஞான சேகரன், தோழர் முத்தமிழ்விரும்பி ஆகியோருக்கு என் நன்றி. இந்நூலின் மெய்ப்புத்திருத்தப் பணிகளுக்கு உதவிய தோழர்கள் முனைவர் ஜெ. அந்தோணிராஜ், முனைவர் ச. நவநீதன், சகோதரி முனைவர் சு. பூங்கொடி, வெ. நிர்மலா ஆகியோரின் பங்களிப்பு அளவற்றது. மேலும் இத்தொகுப்புப்பணிக்கு உதவிய முனைவர் க. முருகேசன், முனைவர் இரா. ஜெயராமன் ஆகியோருக்கும் நன்றி உரித்தாகுக.

இத்தொகுப்புக்கு அச்சுக்கோர்த்த தோழர் ம. கா. செந்தில், திருமதி நித்யா கிருஷ்ணமூர்த்தி, தோழர் பொ. பழனி, அட்டை வடிவமைப்பு செய்த ராஜா, அழகுற அச்சிட்ட சென்னை மைக்ரோ அச்சத்தார் ஆகியோருக்கும் நன்றி கலந்த வணக்கம்.

கோவை
*13.11.2008*

தோழமையுடன்
இரா. பாவேந்தன்

# பொருளடக்கம்

## அ. கட்டுரைகள்


- நாம் சூத்திரர்களா? 51
- பெண் கல்வி 62
- பெண் கல்வியைப் பற்றிய சம்பாஷனை 67
- பண்டைக்காலத் தமிழர் வாணிகமும் கைத்தொழிலும் 73
- நல்லாரிணக்கம் 86
- மானிட சரீரமும் அதன் வாழ்க்கையும் 94
- ஆதி திராவிட சமூகத்தினரின் முன்னேற்றம் 101
- தெய்வமிகழேல் 104
- சிருஷ்டி கர்த்தாவின் திருவடி வணக்கமும் அத்திருவடியினின்று முதித்த சூத்திரரும் 107
- திவிதெ எற் இம் பெரா (Divide et Impera) 109
- உண்மையின் உயர்வும் பொய்யின் இழிவும் 113
- ஆதி திராவிடரே இந்தியர்கள் 117
- பருவத்தே பயிர்செய் 121
- குளத்தளவேயாகுமாங் குணம் 126
- மமதை 130
- வள்ளுவர் பஞ்சமரே! பறையரே! 133
- இராமநாதபுரம் கல்லல், கிராமம், உயர்குலத்தோ ரென்றழைக்கப்படும் உண்மைச் சூனியர்கட்கோர் உத்தம அறிக்கை 140
- மானத தரிசனம் அல்லது ஸ்பிரிட்லஷம் (Spiritualism) 143
- கடன் படல் 145
- திராவிட பாஷாபிவிர்த்தி 152
- ராமநாதபுரம் ஜில்லாவில் ஆதி திராவிடர்களைப் படுத்தும் இம்சைகள் 160
- ஆதி திராவிட சகோதரிகளுக்கோர் விண்ணப்பம் 167

• ஆதி திராவிட மகா ஜனங்களுக்கோர் வேண்டுகோள் 171
• ஓர் வேண்டுகோள் 183
• ஆதி திராவிடர்களுக்கோர் விண்ணப்பம் 187
• என் வரலாறு 189
• ஆதி திராவிடன் விண்ணப்பம் 195
• தந்தை தாய் பேண் 197
• இனியேனும் கவனிப்பீர்களா? 199
• ஊக்கமது கைவிடேல் 202
• ஆதி திராவிடரும் இந்து ஆலயங்களும் 207
• சங்கங்களும் அங்கங்களும் 209
• ஜாதி பேதம் 211
• ஆதி திராவிடன் 216
• நமது கடமை என்றால் என்ன? 220
• கிருஸ்தவர்களின் பொறாமைக்குணம் 222
• மாத்ரு பாஷாபிமானம் 226

## ஆ. உரைகள்

• நாக்பூரில் கூடிய எல்லா இந்திய தாழ்ந்த வகுப்பார் மகாநாடு தலைவராகிய மாட்சிமிக்க கோலாப்பூர் மகாராஜா அவர்களின் அரிய பிரசங்கத்தின் குறிப்புகள் 231
• நன்னெறி 243
• வீரத்தாய்மார் 248

## இ. செய்திக் குறிப்புக்கள்

• ஓட்! ஓட்! ஓட்! 252
• திருச்சி ஆதி திராவிடர்களின் மஹாநாடு 254
• இலங்கை இந்திய சங்கம் 256
• இலங்கை இந்திய சங்கம் 258
• இலங்கை இந்திய சங்கம் 260
• இலங்கை இந்திய சங்கம் 262

- திருமிகு ஞானியார் 263
- இலங்கை இந்திய சங்கம் 265
- இலங்கை இந்திய சங்கம் 267
- இலங்கை இந்திய சங்கம் 268
- செல்வரசன்கோட்டை ஸ்ரீ நந்தனார் ஐக்கிய சங்கம் 269
- காலஞ்சென்ற திருமிகு ஜெ.எம். நல்லசாமி பிள்ளையவர்கள் 271
- விவாஹ அறிக்கை 273
- காலஞ்சென்ற ராவ் பகதூர் கே.வைத்தியலிங்கம் பிள்ளை அவர்கள் 274
- ஓர் மரண அறிக்கை 276
- மரண அறிக்கை 278
- ஒரு கடிதம் 280
- ஆதி திராவிடர்களிதனைக் கவனிப்பார்களா? 282
- ஆதி திராவிடன் மேல் வாழ்த்துப்பா 284


## ஈ துணுக்குச் செய்திகள்


- சர்.பி. தியாகராயச் செட்டிகாரு பி.ஏ. 287
- மதிப்புரை: ஆதி திராவிடர் பூர்வசரித்திரம் 289
- ஓர் வினா? 291
- நாமும் நமது இந்திய சந்தா நேயர்களும் 292
- இரஞ்சித மஞ்சரி 295
- விகடமா,? விநோதமா,? வேடிக்கையா? 298
- மஹானின் மகிமை 299
- நோட்டீஸ் 301
- சான்று பட்டியல் 302

# தீண்டப்படாத இதழியல்

> தீர்க்கமுடியாத முரண்பாடுகள் உள்ள பல்வேறு இனங்கள், குலமரபுகள், சாதிகள், சமயக் கோட்பாடுகள், அரசுகள் ஆகியவைகளை ஒன்று சேர்த்து உருவாக்கப் பட்டிருக்கிற பூகோள ஒற்றுமையைத்தான் இந்தியா என்று அழைக்கிறோம்
>
> (காரல்மார்க்ஸ், பிரெடரிக் ஏங்கல்ஸ் 1971 : 111).

இந்தியா என்பது பல்வேறு முரண்பட்ட சமூக, சாதி, சமய, குலமரபுகள் உள்ள புவியியல் பகுதியே என காரல்மார்க்ஸ்சும் ஏங்கல்சும் விளக்குவர். இப்புவியியல் பகுதியிலிருந்த சமூக அமைப்பு இயங்கா தேக்கநிலைச் சமுதாயமாய் இருந்தது என்பதை

> இந்தச் சிறு சமூகங்கள் சாதிவேறுபாடுகளாலும் அடிமைமுறைகளாலும் களங்கமடைந்திருக்கின்றன மனிதனைச் சூழ்நிலைக்கு எஜமானனாக்குவதிற்குப் பதிலாக அவனைச் சுற்றுப்புறச்சார்புக்கு அடிமைப் படுத்தின, தானாக வளர்ந்து கொண்டிருந்த சமூக நிலையை மாறாத இயற்கைவிதியாய் செய்தன
>
> (காரல்மார்க்ஸ், பிரெடரிக் ஏங்கல்ஸ் 1971 : 21)

என விளக்குவர். இத்தேக்கநிலைச் சமுதாயம் தன் பல்வேறு உட்குழுக்களை அடிமைப்படுத்தியது. மேலும் “சாதியம்” என்னும் மையக்கருவை அடிப்படையாகக்கொண்டு செயல்பட்டது.

இந்தச் சாதியம் ஏகாதிபத்தியத்தையும் முதலாளித்துவத்தையும் விட கொடுங்கோன்மையானது என்பதை

> இந்துமதம் என்ற பெயரில் அறியப்படும் நாடு தழுவிய பிராமணக் கொங்கோன்மையைத் தாங்கி நிற்கும் முப்பெரும் தூண்களாக சாதியும், கோயிலும், குதர்க்க வாதமும் இருந்து கொண்டிருக்கின்றன. ஆட்சியாளர்களின், அடிமைகளின் அதிகாரங்களையும் பொறுப்புக்களையும் சாதிதான் நிர்ணயிக்கிறது. மேற்கு நாடுகளின் ஏகாதிபத்தியத் தலைவர்கள் அவர்களின் கீழுள்ள அடிமை மக்களின் மீது திணிக்கும் சட்டங்களை விட எவ்வளவோ மடங்கு பயங்கர மானதாக இந்தியாவில் சாதி வேற்றுமை இருந்து வருகிறது. ஏகாதிபத்தியத் தலைவர்கள் ஏற்படுத்தும் முதலாளித்துவ அமைப்பை போன்றதுதான் கோயில் இயக்கம் என்று கூறலாம். முதலாளித்துவம் வெறும் பொருளாதாரச் சுரண்டல் மட்டும்தான். கோயில் இயக்கம் மானசீக, பொருளாதார, ஆன்மீகச் (முப்பெரும்) சுரண்டல் அமைப்பாகும். இராணுவ பலத்தை அடிப்படையாகக் கொண்டு பேரரசுகள் கட்டியெழுப் பப்படுவதைப் போல் குதர்க்க வாதங்களைப் பயன் படுத்தித்தான் பிராமணர்கள் தங்களுடைய கொடுங்கோன்மையை நிலை நிறுத்துவார்கள். மேற்கத்திய நாடுகளில் விஞ்ஞான அறிவை, ஏகாதிபத்தியங்கள் பயன்படுத்துவதைப் போல் இந்துக்களின் மத்தியில் பொய்மைகளையும், அதர்மங்களையும் சுரண்டல்களையும் காப்பாற்றி நிறுத்த புரோகிதர்கள் குதர்க்கத்தைப் பயன்படுத்துகின்றனர்
>
> (தர்மதீர்த்த அடிகள் 2003 : 140)

என விளக்குவார். மேற்கண்ட கருத்திலிருந்து இந்தியச் சமூகத்தின் அனைத்து நிலைகளிலும் சாதிதான் ஆட்சி செய்கிறது. இந்தக் கொடுங்கோன்மையான சுரண்டல் அமைப்பை நிலை நிறுத்த கோயிலும் குதர்க்கவாதமும் பயன்படுகின்றன என்பது தெளிவு.

இந்தியாவுடன் வணிகத் தொடர்புகளுக்காக கடற்கரைப் பகுதியில் குடியேறிய போர்த்துகீசிய, டச்சு, டேனீசு வணிகக் குழுமங்களுடன் வருகைதந்த கிறித்தவச் சமயப்பணியாளர்களே இக்கொடுங்கோன்மை, சுரண்டல் தன்மைமிக்க சாதியத்தை எதிர்கொண்டவர்கள். இந்தியப் படிநிலை வர்ணாசிரம தர்மத்தைப் புரிந்துகொண்டு சில கிறித்தவச் சமயப்பணியாளர்கள் சமயப்பரப்புரைப் பணிகளை முதலில் பார்ப்பனர்களிடம் தொடங்கித் தோற்றனர். அடித்தள மக்களிடம் சமயப்

பரப்புரைகள் மேற்கொண்டவர்களின் வெற்றி அனுபவங்கள் அனைத்துச் சமயப்பணியாளர்களும் அடித்தளமக்களை நோக்கித் திரும்பக் காரணமாக அமைந்தன.

போர்த்துகீசிய, டச்சு வணிகக் குழுமங்களைத் தொடர்ந்து கிழக்கிந்திய வணிகக் குழுமமும் இந்தியாவில் கிளைபரப்பி சுதேசிய அரசுகளையும், பிற காலனிய அரசுகளையும் தன் ஆளுகையின் கீழ் கொண்டுவந்தது. இந்தியாவின் நிலஅளவைப் பணிகளும் இயற்கைச் செல்வங்களைக் கணக்கிடும் மதிப்பீடு செய்யும் பணிகளையும் கிழக்கிந்திய வணிகக்குழுமம் தொடங்கியது. இதன் தொடர்ச்சியாக இந்தியாவில் இயந்திரத் தொழில்கள் உருவாக அடித்தளமிட்டது. புதிய பயிர்வகைகள், புதிய நறுமணப்பயிர்கள் அறிமுகப்படுத்தப்பட்டன. தொழிற் சாலைகளுக்குக் கச்சாப் பொருட்களை கொண்டு செல்லவும், கச்சாப் பொருட்களைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களைத் துறைமுகங்களுக்கு ஏற்றுமதி செய்ய கொண்டு செல்ல இரயில்பாதைகளும் சாலைகளும் நிறுவப்பட்டன. தொலைதொடர்பு முறைகளான அஞ்சல் தந்திமுறைகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. வணிகத்தில் அளவைமுறைகள் ஒழுங்குப்படுத்தப்பட்டன.

கிறித்தவச் சமயப்பணியாளர்கள், சமயப் பரப்புரைகளுக்காக அடித்தளத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும், பார்ப்பனரல்லாதருக்கும் கல்விநிறுவனங்களை நிறுவி கல்விப் பணியாற்றி வந்தனர். காலனிய அரசு நிர்வாகப்பணிகளுக்கு உதவிசெய்ய பணியாளர்கள் தேவை என்பதால் இந்தியர்கள் 'அனைவருக்கும் கல்வி' வழங்கு வதில் ஆர்வம் காட்டியது. இந்த இரு பெரும்முயற்சிகளின் விளைவாக "அனைவருக்கும் கல்வி கற்கும் வாய்ப்பு" இந்திய பாரம்பரிய (பௌத்த, சமண காலத்திற்குப் பின்) மீண்டும் கிடைத்தது.

இதன் தொடர்ச்சியாக காலனிய அரசு, கல்வி கற்றவர் களுக்கு வேலைவாய்ப்பு வழங்க திட்டமிடப்பட்டது. இந்தியச் சாசனசட்டம் 1833 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் திருத்தப் பட்டது. இந்தச் சட்டம் இந்திய வர்ணாசிரம சமுதாய அமைப்பில் இந்தச் சாதியினர் மட்டுமே இப்பணிகளை செய்ய வேண்டும் என கடைப்பிடித்து வந்த சமுதாய அடிமைத்தனத்தை உடைத் தெறிந்தது.

"இந்தியாவில் வாழும் எந்தக் குடிமகனும் அவனது மதம் பிறப்பிடம், வமிசம், வர்ணம் என்னும் எந்த ஒரு காரணத்தாலுமோ அன்றி அவையாவற்றலுமோ கம்பெனியில் வேலை மேற்கொள்வதைத் தடுக்கக் கூடாது"

(ந. சுப்பிரமணியன் 1988 : 38)

என வேலைவாய்ப்பு பணியையும், வேலை பெறும் வாய்ப்பையும் பொதுவாக்கியது. இதன்மூலம் கல்விகற்ற எவரும் காலனிய அரசின் வேலைவாய்ப்புக்களைப் பெறஇயலும் என்ற 'புதிய மக்களாட்சி நெறிமுறை' நடைமுறைக்கு வந்தது.

காலனிய இந்தியாவின் பல்வேறு மாகாணங்களில் பள்ளிக் கல்வித்துறைகளும், சென்னை, பம்பாய், கல்கத்தா நகரங்களில் பல்கலைக் கழகங்களும், கல்லூரிகளும் உருவாக்கப்பட்டன. காலனிய அரசின் நிலச்சீர்த்திருத்தப் பணிகளால் பாதிக்கப்பட்டிருந்த கிராமப்புறங்களில் வாழ்ந்த பார்ப்பனர்கள் கல்விகற்க நகரங்களை நோக்கி படையெடுத்தனர். இவர்களைத் தொடர்ந்து பார்ப்பனரல்லாதவர்களும் நகரங்களுக்குச் சென்று கல்விகற்கத் தொடங்கினர். பார்ப்பனர்கள் காலனிய அரசின் கல்வி முறையிலும் உட்புகுந்து புதிய சாதி ஆதிக்க மையங்களை உருவாக்கினர்.

பம்பாயில் 1856ஆம் ஆண்டு அரசுப்பள்ளியில் மேல் சாதியினரால் தனக்கு இடம் மறுக்கப்பட்டதை, மகார் இனத்து மாணவன் ஒருவன் பம்பாய் கல்வித்துறைக்கு அனுப்பிய மனுவில் 'தான் படிக்க அனுமதியளிக்க வேண்டினான்'. இதற்கு அன்றைய பம்பாய் மாநிலஅரசு எந்த முடிவையும் எடுக்க முடியாமல் திணறியது. (க. நெடுஞ்செழியன் 1996 : 146) இவ்வாறாக வர்ணாசிரமதர்மம் காலனிய அதிகார இயந்திரத்திற்குள்ளும் குடியேறியது. இந்திய நகர்ப்புறங்களில் புதிய தீண்டாமை வடிவங்கள் பிறப்பெடுத்தன இந்தியக் கிராமப்புறங்களில் பொது இடங்கள், தெருக்கள், குளங்களைப் பயன்படுத்தும் உரிமைப் பறிப்பு அவலங்கள் தொடர்ந்தன.

இந்தியாவில் 'உண்மையான மறுமலர்ச்சி' இயக்கத்தின் மூலவர்களாகக் கருதப்படும் மகாத்மா ஜோதிராவ் ஃபூலே (1827- 1890) தன்னுடைய சொந்தப் பயன்பாட்டில் இருந்த பொதுக் குளத்தைத் தாழ்த்தப்பட்ட மக்கள் பயன்படுத்த 1850

ஆம் ஆண்டு அனுமதித்தார். மகாத்மா ஜோதிராவ் ஃபூலே 'சத்திய சோதக்சமாஜ்' என்ற அமைப்பை 1857 ஆம் ஆண்டு தொடங்கினார். இவருடைய காலத்தில் வாழ்ந்த மகாராசர் சாகு (1874 - 1922) 1890 ஆம் ஆண்டு தாழ்த்தப்பட்டோருக்கும் பார்ப்பனரல்லாதோருக்கும் கல்வி, வேலை வாய்ப்பு வழங்கும் பணிகளில் ஈடுபட்டார். ஃபூலேவின் கருத்துக்களால் ஈர்க்கப்பட்ட சாகு மகாராசர்தான் சமூகநீதியை முதலில் செயல்படுத்திய மன்னராவார். மகாத்மா 'சத்திய சோதக்சமாஜ்'த்தின் சார்பில் *'தீன்பந்து'* என்ற இதழ் 1879ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இந்த இதழ்தான் இந்திய ஒடுக்கப்பட்டோரின் முதல் இதழாகக் கருதப்படுகிறது. (இந்த இதழுக்கு செப்டம்பர் 11, 1896 ஆம் நாள் சென்னையை சார்ந்த நலம்விரும்பி ஒருவர் எழுதியக் கடிதத்தில் 'சத்தியசோதக் சமாஜத்தின் கருத்துக்களை தமிழிலும் தெலுங்கிலும் மொழிபெயர்க்கத் திட்டமிருந்தாக எழுதியுள்ளதை அறியமுடிகிறது (Gailomvet 1976 : 138).

மகாத்மா ஜோதிராவ் ஃபூலே *தீன்பந்து* இதழை வெளியிடு வதற்கு முன்பாகவே தமிழகத் தாழ்த்தப்பட்டோர் இதழ்களை வெளியிட்டுள்ளனர். தமிழகத்தில் தமிழில் வெளிவந்த இதழாக ***மகாவிகடதூதுவனைக்*** கருதலாம். (கோ.தங்கவேலு 1999 : 130) இதே பெயரில் மூன்று இதழ்கள் 1882, 1888 ஆகிய ஆண்டு களில் வெளிவந்துள்ளன. (அ. மா. சாமி 1992 : 108, 142)

இந்த இதழைத் தொடர்ந்து 1869 ஆம் ஆண்டு ***சூரியோதம்*** என்ற இதழை, சென்னை புதுப்பேட்டையைச் சார்ந்த திருவேங்கடசாமி பண்டிதர் நடத்தியதாக அயோத்திதாசர் குறிப்பிடுவார் (ஞான. அலாய்சியஸ் 1998 : 146). இந்த இதழைத் தொடர்ந்து 1871 ஆம் ஆண்டு ***பஞ்சமன்*** என்ற இதழ் வெளி வந்துள்ளது.

சென்னை மாகாணத்தில் வாழ்ந்த தாழ்த்தப்பட்டவர்களின் விடுதலைக்காக 'திராவிடர் கழகம்' என்ற பெயரில் டி. ஜான்ரத்தினம் (1846 - 1942) 1882 ஆம் ஆண்டு ஓர் அமைப்பைத் தொடங்கினார் (P.e. Mohan 1993 : 68) தொடக்க காலத்தில் ஸ்பென்சர் குழுமத்தில் பணியாற்றிய ஜான் ரத்தினம் ஆதிதிராவிட மக்களின் கல்வி வளர்ச்சிக்கு பெரும் பணியாற்றினார். சென்னை ஆயிரம்விளக்குப் பகுதியில் 1886ஆம் ஆண்டு ஒரு மாதிரிப்பள்ளியைத்

தொடங்கினார். இந்த அமைப்பின் சார்பில் *திராவிடப்பாண்டியன்* என்ற இதழை 1885 ஆம் ஆண்டு வெளியிட்டார்.

*திராவிடப்பாண்டியன்* இதழ் ஓரிரு ஆண்டுகள் வெளிவந்து நின்றுவிட்டது. இந்த இதழ்தான் 1917 ஆம் ஆண்டு நீதிகட்சியின் *திராவிடன்* இதழாக மாறியது என்ற கருத்தும் உள்ளது. எக்ஸ்ரே கருணாகரனின் அக்கருத்துவருமாறு:

> *திராவிடப்பாண்டியன்* இதழின் ஆசிரியராக விளங்கி வந்த ரெவரண்ட் ஜான்ரத்தினம் தன் சமுதாயத்தின் முழுஒத்துழைப் பையும் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்திற்கு நல்கினார். திரு.பிட்டி. தியாகராயர், டாக்டர் நாயர் ஆகியோரிடம் ரெவரண்ட்ஜான் ரத்தினம் அவர்கள் 1885 ஆம் ஆண்டில் துவக்கப்பட்ட *திராவிடப்பாண்டியன்* இதழ் பல ஆண்டுகளுக்கு முன்பே நின்று விட்டபடியால் அப்பெயரிலுள்ள பாண்டிய என்ற எழுத்துக்களை அகற்றிவிட்டால் *'திராவிடன்'* என்றாகியது என்று எடுத்துக் கூறினார். இதன் காரணமாக தென்னிந்திய நலஉரிமை சங்கத்திற்கென *திராவிடன்* என்ற பெயரில் தமிழ் நாளிதழ் 1917 ஜூன் 1 ஆம் நாள் வெளியிடப்பட்டு வந்தது
>
> (எக்ஸ்ரே கருணாகரன் 1992 : 189)

எவ்வித அடிக்குறிப்பும் இல்லாமல் இச்செய்தியை தரும் கருணாகரனின் கருத்துக்கள் ஆய்வுக்குரியவை. இந்த இதழை சாமி. அரங்கையாதாஸர் நடத்தியதாக அயோத்திதாசர் பதிவு செய்துள்ளார் (ஞான. அலாய்சியஸ் 1998 : 147)

*திராவிடப்பாண்டியன்* இதழின் சமகாலத்தில் *'திராவிடமித்தரன்'* என்ற இதழ் வெளிவந்துள்ளது. அடுத்த 1886 ஆம் ஆண்டு வேலூரில் வாழ்ந்து வந்த பண்டிதர் முனுசாமி என்பவர் ***ஆன்றோர்மித்திரன்*** என்ற இதழை நடத்தினார். (T.P. Kamalanathan 1984 : 46) பண்டிதர் முத்துசாமி பிள்ளையுடன் ஸ்ரீமான் வே. இரத்தின முருகேசபண்டிதரும் ***ஆன்றோர்மித்திரன்*** இதழ் பணியில் ஈடுபட்டதாக அறியமுடிகிறது (முற்றுகை 2008 : 66) இந்த இதழைத் தொடர்ந்து 1877 ஆம் ஆண்டு ***சுகிர்தவசினி*** என்ற இதழ் வெளிவந்துள்ளது. ***மகாவிகடத்தூதன்*** என்ற இதழை 1888 ஆம் ஆண்டு டி.ஐ. சுவாமிக்கண்ணு புலவர் என்பவர் நடத்தியுள்ளார் (T.P. Kamalanathan 1984 : 46)

சென்னையில் செயல்பட்டுவந்த ஆதிதிராவிட மகாஜன சபையில் தன்னை இணைத்துக்கொண்ட இரட்டைமலை சீனிவாசன் (1860 - 1945) *'பறையன்'* என்ற பெயரில் வாரஇதழை 1893 ஆம் ஆண்டு தொடங்கினார். எந்தப் பெயரால் தானும், தன்னுடைய சமூகமும் சமூக இழிவுகளுக்கும் அடிமைத்தனத்துக்கும் ஆளாகியதோ, அதேபெயரால் அந்த இழிவுகளையும் அடிமைத் தனத்தையும் துடைத்தெறியும் கருவியாக்க விரும்பிய அவர், தான் தொடங்கிய இதழுக்கு 'பறையன்' எனப் பெயரிட்டார். இதனை

> "நான்! நான்! என்ற மகா மந்திரத்தை ஜெபித்துக் கொண்டிருப்பவன் தன்னையுணர்ந்து சகலமறியும் ஞானியாகி தலைவனைக் காண்பது போல நான்! நான்!! என்று எவன் ஒருவன் தன்னையும் தன் இனத்தையும் மறுக்காமல் அச்சமும் நாணமுமில்லாமல் உண்மைபேசி தன் சுதந்திரத்தைப் பாராட்டுகிறானோ அவன் மதிக்கப் பெற்று இல்வாழ்க் கையில் சம்பத்துள்ளவனாய் நித்திய சமாதானத்துடன் வாழ்வானகையால் பறையர் இனத்தவ னொருவன் ''பறையன் என்பவன் நான் தான்'' என்று முன் வந்தாலொழிய அவன் சுதந்திரம் பாராட்டமுடியாமல் தாழ்த்தப்பட்டு என்றும் தரித்திரனாய் இருப்பாணாகையால் *"பறையன்"* எனும் மகுடம் சூட்டி ஒரு பத்திரிக்கையை பிரிசுரத்தேன். அது 1893 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வெளியாயிற்று (தலித் மே ஜூலை 2002 : 47)

என்பதால் அறிகிறோம்.

*பறையன்* இதழ் நான்கு பக்கங்கள் கொண்ட சிறிய மாத இதழாக இரண்டணா விலைக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்த இதழின் விளம்பரப்பணிகளுக்காகவும், முதல் இதழ் பதிப்புப்பணிக்காகவும் ரூபாய் பத்து செலவாகியது. இந்த இதழ் அன்றைய சென்னைமாகாணத்தில் வாழ்ந்த தாழ்த்தப் பட்ட மக்களின் பேராதரவைப் பெற்றிருந்தது.

*பறையன்* இதழ், மதிப்புரைக்காக சுதேசமித்திரன் நாளிதழுக்கு அனுப்பப்பட்டது. *பறையன்* இதழுக்கு சுதேசமித்திரன் அலுவலகத்தில் கிடைத்த 'வரவேற்பை' விளக்கும் க. திருநாவுக் கரசின் கருத்து வருமாறு:

"*பறையன்* ஏடு தொடங்கப்பட்டு முதல் இதழ் வெளியிடப் பட்டு அதன் பிரதி ஒன்று திறனாய்விற்காக *சுதேசமித்திரன்* பத்திரிக்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அப்போது அதன் பத்திரிக்கை ஆசிரியராக சி. ஆர். நரசிம்மன் இருந்தார். அவரது மேசைமேல் திறனாய்விற்காக அனுப்பப்பட்டிருந்த *பறையன்* இதழ் இருந்தது. அதனை அவர் கையில் எடுத்துப் பார்க்காமல் தொட்டு எழுதும் கட்டைபேனாவைக் குச்சி போலப் பிடித்து அதனைக் கொண்டு அப்பத்திரிக்கையை புரட்டிப்பார்த்தாராம்"

(க. திருநாவுக்கரசு 1996 : 238)

இவ்வாறாக தாழ்த்தப்பட்டவர்களால் நடத்தப்பட்ட இதழ்களும் கூட தீண்டப்படாததாகவே கருதப்பட்டன. அக்கால கட்டத்தில் சாதியம் இதழ்வாசிப்பிலும்' நிலவியிருந்தது. இதனை,

இத்தமிழ் வழங்குந் தென்னிந்தியாவிலோ, சாதி நாற்ற மென்னுங் கசிமலத்தால் தாங்கள் சாதியோர் மட்டிலும் வாசிக்கலாம். ஏனையோர் வாசிக்கப்படாதென்னும் பொறாமெயும், பொச்செறிப்பும் வாய்ந்தவர்களாதலால் பொது நலங்கருதி பத்திரிக்கைகளை வாசிக்க பிரிய மில்லாமல் விட்டு விடுகின்றனர்

(ஞான. அலாய்சியஸ் 2003 : 7)

என முஸ்ஸீம்நேசன் இதழ் வேதனையுடன் வெளிப்படுத்தி யுள்ளது.

மேலே எடுத்துக்காட்டப்பட்ட செய்திகள் தாழ்த்தப்பட்ட இதழியலாளர்கள் எதிர்கொண்ட சிக்கல்களின் ஒருசில சான்றுகளே. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் இதழ்கள் நடத்திய தாழ்த்தப்பட்ட இதழியலாளர்கள் பெரும்பாலும் கல்விகற்றவர்களாகவே இருந்தனர். பெரும்பான்மை தாழ்த்தப்பட்ட மக்கள் கல்வி அறவற்றவர்களாக இருந்த நிலையிலும் கூட இதழ்களைத் துணிவுடன் நடத்தினர். சொந்தசாதி புரவலர்களையும், வாசகர்களையும் மட்டுமே நம்பி தாழ்த்தப்பட்டோரின் இதழ்கள் வெளிவந்துள்ளன.

*பறையன்* இதழ் தொடங்கிய மூன்று மாதங்கள் மட்டுமே மாதஇதழாக வெளிவந்து, தாழ்த்தப்பட்ட மக்களின் ஆதரவின்

காரணமாக வாரஇதழாக வெளிவந்துள்ளது. இந்த இதழ் தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைக்காக தொடர்ந்து குரல் கொடுத்து வந்தது. அரசுக்கு தாழ்த்தப்பட்ட நலன் குறித்த கோரிக்கைகளை முன்வைத்தது. தாழ்த்தப்பட்ட மக்களின் எழுச்சிக்குத் தடையாக உள்ள தீயொழுக்கங்களைக்களைய வேண்டியும், நல்லொழுக்கங்களைப் பின்பற்ற வேண்டியதன் அவசியத்தையும் வற்புறுத்திவந்தது. தொடக்கத்தில் வேறு அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளிவந்த *பறையன்* இதழ், 1895 ஆம் ஆண்டுமுதல் சொந்த அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளிவந்தது.

*பறையன்* இதழை நடத்தியபோது, தான் எதிர்கொண்ட இடர்பாடுகளை இரெட்டைமலை சீனிவாசன் வேதனையுடன் விவரிப்பார்.

> "காங்கிரஸ்காரர்களும், ஜாதி இந்துக்களும், மதமாற்றப் பிரசாரிகளும் இந்த ஜனங்கத்தவர்களுக்குள்ளேயே ஒரு பிரிவாரும் (?) எதிர்த்து நின்றார்கள். எதிர் பத்திரிக்கையும் வெளியிட்டார்கள். (?) மற்றும் சிலபத்திரிக்கைகள் பலமாய் தாக்கின. இந்த இனத்திலொருவர் (?) பொய்பிராது செய்து நான் தேசத்தை விட்டு ஓடிப்போக விருப்பதாக வாரண்டில் என்னைப் பிடித்து அவமானப்படுத்த பார்த்தனர் அது பலிதமாகவில்லை
>
> (தலித் மே - ஜீலை 2002 : 47)

விவரிப்பார்.

தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த இரெட்டைமலை சீனிவாசன் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் அன்றைய காலகட்டத்தின் நவீன ஊடகமாகக் கருதப்பட்ட அச்சு ஊடகத்தைப் பயன்படுத்தி ஆதிக்க பரப்புரை மேற்கொண்டதை பொறுக்க முடியாத சாதியினரின் எதிர்ப்புகளையும், சொந்தசாதி மக்களின் துரோகத்தையும் எதிர்கொண்டு வெற்றிபெற்றது தாழ்த்தப்பட்டோர் இதழியல் வரலாற்றின் பொன் எழுத்துக்களால் பொறிக்க வேண்டிய நிகழ்வாகும்.

*'பறையன்'* இதழ் மூலம் ரெட்டியார்களின் வன்கொடுமை களை அரசுக்கும், பொதுமக்களுக்கும் அம்பலப்படுத்திய

தென்னார்காடு மாவட்டம் திண்டிவனம் விடாலாபுரத்தைச் சார்ந்த ப. இராகவன் என்ற பறையர் சமூகத்தை சார்ந்த ஒருவர் வெட்டிக் கொல்லப்பட்டார். (ஞான. அலாய்சியஸ் 2003 : 78) பொதுக்கருத்தை உருவாக்க முயன்ற படிப்பறிவற்ற தாழ்த்தப் பட்டவர்களின் குரல்களை ஆதிக்க அமைப்புக்கள் அழித் தொழித்துள்ளன. இதழ்கள் மூலம் கருத்து வெளிப்படுத்த முயன்றமைக்காகவே ப.இராகவன் கொலை செய்யப்பட்ட செய்தி ஆழ்ந்து நோக்கத்தக்கது.

இந்தச் செய்தியை அயோத்திதாசர் தான் நடத்திய *தமிழன்* இதழில் மார்ச் 1913 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார். இக்கால கட்டத்தில் இரெட்டைமலை சீனிவாசன் இந்தியாவில் இல்லை. எனவே *பறையன்* இதழ் மூலம் ரெட்டியார்களின் வன் கொடுமையை வெளிப்படுத்திய பல ஆண்டுகளுக்குப் பிறகு இச்சம்பவம் 1912ஆம் ஆண்டு டிசம்பர், 25 ஆம் நாள் நடை பெற்றது என யூகிக்கலாம். அல்லது *பறையன்* என்ற பெயரில் 1912ஆம் ஆண்டு இராயப்பேட்டையிலிருந்து யாரேனும் இதழ் நடத்தினரா என்ற ஐயம் எழுகிறது.

அவமானங்களையும், துரோகங்களையும் வெற்றிகளாக மாற்றிய இரெட்டமலை சீனிவாசனை சொந்த சமூகத்தினரே வழக்குமன்றத்துக்கு இழுத்துள்ளனர். இதனை

> ''1896ஆம் ஆண்டு *பறையன்* பத்திரிகையில் கடிதக்காரர் ஒருவர் ஏதோ அவதூறான விஷயம் வெளிப்படுத்தியதன் காரணமாக கொண்டு இவ்வினத்தவர்களின் ஒருபிரிவார் என்னை கோர்ட்டுக்கு இழுத்தார்கள்''.
>
> (தலித் மே - ஜூலை 2002 : 47)

என விவரிப்பார். வாசகர் ஒருவர் எழுதிய கடிதத்தின் அடிப்படையில் அவதூறு வழக்கிற்கு ஆளான சீனிவாசனுக்கு நீதிமன்றம் ரூபாய் நூறை அபராதமாக விதித்தது. அத்தொகையை அவருடன் நீதிமன்றத்துக்கு வந்த தாழ்த்தப்பட்ட மக்களே செலுத்தினர். இச்செயல் தம் மக்கள் தன் மீதும், தான் நடத்திய 'பறையன்' இதழின் மீதும் மக்கள் வைத்திருந்த அன்பின் அடையாளம் என்பதைக் குறிக்கும் போது

> "கோர்ட்டுக்கு வந்த இந்த இனத்தவர்கள் பெருங் கூட்டமாய் வந்தார்கள். அவர்கள் தலைச் சீராய்களிலும் மார்புகளிலும் 'பறையர்' என்ற மகுடத்தை பூண்டு பண முடிப்புடன் வந்தார்கள். நூறு ரூபாய் அபராதம் விதிக்கப் பட்டது. அதையார் கொடுத்தார்கள் என்று தெரியவில்லை. தங்களினத்தில் வைத்திருந்த பற்றுதலையும் அன்பையும் வெளிப் படையாகக் காட்டினார்கள். இதனால் இந்த இனத்தவர் வாய் திறக்கப்பட்டதற்கும் முன்னேறி வந்ததற்கும் சபைகளும் சமூகமு மேற்பட்டதற்கும் *பறையன்* என்ற பத்திரிக்கையே மூலகாரணமென விளங்கும்
>
> (தலித் மே - ஜூலை 2002 : 48)

என்று நினைவு கூர்ந்தார். *பறையன்* இதழை . சீனிவாசன் 1893ஆம் ஆண்டுமுதல் 1900 ஆம் ஆண்டுவரை தொடர்ந்து வெளியிட்டார். அவருடைய இலண்டன் பயணத்தின் காரணமாக *பறையன்* இதழைத் தொடர்ந்து நடத்தி இயலாத சூழல் எழுந்தது.

*பறையன்* இதழைத் தொடர்ந்து நடத்தியபோது இவ்விதழின் செயல்பாடுகளைத் தாழ்த்தப்பட்ட சமூகத்தின் மூத்த பெருமக்கள் தன்னுடைய இதழியல் பணிகளைப் பாராட்டியதைத் தனக்குக் கிடைத்த நற்சான்றிதழாகக் கருதினார். இதனைத் தன்னுடைய வாழ்க்கை வரலாற்றின் இறுதிப்பகுதியில் பதிவு செய்துள்ளார். அப்பாராட்டுரையை வருமாறு.

> "பத்திரிக்கையை பிரசுரிக்க நான் ஆரம்பித்தபோது வயோதிகமான பெரியார்கள் என்னைக் கண்டு ஆசிர்வதிக்கும் போது அப்பா! நீர் விதைத்த விதை புளியம் விதைபோல வேரூன்றி பெரும் விருட்சமாகி பலமாய் மோதியடிக்கும் பெரும் புயல் காற்றுக்கு வளைந்து கொடுத்து செழிந்து பயன்தருவது போலாகும்; மற்ற விருட்சங்கள் புயல்காற்றை எதிர்ந்து வளையாமல் முறிந்து கெடும்
>
> (தலித் மே - ஜூலை 2002 : 62)

*பறையன்* இதழுக்குப் போட்டியாக வேறு சில இதழ்களும் வெளிவந்ததையும், அவை இவ்விதழைப் போன்று செயல்பட முடியாமல் தோல்வியடைந்ததையும் மேற்கண்ட கருத்தி லிருந்து உணரமுடிகிறது.

*'பறையன்'* இதழைத் தொடர்ந்து 1897 ஆம் ஆண்டு *'விகடதூதன்'* என்ற இதழ் வெளிவந்தது. அதற்கு அடுத்த ஆண்டு *'இல்லற ஒழுக்கம்' (1899) 'மதராஸ் டெம்ப்ரன்ஸ் ஹெரால்ட் (1899)* ஆகிய இதழ்கள் வெளிவந்துள்ளன. (ஏ. பி. வள்ளிநாயகம் 2004 : 66) தசாவதானம் பூஞ்சோலை முத்துவீர நாவலர் *பூலோகவியாசன்* என்ற இதழை 1900 வெளியிட்டுள்ளார்.

தமிழ் பௌத்தமரபின் அடிப்படையில் தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலையை முன்னெடுத்த பண்டித அயோத்திதாசர் (1845 - 1914) இருபதாம் நூற்றாண்டு தமிழகத்தின் இணையற்ற சிந்தனையாளர் ஆவார். தமிழகத் தாழ்த்தப்பட்டோர் வரலாற்றில் குறிப்பிடத்தக்க நூல்களை வெளியிட்ட அயோத்திதாசர் இந்துத்துவத்திற்கும், சாதிய அடக்குமுறைக்கும் எதிரான கருத்துப்போரைத் தன் வெளியீடுகள் மூலம் தொடங்கினார். அயோத்திதாசர் 'புத்தர் என்னும் இரவு பகலற்ற ஒளி' என்ற நூலை 1898 ஆம் ஆண்டு ஆதிமூலம்பிள்ளை என்பவருக்குச் சொந்தமான சிந்தாதிரிப்பேட்டை பௌத்த அச்சகத்தில் அச்சிட்டு வெளியிட்டார்.

இதே அச்சகத்தில் *தமிழன்* இதழை அச்சிட்டு ஜூலை 6 1907 ஆம் ஆண்டுமுதல் *'ஒரு பைசா தமிழன்'* இதழை வெளியிட்டார். *ஒரு பைசா தமிழன்* இதழின் பெயரை *'தமிழன்'* என பெயர்மாற்றி நடத்தி வந்தார். இந்த இதழின் பெயர் மாற்றத்திற்கான காரணத்தை விளக்குகையில்

> 'இதுவரை நமது' ஒரு *பைசாத்தமிழன்'* பத்திரிக்கையை அச்சிட்டு வந்த பிரஸ் ஆனது கனம் ஆதிமூலம் பிள்ளை அவர்களின் சொந்தமாதலின் அந்த பிரஸ்ஸை சிந்தாரிப் பேட்டைக்கு கொண்டுபோய் தானே நடத்திக் கொள்வதாய் இம் மாதம் 20 ஆம் தேதி எடுத்துக் கொண்டு போய் விட்டார். ஆதலின் நமது கோலார் மாரிக்குப்பத்தில் வாசஞ்செய்யும் தன்மப் பிரியர்களின் பேருதவியால் வேறு அச்சியந்திரம் கொண்டு வந்து 24 ஆம் தேதி கமிஷனரிடம் சென்று 'கௌதம்பிரஸ்' என்னும் நாமகரணம் ரிஜிஸ்டர் செய்துவிட்டதுமன்றி *'ஒருபைசா தமிழன்'* என்னும் பத்திரிக்கைப் பெயரில் *ஒரு பைசா* பெயரினை எடுத்துவிட வேண்டுமென்று அந்தவன்பர்கள் கோரிய வண்ணம்

*'தமிழன்'* என்னும் பெயரை பதிவு செய்துவிட்டேன். ஆதலின் நமது பத்திரிக்கையின் பெயர் *'தமிழன்'* என்றும் அச்சியந்திரத்தின் பெயர் 'கௌதமபிரஸ்' என்றும் வழங்கப்படும்''.

என்பார்.

(கோ. தங்கவேலு 1999: 138)

அயோத்திதாசர் *தமிழன்* இதழை நடத்துவதில் தீவிர ஆர்வமுடையவராக விளங்கினார். இந்த இதழ்மூலம் தமிழ் பௌத்த மறுமலர்ச்சிக்கு வித்திட்டார். அன்றைய அரசியல் சிக்கல்களை எழுதியதோடு மட்டுமல்லாமல் தமிழர்களின் தொல்சமயம் பௌத்தமே என்பதைத் தொடர்ந்து எழுதி வந்தார். ஏழு ஆண்டுகால இதழியலில் பணியின்போது சமயம், இலக்கியம், பண்பாடு பற்றிய கருத்துக்களை முன்வைத்தார்.

அயோத்திதாசரின் *தமிழன்* இதழ்களுக்கான ஆதரவைக் கெடுக்கும் நோக்கத்தோடு பலர் செயல்பட்டு வந்தனர். மேலும் தாழ்த்தப்பட்ட மக்களில் பலர் சாதிப் பற்று இல்லாத நிலையை குறிப்பிடும்போது.

"அன்பர்காள்! நமது *தமிழன்* பத்திரிக்கையை ஆரம்பித்து ஆறுவருடம் முடிந்து ஏழாவது வருடம் நடைபெற்று வருகின்றது. இப்பத்திரிகையை ஆரம்பிக்கும்போதே குருவிசுவாசத்தையும் இராஜ விசுவாசத்தையும் பீடமாகக் கொண்டே நடத்தி வருகின்றோம். உள்ளனவும் இனி நடத்தியும் வரப் போகின்றோம் இதனந்தராரத்தம் அறிந்த குருத் துரோகிகளும் இராஜ துரோகிகளும் இப்பத்திரிக்கையைப் பரவ விடக்கூடாது என்னும் பொறாமைக்குணத்தால் பத்திரிக்கை செல்லுமிடமெல்லாஞ் சென்று பத்திரிக்கையை வாங்கவிடாமல் தடுத்தும் சில வஞ்சினர்கள் துரை மக்களுக்கு ஏவல்புரியும் உத்தி யோகஸ்தர்கள் வாசஞ்செய்யும் வீடுகள் தோறுஞ் சென்று தமிழன் பத்திரிக்கையை வாங்கவிடாமற் கெடுத்தும் சாதி பேதமில்லாமல் சேரிகளில் வாழ்வோர்களிற் சிலர் இராஜாங்க உத்தியோகம் அமர்ந்து கொண்டால் முதலியாரோடு கூடிச் சென்றால் முதலியாரென்று எண்ணுவார்களென்றும், நாயுடுவுடன் கூடிச்சென்றால் நாயுடு வென்று எண்ணுவார்கள் என்றும் புலியைக்கண்டு பூனைச்சூடிக்கொள்வதைப்போல் போலி வேஷமிட்டு சுசாதியோர் சீர்த்திருத்ததிற் சேராமலும் சுசாதி

அபிமானங் கொள்ளமலுள்ள அறிவிலிகள் இப்பத்திரிக்கையை வாங்காமலும் விடுத்து வந்தார்கள்.

(ஞான. அலாய்சியஸ் 1999 : 471)

வருத்தத்துடன் கூறுகிறார்.

*தமிழன்* இதழ்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்ந்த இலங்கை, பர்மா, முதலிய பகுதிகளிலும் விநியோகம் செய்யப்பட்டது.

அயோத்திதாசர் தன் சமகாலத்தில் வெளிவந்த இதழ்களின் ஆசிரியர்களின் இதழியல் நேர்மையற்ற திறனை நேர்மையுடனும் தீரத்துடனும் கண்டித்து எழுதியுள்ளார். விழுப்புரத்தில் டிசம்பர் 1907 ஆம் ஆண்டு நடந்த கலவரத்திற்கு அனைத்து இதழ்களும் வருந்தி, செய்தி வெளியிட்டுள்ளன. ஆனால் *சுதேசமித்திரன்* மட்டும் பாதிக்கப்பட்ட பறையர் சாதியினரை 'கிறித்தவப் பறையர்கள்' என 'வேறுப்படுத்தி எழுதியது. இதனைக் கண்டித்து எழுதிய அயோத்திதாசர்.

''அந்தோ! இனியேனும் நமதமன்பார்ந்த பத்திராதிபர் தன்னவ ரன்னியரென்னும் பேதமிராமலும் தன் சாதி, பிறசாதி யென்னும் பொறாமெய் இல்லாமலும் தன் சமயம், புற சமயமென்னும் பற்றில்லாமலும் தான் விவேகி மற்றவர்கள் அதிவேகியென்னுஞ் செருக்கில்லாமலும் பலர்ப் பிரயோசனங் கருதி பத்திரிக்கை வரைவாரேல் பாக்கிய மவருடைத்ததேயாம் அன்றேல் சிலாக்கிய மெம்முடையதே

(ஞான. அலாய்சியஸ் 2003 : 6)

என இதழியலாளார்கள் பொதுநலன் கருதியவர்களாக இதழ்களில் எழுத வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார். அவர் பயன்படுத்தும் 'பலர் பிரோயாசனங் கருதி' என்ற சொல் ஆழ்ந்து கவனிக்கத்தக்கது.

காலனிய அரசு, 1908 ஆம் ஆண்டு பத்திரிக்கை குற்றத் தூண்டல் தேசிய உணர்ச்சி பரவுவதற்கு அடக்குமுறை நடவடிக் கைகளில் ஒன்றாக இச்சட்டம் கொண்டுவரப்பட்டது (து.சதாசிவன் 1983 : 96) இச்சட்டத்தை 'அச்சியந்திரங்களின் சட்டமும் அனந்த பத்திரிகோஷ்டமும்' என்ற தலைப்பில் *தமிழன்* இதழ் ஆதரித்தது (ஞான. அலாய்சியஸ் 1999 : 234). இச்சட்டத்தை பாரதியின் *'விஜயா'* கடுமையாக கண்டித்து

180651

எழுதியது (ஆ. இரா. வெங்கடாசலபதி 2004, 87-93) இங்கு மனங்கொள்ளதக்கது.

அயோத்திதாசர் தன் *தமிழன்* இதழ்மூலம் சமூகச் சீர்த்திருத்தக் கருத்துக்களைத் தொடர்ந்து எழுதிவந்தார். சாதியமும், மதமுமே நமது சமுதாயத்தைப் பாதிக்கும் பெருநோய்கள். இந் நோய்களை ஒழிக்க *தமிழன்* இதழ் பாடுபட்டுவருகிறது. எனவே இவ்விதழைப் போலவே பிற இதழ்களும் இந்நோய்களைத் தீர்க்க பாடுபட வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளது.

> ''சுதேச சீர்த்திருத்தங் கருதி வெளிவந்துள்ள பத்திரிக்காப மினிகள் யாவருக்கும் பட்சமான வந்தனம். ஐயன்மீன்! நமது தேசச்சீர்க்கேட்டிற்கும் ஒற்றுமெய்க் கேட்டிற்கும் மூலம், சாதிபிரிவுகளும் சமயப் பிரிவுகளும் எனத் தென்னிந்தியத் *தமிழன்* பத்திராதிபன் கூறுகின்றோம். இதனை ஏற்றுக் கொள்ளுமன்பர் சாதிகளையுஞ் சமயங்களையும் போக்கத்தக்க உபாயங்களையும் உட்சீர்த்திருத் தங்கயையுந் தங்கடங்கள் பத்திரிக்கையின் வாயிலாய் வெளியிடும்படி கோருகிறோம். எமதப்பிராயத்தை ஏற்காது தூற்றுமன்பர்கள் நமது தேச சீர்கேட்டிற்கும் ஒற்றுமெய் கேட்டிற்கும் மூலம் எஃதென்றுணர்த்தி அவற்றை சீர்த்திருத்தும் முறைகளை யேனும் செவ்வனே விளக்கி வருவார்களேன்று நம்புகிறோம்
>
> (ஞான. அலாய்சியஸ் 2003 : 9).

இவ்வாறாக அயோத்திதாசர் தன் சக இதழியலாளர் களையும் சமூகச் சீர்திருத்தக் கருத்துக்களை வெளியிட வலியுறுத்தியுள்ளார்.

தமிழகத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கான புதிய விடுதலைப் பாதையை' உருவாக்கிய அயோத்திதாசர் 1914 ஆம் ஆண்டு மே மாதம் மறைந்தார். அவருடைய மறைவைத் தொடர்ந்து அவருடைய மகன் க. அ. பட்டாபிராமன் தமிழன் இதழின் ஆசிரியப் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்.

இதனை

> ''1914 மே 6 புதன் கிழமை அன்று புகழ்பெற்ற *தமிழன்* ஏடு தன் ஏழு ஆண்டு கால வாழ்வில் முதன் முறையாக வெளிவரத் தவறியது. அடுத்தடுத்த புதன்களிலும் அப்படியே. இறுதியாக ஜூன் 17 புதன் அன்று அது வெளி

வந்த போதோ அதில் ஒருவர் பெயர் மாறியிருந்தது. பதிப்பாசிரியர் க.அ. பட்டபிராமன். இந்த இதழின் கருப்புக் கரைக் கட்டிய பக்கங்கள் அயோத்திதாச பண்டிதர் மே 5 அதிகாலை ராயப்பேட்டையில் உள்ள அவரது வீட்டில் வைத்து காலமான துயர செய்தியை அறிவித்தன''

(ஞான. அலாய்சியஸ் 2003 : 47)

என்பதால் அறிகிறோம். க. அ. பட்டாபிராமன் ஆசிரியர் பொறுப்பில் 17.06.1914 முதல் 26.07.1915* வரையில் தமிழன் இதழ்கள் வெளிவந்தன் (பண்டிதமணி அப்பாதுரையின் மேற் பார்வையில் 07.07.1924 முதல் 27.06.1934 வரை தமிழன் இதழ்கள் வெளிவந்தன)

அயோத்திதாசர் தமிழ் இதழியல் பரப்பில் தீவிரமாகச் செயல்பட்டுக் கொண்டிருந்த காலகட்டத்தில் சென்னையில் 1912 ஆம் ஆண்டு மெட்ராஸ் யுணைட்டெட் லீக் (Madras United League) என்ற அமைப்பு தொடங்கப்பட்டது (முரசொலிமாறன் 1991 : 1) இந்த அமைப்பே பிற்காலத்தில் 1916 ஆம் ஆண்டு தென்னிந்திய நல உரிமை சங்கமாக உருவாகிய அமைப்பாகும்.** சென்னையில் வாழ்ந்த பார்ப்பனரல்லாதோர் கல்வி, வேலை வாய்ப்பு, அரசியல் உரிமை பெறுவதை நோக்கமாகக் கொண்டு இந்த அமைப்பு செயல்படத் தொடங்கியது. இந்த அமைப்பின் சார்பில் 1917 ஆம் ஆண்டு 'ஜஸ்டிஸ்', 'திராவிடன்', 'ஆந்திர பிரகாசிகா' ஆகிய இதழ்கள் தொடங்கப்பட்டன.

---

*கேரளத் தாழ்த்தப்பட்டோர் தலைவர் அய்யங்காளியால் (1863 1941) தொடங்கப்பட்ட சாதுஜன பரிபாலனியின் சங்கத்தின் சார்பில் மலையாள மாதஇதழான *சாது ஜன பரிபாலினி* (1913) இதழ் சங்களாச்சேரியிலிருந்து வெளிவந்தது. (K.Saradamoni 1980 : 151). கேரளத் தாழ்த்தப்பட்டோர் மாதஇதழாக வந்த *சாதுஜன பரிபாலினி* இதழை வெளிக்கொணர்ந்த அய்யங்காளி அந்த இதழிற்கு திருக் கொடித்தானம் செம்புந்தரை காளிக்கருப்பனை ஆசிரியராகவும் கே.எம். பார்ப்பான் என்பவரைத் துணை ஆசிரியராகவும் பொறுப்பேற்க செய்தார் (ஏ.பி. வள்ளி நாயகம் 2004 : 140). அய்யங்காளி தொடங்கிய இந்த இதழ் மூன்றாண்டுகள் மட்டுமே வெளிவந்தது. கேரளத் தாழ்த்தப்பட்டோர் விடுதலைக்கான வரலாற்று ஆவணமாகத் திகழும் இந்த இதழைப்பற்றி கேரள இதழியல் வரலாற்று நூல்களில் சில குறிப்புக்கள் மட்டுமே இடம் பெற்றுள்ளன.

இவ்வாறாக சென்னை மாகாணத்தில் பார்ப்பனர், பார்ப்பனரல் லாதோர் முரண்பாடுகள் கூர்மையடைந்த காலகட்டத்தில் தாழ்த்தப்பட்டத் தலைவர்கள் பலரும் தென்னிந்திய நல உரிமை சங்கத்தை ஆதரித்தனர்.

தென்னிந்திய நல உரிமைச் சங்கம் தொடங்கப்பட்ட அதே ஆண்டில் *'தமிழ்மாது'* என்ற இதழைக் காஞ்சிபுரம் கே. சொப்ப னேஸ்வரி அம்மாள் என்ற தாழ்த்தப்பட்ட பெண்மணி தொடங்கி நடத்தியுள்ளார். இவர் அயோத்திதாசரின் ***தமிழன்*** இதழில் எழுதியுள்ளார். இவரே தாழ்த்தப்பட்ட சமூகத்தின் முதல் பெண் இதழியலாளர்.

தென் இந்திய ஒடுக்கப்பட்டோர் ஐக்ய சங்கத்தின் சார்பில் எஸ்.ஏ.எஸ்.தங்கமுத்துவின் ஆசிரியப் பொறுப்பில் ***வழிகாட்டு வோன்*** என்ற இதழ் *1918* ஆம் ஆண்டு நாகப்பட்டினத்திலிருந்து வெளியிடப்பட்டுள்ளது. (ஆ. இரா.வேங்கடாசலபதி *2004 : 24*). இந்த இதழின் முகப்பில் *'vallikatttuvonne, The Guide and organ of South India depressed classes union* ***வழிகாட்டுவோன்'*** என்ற தலைப்புக்கள் ஆங்கிலத்திலும் தமிழிலும் இடம் பெற்றதாக அறியமுடிகிறது. ***வழிகாட்டுவோன்*** இதழின் முதல் மூன்று இதழ்கள் பிரிட்டிஷ் நூலகத்தில் உள்ளதாக சலபதி குறிப் பிட்டுள்ளார். இந்த இதழின் ஆசிரியரான எஸ்.ஏ.எஸ். தங்க முத்துவை சென்னை சட்டசபையில் ஓர் உறுப்பினராக நியமிக்கக் கோரி ***ஆதிதிராவிடன்*** இதழை (*1919 - 1921*) நடத்திய இலங்கை இந்திய சங்கத்தின் கூட்டம் கோரியுள்ளது.

---

**கல்கத்தா மாகாணத்தில் நாமாசூத்திரா என்றழைக்கப்படும் சண்டாளர் சாதியைச் சார்ந்த கல்விகற்ற இளைஞர்கள் ஒன்றிணைந்து நாம சூத்திரா (Nama Sudras) என்ற அமைப்பைத் தொடங்கினர். இந்த அமைப்பின் சார்பில் *'நாமசூத்திர'* (Nama Sudra) என்ற இதழும், *'நாமசூத்திரசுக்ரியத்* (Nama Sudhra Sahrid) என்ற மாத இதழும் வெளியிடப் பட்டன. இந்த அமைப்பினர் கிராமப்புறப் பகுதியிலிருந்து கல்விகற்க வந்த நாமசூத்திரா மாணவர்களுக்காக தங்கும் விடுதிகளைக் கட்டினர். (T.P. Kamalanthan 1984 : 5). இந்த இயக்கத்தினரே 1918ஆம் ஆண்டு (நீதிகட்சியின் கோரிக்கையை போன்று) கல்கத்தா மாகாணத்தில் வகுப்புவாரி பிரதி நித்துவதைக் கோரினார். இந்த இயக்கத்தின் ஆதரவுடன்தான் அம்பேத்கர் 1946 ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிட்டு காங்கிரஸ் வேட்பாளர் சரத்சந்திர போஸை தோற்கடித்து அரசியல் நிர்ணய சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார் (Sureshhmane 2006 : 84)

II

இலங்கையில் வாழ்ந்துவரும் தமிழ்மொழி பேசும் மக்களை இலங்கைத்தமிழர்கள், இலங்கை மலையகத் தமிழர் (தமிழகத் தமிழர்கள்) தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட முஸ்லீம்கள் என மூன்றாக வகைப்படுத்துவர்.

காலனிய தமிழகத்தின் கிராமப்புற சாதியமைப்பின் கடைநிலையிலிருந்த தாழ்த்தப்பட்ட மக்களில் பலர் நிலமற்றவர்கள். இவர்கள் கிராமிய உற்பத்தி உறவுகளில் முக்கியப் பங்காற்றினாலும் பொருளாதாரநிலையில் மிகவும் ஏழ்மைநிலையில் இருந்தனர். இவர்கள் பொதுதெருக்களில் நடப்பதற்கான உரிமை இல்லாமலும், பொதுகுளங்களில் தண்ணீர் எடுக்கும், உரிமையற்ற நிலை கோயில் போன்ற வழிபாட்டு உரிமை மறுக்கப்பட்ட நிலையிலும் வாழ்ந்து வந்தனர். தமிழகத்தின் பல பகுதிகளில் தாழ்த்தப்பட்டமக்கள் அடிமைகளாக விற்பனை செய்யப்பட்டனர். அடிமைமுறையை ஒழித்து 1843ஆம் ஆண்டு சட்டம் இயற்றப் பட்டது.

பதினெட்டாம் நூற்றாண்டின் மத்திய காலகட்டத்தில் இலங்கைப் பகுதிகளில் தேயிலை, காப்பி தோட்டங்கள் உருவாக்கப் பட்டன. தமிழக சாதிக்கொடுமைகளுக்கு ஆளான தமிழர்கள் புலம்பெயர்ந்தாலாவது தங்களின் அடிமைத்தனம் தீரும் என நம்பினர். இந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்தவர்களில் பெரும் பாலோர் பறையர், பள்ளர் சாதிகளைச் சேர்ந்தவர்களே. இலங்கை மலேயா ஆகிய பகுதிகளுக்கு குடியேறிய இந்தியத் தொழிலாளர்கள் பற்றிய அறிக்கையின்படி குடிபெயர்ந்த தமிழர்களில் பறையர், பள்ளர் படையாட்சிகள் மற்றும் கவுண்டர்களும் கூட (S.Manickam 1982 : 65) இதே கருத்தை (வெகுஜனன் இராவணா 2007 : 44) க. அருணாச்சலமும் 1994 : 10-13) குறிப்பிட்டுள்ளனர்.

தமிழகத்திலிருந்து 1823 ஆம் ஆண்டு இலங்கைக்கு ஹென்றிபோட் என்ற காலனிய அலுவலர் சிங்களமிட்டா என்ற கிராமத்தில் 14 தமிழர்களைக் காப்பிர் பயிர் வளர்க்க குடியேற்றினார். இவர்களே தமிழகத்திலிருந்து குடியேற்றப்பட்ட முதல் தொகுப்பு தமிழர்கள் ஆவர். கவர்னர் எட் வெட் பார்ன்ஸ் என்பவர் 'பேராரோதெனியா' அருகில் அமைந்த 'கன்னொருவ' தோட்டப்பணிகளுக்காக முதலில் தோட்டப்

பணிகளுக்காக தமிழர்களை வரவழைத்தனர் என்ற கருத்தும் உள்ளது (சண்முகவேல் கட்டுரையில் காணப்படும் மேற்கோள்) (மகாராஜன் 2007 : 12) இவ்வாறாக தேயிலைத் தோட்டங் களுக்கு 1842 - 1850க்கும் இடைப்பட்ட காலத்தில் 1,00,000 தாழ்த்தப்பட்ட தமிழர்கள் மலையகம் கொண்டு செல்லப்பட்டனர்.

புலம்பெயர்ந்து சென்ற தமிழர்களின் உழைப்பில் உருவான தேயிலை, ரப்பர் தோட்டங்களில் அவர்கள் நிரந்தர அடிமை களாகவே உழைப்பு சுரண்டலுக்கு ஆளாயினர். தென்னிந்திய தமிழ்ச்சாதி அமைப்பின் அடக்குமுறைகள், அயலக மண்ணிலும் வேறுவேறு வடிவங்களில் தொடர்ந்தன. இலங்கையின் மலையகப்பகுதிகளில் குடியேறிய தமிழர்களிடம் சாதியம் வேரூன்றியது. குடியானவ சாதிகளான (வேளாளர், மொட்டை, சோழிய சைவ வேளாளர்) முக்குலத்தோர். (கள்ளர் மறவர் அகம் படியார்) சிறுபான்மையின செட்டி, ரெட்டி, வண்ணார், கொட்டி வண்ணார், அம்பட்டர் ஆகியோர் அடங்குவர். இக்குடியான வரான சாதியினர் தாழ்த்தப்பட்ட மக்களான பள்ளர், பறையர், வண்ணார் இவர்களைக் கீழான சாதிகளாவே கருதினர்.

இத்தாழ்த்தப்பட்ட தமிழர்களில் 90 சதவீதத்தினரில் 70 சதவிகிதம் பறையர்கள். ஏனையோர் 20 சதவிகிதம் (வெஜனன் இராவணா 2007 : 46) இவ்வாறாக தமிழக சாதியத்தின் நீட்சி இலங்கையின் புலம்பெயர்ந்த பகுதிகளிலும் தொடர்ந்து நீடித்தது.

மலையகப்பகுதிகளின் சாதியக் கொடுமையைவிட இறுக்கமான சாதியமைப்பு இலங்கையில் பாரம்பரிய சமூக அமைப்பிலும் நிலவியது. தமிழகத்தில் பார்ப்பனர்கள் மேலாதிக்கம் செலுத்தியதைப் போல இலங்கையில் சைவவேளாளர்களே ஆதிக்க சாதியினராக விளங்கினர். இலங்கையில் பதினேழு பதினெட்டாம் நூற்றாண்டு களில் தீவிரமாக பணிபுரிந்துவந்த கிறித்துவச்சமயப்பணியாளர் களின் பணிகள் பாரம்பரிய சமூக அமைப்பின் அடித்தளத்தை அசைத்து பார்த்தன.

கிறித்துவச் சமயப்பணியாளர்களின் ஜனநாயகபூர்வமான செயல்பாடுகள் நல்லூர் ஆறுமுக நாவலர் (1822 - 1879) போன் றோரை அச்சம்கொள்ள செய்தன. கிறித்துவச் சமயப்பணி யாளர்களின் பாடசாலைகளுக்கு எதிராக 1848 ஆம் ஆண்டு வண்ணார்பண்ணையில் சைவ பிரகாச வித்யாசாலையைத்

தொடங்கி வைத்தார். இதுபோன்று 1900 ஆண்டுவரை 40 சைவ பாடசாலைகளைத் தொடங்கிய நாவலர் இப்பாடசாலைகளில் தாழ்த்தப்பட்டவர்களை அனுமதிக்கவில்லை.

பாரம்பரிய தமிழ்ப் பகுதிகளில் வாழ்ந்த மூலக்கதிர்காமர் என்ற வேளாள சாதிஆதிக்க வெறியர், 1890 ஆம் ஆண்டு அப்பகுதியில் வாழ்ந்த திமிலர்கள் மீது பல்வேறு கட்டுப் பாடுகளை விதித்துள்ளார். இக் கட்டுப்பாடுகளுக்கு அடங்க மறுத்த திமிலர் களை அடித்து கைநாட்டு வைக்க கட்டாயப் படுத்தினார். இதனை 'திமிலர் சமூகப்போராளி பல்லு வடிவேலன்' உடைத்தெறிந்தார்.

வட்டுக்கோட்டைக்கு அருகேயுள்ள சிந்துபுரத்தில், 1897 ஆம் ஆண்டு திமிலர்களின் திருமண ஊர்வலம் தங்கள் பகுதியை கடந்து செல்லக்கூடாது என அப்பகுதியில் வாழ்ந்த அகம் படியர்கள் தடுத்தனர். இதற்கு எதிராக திமிலர் சமூகப் பெண்கள் சிலம்பம் உலக்கையுடன் போரிட்டுள்ளனர். திமிலர் சமூக வீராங்கனை 'வைராத்தை' கர்ப்பிணியாக இருந்த நிலையில் சிலம்பம் சுற்றியுள்ளார். இவ்வாறாக தீண்டாமைக் கொடுமை களுக்கு எதிராக யாழ்ப்பாண அடித்தட்டுத் தமிழர்கள் கிளர்ச்சி செய்துள்ளனர்" (மகாராசன் 2007 : 74-75)

தாழ்த்தப்பட்ட மாணவர்களில் முதன்முதலாகக் கல்வி கற்கவந்த ஒரு மாணவனுக்கு எதிராக யாழப்பாண உயர்சாதித் தமிழர்கள் வகுப்புக்களைப் புறக்கணிப்பு செய்தனர். இதனை

> "வட்டுக்கோட்டையில் உருவாக்கப்பட்டிருந்த பிரசித்தி பெற்ற அமெரிக்க மிஷனரிப் பாடசாலையான யாழ்ப்பாணக் கல்லூரியில் 1910 ஆம் ஆண்டில் எஸ். ஆர்.ஜேக்கப் என்ற தாழ்த்தப்பட்ட மாணவன் சேர்க்கப்பட்டான். அம்மாணவனின் தந்தை அம் மிஷனில் ஒரு வேலையாளாக இருந்தமையினால் அதன்மூலம் தன் மகனுக்கு அனுமதி பெறமுடிந்தது. அவ்வேளை வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபராக பிக்னல் பாதிரியார் கடமை ஆற்றிவந்தார். ஜேக்கப் என்ற அத்தாழ்த்தப்பட்ட மாணவன் சேர்க்கப்பட்டதை எதிர்த்து அக்கல்லூரியில் கல்விகற்று வந்த உயர்த்தப்பட்ட சாதி மாணவர்கள் அனைவரும் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வெளி நடப்பு செய்தனர். ஆனால் சேர்க்கப்பட்ட தாழ்த்தப்பட்ட மாணவன் தனி ஒருவனாக பாடசாலையில் படிக்கும் வரை தொடர்ந்து பாடசாலையை நடத்துவேன் எனக் கூறி நின்ற. அதிபரின்

உறுதியான நிலைப்பட்டால் உயர்த்தப்பட்ட சாதிய மாணவர்கள் மீண்டும் கல்வியைத் தொடர பாடசாலைக்கு வர வேண்டியதாயிற்று''

(வெகுஜனன் இராவணா 2007 : 70)

இந்தியாவில் பரோடா அரசின் ஆட்சிக்குட்பட்ட பகுதியில் வாழ்ந்த ஆதிக்கசாதியினர் இதேபோன்று ஐந்து தாழ்த்தப் பட்ட மாணவர்கள் சேர்க்கப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித் துள்ளனர். இதை அறிந்த பரோடா மன்னர் இலங்கையில் பிக்னால் பாதிரியார் எடுத்த உறுதியான நிலைப்பாட்டைப் போல தாழ்த்தப்பட்ட மாணவர்களுடன் சேர்ந்து படிக்காத மாணவர்களுக்கு எதிர்காலத்தில் அரசு வேலைவாய்ப்பில் இடம் இல்லை என ஆணையிட்டார். பரோடா மன்னரின் இச்செயலை

"சகோதிரர்களே! இத்தகைய ஏழைகளுக்காய் இரக்கம் வைத்துள்ள நமதையன் பரோடா மகாராஜாவர்களுக்கு நன்றியறிந்த வந்தனாங் கூறுங்கள், வந்தனாங் கூறுங்கள் அவரதறிய அன்பும் மென்மேலும் பெருகவென்று ஆசி கூறுங்கள். ஆசிர்கூறுங்கள். அவரது ஆயுள் நீடிக்க வேண்டு மென்று உங்களன்பைப் பெருக்குங்குங்கள்! அன்பை பெருக் குங்குங்கள்! இதுவல்லவோ தயாளகுணம், இதுவல்லவோ பொதுசீர்த்திருத்தம் இவரல்லவோ தன்னவரன்னிய ரென்றும் பட்சபாதமற்ற ராஜன், இவரல்லவோ சகல மனுக்களும் ஒரே வகுப்பினரென்று கண்டறிந்த புண்ணியபுருஷன் இவரல்லவோ ஏழைகளை ஈடேற்றத்தோன்றிய தயாநிதி

(ஞான. அலாய்சியஸ் 1994 : 244)

என்று அயோத்திதாசர் தமிழன் இதழில் மகிழ்ச்சிபொங்கி பாராட்டியுள்ளார் சாதியக் கொடுங்கோன்மை புவியியல் பகுதிகளைப் கடந்தாலும் ஒரே தன்மையுள்ளதாகவே உள்ளமை இங்கு மனங்கொள்ளதக்கது.

தாழ்த்தப்பட்ட மாணவர்கள் உயர்சாதி மாணவர்களுடன் கல்விகற்பதைத் தவிர்க்க 'யாழ்ப்பாண சாதியம்' புதிய உத்தியை மேற்கொண்டது. தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு தனி சைவப் பாடசாலைகளைத் தாழ்த்தப்பட்ட சைவரான க. சூரன் என்பவரை வைத்து தொடங்கி நடத்துவதே அந்த புதிய உத்தியாகும்.

"வடபுலத்து கல்விச் சூழலிலேயே வடமராட்சியின் வதிரிக் கிராமத்தில் ஒரு சைவத் தமிழ்ப்பாடசாலையைத் தாழ்த்தப்பட்ட மக்களின் பிள்ளைகளுக்காக ஆரம்பிக்கும் எண்ணக்கரு உருவாகியது. அது செயலுரும் பெற்று 1917 ஆம் ஆண்டு தேவையராளி சைவ வித்தியாசாலையாக உருவப்பெற்றது. இதன் உருவாக்கத்தில் தாழ்த்தப்பட்ட தமிழ்ச் சைவராகத் தன்னை புணரமைத்துக் கொண்ட க. சூரன் என்பவரும் அவரோடு இணைந்தவர்களும் முன்னின்று உழைத்தனர்."

(வெகுஜனன் இராவணா 2007 : 72)

க. சூரனை தனி சைவப்பாடசாலை அமைக்க உதவியவர் கரவெட்டி சிதம்பர முதலியாராவார். இவர் கரவெட்டியில் தான் ஆரம்பித்த பாடசாலைக்குத் தாழ்த்தப்பட்ட மாணவர்களின் வருகையைத் தடுக்கவே மேற்கண்ட க. சூரன் மூலம் தனிபாட சாலை அமைத்தார் என்பதும் இங்கு நோக்கத்தக்கது.

யாழ்ப்பாணத்தில் 1910 ஆம் ஆண்டில் பறையர் வகுப்பைச் சார்ந்த ஒருவர் குடைப்பிடித்து சென்றார் என்பதற்காக வேளாளர்கள் தாக்கினர். இச்சம்பவத்தை யாழ்ப்பாணத்தி லிருந்து வெளிவந்த *சுதேசநாட்டியம்* வெளியிட்ட செய்தியை *தமிழன்* இதழில் 23 மார்ச் 1910 மறுவெளியீடு செய்து இச்சம்பவத்தைக் கண்டித்து அயோத்திதாசர் எழுதியுள்ளார் (ஞான. அலாய்சியஸ் 2003 : 28)

பருத்திதுறையில், 1910ஆம் ஆண்டு வண்ணார் சாதியினர் கல்வீடு கட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்த வேளாளர்களை வண்ணாரசாதி பெண் உலக்கையுடன் எதிர்த்துள்ளார். சாதி ஒடுக்குமுறைகளுக்கு எதிராக அங்காங்கு தாழ்த்தப்பட்ட மக்கள் வேளாளர்களுக்கு எதிராக கிளர்ச்சி செய்துள்ளனர். வரணி என்ற ஊரில் 1914 ஆம் ஆண்டு பள்ளர்களும், நளவர்களும் வேளாளார்களை எதிர்த்துள்ளனர். மேலும் தனக்குறிச்சியில் தட்டார்களும், கெருடாவில் பள்ளர்களும், பண்டாரிதிரிப்பில் தச்சர்களும் வேளாளர்களுக்கு எதிராக 'கலகம்' செய்தனர்.

இலங்கையின் பாரம்பரியத் தமிழ்ப்பகுதிகளிலும், தமிழர்கள் குடியேறிய பகுதிகளிலும் சாதிய அமைப்பின் கொடுங்கோன்மைக் கல்வி, சமய, பண்பாட்டு தளத்தில் நீக்கமற நிறைந்திருந்தது. இவ்வாறாக சாதிய முரண்பாடுகளும், மோதல்களும் நிகழ்ந்த

காலகட்டத்தில் இலங்கையில் *'ஆதிதிராவிடன்'* இதழ் தோன்றுவதற்கான சூழல் உருவாகியது.

இதனைத் தொடர்ந்து இந்தியாவிலிருந்து புலம் பெயர்ந்து சென்ற தமிழர்கள் பலரும் இணைந்து, 1912 ஆம் ஆண்டு 'இலங்கை இந்தியச் சங்கம்' என்ற அமைப்பை உருவாக்கினர். இந்த அமைப்பில் இந்து தமிழர்களும், கிறித்தவத் தமிழர்களும் இடம் பெற்றிருந்தனர். இந்த அமைப்பின் சார்பில் 1919ஆம் ஆண்டு ***ஆதிதிராவிடன்*** இதழ் வெளியிடப்பட்டது.

III

இந்திய இலங்கைச் சங்கத்தைச் சார்ந்தவர்களின் ஒத்துழைப்புடன் இலங்கையிலும், இந்தியாவிலும் வாழும் ஆதிதிராவிட மக்களின் விடுதலையை முன்னிறுத்தி இந்த இதழ் வெளியிடப்பட்டது. இந்த இதழைத் தொடங்க சுவாமி சகாஜாநந்தர் ஆலோசனைகளை வழங்கியுள்ளார். அவருடைய அறிவுறுத்தலின் பேரிலேயே இவ்விதழ் தொடங்கப்பட்டது என்பதையும், ***ஆதிதிராவிடன்*** இதழின் தோற்றச்சூழல் நோக்கங்களையும் முதல் இதழ் வெளியிட்டுள்ளது.

> "இச் சங்கத்தின் அங்கத்தவர்களுக்கு மட்டும் முன்னேற்றத்தின் விஷயமாய் போதித்து வருவதானால் யாது பயன் என்றும் இவ்விலங்கையில் உள்ள பல்லாயிரம் ஆதிதிராவிடர்களுக்கும் இந்தியாமுதலிய இதரதேசங்களிலுள்ள பலகோடி ஆதிதிராவிடர்களும் நம் எண்ணத்தை ஊட்டி உழைக்கவேண்டிய வழிவகையின்ன தென்றறியாது அங்கலாய்த்து கொண்டிருக்கும் சமையம் "இனம் இனத்தைக் காக்கும் வேலி பயிரைக் காக்கும் என்ற முதுமொழிக் கிணங்க தெய்வானுகிரகத்தால் ஆதிதிராவிட வம்சத்திலேயே வதித்தவரும், நம் குலத்தவர்களின் நன்மைக்காக தன்னுயிரையும் உடலையும் தந்து பாடுபட்டுழைத்து வருகின்றவரும் நம் குலகுருவாலய மாட்சிமை தங்கிய ஸ்ரீ ம ஸ்ரீ சுவாமிசகஜாநந்தம் (A Great Panchama Preacher and Reformer) அவர்கள் நம் குறையை நீக்க முன் வந்திருப்பதை பார்க்க நம் குலம்இடேற இதுவே நல்லகாலமென யூகிக்க வேண்டியிருக்கிறது. அம்மகானின் தூண்டுதலினால் பலகோடி ஆதிராவிடர்களும் நன்மையடைவும், நல்லவை

நாடவும் முன்னேற்றமடையவும் சாதன மாயிருக்க கூடியது பத்திரிக்கையே என்று நம் குலம்பெயரையே பூண்ட *ஆதிதிராவிடன்* என்னும் ஓர் மாதாந்திர சஞ்சிகையை பிரசுரித்து வர முயன்றனம்''

என அறிவித்துள்ளது. மேலும் ஆதிதிராவிடர்களின் நன்மைக்காக வெளிவரும் இந்த இதழ் வெளியீட்டு முயற்சிக்கு எந்தவகையிலும் தாழ்வுவராதபடி தங்களுக்கு ஆதரவு தருமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது. மேலும் தங்களால் இயன்ற நிதிஉதவிகளையும் புதிய சந்தாதாரர்களையும் சேர்த்து உதவ கேட்டுக் கொண்டது.

ஆதிதிராவிடன் இதழ் 1/8 அளவில் 16 பக்கங்களைக் கொண்ட முதல் இதழ் ***ஆதிதிராவிடன்*** ஒரு சிறந்த மாதாந்திரத் தமிழ்ப் பத்திரிக்கை என்ற வாசகத்துடன் 1919 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் வெளியாகியது. "தெய்வமிகழேல், சக்கரநெறிநில் ஊக்கமது கைவிடேல்" என்ற முழக்கத்துடன் கொழும்பு அல்பட்ர்ரோடு பொல்வத்தை இந்திய இலங்கைச்சங்கத்தின் சார்பில் வெளி வந்துள்ளது.

இந்த இதழை எஸ். பி. கோபாலசாமி என்பவர் நடத்தி யுள்ளார். இவருக்குத் துணையாக பெ. கனகசபை என்பவர் உதவி ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார். இந்த இதழ் கொழும்பு எண் 27, பார்பரஸ்ட்ரீட் ராபட் அச்சியந்திர சாலையிலிருந்து அச்சிடப்பட்டு. ஒவ்வொரு மாதமும் 15 ஆம் தேதி வெளி வந்துள்ளது. ***ஆதிதிராவிடன்*** இதழின் முதல் கால்பக்கத்தில் இதழின் பெயர் முழக்கங்கள் இடம் பெற்றிருந்தன. இதழுக்கு பக்க எண்கள் தொடர்எண்களாக இட்டுள்ளனர். சில இதழில் ***ஆதிதிராவிடர்*** பஞ்சாங்கம் வெளிவந்துள்ளது.

## ஆதிதிராவிடன் இதழ்கள் முதலாண்டு

***ஆதிதிராவிடன்*** இதழின் முதல் இதழில் "சந்தாதாரர் களுக்கு விண்ணப்பம்", "இல்லற ஒழுக்கம்", "உள்ளூர் வர்த்த மானங்கள்", 1918, 1919 ஆம் ஆண்டு இலங்கை தென்னிந்திய ஐக்கிய அறிக்கைகள் ஆகியவை வெளிவந்துள்ளன.

இரண்டாவது இதழில் 'திருக்குறள் கடவுள் வாழ்த்து' என்ற எழுதிய தலைப்பில் 'நந்தனார் மட சாது' கட்டுரை வெளியாகியுள்ளது.

மேலும் 'காரணத்திலக்கணம், வேண்டுகோள்', பகுதிகள் வெளி யாகியுள்ளன.

மூன்றாவது இதழில் 'திருக்குறள் கடவுள் வாழ்த்தின் தொடர்ச்சி' சீவகாருண்ணிய உபந்நியாசம் (சுவாமி சகஜாநந்தர்), "பஞ்சமர்கள், ஆதிதிராவிடன் முன்னேற்றம்" (சத்திய வாசகம்) நமது முன்னேற்றத்திற்கு வேண்டிய முக்கியமான சில சுருக்கமான விஷயங்கள், இல்லற ஒழுக்கம் கட்டுரையின் தொடர்ச்சி, 'அறம் செயவிரும்பு' பத்திராதிபருக்கு சாமுவேல் என்பவரது கடிதம் ஆகியன இடம் பெற்றுள்ளன.

நான்காவது இதழில் "ஆதிராவிடன் முன்னேற்றம்", "அறம் செயவிரும்பு" "இல்லற ஒழுக்கம்" "நமது முன்னேற்றத்துக்கு வேண்டிய முக்கியமான சில சுருக்கமான விஷயங்கள்" கட்டுரைகள், "சீவகாருண்ய உபந்யாசம்" (சகஜநந்தர்) ஆகியவை இடம் பெற்றுள்ளன. "ஆதிதிராவிடர்களின் முன்னேற்றம்" (பி.ஆதி மூர்த்தி) "தென்னிந்திய ஒடுக்கப்பட்ட சங்கத்தின் செயலர் ஸ்ரீ எஸ். தங்கமுத்துவின் வேண்டுகோள்", "பொது விஷயங்கள்", "அரசியல் பக்கம்" ஆகிய தலைப்புக்களிலான ஒரு பக்க செய்திகளும் இடம் பெற்றுள்ளன.

ஐந்தாவது இதழில் "இல்லற ஒழுக்கம்" 'சீவகாருண்ய உபந்யாசம்' (ஏ. ராமசந்திர ஐயர்) "ஆதிதிராவிடர்களின் முன்னேற்றம்", கல்வி (எஸ். எஸ். பெரியசாமி) "முதன்மையான உயர்ந்த பதவிக்கு ஆதாரமான சில விஷயங்கள்" (கோவை ஆர். வீரைய்யன்) ஆகிய கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

ஆறாவது இதழில் நீதிக்கட்சித் தலைவர் டி.எம். நாயர் மறைவுக்காக டி.எம். நாயரின் படத்தை முதல்பக்கத்தில் வெளி யிட்டுள்ளது. *ஆதிதிராவிடன்* இதழின் இரண்டாண்டு இதழ்களில் காணப்படும் ஒரே படம் டி.எம். நாயருடையதே. டி.எம்.நாயருக்கு டி.எம். பாலசுந்தரம் என்பவர் எழுதிய அஞ்சலிபாடலை இவ்விதழ் வெளியிட்டுள்ளது. "நமது இயக்கம்", "யுத்த சமாதானக் கொண்டாட்டங்கள்" "ஹானரெபின் எம்.சி. ராஜா" என்ற தலைப்பிலான கட்டுரைகள் இந்த இதழில் இடம் பெற்றுள்ளன.

ஏழாவது இதழில் ஆதிதிராவிடன் "நமது பத்திரிக்கை முன்னேற்றம்" "ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்"

நீதி வாக்கியம் "பெரியபுராண உண்மை" "விதைக்கிற காலத்தில் வெளியூருக்கு..." என்னும் தலைப்பிலான கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. "டாக்டர் நாயரின் மெமொரியல் பண்ட்" என்ற தலைப்பில் சர்.பி. தியாகராசர் வெளியிட்ட தென்னிந்திய நல உரிமை சங்கத்தின் துண்டறிக்கை (இதுவரை அறியப்படாத அரிய ஆவணம்) இந்த இதழில் மட்டுமே இடம் பெற்றுள்ளது.

எட்டாவது இதழில் வெளிவந்துள்ள கட்டுரைகளின் தலைப்புக்கள் வருமாறு: "கடவுள்" "காலத்தாலும் ஞானத்தாலும்" பழந்தமிழ்க்குடியார்" (நல்லையா அருளாந்தம்) "ஆமை" (பொ. கனகசபை) "என்ன செய்ய வேண்டும் (ஜெபி) "வைதீகக்கல்வி" (எஸ். எஸ். பெரியசாமி) "முதன்மையான உயர்பதிவியடைய சில ஏதுக்கள்" (கோ. வீரய்யன்) "சிறுவர்கள் முக்கியமாய் அனுசரித்து வரவேண்டியவிதிகள்", "சந்தேகங்களுக்குவிடை", "பயிர்த்தொழிலும் கல்வியும்", பத்திராபரின் அறிக்கை.

ஒன்பதாவது இதழில் "கடவுள் வழிபாடு", "கடவுள் வணக்கம்", "ஈயார்தேட்டை தீயார் கொள்வார்" (வீசுப்பையன்) "இந்தியாவின் முன்னேற்றம்", "ஆதி திராவிடர் முன்னேற்றம்" "மாத்ருபாஷாபி மானம்", "இல்லறஒழுக்கம்" ஆகிய கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

பத்தாவது இதழில் "கடவுள் வழிபாடு", 'இந்தியாவின் முன்னேற்றம்', ஆங்கிலக் கல்வியும் ஆதிதிராவிடர்களும் (அருணாச்சலம்) "பெண்கல்வி", "பெண்கல்வி பற்றிய சம்பாஷணை", "ஆதிதிராவிடன் நிதி" ஆகிய கட்டுரைகள் வெளிவந்துள்ளன.

பதினோறாவது இதழில் வெளிவந்த கட்டுரைகளின் விவரம் வருமாறு: "நமது சஞ்சிகையும் முக்கிய வேண்டுகோளும்", "இந்திய சங்கத்தாரின் வேண்டுகோள் "பெண்கல்வி", இந்தியாவின் முன்னேற்றம், "மாத்ரு பாஷாபிமானம்" (தொடர்ச்சி) பத்திராதிபரின் முக்கிய வேண்டுகோள்.

பன்னிரெண்டாவது இதழில் "அன்பு" "நீதிவாக்கியம்" "இந்தியாவும் இந்தியர்களும், "தாய்செய்த நன்றி" "மாத்ருபாஷா பிமானம்" "ராமநாதபுரம் ஜில்லாவில் ஆதிதிராவிடரை படுத்தும் இம்சைகள் ஆகிய கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

முதலாண்டு தொகுப்பில் இதழ் 11 இல் வெளிவந்துள்ள விளம்பரம் "வருண நிலை" என்ற தலைப்பிலான நூல் விளம்பரம்

குறிப்பிடத்தக்கது. இந்த விளம்பரம் யாழ்ப்பாணத்தை சார்ந்த ஆர்.எம். திரையர் (R.M. Thyriar) என்பவரால் வெளிடப்பட்டுள்ளது.

வருண நிலை

விலை கால் ரூபாய் விலை 5 சதம்

ஜாதியென்பது பெரும் வியாதி இவ்வியாதியை விளைத்து பரப்பியவர் பார்ப்பார். இப்பணி கேதாரி போற் பரவி இந்திய விலங்கைக் சுதேசிகளைத் தலைகீழாய் வீழ்த்தி விட்டது. கல்வியிற் சிறந்த புண்ணிவான்கள் உயர்மரபின றென்றும், கல்லாத துட்டர் இழிகுலத்தவரென்றும் மேல் நாட்டில் வழங்கப்படும்... சாதி பேதத்தை ... "வருண நிலையை வாசிப்பார்களாக பார்ப்பானும் வள்ளுவனும் மாமன் மருமகன், வேளாளனும் பள்ளனும் சுற்றத்தான், பிரவர், கரையார், சத்தியர், நழவர், இராணுவ மரபினர்,.... அரச மந்திரிகள் இப்புத்தகம் தேவைப்படின் அடியிற் கண்ட முகவரிக்கு எழுதவும்

R.M. Thyriar
Juffana.

மேலும் ஆதிதிராவிடன் இதழை வாழ்த்தி எழுதப்படும் கடிதங்கள் பல முதலாண்டு இதழ்களில் இடம் பெற்றுள்ளன. ஜெ. பி. யாழ்ப்பாணன் தெல்லிப்பவையிலிருந்து எழுதிய கடிதம் வருமாறு.

'தங்குறை தீர்வுள்ளார் தளர்ந்து பிறர்கு நூஉம் வெங்குறை தீர்க்கிற்பர் விழுமியோர்" பழங்குடி ஏழையானும் எம் போலியரான பரம்பரை திராவிடருமான நாம், குருடன் யாழ்ப்பாடிப்பெற குறுய்கையனாட்சி செலக்கிடைத்த இம் மணற்திடரான யாழ்ப்பாண நாட்டில் ஐயையோ, காருண்ய ஆங்கில ஆட்சியின் கீழிருந்தும் நெட்டுயிர்த்து எம் அடிமைத்தனத்தின் அழிவு காலம் வரப் பிரானை வேண்டும். இச்சமயத்து துறை காணதலையும், மாறுமக்கோர் துறையெதிட்டதுபோல உன்திடமொழிகளால் இன்புற்றோம். எம் நிலையை வெளியிட உன்போலும் உள்ளன் பாளரைத் தேடியும் காண்டிலம். வெளிப்போந்து பேச வந்த உன் இஷ்டர் பலர் பெண்வேஷமிட்டு மூளையில் வெட்கம் கெட்டு பதுங்கலுற்றார். அடினேயதும், இஷ்டரினதும் வேண்டுகோட்கிணங்க இவ்விட பழைய நவீன

நாடகங்களால் மூடப்பட்டிருக்கும் புண்புலால் நாற்றம் சேயார் முகங்களிற் சிறிது வீசும்படி முகப்பே உணர்த்திவிட முன்னெட்போதும் பேரானந்தமே. இவ்வகைச் சிரத்தினும் கண்ணுற்றுமுள்ள எம் இஷ்டரின் நிலையை உலகில் எடுத்தோதி உன் உத்தண்ட வாக்கு வன்மையால் புக்கர் வாஷிங்டன் (Booker Washington) எனும் அமெரிக்கனைப் போல் நீ எடுத்த கருமத்தை நிறைவேற்றுவரயென் நம்பி அதிற்காய் எம்பிரானை ஆத்தியந்த பணிவுடன் வேண்டுகிறேன். மறு பிரதியில் உன் மதலை மொழிகளை எதிர்பார்க்கும் ஏழை நண்பன்.

T.Ellippali

9th June *1919* *யாழ்ப்பாணன்* J.P.

## இரண்டாம் ஆண்டு இதழ்கள்

*இரண்டாம் ஆண்டு இதழ்களில் இத்தொகுப்பில் மலர் 2 இதழ் 2 (ஏப்ரல் 1920) முதல் மலர் 2 இதழ்11 (டிசம்பர்) வரை வெளிவந்த இதழ்க் கட்டுரைகள் செய்திகளும் மட்டுமே இடம் பெற்றுள்ளன.*

*சங்கர கண்ணப்பர் எழுதிய 'நாம் சூத்திரர்களா? என்ற கட்டுரை இடம் பெற்றுள்ளது. இரண்டாவது இதழில் வெளிவந்த கட்டுரைகளின் விவரம் வருமாறு, "மானிட சரீரமும் அதன் வாழ்க்கையும்", "ஆதிதிராவிட சமூகத்தினரின் முன்னேற்றம்" "பெண்கல்வி" (தொடர்) ஆகியவை இடம் பெற்றுள்ளன.*

*மூன்றாவது இதழில் 'தெய்வமிகமேல்', பருவத்தேபயிர் செய், "பெண் கல்வி பற்றிய சம்பாஷணை" (தொடர்) "குலத்தளவே யாகுமாங் குணம்", "மாத்ருபாஷாபிமானம்" (தொடர்) "மமதை", போன்ற கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன. "ஆதிதிராவிடர்கள் இதனைக் கவனிப்பார்களா" என்ற ஆசிரியரின் குறிப்பும், "திருச்சி ஆதிதிராவிடர் மாநாடு" பற்றிய செய்தியும், "கிறித்தவர் களின் பொறாமைக்குணம்" என்ற தலைப்பிலான வாசகர் கடிதம். (கடிதக்காரர்களின் அபிப்பிராயத்திற்குப் பத்திராதிபர் உத்திரவாதி யல்லர் என்ற விளக்கக் குறிப்புடன்) வெளியிடப்பட்டுள்ளது. மேலும் "இலங்கை இந்திய சங்கத்தின் குறிப்புகள்", "ஆதிதிராவிடன் நலநிதி" அனுப்பிய பற்றிய குறிப்புக்கள் ஆகியவை இடம்*

பெற்றுள்ளன. கோலார்தங்க வயல் ராபட்சன்பேட்டையில் வசித்து வந்த டி,லாசர்ஸ் என்பவர் ரூபாய் 8 அனுப்பியுள்ளார்.

நான்காவது இதழில் 'பண்டைய காலத்தமிழர் வாணிகமும் கைத்தொழிலும்' (சனக சங்கரகண்ணப்பர்) என்ற கட்டுரையும் 20.6.1920 சுதேசமித்திரனில் ஸ்ரீமான் கோ. குப்புசாமி என்பவர் சகஜாநந்தரை 'வள்ளுவர் பஞ்சமரா' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரைக்கு வி.யஸ் பெருமாள் நாயனார் 'வள்ளுவர் பஞ்சமரே பறையரே' என்ற தலைப்பில் கட்டுரை எழுதியுள்ளார். "இராம நாதபுரம் கல்லல் கிராமம் உயர் குலத்தோ ரென்றழைக்கப்படும் உண்மைச் சூனியோர்கோர் உத்தம அறிக்கை" (க.த. சந்திரசேகப்பாவலர்), "மானத தரிசனம் அல்லது ஸ்பிரிட்லஷம்" (நெல்லையா அருளாந்தம்), "கிறித்தவ சகோதரர்களே இதனைக் கவனியுங்கள்" (ஸ்ரீமான் எஸ்.டி.எம்) "இலங்கை இந்திய சங்கத்தின் கூட்டசெய்திகளும்" தென்னிந்திய நல உரிமைசங்கத்தின் சர்.பி.தியாகராசருக்கு சர் பட்டம் வழங்கப்பட்ட பற்றிய செய்திக் குறிப்பும் வெளியிட்டுள்ளது.

ஐந்தாவது இதழில் வெளிவந்த கட்டுரைகள் வருமாறு: "பண்டைத் தமிழர் வாணிகம்" பற்றிய சங்கர கண்ணப்பரின் கட்டுரை நாக்பூரில் கூடிய 'எல்லா இந்திய தாழ்ந்த வகுப்பார் மாநாடு என்ற தலைப்பில் அம்மாநாட்டில் கோலாப்பூர் மகராசர் சாகுவின் நீண்ட உரை, "திராவிட பாஷாபிவிர்த்தி" "பெண் கல்வி சம்பாஷணை", "ராமநாதபுரம் ஜில்லாவில் ஆதிதிராவிடர்களைப் பற்றிய இம்சைகள்" ஆகியவை இடம் பெற்றுள்ளன.

ஆறாவது இதழில் 'சிருஷ்டிகர்த்தாவின் திருவடி வணக்கமும் அத்திருவடியினின்று முதித்த சூத்திரரும்' (ஆசிரியவுரை), பண்டையக்காலத்தமிழர் வாணிகம் பற்றிய சங்கரக் கண்ணபரின் கட்டுரை, ஆதிதிராவிடர் சகோதிரிகளுக்கோர் விண்ணப்பம் (அத்வைதானந்தா), கடன் படேல், திராவிட பாஷாபிவிருத்தி, ராமநாதபுரம் ஜில்லாவில் ஆதிதிராவிடர் படும் இம்சைகள் ஆகிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. நன்னெறி என்ற தலைப்பில் பழ. சிங்காரம் ஆற்றிய உரை இடம் பெற்றுள்ளது. மேலும் இந்திய இலங்கை சங்கத்தின் கூட்ட நிகழ்ச்சிக் குறிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

ஏழாவது இதழில் "ஆதிதிராவிட மகாஜனங்களுக்கோர் வேண்டுகோள் என்ற தலைப்பிலான மிக நீண்ட ஆசிரிய உரை இடம் பெற்றுள்ளது. 'கடன்படேல்' (தொடர்) திருமிகு ஞானியார் என்ற தலைப்பிலான செய்தி குறிப்பு இடம்பெற்றுள்ளது. திராவிட பாஷாபிவிர்த்தி (தொடர்) காலஞ்சென்ற ஜெ. எம். நல்லுசாமி அவர்களின் மறைவுக்கு அஞ்சலிக்குறிப்பு, இலங்கை இந்திய சங்கத்தின் நிகழ்ச்சி குறிப்பு ஆகியவை இடம் பெற்றுள்ளன.

எட்டாவது இதழில் "ஏழாவது இதழின் ஆசிரிய உரையின் தொடர்ச்சி", ஓர் வேண்டுகோள் (ஞானியார்), ஆதிதிராவிடர் களுக்கோர் விண்ணப்பம்" (அ, ஆபிரகாம்), திராவிட பாஷாபி விர்த்தி (மனுவேல்தாசன்), செல்வரசன் கோட்டை ஸ்ரீ நந்தனார் ஐக்கியச் சங்கம், இலங்கை இந்தியச் சங்கத்தின் கூட்ட நிகழ்ச்சி நிரல், 'ஆதிதிராவிடர் பூர்வசரித்திரம்' நூலுக்கான மதிப்புரை ஆகியவை இடம்பெற்றுள்ளன.

ஒன்பதாவது இதழில் "என்வரலாறு என்ற தலைப்பிலான ஆசிரியஉரை இடம் பெற்றுள்ளது. "தீவிதெ எற் இம்பெரா (தேவதத்தன்) 'நல்லாரிணக்கம்' (சனக சங்கர கண்ணப்பர்), 'ஆதிதிராவிடன் விண்ணப்பம்' (ஸ்வாமி அத்வைதாந்தா), தந்தை தாய் பேண் (ஷி.வி. கோவிந்தராஜா) ஆகிய கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. 'வீரத்தாய்மார்' என்ற தலைப்பில் பழ. சிங்கார வடிவேல் ஆற்றிய உரை இடம்பெற்றுள்ளது. மேலும் ஓட், ஓட், ஓட் (ஞானியார்) ஓர் வினா, இலங்கை இந்திய சங்கம் பற்றிய குறிப்புக்கள் இடம் பெற்றுள்ளன.

பத்தாவது இதழில் "இனியேறும் கவனிப்பார்களா என்ற ஆசிரிய உரையும், ஊக்கமது கைவிடேல் (தேவதத்தன்) நல்லாரிணக்கம் (சங்கரகண்ணப்பன்) ஆதிதிராவிடர்களும் இந்து ஆலயங்களும் (ஆதிதிராவிட ஈசுவரபக்தர்), ஜாதிபேதம் (என். வெங்கடரமணன்) ஆகிய கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. மேலும் சங்கங்களும் அங்கங்களும் பற்றிய ஜெ. ஏசுவடியானின் குறிப்பு ஆகியவை இடம் பெற்றுள்ளன.

பதினோராவது இதழில் "நமது கடமை பெய்னறலென்ன என்ற தலைப்பிலான ஆசிரியவுரை இடம் பெற்றுள்ளது. 'நல்லாரிணக்கம்', 'உண்மையின் உழைப்பும்' பொய்யின் இழிவும்

(என். வெங்கடரமணன்), 'ஆதிதிராவிடர் இந்தியரே' (அத்வை தானந்தா), 'ஜாதிபேதம்' (நீலகிரி க.த. சங்கரதாச பாகவதன்) என்ற கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. 'இரஞ்சித மஞ்சரி' என்ற பெயரில் பல்சுவை துணக்கு நீதிபோதனைக் கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. இந்த இதழின் நான்கு பக்கங்கள் பார்வைக்கு கிடைக்கவில்லை.

ஆதிதிராவிடன் இதழ் ஆதிதிராவிட மக்களுக்கான சிறப்பு பஞ்சாங்கம் வெளியிட்டுள்ளது. ஆதிதிராவிடன் இதழ் 2 மலர் பஞ்சாகத்தில் ஜுன் 3 ஆம் நாள் ராஜா பிறந்தநாள் என்ற குறிப்பு இடம்பெற்றுள்ளது.

*ஆதிதிராவிடன்* இதழ் அஞ்சல் மூலம் தமிழகம், கோலார் தங்கவயல் பகுதி, பர்மா ஆகிய இடங்களுக்குக் கொழும்பு அஞ்சல் நிலையம் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. ஆதிதிராவிடன் இதழுக்கு ஏஜெண்ட்டுகளாக செயல்பட்டவர்களின் பெயர்களும் முகவரிகளும் வருமாறு:

ஜெ. ஏசுவடியான் ஜான் 180651

நிர்! டாட்ரோட், கொள்ளுப்பட்டி, கொழும்பு

எஸ்.எம். துரைசாமி

ஜெனரல் மெர்ச்செண்ட்

நிர் 54, கலஹா (Galaha) சிலோன்

கி.பி. சுப்பிரமணியம் தேசிகர்

நம்பெருமாள் கோவில்

அன்றிரசன்பெட், கெ.ஜி.எப். (K.G.F)

வி.பி. பொன்னையா பிள்ளை

ஹாப், (Hope) ஹிவாவத்தை (Hewaheta) சிலோன் மேலும் இலங்கையின் ஒன்பது மாநிலங்களிலும் ஒன்பது முகவர்களை நியமிக்க அ. ஆபிரகாம் என்பவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆதிதிராவிடன் இதழ்மீது பாராட்டி பண்டிதர் சி. சின்னையா பிள்ளை என்பவர் சாற்றுக்கவி பாடியுள்ளார். அக்கவிதை வருமாறு

*"உலகப் புகழ் தமிழ் மாந்தர் முப்பாலு முணரமுன்ன*
*ரிலகும் புகழ்த் திருவள்ளுவவனராய் செய்த வின்றமிழாய்*
*நலம் விஞ்சு மாத்த திராவிடன் நான்ல மீதின்று*
*வலம் விஞ்ச யார்க்கு முதல்வன் மலர்க்கழல்"*

மேலும் இந்த இதழைத் தொடங்க வித்திட்டவரும். சிதம்பரத்தில் நந்தனார் பாடசாலையின் தலைவராக இருந்த ஸ்ரீசுவாமி சகஜாநந்தார் எழுதிய சாற்றுக்கவி

*'சீராளும் ஆதிதிராவிடனே வள்ளுவரன்*
*பேராரும் நம் குலத்தும் பெம்பாள் போல் பாரும்*
*நீடுழியாக வரம் பேசி புகழோடு*
*நீடுழி வாழ்க் நிலத்து*

மேலும் பலர் அவ்வப்போது இந்த இதழைப் பாராட்டிக் கவிதைகள் எழுதியுள்ளதை வெளியிட்டுள்ளது.

*ஆதிதிராவிடன்* இதழ் குறித்து 28.03.1919 *திராவிடன்* இதழில் வெளிவந்த அறிமுகக்குறிப்பையும், சென்னை *சுதேசமித்திரன்* 10.05.1919 ஆண்டு வெளியிட்ட குறிப்பையும் *ஆதிதிராவிடன் சஞ்சிகையைப் பற்றி பத்திராதிபர்கள் அப்பிராயம்* என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளது. *ஆதிதிராவிடன்* இதழ் குறித்து *திராவிடன்* இதழ் எழுதிய குறிப்பு வருமாறு:

'ஆதிதிராவிடன் இப்பெயர் வாய்ந்த ஒரு மாதாந்த பத்திரிக்கை இலங்கை தென்னிந்திய ஐக்கிய சங்கத்தாரன் ஆதிதிராவிடர்களின் முன்னேற்றத்தைக் கருதி பிரசுர்க்கப் படுமென நாம் முன்னரே நமது பத்திரிக்கையில் எழுதி யிருந்தோம். அவ்வாறே வெளியான அப்பத்திரிக்கைகள் முதல் இதழ் ஒன்றை யாம் வரப் பெற்றோம். அது 16 பக்கங்களையுடையதாக மிருப்பதோடு மிக அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது பத்திரிக்கையின் போக்கே அதுதன் சந்தாதாரர்களுக்கு மிக உபயோகமான விஷயங்களை எழுத போகிறதென்று நம்பு கின்றோம்.

## *ஆதிதிராவிடன் மூன்றாம் ஆண்டு இதழ்கள் (1921)*

*ஆதிதிராவிடன்* இதழ்கள் மூன்றாம் ஆண்டு இதழ்கள் 1921 ஆம் ஆண்டு மார்ச் 15 முதல், 15 நவம்பர் 1921 வரை வெளிவந்ததாக அறிய முடிகிறது. (ஆ. இரா. வேங்கடாசலபதி

*2004 : 48)* தொடக்க காலகட்டத்திலிருந்து நீதிக்கட்சிக்கு சார்பான கருத்துக்களை வெளியிட்டு வந்த இவ்விதழ் 1921 ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற பின்னி ஆலை வேலை நிறுத்தத்தில் அக்கட்சி தலைவர்களுக்கும், தாழ்த்துப்பட்ட வகுப்புத் தலைவர்களுக்கும் ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து அக்கட்சிக்கு எதிர்நிலைபாட்டை எடுத்தது.

மேலும் நீதிக்கட்சியைப் போல தினசரி நடந்த முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும் இதற்கு அனைத்து தாழ்த்தப்பட்ட மக்களும் ஒன்றிணைந்து உட்சாதி, மத, வர்க்கப் பாகுபாடுகளை விட்டு ஒற்றுமையுடன் செயல்பட வேண்டுகோள் விடுத்துள்ளது.

> 'திராவிடர் இவ்வளவு முன்னேற்றமடைந்ததற்கும் அடைந்துவருவதற்கும் காரணம் அவர்களால் நடத்தட் பெற்றுவரும் ''ஜஸ்ற்றிஸ்'' ''திராவிடன்'' பத்திரிகைகளே. அதுபோல நாமும் நம் குறைகளை கவர்மெண்டாருக்கும் எடுத்தோதி நன்மைபெற நமக்கென ஆங்கிலத்திலும், திராவிடத்திலும் தினசரி இன்றேல் வாரப் பத்திரிக்கைகள் இன்றியமைதனவாம். மேற்கூரிய விஷயத்திற்கு நம்மவ ரெல்லாரும் (பள்ளர் பறையர் சக்கிலி என்ற முப்பிரிவாகும்) எச்சமயத்தாராயினும், என்னிமையிள்ளோராயினும் ஒன்றுபட்டு ஒற்றுமையுடனும் விடாமுயற்சியுடனும் பிரச்சார வேலை செய்யவேண்டும்.

*(ஆதிதிராவிடன் 15 நவம்பர் 1921) (ஆ. இரா. வேங்கடாசலபதியின் மேற்கோள்)*

நவம்பர் மாதத்துக்குப் பிறகு 1921 ஆம் ஆண்டு வரை வெளிவந்த ***ஆதிதிராவிடன்*** இதழ் 1922 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் ***இந்தியன் ஒடுக்கப்பட்ட மக்களின் ஊழியன்*** The Indian - *The servent of the Depressed classes* of India என்ற புதிய பெயருடன் வெளிவந்ததாக அறியமுடிகிறது.

ஆதிதிராவிடர்களின் கல்வி, சமயம், பெண் முன்னேற்றம், பொருளாதார வளர்ச்சி, இன்னும் பிறதுறை வளர்ச்சி பற்றிய கட்டுரைகளையும் கருத்துக்களையும் வெளியிட்ட இந்த இதழின் இரண்டாம் ஆண்டு இதழ்களில் *(1920)* இதற்கு நான்கு ஆண்டுகள் முன்புவரை தமிழகத்தில் தீவிரமாகச்

செயல்பட்டு வந்த பண்டித அயோத்திதாசரின் *'தமிழன்'* இதழ் குறித்து ஒருதுண்டு செய்தியைக் கூட இவ்விதழ் வெளியிட வில்லை. இந்நூலைப் பதிப்பிக்க உதவிய ***ஆதிதிராவிடன்*** இதழின் மூலப்பிரதி மங்கியும், சிதைந்த நிலையிலும் இருந்தது. இப்பிரதியை நகலச்சு செய்து, பின் விரிவுபடுத்தி நகலச்சு செய்து அதன் பின்தட்டச்சு செய்யப்பட்டது. மாத இதழாக வெளிவந்த ***ஆதிதிராவிடன்*** இதழின் கட்டுரைகளில் எழுத்துப்பிழைகளும், ஒற்றுப்பிழைகளும், இலக்கணப் பிழைகளும் இடம் பெற்றுள்ளன. கட்டுரைகளின் தொடர்ச்சி அடுத்த அடுத்த இதழ்களில் இடம் பெறாமல் 'ஒழுங்கற்ற முறையில் இடம் பெற்றுள்ளது.

***'ஆதிதிராவிடன்'*** பயன்படுத்திய சொற்கள் பல இக்காலத் தமிழ் வாசகரை குழப்பக்கூடும். பதிப்பு நெறிமுறைகளுக்காவும், எவ்வித கருத்துத் திரிபுக்கு இடம் கொடுத்துவிடக் கூடாது என்பதற்காகவும் மூலப்பிரதியில் இடம்பெற்ற சொற்கள் அப்படியே தரப்பட்டுள்ளன.

தமிழகத். தாழ்த்தப்பட்டோர் விடுதலையை வரவேற்கும் அனைவருக்கும் இத்தொகுப்பு முயற்சி மகிழ்ச்சியளிக்கும். தென்னிந்திய அரசியல் பரப்பில் நீண்ட வரலாறுடைய ***காலம் வரும்*** நீதிக்கட்சி, திராவிட இயக்கம் முதலியவற்றின் ஆவணத்தேடலும், திரட்டலும், இன்னும் முழுமையடையாத நிலையில் தாழ்த்தப்பட்டோர் ஆவணங்கள் ஆவணப்படுத்தப் படாததில் வியப்பேதும் இல்லை.

வரலாற்றின் இடிபாடுகளில், காலத்தின் வேகத்தில், அழிந்து வரும் பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டு தாழ்த்தப்பட் டோர்களின் வரலாற்றெழுதலுக்கான அச்சுசார் ஆவணங் களான இதழ்கள், துண்டறிக்கைகள், சிறு வெளியீடுகள், வீரன் சுந்தரலிங்கம் போக்குவரத்து கழக பேருந்து சீட்டு என்பன போன்றவற்றை எல்லா தொகுத்து வரலாற்றை மீட்டெடுப்பது சமகால தாழ்த்தப்பட்ட அறிவாளர்களின் கடமை.

# கட்டுரைகள்

கட்டுரைகள்

# நாம் சூத்திரர்களா?*

(Are we sudras?) (A critical Essay)

**ந**ம்தமிழ் நாட்டிற் பிராமணரொழிந்த, ஏனையோரெல்லாம், அறிவில்லாதாராயினும், கற்றுத்துறைபோய பேரறிஞராயினும், கூலிக்காரர்களாயினும், அறத்துறைச் செல்வர்களாயினும் ஒரு பெற்றித்தாக "சூத்திரர்" என்ற சொல்லால் அழைக்கப் படுகின்றனர். இச்"சூத்திரன்" என்ற சொல் வடசொல்லாம்.

இவ்வடசொற் பெயர் நமக்கு எவ்வாறு வழங்கப்பட்டது? அதன் பொருளென்ன? அவ்வாறு நாம் அழைக்கப்படுதற்கு உரியவர்களா? என்பவைகளை ஆராய்ச்சி செய்து முடிவு கட்டலே இக்கட்டுரையின் கருத்தாம்.

இச்சொல் நம்பழந்தமிழ் நூற்களில் யாண்டும் காணப்படு கின்றதன்று; நம் அறநூல்களிலும் இதனைக் கண்டிலேம். ஆகலான்

*இந்தியாவின் நவீனகால சிந்தனையாளர்களில் சூத்திரர் கோட்பாட்டை முதன்முதலில் தத்துவார்த்த தளத்தில் விளக்கியவர் மகாத்மா ஜோதிராவ் ஃபூலே. இவரின் சிந்தனைகளை அடியொற்றி ரிக் வேதத்தின் மூலப்பிரதிகளை ஆராய்ந்து, சமஸ்கிருத இலக்கிய / மொழியியல் பின்னணியில் விளக்கியவர் அண்ணல் அம்பேத்கார் ஆவார், இவ்வாய்வில் தத்துவ சமய ஆய்வாளர்கள் கண்டறியாத புதிய விளக்கங்களைக் தந்தார். அவருடைய இந்த ஆய்வு 'சூத்திரர்கள் யார்? அவர்கள் எவ்வாறு, இந்தோ ஆரியச் சமூகத்தில் நான்காம் வருணத்தவர்கள் ஆவார்கள்? என்ற தலைப்பில் நூலாக 1947 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இந்நூலை அண்ணல் அம்பேத்கர் மகாத்மா ஃபூலேவுக்கு சமர்ப்பணம் செய்தார்.

இதைக் குறித்து வடமொழி நூற்களிலிருந்தே தெரிந்துகோடல் வேண்டியிருக்கின்றது. இஃது எங்கிருந்து தோன்றிற்று என்று ஆராய்வதற்குமுன் இதன்பொருளை அறிந்துகோடல் நன்றாம்.

"வள்ளுவர் செய் திருக்குறளை மறுவற நன்குணர்ந் தோர்கள், உள்ளுவரோ மநுவாதி யொருகுலத்துக் கொருநீதி" என்று காலஞ்சென்ற பெருங்கணக்காயர் பி. சுந்தரம்பிள்ளை எம்.ஏ. அவர்களால் புகழப்படும் மனுதரும சாத்திரத்தில் எட்டாம் பகுதியில்

> "பிராமணன் சம்பளங் கொடுத்தேனும் கொடாமலேனும் சூத்திரனடத்தில் வேலை வாங்கலாம் ... ... ... (413 சு)
>
> "யுத்தத்தில் ஜெயித்துக் கொண்டுவரப்பட்டவன், பத்தியினால் வேலை செய்கிறவன், தன்னுடைய தேவடியாள் மகன், விலைக்கு வாங்கப்பட்டவன், ஒருவனால் கொடுக்கப் பட்டவன், குலவழியாகத் தொன்றுதொட்டு வேலை செய்கிறவன், குற்றத்திற்காக வேலை செய்கிறவன் எனத் தொழிலாளிகள் எழுவகைப்படுவர்." (415 சு)
>
> "பிராமணன் சந்தேகமின்றி எழுவிதத் தொழிலாளியான சூத்திரரிடத்தினின்று பொருளை வலிமையாலும் எடுத்துக் கொள்ளலாம். எஜமானன் எடுத்துக்கொள்ளத்தக்க பொருளுடைய அந்தச்சூத்திரர் தம் பொருளுக்குக் கொஞ்சமும் சொந்தக்காரரல்ல" (417 சு)

இச்சுலோகங்கள் காணப்படுகின்றன. ஆகவே, சூத்திரன் என்ற சொல்லுக்கு அமர்க்களத்திற் சிறையாளனாகக் கொள்ளப் பட்டானும், (War Prisoners) அன்பொடுவேலை செய்கின்றானும், ஒருவன் கணிகைமகனும், (a prostitute's son) விலைக்குப் பணம் கொடுத்துக் கொள்ளப்பட்டானும், (Serfs who were bought) ஒருவனாற் கொடுக்கப்பட்டானும், குலவழியாகத் தொன்று தொட்டு வேலைசெய்கின்றானும் (hereditary serfs) குற்றத்திற்காக வேலை செய்கின்றானும் (criminals) என்பன பொருள்கள்.

இனி, இச்"சூத்திரன்" என்ற சொல் முதன்முதலில் எவ்விடத்துக் காணப்படுகின்றது என்பதையெழுதுவாம். நான்கு வேதங்களில் இருக்கு வேதமே பழமையானதாம். அதன்கண் முதல் 9 மண்டிலங்களினும் இச்சொற் காணப்படுகின்றிலது. ஆனாற்

பிற்காலத்து இணைக்கப்பட்ட பத்தாம் மண்டிலத்தின்கண் புருடசூக்தம் என்று விளிக்கப்படும் 90ஆஞ் சுலோகத்திற் சூத்திரன் என்ற சொல் முதன்முறையாகக் காணப்படுகின்றது. இம்மண்டிலமோ பின்னாற் சேர்க்கப்பட்டது.

இதற்கு வேதங்களைக் கரைகண்டுணர்ந்த பேராசிரியர் பலர் சான்று பகர்கின்றனர். ஆனால் இச்சொல் இருக்கு வேதத்தில் ஓர் இடத்திற்றான் றென்படுகின்றதென வாளா இருத்தல் கூடாது. ஏனெனின் இவ்வேதத்தை நுணுகி ஆராயப் புகுங்காற் சில உண்மைகள் கிட்டுகின்றன. இதனுள் ஆரியர்களும் தாசர் என்று அழைக்கப்படுகின்ற தஸ்யூக்களும் ஆகிய வழக்கம் ஒழுக்கம், நிறம் முதலியவற்றான் வேறுபட்ட இருவகை இனங்களைச் சார்ந்த மக்கள் குறிப்பிடப்படுகின்றனர். இவ் விருதிறத்தாருக்கும் நடந்த சண்டையும், இறுதியில் ஆரியர் வெற்றி பெற்றதுமே சுருங்கக் கூறுங்கால் இருக்கு வேதத்தின் சாரமாகும்.

இனி, இத்தஸ்யூக்கள் யாவர் என்பதை ஆராயவேண்டியது நம் கடனாய் உள்ளது. அதன்பொருட்டு நாட்டின் வரலாற்றை நோக்குதல் வேண்டும். "தாசர்கள்", "தஸ்யூக்கள்" என்ற சொற்கள் ஒரு இனத்தார் பெயரல்ல. 'வேலைக்காரர்கள்', 'திருடர்கள்' என்று முறையாய்ப் பொருள்படக் கூடிய இச்சொற்கள் ஒரு இனத்தார் தம்மால் வெறுக்கப்படும் பிறதொரு இனத்தார்க்குக் கொடுத்திருத்தல் வேண்டும். ஆகவே ஆரியர்கள் முதன்முதல் இவட்போந்தவுடன், தங்களொடு வேறுபட்ட இனத்து மக்களைக் கண்டிருக்கின்றனர். அவர்கள் பெருஞ் செல்வமுடையராய் இருந்திருக்கின்றனர்.

அவர்களுள் சம்பாரா என்பான் 100 கோட்டைகளும், விருத்திரா என்பான் ஏழு கோட்டைகளும் பெருஞ் செல்வமுமுடையராய் இருந்திருக்கின்றனர். இவைகட்கு இருக்குவேதமே சான்று பகர்கின்றது: ஆகவே இவர்கள் இத்துணை செல்வமுடையாராய் இருந்தமையான், பிறர் பொருள் வைத்திருக்கப் பொறாத ஆரியர்கள் இவர்கள் பொருளைக் கொள்ளையடிக்கப் புகுந்தனர். 'கட்குடியன்' கட்குடிக்காதவர்களை 'குடியர்கள்' என்று கூறுதல் உலகவழக்காகலின், அதைப்போன்றே கொள்ளையடிக்கப் புகுந்த ஆரியர்கள் செல்வமுடை யாராய் இருந்தவர்களைத் திருடர்கள்

என்று பொருள்படும்படியான 'தஸ்யூக்கள்' என்று அழைத் திருக்கின்றனர். பண்டைக் காலத்திற் கிரேக்கர்களும், உரோமர்களும், தங்களை யொழிந்த மற்றையோரை 'அநாகரிகமுடையோர்' (Barbarians) என்றழைத்தல் வழக்கம். அதைப்போன்றே ஆரியர்கள் மற்றையோர்களை 'மிலேச்சர்' என்று பெயரிடுதல் உண்டு. நிற்க;

இனி, ஆரியர்களால் தஸ்யூக்கள் என்று அழைக்கப்பட்டார் யாவரென நோக்குதல் வேண்டும். ஆரியத்தைச் சாராத 139 மொழிகட்கு அகராதி எழுதி விடுத்த ஹண்டர் என்பார் (Mr. Hunter) இந்தியா கண்ணக்கற்ற இனத்தாரின் காட்சிசாலை என (India Forms a great museum of races) எழுதுகின்றார். இஃது உண்மையே. எனினும், இத்துணை இனத்தாரையும் 'ஆரியர்', 'ஆரியரல்லாதார்' என்ற விரண்டு பெரும் பிரிவுக்குள் அடக்குதல் செய்யலாம். செய்யவே மறித்தும் ஆரியரல்லாதவர் கோலர்கள், திராவிடர்கள் என்ற இரு பெரும் பகுப்புக்குளடங்குவர்.

இவர்களுள் முற்கூறப்பட்டோர் கீழ்த்திசையிலே பிரமபுத்திராநதியின் பள்ளத்தாக்குவழியாக ஆரியர்க்கு முன் இந்தியாவிற்குப் போந்து அஸ்ஸாம், வங்காளம் முதலிய இடங்களிலே குடியேறினார்கள். பிற்கூறப்பட்ட திராவிடர்களே ஆரியர்க்கு முன் மேற்கணவாய் வழியாய்ப் போந்து தென் னாட்டிற் குடியேறினர். சிலர் இவர்கள் மலேயா நாட்டிலிருந்து கடலைக் கடந்து தென்னாட்டிற் குடியேறினர் எனவுங் கருதுகின்றனர். அஃது எவ்வாறாயினுமாகுக. பிற்பட்டுவந்த ஆரியர்கள் முதன்முதற் கண்டு சண்டையிட்டு, தஸ்யூக்களென்று அழைத்தது இக்கோலர்களையே. இவர்களை வெல்வதற்கு ஆரியர்கள் பெரிதும் முயற்சியெடுத்திருக்கின்றனர். தங்கட்கு உதவி செய்வதற்காக "இந்திரன்", "அக்கினி" முதலியோர்க்கு இவர்கள் யாகங்களும், தோத்திரப் பாக்களும் செய்துள்ளனர். இறுதியாக இந்திரன் உதவியான் இத்தஸ் யூக்களை வென்றுவிட்டனர். ஆகையினாற்றான் சில இடங்களில் "தஸ்யூக்களைக் கொன்று ஆரியர் ஆக்கத்தை நிலைநிறுத் தினான்" எனவும், 'ஆரியர்களைக் காத்து வம்பர்களை மனுவின் ஆட்சிக்குளடக்கி கறுப்புத் தோலைவென்றான்' எனவும், இந்திரன் வேதப் புலவர்களான் பல இடங்களிற் புகழப்பட்டுள்ளான். இவ்விதங் கோலர்களை, அடக்கி தஸ்யூக்களென்றும், பிறகு

தாசர்களென்றும், இறுதியாக ''சூத்திரர்''கள் என்றும் ஆரியர்கள் இக்கோலர்களை அழைத்துள்ளார்கள்.

இவ்விதமே சூத்திரன் என்ற சொல் வந்ததென "வேத இந்தியா" என்ற புத்தகத்தின் ஆசிரியரான Mr. Zenaide A. Rogozin என்பார் அபிப்பிராயப்படுகின்றனர். மற்றும் 'சூத்திரன்' என்ற சொல் இருக்கில் 9 மண்டிலங்களிலுந் தென்படாது. இறுதி மண்டிலத்தில் மட்டும் காணப்படுவதை நோக்குமிடத்து நாம் மேற்கூறிய உண்மை செவ்விதிற் புலப்படும். இனி, மனு கூறியுள்ள 'யுத்தத்திற் செயிக்கப்பட்டவன் சூத்திரன்' என்ற பொருளும். நாம் மேலே விளக்கியுள்ள உண்மையோடு பொருத்தமுறுதலைக் காண்க. ஆகலான், இதுகாறுங் கூறியவாற்றான் 'சூத்திரன்' என்ற சொல் அமர்க்களத்தில் வெல்லப்பட்ட கோலர்க்குக் கொடுக்கப்பட்டதென்பது வலியுறுத்தப்பட்டதாம்.

இனிக், கோலர்களை அடக்கவே, இவர்கள் ஆரியர்களுடன் கலக்க நேரிட்டது. அப்பொழுது, ஆரியப் பெண்களைக் கோலர்கள் புணரவும், மணஞ் செய்யவும் நேரிடவே, பல பிள்ளைகள் பிறக்கலுற்றனர். இவ்வழக்கம் மனுவின் காலத்து மிகுதியாகப் பெருகிக் கிடந்தது. ஆகையினாற்றான் மனு இங்ஙனம் கலப்பு வகையாற் பிறந்த "சங்கர ஜாதி", "அநுலோம ஜாதி", "பிரதிலோம ஜாதி", "அந்தராள ஜாதி", "விராத்திய ஜாதி", "பாகிய ஜாதி" முதலிய புதிய சாதிகளைக் குறிப்பிட்டார். இவ்வாறாக ஆரியப் பெண்களைக் கோலர்கள் புணரும் வழக்கம் மிகுந்துவிடவே, அதனை நிறுத்தவே மனு கீழ்க்கண்ட

> ''சூத்திரன் வலிமையால் மற்ற மூன்று வருணத்தாரின் மனைவியைப் புணர்ந்தால் அவனை உயிர்போகிறவரையில் தண்டிக்க....'' (8அ. 359சு)

> 'சூத்திரன் காக்கப்படாத துவிஜாதிகளின் மனைவியைப் புணர்ந்தால் பீஜம், சிசிநம் முதலியவைகளை அடியோடு அறுக்க வேண்டியது. காக்கப்பட்ட ஸ்திரியைப் புணர்ந்தால் தேகம் முழுவதும் வெட்டி அவனுடைய எல்லாப் பொருளையுங் கவருக' (8அ. 374சு)

முதலிய கொடிய சட்டங்களை விதிக்க நேரிட்டதென கொள்ளக்கிடக்கின்றது. இவ்வாறே கோலர்களோடு புணர்ந்த

ஆரியப் பெண்களுக்கும் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. சில பார்ப்பனப் பெண்கள் தங்கட்கு இவ்விதமாய் நேர்ந்த குற்றத்திற்காக தண்டனைக்கு அஞ்சி, நந்தமிழ் நாட்டின்பால் குமரி, யாட வந்திருக்கின்றனர். பலர் வந்த இடங்களிற் பிள்ளைகளையும் பெற்றிருக்கின்றனர். இவ்வுண்மை

*'வார ணாசியோர் மறையோம் பாள*
*னரண வுவாத்தி யபஞ்சிக னென்போன்*
*பார்ப்பனி சாலி காப்புக்கடை கழிந்து*
*கொண்டோற் பிழைத்த தண்ட மஞ்சித்*
*தென்றிசைக் குமரி, யாடிய வருவோள்*
*சூன்முதிர் பருவத்துத் துஞ்சிரு ளியவிடை*
*யீன்ற குழவிக் கிரங்கா ளாகித்*
*தோன்றாத் துடவையி னிட்டன ணீங்க'*

என்ற மணிமேகலை யடிகளான் வலியுறுத்தப்படும். ஆகவே இவ்விதம் கலப்பு வகையாற் பிறந்தவர்களை ஆரியர்கள் ஒதுக்கி வைத்துச் 'சூத்திரர்' என்று அழைத்திருக்கின்றனர். தன் கணிகை மகன் 'சூத்திரன்' என்று மனு கூறியுள்ளதும் இதனோடு பொருந்துதல் காண்க. ஆகவே, வெல்லப்பட்ட கோலர்களும், பின்றைக் கோலர்களுக்கும் ஆரியர்களுக்கும் பிறந்த பிள்ளைகளும் சூத்திரர் என்று அழைக்கப்பட்டனரென்பது செவ்விதில் விளங்குவதொன்றாம். அதற்கேற்ப மனுவும் பத்தாம் பகுதியில் 45ஆஞ் சுலோகத்தில்

''உலகத்தில் நான்கு வருணத்தாருக்கும் சங்கரஜாதியிற் பிறந்தவர்களில் சிலர் மிலேச்ச பாஷையுள்ளவர்களாயும், சிலர் சமஸ்கிருதம் முதலிய உயர்ந்த பாஷையுள்ளவர்களாயும் இருக்கிறார்கள். ஆயினும் அனைவரும் தஸ்யூக்களென்று சொல்லப்படுவர்''

என்று கூறுகின்றனர். இது கிடக்க, இச்சூத்திரன் என்ற சொல் நம் தமிழ் நாட்டிற்கு எவ்வாற்றான் போந்தது என்பதை ஆராய்வாம்.

வட இந்தியாவில் ஆரியர்கள் நிலைபெற்றபின்றை, அவர்களுள் பிராமணர்கள் நம் தென்னாட்டிற்கு வந்தனர். அவர்கள் சோதிடஞ் சொல்வோராகவும், மந்திரவாதிகளாகவும் (Sorcerer) இவட்போந்தார்கள், என Prof இலக்குமண

நரசு அவர்கள் கூறுகின்றனர். ஆரியர்கள் தென்னாட்டிற்கு வந்து தமிழ், அரசர்கட்கு 'இராஜா' முதலிய ஆரிய பட்டங்களை நல்கி, அவர்களைச்சூரியகுலம், சந்திரகுலம், அக்கினிகுலம் முதலியவைகளைச் சார்ந்தவர்களெனப் புகழ்ந்து பேசி பிராமணக் குருக்களாக மாறினர் எனக் கால்ட்வெல் எழுதுகின்றார். இனி மாக்ஸ்முல்லர், 'பிராமணர்கள் வடநாட்டில் ஆக்கம் பெற்றதற்கும், தென்னாட்டில் ஆக்கம்பெற்றதற்கும் பெரியதொரு வேற்றுமை யுள்ளது, தென்னாட்டிற்குச் சண்டையிட வேண்டுமென்ற எண்ணத்துடன் அவர்கள் வந்தார்களல்லர்.

வடநாட்டு அரசர்கள் பலர் உதவியாற் சமாதானமாய் தங்கள் நாட்டை விரிவு செய்துகொள்ள வேண்டுமென்ற எண்ணத்துடன் வந்தனர். வந்து, தென்னாட்டு மொழிகளைக் கற்றுத் தங்கள் மதத்தையும், சட்டங்களையும், வழக்க ஒழுக்கங் களையும் நிலைநிறுத்தி விட்டனர். இறுதியாக, மகம்மதியர் களால் வட இந்தியாவினின்றும் பிராமணர் நூற்களெல்லாந் தள்ளப்பட, அவைகளெல்லாம் தென்னாட்டிலே வேரூன்றப் பட்டன' எனக் கூறுகின்றார். ஆகவே பார்ப்பன ஆரியர்கள் தென்னாட்டிற்குப் பிழைக்கவந்தனரென்பதே உயர்ந்ததோர்பலர் கொள்கையாம்.

பிழைக்கவந்தார் தமிழ் அரசர்களைத் தம் வயப்படுத்தி தமிழ்நாட்டு மாபெரும் வீரர்களையும், வேளாளர்களையும், அறிஞர்களையும், புலவர் பெருமக்களையும் ஒருபெற்றித்தாகச் "சூத்திர" என்று அழைத்துவிட்டனர். நம் அரசர்களை இப் பிராமணர் சூரியகுலத்தார், சந்திரகுலத்தார் எனப் புகழ்ந்தனரன்றி க்ஷத்திரியர் என்ற பெயரால் விளிக்காது இருந்தது ஈண்டு நோக்கற்பாலதாம். இதை நினைக்குங்கால், பிராமணர் வெளிப்படையாக நம்மைப் புகழ்ந்து, தம் மனத்தினுள் வெறுத்தே எழுவகை இழிந்த பொருள்களைக் கொடுக்கின்ற 'சூத்திரன்' என்ற சொல்லால் அழைத்திருக்க வேண்டுமென்று எண்ண இடமேற்படுகின்றது.

எனினும் முதன்முதல் இச்சொல்லை நம் மக்களுக்கு ஏற்றுங்கால், இது பெருமையான சொல்லென்றே பிராமணர்கள் சொல்லியிருத்தல் வேண்டும். நம்மவர்களும், இச்சொல் வடசொல்லாகலின், முதன்முதல் பொருள் தெரியாது,

பிராமணர்கள் சொற்களை நம்பி மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டிருக்கலாம். இவ்வாறே கால்ட்வெல்லும் அபிப்பிராயப் படுகின்றனர். எனவே இதுகாறுங் கூறியவாற்றான் பிழைக்க வந்த ஆரியர் ஏமாற்றிச் 'சூத்திரர்' என்ற பெயரைத் தமிழ் மக்கட்கு இட்டுவிட்டனர் என்பது வலியுறுத்தப்பட்டது.

இதுகாறுஞ் 'சூத்திரன்' என்ற பெயர் தென்னாட்டினுள் புகுந்த முறையைக் கூறினோம். இனி, அப்பெயர் தமிழ் மக்களாகிய நமக்குப் பொருத்தமுடைத்தாவென ஆராய்வாம். அமர்க்களத்தில் தோல்வியுற்றார் சூத்திரர் என முன் கண்டாம். அதைப் பொருத்துங்கால், நாம் ஒருவாற்றானும் சூத்திரர் அல்லேம். நம்மையும், நம் அரசர்களாய சேர, சோழ, பாண்டியர்களையும் இதுகாறும் ஆரியர் சேனையொடுபோந்து அமர்க்களத்தில் வென்றதாக, வடமொழியிலக்கியங்களிலும், தமிழ் இலக்கியங் களிலும் யாண்டும் காண்டல் முடியாது. ஆனாற்றமிழ்நாட்டு மன்னர்கள் அவர்களை வென்றிருக்கின்றனர்.

அதற்குச் சான்றுகள் பல உள்ளன. நம் சேர, சோழ, பாண்டியர் அசோகர் காலத்தே மிகவும் பெருமையுற்றுயிருத்தனர் என்பதற்கு அவர் கல்வெட்டுகளே தக்க சான்றுகள் கூறுகின்றன. ஆகவே இத்துணை பெருமையாய்ச் செங்கோலோச்சிய இம்மூவர்களுள் சேரன் செங்குட்டுவன் என்பார் தம்மை இகழ்ந்த ஆரிய வரசர்களாய கனகன், விசயன் முதலியவர்களை வென்று, அவர்கள் தலையின்மேல் மாபெரும் பத்தினியாய கண்ணகியின் சிலையை ஏற்றிக்கொண்டு வந்ததாகச் சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் குறிப்பிடுகின்றார்.

மற்றும் 'சிறுபாணாற்றுப் படையிலும்' சேரனை

'..... ..... ..... ஒன்னோர்
வடபுல விமயத்து வாங்குவிற் பொறித்த
வெழுவுறழ் திணிதோ ளியறேர்க் குட்டுவன்'

எனப் புகழப்பட்டிருத்தலை நோக்குக. எனவே தமிழ் மக்களாய நாம் ஆரியர்களை வென்றிருப்பது தெள்ளத் தெளிய அறியக் கிடக்கின்றதாகலின், நாம் 'சூத்திரர்' என்று அழைக்கப் படலாமோ? உண்மையாய் நோக்குமிடத்து, பார்ப்பனர்களாய ஆரியர்களே நம்மனோரால் 'சூத்திரர்' என்று அழைக்கப்

படுதல் வேண்டும். இதனாற்றான் தமிழ் நிகண்டிலும் ஆரியர் என்றால் 'மிலேச்சர்' என்ற பொருளுங் காணப்படுகின்றது. எனவே, இது காறுங் கூறியவற்றான் 'சூத்திரன்' என்ற சொல்லுக்கு உரித்தாய முதற்பொருளைக் கொண்டு ஆராயுங்கால் நாம் எவ்வாற்றானும் 'சூத்திரர்' அல்லோம் என்பது விளக்கப்பட்டது. இனிமேல் செல்வாம்.

இரண்டாவதாக, கணிகையர் மக்கள் 'சூத்திரர்' என்று காணப்படுகின்றது. அங்ஙனமெனின் தமிழ்மக்கள் குலம் கணிகையர் குலமோ? அன்று. ஆனால், பிராமணர்களாய ஆரியர்களோ, கணிகையர் குலத்தைச் சார்ந்தவர்கள் என்பதற்குச் சான்றுகள் இருக்கின்றன. முதல் இரு பிராமணர்கள் பிரம்மாவுக்கும் திலோர்த்தமை என்ற கணிகைக்கும் பிறந்தவர்கள். இவ்வுண்மையை

*'மாமறை மாக்கள் வருங்குலங் கேண்மோ*
*முதுமறை முதல்வன் முன்னர்த் தோன்றிய*
*கடவுட் கணிகை காதலஞ் சிறுவ*
*ரருமறை முதல்வ ரந்தண ரிருவரும்*
*புரிநூன் மார்பீர் பொய்யுரை யாமோ?'*

என்ற அடிகளான் உணர்க. ஆகவே இரண்டாவது பொருளைக் கொண்டு ஆராயுங்காலத்தும், நாம் சூத்திரர் அல்லோம், என்பதும், பார்ப்பன வாரியர்களே அப்பெயர்க்குரியார் என்பதும் விளங்குகின்றதன்றோ?

இனித் தொன்றுதொட்டு வேலை செய்கிறவன் 'சூத்திரன்' என்ற பொருளைக் கொண்டு ஆராய்வாம். தமிழ் மக்களாகிய நாம் வேறு இனத்தைச் சார்ந்தவர்கள்; ஆரியர் களாய பிராமணர் பிறிதொரு இனத்தைச் சார்ந்தவர். அவர் மொழி வேறு. நம் மொழி வேறு; அவர்கள் வழக்க ஒழுக்கங்கள் நம்மவர்களின் வேறுபட்டனவாம். நாம் அவர்கட்குத் தொன்றுதொட்டு வேலைசெய்பவர்களல்லோம்.

உண்மையைக் நோக்குங்கால் அவர்களே இவண் பிழைக்க வந்தவர்கள். இதை அறிஞர் யாவரும் ஒப்புக் கொள்ளுகின்றனர். மற்றும் சங்க நூல்களை நுணுகி ஆராய்வார்க்கு இவ்வுண்மை புலப்படும். பார்ப்பனப் பெண்கள், நம்மவர்களில் பெருஞ் செல்வமுடையார் பெண்களுக்குத் தோழிகளாய் இருந்து

வந்திருக்கின்றனர். இது கண்ணகிக்குத் தேவந்தி என்ற பார்ப்பனப் பெண் தோழியாய் இருந்தமையான் தெரியக்கிடக்கின்றது. இன்னும் சில பிராமணர்கள் தமிழ்நாட்டில் கணிகையர் வீட்டிலே வேலை செய்து கொண்டிருந்ததாய் எண்ண இடமிருக்கின்றது.

ஏனெனின் கோவலன் மாதவியின்பால் வெறுப்புற்று மதுரைக்குப் போகுங்கால், இடையில் மாதவியின் கடிதமொன்றைப் பார்ப்பனனொருவன் கொண்டு கோவலனை மீண்டும் மாதவியினிடம் வருமாறு கூறுகின்றான். எனவே இதைப் போன்றவைகளை நோக்குங்கால் நாம் அவர்கள் வேலைக்காரர்கள் அல்லோம். ஆகலான் 'சூத்திரர்' என்ற பெயருக்கு நாம் உரியவர்களுமல்லோம். பிராமணர்களே உரியவர்களென்று கூறலாம்.

இனி ஒவ்வொரு பொருளுக்கும இவ்விதங் கூறுவோ மெனின் விரியுமாகலின், சுருங்கக் கூறுவாம். நாம் ஒருவரால் பார்ப் பனர்கட்குக் கொடுக்கப் பட்டவர்களுமல்லேம். விலைக்கு வாங்கப்பட்டவர்களுமல்லேம். ஆகலான் 'சூத்திரர்' என்ற பெயர்க்கு நாம் எவ்வாற்றானும் உரியவர்களுமல்லேம்.

அந்தோ! இத்துணை இழிவான 'சூத்திரர்' என்ற பெயரால் நம்மவர்களில் நுண்மாண் நுழை புலமுடைய பேரறிஞர்களும் தமிழ்நாட்டு வீரர்களென சங்க நூல்களில் பல இடத்தும் புகழப் படுகின்ற மறவர்களும், 'அல்லிலாயினும் விருந்து வரினுவக்கும்' என்று சொல்லப்படுகின்ற கொடையிற் சிறந்த வேளாளர்களும் எட்டிப்பூ பட்டம்பெற்ற வணிகர்களும் உள்ளுந்தோறும் ஆற்றொணாத் துயர் உண்டாகின்றது. பிறரும் அழைக்கப் படுகின்றனரே. இக் கொடுமையை உள்ளுந்தோறும்.

அடிமை என்றும் இன்னும் இதனினும் இழிவாகவும் பொருள்படுகின்ற இச்சொல்லை நம்மவர்கள் மகிழ்ச்சி மிக்குடன் ஏற்றுக்கொள்ளுகின்றனரே! என்னே! இவர்கள் அறியாமை! உயர்ந்த பொருள்படுகின்ற சாமி என்ற சொல்லை பிராமணர்கள் தங்கட்கு ஏற்றிக்கொண்டு மிகுதியும் இழிந்த பொருள்பயக்கின்ற சூத்திரன் என்ற சொல்லை நயவஞ்சத்துடன் தமிழ் மக்கட்குக் கொடுத்துவிட்டனரே! இவ்விரண்டு சொற்களின் தன்மைகளை உணர்ந்தும் நம்மவர் "சூத்திரன்" என்ற சொல்லை

ஏற்றுக்கொள்ள வெட்கமில்லையா? இவர்கட்கு உளதாய தமிழ் இரத்தம் எங்கு சென்றது?

தமிழ் மக்களாய நாம் சண்டையில் வெல்லப்பட்டவர்களல்ல; கணிகையர் மக்களல்ல; குற்றவாளிகளல்ல; வேலைக்காரர்களல்ல; ஆகலான் எவ்வாற்றானும் சூத்திரர்களல்லோம். பிழைக்கவந்த சத்திரத்திற் சாப்பிடும் போலிப் பார்ப்பனர்கள் சூத்திரர்களென்றால் வெகுண்டு நீங்கள் அவர்களைச் சூத்திரர்கள் என்று அழைப் பீர்களாக. மற்றும் இவ்விழிவான பெயர் நமக்கு உரியதல்லவென யாண்டும் கிளர்ச்சி செய்வீர்களாக! மானத்தைக் காப்பாற்றிக் கொள்வதே நம் கடமையாம்! பிராமணர்களோ தங்கட்கே எவ்வாற்றுனுமுரிய இச்சூத்திரர் என்ற பெயரை நமக்கு ஏற்றி விட்டனர் ஆகலான் மானத்தைக் காப்பாற்றிக் கொள்வீர்களாக!

**சனக சங்கர கண்ணப்பர்**

**மலர் 2 இதழ் 2 பக் 26 - 32**

## பெண் கல்வி

பெண்டிர்கள் இம்மையில் எவ்வாறு பெருமை அடையலாம்? கற்பென்னும் விலைமதிக்கக்கூடாத அணிகலத்தைக் காப்பாற்றிக் கொண்டு, கணவன் வார்த்தையை மீறி நடவாமல், கணவன் இஷ்டப்படி அவரது மனங்கோணாது, அவர் மனம் பிற இடங்களில் நாட்டங்கொள்ளாமல், அவர் மனம் திருப்தியடையும்படி செய்து, 'அன்னை தயையும், அடியாள் பணியும்' என்னும் எட்டுவித குணங்களில் இயற்கையில் ஏற்படக்கூடிய 'மலர்ப் பொன்னினழகும்' என்பது ஒன்று இல்லாவிடினும் பிற ஏழு விதங்களினால், அவர்களை நாம் களிப்பிக்கச் செய்யலாம்.

அப்படி நாம் கணவனுடைய கருத்துப்படி நடப்போமாயின் 'கொண்டாற்குச் செய் தவம் வேறிலை' எனும் குமரகுருபரருடைய வார்த்தைப்படி பெருமையடைவோம். கணவனுடைய கருத்தின்படி நடவாத பெண்மக்கள் படும் கஷ்டத்தையும், பிறரால் அவர்கள் தூஷிக்கப்படுவதையும்பற்றி எழுதப்புகின் ஏடும் இடங்கொள்ளாது. ஆயினும், அருந்தமிழ் மூதாட்டி யாராகிய ஔவைப் பிராட்டியார் ஒரு சமயத்தில், வயிற்றின் கொடுமையைச் சகிக்கொணாது ஒரு குடியானவன் இல்லத்திற்குச் சென்று தெருத் திண்ணையில் அமர, அக்குடியானவன் அம் மூதாட்டியாருக்கு அன்னமிடவேண்டுமென்று தன் மனைவியிடம் செப்புவதற்கு முன்பு மனைவிக்குப்பற்பல சிற்றேவல்கள்ளச் செய்தபின்பு, களைப்புடனிருக்கும் மூதாட்டிக்கு அன்னமிட வேண்டுமென்று மெல்லச் செப்ப, அப்பெண், கணவன் செப்பிய

வார்த்தையால் கடுஞ் சினமுற்றுச் செய்த கோலத்தைக் கீழ்க்கண்டபடி மூதாட்டியாரும் மொழிந்துள்ளார்.

> 'இருந்து முகந்திருத்தி யீரோடு பேன்வாங்கி
> விருந்து வந்ததென்று விளம்ப - வருந்திமிக
> ஆடினாள், பாடினாள், ஆடிப் பழ முறத்தால்
> சாடினாளோடோடத்தான்'

இத்தகைய கொடுஞ் செய்கைகள் செய்வோர்கள் பிடாரிகளே. இத்தகையாரைப் பெண்ணாகக் கொண்டவர் கதி எவ்வாறாகும்? அவர் இல்லற தர்மத்தை எப்படி நடத்துவது? இத்தகையாரைப் பெண்ணாகக்கொண்டவர்கள், கூறாமற் சந்நியாசங் கொள்ளத்தானே வேண்டும். அந்தோ! அத்தகைய கொடுங் குணங்கொண்டாரைப்பற்றி எழுதவும் என் பேனா நடுக் குறுகின்றது. பெண்ணாகக் கொண்டவர் மனம், எப்படியிருக்குமோ' என்பதைப் படிப்போர்களே உணர்ந்து கொள்ளுங்கள்.

பெண்களுக்குக் கல்வி இருப்பின் இத்தகைய கொடுஞ் செயல்களைச் செய்ய இசைவார்களா? பெண்கள் கற்பைக் காப்பாற்றிக் கொள்ளுவதென்றால், அரசன் செங்கோல் முறை வழுவாது அரசுபுரிய எவ்வளவு அறிவு வேண்டுமோ, அத்தகைய அறிவு வாய்க்கப்பெற்று இருந்தாலன்றி தம் கற்பைக் காப்பாற்றிக் கொள்ள இயலாதென்று திண்ணமாய்க் கூறுவேன்.

ஒரு நாட்டைக் கைப்பற்ற, அன்னியர்கள் அக்ரமமாய்ப் பிரவேசித்தல் போல, ஓர் பெண்ணின் கற்பைக் கெடுக்க, அநேக பாதகர்கள் இக்காலத்து அலைந்து திரிகிறார்கள். அப்பாதகர்கள் தாம் காதல்கொண்ட பெண்ணுக்கு அநேக இதமொழிகளைச் (முன்னர்) செப்பி, அவளைத் தம்வயப்படும்படி செய்து தம் காதலைத் தீர்த்துக்கொண்டபின்னர், அவளைத் துணையற்றவளாய் விடுகின்றனர். இத்தகைய கபட எண்ணங் கொண்ட சிற்றின்பப் பிரியர்களின் 'நெஞ்சில் நஞ்சும் நாவின் தேனுங்கொண்ட' போலி இதமொழிகளுக்குட்பட்டு, சற்றும் ஆய்ந்தோய்ந்து பாராது வீணிற் கற்பழிந்த பெண்ணின் கதி என்ன ஆவது? அவள் செய்கை ஊரெங்கும் பரவி, பலர் நகைப்புக்குச் சிக்குண்டு, பலரால் இகழப்பட்டு, வருத்தமுற நேருகிறது. இத்தகைய செய்கையடைந்தாரை நான் நேரில் கண்டு மனம் வருந்திருக்கின்றேன்.

அப்பெண், கல்வியறிவுள்ளவளாயிருப்பின், இத்தகைய இன்னல்களுக்காளாவாளா? முதலிலேயே காதல்கொண்ட கள்ளனுக்கு அறிவு புகட்டி அவனது தீய எண்ணத்தை மாற்றிக் கொண்டிருக்கலாமல்லவா?

சில தினங்களுக்கு முன்னர், சிற்றின்பப் பிரியனொருவன் என்னைச் சார்ந்த கற்றறிவுமழகுடைய ஒரு சோதரியின் மேற் காமுற்று அநேக இதமொழிகளைச் செப்பி, பல விதத்திலும் புத்தியைக் கெடுக்க முயற்சித்தும், அப்பெண்மணி கல்வி கற்று கற்பின் பெருமையை உணர்ந்திருந்ததினால், தன்னை இச்சித்த காமுகனுக்குப் புத்திபுகட்டி அவனையும் நல்வழிப் படுத்தியுள்ளார்.

சகோதர, சகோதரிகளே! கல்வி கற்றதனாலல்லவா, தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ள இயன்றது. நாடகங்களிற் பலரும் நடித்துவரும் நாடகமாகிய, சதாரமெனும் சரிதையில் சதாரம் எனும் பெண்பாலொருத்தி தன்னையணுகிய, மயோன், கள்ளன் முதலாயினோரையும், மிக்க சாமர்த்தியமாக வென்றாள் என்பதை நீங்கள் உணர்ந்திருப்பீர்கள். கல்வி கற்ற அறிவுடைய பெண்களுக்கு கணவனே கதி. அவனே நிதி. பர்த்தாவுடன் கூடிவாழ்தலே பரமானந்தம், பர்த்தா வசிக்கு மிடம் காடாயிருந்தாலும் அவளுக்குப் பட்டினமா யிருக்கும். அவள் பட்டினத்தில் வசித்தாலும் கணவனில்லாத இடத்தைக் காடாகக்கருதுவாள். கணவன் களிப்புடனிருந்தால் அவளுடைய கஷ்டமெல்லாம் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும்.

அவளுக்கு எவ்வளவு பணமிருந்தாலும் கணவனுடைய கிருபைமட்டுமில்லாதிருப்பின், தண்ணீரைவிட்டு நீங்கிய தாமரையைப்போலும், நிலத்தைவிட்டு நீங்கிய தாமரையைப் போலும் வாடுவாள். கணவனுடைய துக்கமே, அவளுக்குத் துக்கம். கணவன் வியாதியால் வருந்துகையில் அவளே சிறந்த சஞ்சீவி, தரித்திர காலத்தில் அவளே செல்வம்.

கணவன் அழகற்றவனாயிருப்பினும், அவனே அழகில் சிறந்தவனெனக் கருது வாள். அவன் தரித்திரனாயிருப்பினும், குபேரனாகப் பாவிப்பாள். தான் செல்வந்தருடைய குமாரி யாயினும் கணவனுக்கேவல் செய்வதில் தன்னைவிட சிறந்த ஊழியக்காரி இல்லை என நினைப்பாள். கணவன் கல்லாத

வனாயினும் அவனே சிறந்த பண்டித சிரோன்மணி எனப் பாவிப்பாள். கணவன் காரணமின்றி கோபித்தாலும் பொறுமை யுடனிருந்து சமயம் வாய்த்த காலத்து இன்பமான வார்த்தை களாற்பேசி அவன் கோபத்தைத் தணிப்பாள். இத்தகைய குணமுடையார் கணவருடன் கூடி வாழும் பெருமையை நினைத்துக் கொண்டால் இதைவிட வேறு மோக்ஷமில்லையென்றே கருதுகிறேன்.

தமயந்தி, நளாயினி, முதலியோர்கள் தம் கணவருக்குச் செய்த நன்மைகள் எத்தகையது. அப்பெண்மக்கள் கல்வி கற்று அறிவாளிகளாயிருந்ததாலன்றோ அவர்களிறந்தும் அவர்களது பெயர் மறையாது இருக்கிறது.

கல்வி கற்ற பெண்களின் அற்புதச் செய்கைகளைப் பற்றி எழுத, முன்வரின் நாட்களும் பல செல்லும். நளன் தமயந்தியுடன் கானகத்தடைந்த காலத்தில் தமயந்தியைத் தனிமையாக விட்டு, மணலில் ‘விதர்ப்பபுரி போ’ என எழுதி நலன் தணித்துச் செல்ல, தயமந்தி எழுந்து எழுதியிருப்பதைப் பார்த்து கணவனிட்ட ஆணைப்படி விதர்ப்பபுரி சென்றாள். தான் படித்திருந்த தினாலல்லவா, அப்படிச் செய்தாள். குறுகிய அபிப்பிராயங் கொண்ட சிலர் பெண்மக்களுக்குக் கல்வி கற்பித்தால் கள்ளக் கடிதங்கள் விடுத்துக் கெட்டுவிடுகிறார்களெனக் கூறுகிறார்கள்; கல்வி கற்றுக்கொள்ளுவதினால் தானா கள்ளக்கடிதங்கள் எழுத நேருகின்றது? கல்லாத பெண்மக்கள் கள்ளக்கணவரை நாடிச் செல்வதில்லையா?

கல்வி கற்றவர்கள் செய்யும் தீச்செயல்களை விட கல்லாதவர்கள் செய்யும் தீச்செயல்கள் அதிகக் கேவலமாய் இருக்கின்றன. (அதை விரிக்க மனங் கூசுகின்றது) இப்படிச் கூறுவோர்கள் ஆண்களையுங் கல்வி கற்கக்கூடாதெனச் செப்பின் பொருத்தமுடையதே! ஏனென்றால், ஆண் மக்களும் கல்வி கற்றுக்கொண்டால் கள்ளக்கடிதங்கள் வரைந்துவிடுவார்கள் அல்லவா? கல்வி கற்றுக்கொள்வதினால் தான் கெட்டுப் போகிறார்கள் என்று சொல்வது சரியன்று. அவர் அறியாமை யினாலும் குறுகிய அறிவினாலும், ஏதோ ஓர் கெட்ட எண்ணத் தினாலும் பெண்களுக்குக் கல்வி கூடாதென மறுக்கிறார்கள். ஒருவன் ஒரு ஆயுதத்தை வைத்திருக்கிறான். அவனது அஜாக்ரதை

யினால் அவ்வாயுதம் திரேகத்தின்மேற் பட்டு காயமேற்பட்டு விட்டால், ஊரிலுள்ளவர்கள் (அவ்வாயுதத்தைப் போல் வைத்திருக்கப்பட்டவர்கள்) பலரும் ஒன்றுகூடி இனி இத்தகைய ஆயுதமே வேண்டாமென ஓர் தீர்மானம் தீர்மானிப்பது எத்தகைய அறிவுடையதோ, அதைப்போலத்தான், கல்வி பெண்மக்களுக்குக் கூடாதென்பவர்களின் அபிப்பிராயமும் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.

பெண் மக்களுக்குக் கல்வி கூடாதென இருந்தால் முதியோர்கள் பலரும் ஏன் கல்வி கற்கச் செய்தார்கள். இருக்கு வேதத்தில், கார்க்கி, மைத்ரேயி, முதலாயினோர்கள் செய்த சூக்தங்கள் இருப்பதைப் பார்க்காது பகருகின்றார்கள் போலும்.

ஔவைப் பிராட்டியார் அருளிச்செய்துள்ள அரும் பெருங் காவியங்களைக் காணார்போலும். அந்தோ! என்னே இவர்களின்; அவசர புத்தி! மற்றுஞ் சிலர், அக்காலத்திற்கும், இக்காலத்திற்கும் பேதமில்லையா, எனக் கூறுகின்றனர். ஆனால், அக்காலத்தில் குடும்பத்தைக் கணவனும் மனைவியும் நடத்தினார்கள். இக்காலத்தில் அவர் அவர்கள் தனித்து இருக்கட்டுமே! அதற்குத் தக்க ஏற்பாடுகள் செய்யட்டுமே!

*மிஸ்டார்ஸ் ஆல்வார்ஸ்*

**மலர் 2 இதழ் 2 பக் 23 - 26**

## பெண் கல்வியைப் பற்றிய சம்பாஷணை

**ரா**ஜம்: அடி கோகு, நீ சொல்லியுள்ள சுலோகத்தின் கருத்து நன்கு விளங்கிற்று. ஆயின் நான் அறிந்துகொண்டது (முன்னர்) என்னவென்றால் பிரம்மாவின் முகத்தில் பிராமணர்கள் பிறந்தார்களென்றும், புஜத்தில் க்ஷத்திரியர்கள் பிறந்தார்களென்றும், பாதத்தில் சூத்திரர்கள் பிறந்தார்களென்றும் கேள்வியுற்றுளேன். நீ இப்போது செப்பியதில் பெருத்த சந்தேக மேற்படுகின்றது.

கோகு: ராஜம், நீ செப்பிய கருத்தடங்கிய சுலோகத்தின், கருத்தைச் செவ்வையாக ஆர்ாயாமலும், பாமர மக்களை ஏமாற்றிப் பொருள்பறிக்கவுமே இத்தகைய விபரீத அர்த்தத்தைச் செய்துவிட்டார்கள். அதாவது அந்த சுலோகம் என்ன வென்றால் 'பிராம்மணோஸ்ய முகமாசீத்' என ஆரம்பித்துக் கூறப்பட்டுள்ளது. இச்சுலோகத்தின் உண்மைக் கருத்தென்ன வெனில், பிராமணனென்பவன் முகத்திற்குச் சமதையானவன் என்பது. இதைச் சுயநலப் பிரியர்களின் சந்ததியாரும், அவருடன் சேர்ந்து ஒத்து மத்தளமடிப்போரும், பிராமணன் முகத்தில் பிறந்தவன் என மொழிந்தார்.

அச்சுலோகத்தின் முடிவுரை, க்ஷத்திரியனையும், வைசியனையும், சூத்திரனையும் பற்றி முறையே, தோளுக்குச் சமானமானவன் எனவும், துடைக்குச் சமானமானவனெவும், பாதத்திற்குச் சமானமானவன் எனவும் கூறியுள்ளதே ஒழிய பிறந்தானெனக் கூறவே இல்லை. நீ கூறுகிறபடியே சற்று

யோசிப்போம். பிரம்மா என்பவர் ஒருவர் உண்டென்றும், அவரிடத்திலிருந்து ஏனையோர்கள் முகத்திலும் முறையே கூறிய இதர அவயங்களிலும் பிறந்தார்கள் என நம்புவதற்கு பிரம்மா என்பவர் யார், அவர் சாமானிய மனிதராயிருந்தால் இத்தகைய செயல்களைச் செய்ய இயலாதல்லவா? அல்லது கடவுள் தானென்றால் கடவுளுக்கு ரூபமே, இல்லை என்று நம் வேதங்கள் முறையிடுகின்றனவே, (அல்லது நாமாக யோசிப்போம்) ரூபமுள்ள பொருளுக்கு அழிவு என்பது எப்போதாகிலும் ஏற்பட்டே தீரும். அப்படி அழியக்கூடியது கடவுளாகுமா? ஆகையால் இத்தகைய போலிக் கட்டுரைகளை நம்பி மோசம் போகலாகாது.

ருக்மணி: சரிதாண்டி கோகு, நமது முன்னோர்கள் இவற்றை யெல்லாம் பாராது இருந்துவிட்டார்களா?

கோகு: பண்டைக்காலத்தில் இத்தகைய ஜாதி மத, பேதங்களே இல்லை என்பதற்கு நமது பண்டைய நூற்களே ஆதாரமா யுள்ளது. மத்ய காலத்தில் ஆரிய மக்கள் குடியேறியபின்பு, கபடமும் களங்கமுமற்ற நமது முன்னோர்களைத் தங்கள் மாயாஜாலங்களால் மயக்கி, தாங்கள் உயர்ந்தவர்களென்றும், தாங்கள் கடவுளை நேரில் கண்டவர்களென்றும், மற்றும் அநேகப் போலி உரைகளைச் செப்பி தங்கள் தயவை யாவரும் நாடி இருந்தால்தான் ஜீவனம் நடக்குமென்ற சுயநலத்தால், செத்தாலும், பிழைத்தாலும், பிள்ளையைப் பெற்றாலும், புதுவீடு கட்டினாலும், தங்கள் இனத்தார்களன்றி மற்றவர்களால் அக்காரியம் முடியாதென்ற பொய்யுரைகளை எழுதிவைத்து பாமர ஜனங்களை ஏமாற்றி, பணம் பறிக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்துகொண்டார்கள்.

பாலாமணி: (கோகிலத்தைத் தட்டிக்கொடுத்து) அடி கோகு! நீ சொல்வதெல்லாம் சரிதாண்டி; ஆனால் இப்போலி உரைகளை முன்னரே நம் முன்னோர்கள் ஏன் கண்டிக்காது விட்டார்கள்?

கோகு: அப்போது, இப்போதைப்போல் நமது காருண்ய மிக்க பிரிட்டிஷ் ராஜ்யத்தின் சட்ட திட்டங்கள் செவ்வையாய்ப் பரவவில்லை போலும். இப்பிராமணர்களுக்கு ஆதாரமாயுள்ள, மனுஸ்மிருதி என்னும் ஓர் நூலில் சூத்திரர்கள் வேதங்களை ஓதுதல் கூடாதென்றும், பெண்களும் ஓதுதல் கூடாதென்றும்,

அப்படி ஓதினால் அவர்களுக்குத் தக்கபடி தண்டனைகளையும் அதில் விதித்து எழுதப்பட்டுள்ளது. அக்காலத்திருந்த அரசர்கள் பிராமணர்களின் வாக்கே வேத வாக்காகக் கொண்டு மீறி நடப்பவர்களை மனுஸ்ருதிப்படி தண்டித்துவந்தார்கள். அதற்கஞ்சி, இவர்கள் வாசிக்காமலும், அவ்வுண்மைகளை அறியாமலும் இருந்துவிட்டார்கள். ஆங்கில ஆட்சி வரவே, சகலரையும் சமமாகப் பாவித்து ஏற்றத் தாழ்வு எனும் பேதம் பாராட்டாது கல்வி கற்பிக்கவே, சகலதும் கற்று அவர்கள் எழுதிவைத்துள்ள போலி உரைகளைக் கண்டு அவர்களையும், அவர்களின் உரைகளையும் வெறுக்கலானார்கள்.

சாரதா: (மற்ற, ராஜாமணி, பாலாமணி, ருக்மணி இவர்களைப் பார்த்து) நீங்கள் எல்லோரும், இந்த மாதம் முதலில் ஊருக்குப் போயிருந்தீர்களே; அச்சமயத்தில், நம் ஆநந்த நிலையத்தில் ஓர் விசேட சம்பவம் நிகழ்ந்ததை நீங்கள் அறியீர்களோ; அதைக் கேள்விப்பட்டால் நீங்கள் மிக்க ஆச்சரியமடைவீர்கள். அதாவது என்னவென்றால்; ஆநந்தநிலையத்தின் பிரஸிடெண்டாகிய, மிஸ்டர் எம்.வி. குப்புசாமி நாயுடு என்பாரின் தந்தையார், திரேகவியோகமடைய, அவருடைய சவக்கிரிகைகளைச் செய்வதற்கும், 10 நாள் கர்மக் கிரியைகள் நடத்தவதற்கும், பிராமணர்களை அழைக்காமலேயே செய்தார்.

ஏனென்றால், அவருக்கு புராணக் கட்டுப்பாட்டிலும், நம்மவர்களை மயக்கவந்த ஆரியருடைய வார்த்தைகளிலும் நம்பிக்கை கொள்ளாத உண்மை தேச பக்தர். அதைத் தவிர்த்து மற்றொன்று, ஆநந்தநிலையத்திற்கருகேயுள்ள, 'கன்வியூ ஹாலில்' இந்த மார்ச்சு மாதம் 11ந் தேதி ஜாதிக் கட்டுப் பாடெனும் வீண், கட்டுப்பாட்டை அறவே விட்டொழித்த நண்பர்கள் பலரும் பழைய வழக்கங்களை விட்டு ஜாதிகளென்ற பேதத்தைப் பாராது, வெள்ளாள வகையைச் சார்ந்த ஓர் நண்பருக்கு வன்னியர் வகையைச் சார்ந்த ஒரு மாதை மணமுடித்து வைத்தார்கள்.*

---

*சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கிய பிறகே திருமண, இறப்புச் சடங்குகளில் பார்ப்பனர்களைத் தவிர்க்க வேண்டும் என்று பெரியார் கோரினார். தமிழகத்தில் நடந்த முதல் சுயமரியாதைத் திருமணத்தைப் பற்றிய குறிப்பை 03.06.1928இல் *குடியரசு* வெளியிட்டது.

அம் மணத்தை ஒரே தினத்தில் புதிய முறையாக அக்காரியத்திற்குப் பிராமணனை அழைக்காது தாமாகவே தமிழில், உறுதிமொழிகளைக் கூறச் செய்து முடித்தார்கள்.

அன்று மாலை அங்கு மணமகனையும், மணமகளையும் உட்காரவைத்து, அச்சபை நடுவில் பல வித்வான்களின் சொற் பெருக்கு நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. நானும் அங்கு சென்றிருந்தேன். அவ்வமயம் ஜாதி, மத பேதங்களை விட்டொழிக்க வேண்டுமென்றும், ஆரியர்களை எக்காரியங்களுக்கும் அழைத்தல் கூடாதென்றும் இன்று நடந்த காரியங்களைப் போலவே பெருமையுடன் நடக்க பலரும் முற்படவேண்டு மெனப் புகன்றனர். இது மிகவும் கொண்டாடத் தக்க விஷயம். இப்படியே பலரும் கைக்கொள்ளின், நமது தேசம் விரைவில் முன்னேற்றமடையும் என்பதில் யாதொரு ஐயமுமில்லை. இதைப்பற்றி உங்கள் அபிப்பிராயமென்ன?

ருக்மணி: அடிநாரதா! இதென்னடி கலிகாலக்கூத்தாக இருக்கிறதே. நீ முதலில் சொல்லும்போது உன்மீது கோபித்துக் கொண்டேன். பின்னர் மார்ச்சு மீ 11 திகதி கோட்டை 'கன்வியு' ஹாலில் நடந்த மணத்தின் வனப்பையும், பெருமையையும் கேட்க மிக்க ஆச்சர்யமாக இருக்கிறது.

பாலா: (தலையின் மீது கையைவைத்துப் பெருமூச்சுவிட்டு) ருக்மணி! இதென்னடி! வெட்கக்கேடாயிருக்கிறதே! இனி ஊரே கெட்டுப்போய்விடும் போலிருக்கிறதே. இப்படியே இனி இரண்டொருவர் செய்தால் மற்றுமிருக்கப்பட்டவர்களும் செய்ய ஆரம்பித்துவிடுகிறார்கள். பின்பு பல ஜாதிகள் ஒன்றாய் (சங்கரஜாதியாய்) விடும்போலிருக்கிறது.

சாரதா: என்ன பாலாமணி! பல ஜாதிகள் ஒன்று சேர்ந்தால்தானே இந்துக்களுள் ஒற்றுமை ஏற்படும். இப்போது இந்துக்களுக்குள் பலபிரிவுகளாய் இருப்பதால்தான் நம்மவர் களுக்குள் ஒற்றுமையின்றி பிற நாட்டாரின் இகழ்ச்சிக்குட் பட்டிருக்கிறோம். இதை நோக்கியே அநேக தேசாபிமானிகள் 'ஆசார சீர்திருத்த' சங்கங்களை ஸ்தாபித்து நம்மவர்களுக்கும் குடிகொண்டுள்ள மூடாசாரங்களைக் கண்டித்து வருகிறார்கள். இதைக் கவனியாது ஏதோ ஜாதிகள் கெட்டுவிடுமென்றும் சங்கர ஜாதியாய்விடுமென்றும் கூறினாயே அஃதென்ன?

பாலா: சங்கர ஜாதி என்றால் கலப்பு ஜாதி என்பது. ஒரு ஜாதியைச் சேர்ந்தவர் மற்றொரு ஜாதியைச் சேர்ந்தவரை மணந்து அவர்களிருவருக்கும் பிறக்கும் குழந்தை சங்கர ஜாதியாகும். இதைப்பற்றி அநேக புராணங்கள் விரித்துக்கூறி இருக்கின்றனவே அதை நீ பார்த்ததில்லையா?

சாரதா: ஜாதிகள் இன்னதென்பதை முன்னரே உனக்கு விளக்கிக் கூறினதை மறந்து மறுபடியும் மனிதசமூகத்திற் பல ஜாதிகள் இருக்கின்றனவென்று பிரித்துக்கூறுகின்றாய். இருப்பினும் இருக்கட்டும் உன்னுடைய புராணங்களைக் கொண்டே விளக்குகிறேன். மீன்வாணிச்சி (மச்சகந்தி)க்கும் பராசருக்கும் பிறந்த வியாசனை சங்கரஜாதி என்று கூறாமல் பிராமணனென எப்படிக் கூறினார்கள். பிரகஸ்பதியின் மனைவி தாரையுடன் சந்திரன் சேர்ந்து அவ்விருவருக்கும் பிறந்த புதன் நவக்கிரகங்களில் ஒன்றாக வைத்து பலராலும் புகழத்தக்க பெருமையைப் பெற்றான். இவன் சங்கரஜாதியைச் சேர்ந்த வனாயிற்றே. இதைப்பற்றிக் கூறமுன் வரின் உன் புராணங்களே போதிய உதாரணங் களாயுள்ளன.

ருக்: சரிதாண்டி சாரதா! நீ சொல்வதெல்லாம் உண்மை தான். அக்காலத்திற்கும் இக்காலத்திற்கும் எவ்வளவோ வித்தியாசமிருக்கின்றது. அக்காலத்திலிருந்தவர்கள் அவரவர் கருமத்திற்குத்தக்கபடி குணத்திற்குத் தக்கபடி, வித்யாசமின்றி, பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்ரரென்று நான்கு வகுப்பு களாகப் பிரித்துப் பெயரிட்டு அழைத்து வந்தார்கள். பின்பு அவற்றை பிறப்பினாலேற்பட்டதென்று பிரித்து வைத்தார்கள். இப்படி ஏன் பிரித்து வைத்தார்கள். இப்படி ஏன் பிரிக்கப்படல் வேண்டுமென்பதை யோசித்தால், மத்ய ஆசியாவிலிருந்து வந்த ஆரியர்கள் தாங்களே உயர்ந்தவர்களென்றும் ஏனையோர் தாழ்ந்தவர்களென்றும், தங்கள் ஜீவனத்திற்காக இவர்களைவிட தாழ்ந்தோர்களான க்ஷத்திரிய, வைசிய, சூத்ர, இவர்களின் மூல்யமாக, கொடுக்கப்படும் தான தருமங்கள் தங்களுக்குரியதென்று பெற்று ஜீவிக்கவே இத்தகைய பிரிவுகளைச் செய்துவைத்து விட்டார்கள்.

பாலா: அக்காலத்திலிருந்தவர்கள் இதனை ஏன் கவனியாது விட்டார்கள்? அவர்களுக்கு பகுத்தறிவு இல்லையா? இப் போதிக்கருப்பட்டவர்கள்தான் அவர்களைவிட மகா மேதாவிகளோ?

சாரதா: நமது முன்னோர்கள் கள்ளங் கபடமற்றவர்கள். 'ஐயமிட்டுண்' என்ற குணம் அவர்களிடம் சிறந்திருந்தது. அதிதியாக வரப்பட்டவர்களை உபசரித்து அவர்களுக்கு அன்னமிட்டுண்ணும் குணம் அவர்களிடமிகுந்திருந்தது. விருந்தினர்களாக வந்த இவ்வாரியர்கள், இவர்களின் (நம்மவர்களின்) மாசற்ற குணத்தைக்கண்டு இவர்களை தம்வசப்படுத்திக் கொண்டால் பிரயாசையின்றி தமது வாழ்நாட்களை கழிக்கலாமென்ற எண்ணங்கொண்டு, தாங்கள் உலகவழக்கில்லாத ஆரிய பாஷையால் ஏதோசில பாட்டுகளைச் சொல்லி தாங்கள் பிரம்மாவின் முகத்தில் பிறந்தவர்களென்றும் தங்களுக்கு மோக்ஷத்திற்குரிய மார்க்கங்கள் தெரியுமென்றும், இதர புதிய முறைகளைக் கற்பித்து, அவைகளுக்கு விதிகளை ஏற்படுத்தி அவைகளை தாங்கள்தான் செய்து வைப்பவர்களென்றும், பல போலி உரைகளால் நம்மவர்களை மயக்கி காலக்கிரமத்தில் உயர்வு தாழ்வுகளை பிறப்போடு? ஏற்பட்டதென்று பிரித்து வைத்துவிட்டார்கள்.

இவைகளுக்கு ஏதாவது ஆதாரம் கேட்டால் என்னசெய்வதென்று யோசித்து, ஆரியபாஷையில் இருக்கும் வேதங்களை இதராள் வாசிக்கலாகாதென்றும், வாசித்தால் கடவுளுக்குக் குற்றம் செய்தோர்களாய்விடுவார்களென்றும் பூச்சிகாட்டி வித்தைகளால் ஏமாற்றி, அவர்களுக்கு அனுகூலமாக மனுதர்ம சாஸ்திரமென்ற ஓர் அதர்ம சாஸ்திரத்தையும் உண்டாக்கி வைத்துக்கொண்டார்கள்.

**எஸ்.வி.என். ஆழ்வார்,**

**மலர் 2 இதழ் 3 பக் 38**

**மலர் 2 இதழ் 5 பக் 79 - 81**

# பண்டைக்காலத் தமிழர் வாணிகமும் கைத்தொழிலும்

(ஸ்ரீமான் சனக-சங்கர-கண்ணப்பன் எழுதியது)

இம்மலர் தலையுலகத்தில் ஒருநாடு செழிப்புற வேண்டுமெனின், ஆண்டு உழவும், வாணிகமும் தலைசிறந் திருத்தல் வேண்டும். இவைகளுள் ஒன்றிருந்து பிறிதொன்றில்லா தொழியின் பயனின்றாம். வாணிக மின்றெனின் பொருட் செல்வமின்றாம். உழவு இன்றெனின், உண்ண உணவு இன்றாம். ஆகலான் நம் பண்டைத் தமிழுலகத்தில் இவ்விரண்டும் போற்றப்பட்டுவந்தன; போற்றப்பட்டமையான் இவைகள் சிறப்புற்றிருந்தன. இவ்வுண்மை, தமிழ்மக்கள் வழக்க ஒழுக்கங்களையுள்ளபடியே எடுத்து விளக்கும்; சிலப்பதிகாரம், பத்துப்பாட்டு, மணிமேகலை, புறநானூறு முதலிய சீரிய நூல்களைப் படிப்பார்க்கு விளங்கும். அன்றியும் மேற்கூறிய இரண்டு தொழில்களின் விழுப்பத்தையுணர்ந்தே நம் நூலாசிரியர்கள்

*வியன்மேவல் விழுச்செல்வத்து*
*இருவகையா னிசைசான்ற*
*சிறுகுடிப் பெருந்தொழுவர்*
*குடிகெழீஇய நானிலவரொடு* எனவும்

*சுழன்றுமேர்ப் பின்ன துலக மதனால்*
*உழந்து முழவே தலை* எனவும்

*உழுவா ருலத்தார்க் காணியஃ தாற்றாது*
*எழுவாரையெல்லாம் பொறுத்து*

எனவும் கூறியுள்ளார்கள். இவ்விரு தொழிலாளர் வேளாளர் வணிகர் எனத் தொழின்முறையான் அழைக்கப்படுவர். இவர்களே உலகத்திற்காணியாவர். ஆகையினாற்றான் இவர்களைக் குறிப்பிடுங்கால் ஆசிரியர் தொல்காப்பியர் 'துகள் தபு சிறப்பின் சான்றோர் பக்கம்' (குற்றந்தீர்ந்த சிறப்பினையுடைய சான்றோர்) எனச் சாற்றுவாராயினர். மற்றும் புறநானூற்றிலும்

*'உண்டா லம்ம விவ்வுலக மிந்திரர்*
*அமிழ்த மியைவ தாயினு மினிதெனத்*
*தமியருண்டலு மிலரே முனிவிலர்*
*துஞ்சலுமிலர்பிற ரஞ்சுவ தஞ்சிப்*
*புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனின்*
*உலகுடன் பெறினுங் கொள்ளல் ரயாவிலர்*
*அன்ன மாட்சி யனைய ராகித்*
*தமக்கென முயலா நோன்றாட்*
*பிறர்க்கென முயலூ ருண்மை யானே'*

எனப் புகழப்பட்டுள்ளார். இவர்களுள் வணிகர் பலதிறப் பட்ட பொருள்களைப் பிறநாட்டினின்று கொண்டுவந்தும், தமிழகத்துள்ளவைகளைப் பிற நாட்டிற்கு எடுத்துச் சென்றும், பெரும் புகழ்பெற்று ஈகையிற் றலைசிறந்து விளங்கினர். ஆகலான் தமிழரசர்கள் இவர்கள்பால் அன்புசுரந்து, 'எட்டி' என்னும் பட்டமும், அதற்கு அறிகுறியாக 'பொற்பூ' வொன்றும் ஈந்து சிறப்புவித்தல் வழக்கமாய் இருந்தது. இது

*'வணிக மரபின் வருபொருளீட்டி*
*நீணிதிச் செல்வனாய் நீள்நிலவேந்தனால்*
*எட்டிப் பூப் பெற்று...'*

என்ற மணிமேகலையடிகளான் உணரப்படும்; இத்துணை மேம்பாடுற்றவர்கள். தம் வணிகத்திற்கேற்ப கூல வணிகரென்றும், அறுவை வணிகரென்றும், பண்ட வணிக ரென்றும், உமண வணிகரென்றும், பிறவும் பெயர் பெற்றனர். நெல், புல், தினை, சாமை, வரகு முதலியவைகளைக் கொண்டு தொழில் செய்வார் கூல வணிகர்; மணிமேகலை ஆசிரியராம் சீத்தலைச் சாத்தனார் கூல வாணிகராவர்.

துணிகளைக் கொண்டு தொழில் செய்வார், அறுவை வணிகர் (அறுவை–துணி) 'இன்பமுந் துன்பமும்' என்ற வெண்பாவை அளித்த மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார் அறுவை வணிகராவார்; பலசரக்கு விற்பார் பண்ட வணிகராவர்; மதுரைப் பண்ட வணிகன் இளநத்தத்தனார் பண்ட வணிகராவர்; இனி உப்புவிற்பார் உமண வணிகராவர். இவர்கள் பெருந் துறை முகப் பட்டினங்களிலிருந்து, பர்மா (கடாரம் அல்லது காழகம்) சிங்கள நாடு (ஈழம்) அரேபியா, இத்தாலியா, கிரீஸ் (யவனர் நாடு) முதலிய பிறநாடுகளுடன் பெரும் மரக்கலங்களின் உதவியான் வணிகஞ் செய்து வந்தனர். இவர்கள் எவ்வாறு செய்துவந்தா ரென்பது பின்னர் விளக்கப்படும். இதை எழுதுமுன் தமிழ்நாட்டுத் துறைமுகங்களைப் பற்றி விளக்குவாம்.

### துறைமுகங்கள்

தமிழ்மக்கள் தங்கள் நிலத்தை முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தலென நான்கு பகுதியாய்ப் பிரித்துள்ளனர். அவைகளுள் நெய்தலென்பது கடலும் கடல் சார்ந்த விடமுமாம். இக்கடற்கரையிலுள்ள விடங்களெல்லாம் பட்டினங்களெனப்படும். அவைகளுள் பண்டைக் காலத் துறைமுகங்களிற் சிறப்புற்றன காவிரிப்பூம் பட்டினம், எயிற்பட்டினம், நாகபட்டினம், கொற்கை, முசிரி, தொண்டி என்பனவாம். 'கலஞ்செய் கம்மியர்' 'கலம்புணர் மாக்கள்' என்ற அடிகள் மணிமேகலையிற் காணப் படுகின்றமை யான், இவர்கள் கலங்கள் சமைப்பதில் பேராற்றல் உடையாராய் இருந்தனர் என்பது போதரும். இவ்வாறே 'வேத இந்தியா' ஆசிரியரும் எழுதுகின்றார்.

### துறைமுகங்களமைப்பு

செவ்விய துறைமுகங்களெல்லாம் ஓர் ஆறு கடலுடன் கலக்குமிடங்களிலேயே இருந்தன. ஆண்டு பிறநாட்டுக்கலங்கள் மிகீஇக்கிடந்தன; இது

*'யவனர் தந்த விளை மாணன் கலம்*
*பொன்னொடுவந்து கறியொடுபெயரும்*
*வளங்கெழு முசிரி'*

என்றவைகளான் தெரியக்கிடக்கின்றது. இவ்வாறு கலங்களிற் போந்தார் பல நாட்டாராவர்; அவர்கள் தங்குதற்கென தனியிட

மிருந்தது; இவர்கள் தம் மொழிகளில் உரையாடிக் கொண்டு, நம் மக்களுடன் கலந்து வணிகஞ் செய்து வந்தனர். இவ்வுண்மை

'கயவாய்மருங்கிற் காண்போர்த்தடுக்கும்
பயனளவறியா யவனர் இருக்கையும்
கலந்தருதிருவிற் புறம்பெயர்மாக்கள்
கலந்திருந்துறையும் இலங்குநீர் வரைப்பும்'

எனவும்

'பல்லாயமொடுபதிபழகி
வேறுவேறு யர்ந்த முதவர் யொக்கற்
சாறயர் மூதூர் சென்று தொக்காங்கு
மொழி பலபெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர்மாக்கள் கலந்தினி துறையும்'

எனவுங் கூறியவற்றான் உணர்க. இனி நடுக்கடலிலுள்ள கலங்களை இராக் காலத்துக் கரைக்கு, அழைத்தற்கு விளக்குகள் கட்டப்பட்டிருந்தன. சிலப்பதிகாரத்துள் கடலாடு காதையின்பால் காவிரிப்பூம் பட்டினத்தில் 'இலங்குநீர் வரைப்பிற் கலங்காண் விளக்கமும்' என்றமையான் கலங்கரை விளக்கங்கள் (Light House) இருந்ததாக அறிகின்றோம். கலங்கரை விளக்கம் என்பது கப்பல்களைக் கரைக்கு அழைத்தல் எனப் பொருள்படும், அன்றி கப்பல்கட்குக் கரையைத் தெளிவு படுத்தல் எனக் கூறலுமமையும்.

இனி, இத்துறைமுகங்களிலிருந்த பண்டசாலைகளைப் பற்றிப் பகர்வாம். இவைகளின் சிறப்பைக் குறித்துப் 'பட்டினப் பாலை'யில் காணலாம். அவ்வடிகளை நோக்குங்கால் நம் பண்டசாலைகள் (Custom House) இக்காலத்து இருப்பனவற்றைக் காட்டினும் எவ்வாற்றானும் இழிந்தவைகளல்ல வென்பது வெள்ளிடை மலை போற்றுலங்கும். அப்பண்டசாலைகளில் கணக்கற்ற மூட்டை பிறநாடுகட்கு ஏற்றுமதி செய்ய அடுக்கப்பட்டிருக்கும்; அவைகளைத் தொல்இசைத் தொழின்மாக்கள் (சுங்கங் கொள்வோர் Custom Officer) நிறுத்து, அரசனுடைய அச்சடை யாளம் பொறித்து, சுங்கம் கொண்டு (உல்குசுங்கம்) 'தீம்புகார்த் திரைமுன்றுறை, தூங்குநாவாய் துவன்றிருக்கை, மிசைக் கூம்பினசைக் கொடியும்' என்பதற்கிணங்க, தம் நாட்டுக் கொடி களுடன் விளங்குங் கப்பல்களில் ஏற்றுவர்; இனி பிறநாடு

களினின்றும் போந்துள்ள கப்பல்களினின்றும் மூட்டைகள் இறக்கிப், பண்டசாலையிற் கொண்டுவந்து, அரசன் அச்சடையாளம் பொறித்துச் சுங்கங் (Custom-duty) கொள்ளுவர். இவ்வுண்மைகள்,

'நல்லிறைவன் பொருள்காக்கும்
தொல்லிசைத் தொழின் மாக்கள்
காய்சினத்த கதிர்ச்செல்வன்
தேர்பூண்ட மா அபோல
வைகறொறு மசைவின்றி
யுல்குசெயக் குறைபடாது
வான்முகந்த நீர்மலைப் பொழியவும்
மலைப்பொழிந்த நீர்கடற் பரப்பவும்
மாரிபெய்யும் பருவம்போல
நீரினின்று நிலத்தேற்றவும்
நிலத்தினின்று நீர்ப் பரப்பவும்
அளந்தறியாப் பலபண்டம்
வரம்பறியாமை வந்தீண்டி
யருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடை வல்லணங்கினோன்
*புலிபொறித்துப் புறம்போக்கி
மதி நிறைந்த மலிபண்டம்
பொதிமூடைப் போரேறி'

என்ற பொருள்மலிந்த அடிகளான் உணரக்கிடக்கின்றன. இவ்வடிகளிற் சரக்குகள் காவிரிப்பூம் பட்டினத்தில் ஏற்றுமதி இறக்குமதியாகும் முறையும், அழகும், அச்சரக்குகளில் சோழன் அச்சடையாளமாய் புலிமுத்திரையிட்டுச் சுங்கங்கொள்ளுஞ் சிறப்பும் செவ்வன் விளக்கப்பட்டள்ளன. மற்றும் இப்பண்ட சாலைகள் வெளியிடத்தை மிகுதியாக உடையன; அவண் வணிகர்கள் தம் பொதிகளில், அளவு, எண், நிறை, முதலியவை களைப் பொறித்து அடுக்கி வைத்திருப்பர்; இவ்விடம் அருங் காவலுடையதாகலின் களவு செய்தற்கியலாது. இது

'வம்பமாக்கள் தம்பெயர்பொறித்து
கண்ணெழுத்துப்படுத்த எண்ணுப் பலபொதி
கடைமுகவாயிலுங் கருந்தாழ்க் காவலும்
உடையோர்க் காவலும் ஓரீ இயதாகிக்

* சோழன் அச்சடையாளமாகிய புலி முத்திரை

*கட்பொருளரெனிற் கடுப்பத்தலையேற்றிக்*
*கொட்பினல்லது கொடுத்தலினீயாது*

உள்ளுநர்பனிக்கும் வெள்ளிடைமன்றமும்' என்ற அடிகளான் தெரியக்கிடக்கின்றது. ஆகவே, இதுகாறும் நம் பண்டைத் தமிழ்மக்கள் துறைமுகங்களின் இயல்பை விளக்கினாம். அடுத்த இதழில் இவர்கள் வணிகஞ் செய்த நாடுகள், முறை, ஏற்றுமதி, இறக்குமதிச் சரக்குகள் முதலியவற்றைக் குறித்தெழுதுவாம்.

இவர்கள் வணிகஞ் செய்த நாடுகள்

நம் பண்டைத் தமிழ்ப் பெருமக்கள், அக்காலத்து நாகரிகத் திற்றலை சிறந்து மிளிர்ந்த பாபிலோனியா, அசிரியா, எகிப்து, அரேபியா, ஜாவா, சுமத்ரா, மலேயா, பர்மா, சிலோன், சீனா முதலிய நாடுகளுடன் வணிகம் நடத்தினர். இவைகளுள் பாபிலோனியா, அசிரியா எகிப்து என்பன'யவனர்நாடு' எனவும், அரேபியா 'சோனக'மெனவும், பர்மா, 'கடாரம்' அல்லது 'காழக'மெனவும், ஜாவா 'சாவகநாடு' எனவும், தமிழ் இலக்கியங்களிற் பெயர் பெறும். நம்முன்னோர், இந்நாட்டார் களுடன் வணிகம் நடாத்தினரென்பதற்குப் பல சான்று களுள்ளன; இவைகள் பண்டைத்தமிழ் நூல்களைப் படிப்பார்க்குத் தெள்ளிதிற் புலப்படும். எனினும் சில ஈண்டுக் குறிப்பிடுவாம். சாவகநாடு என்று அழைக்கப்படுஞ் ஜாவாவுக்கும், காவிரிப்பூம் பட்டினத்திற்கும் அடிக்கடி கலங்கள் சென்று கொண்டிருந்தனவென மணிமேகலையிற் கூறப்படுகின்றது.

அதற்கேற்ப, அந்நாட்டில் நம்மனோர் பன்னெடு நாட்களுக்கு முன்னர் கட்டிய கோயில்களும், மனைகளும் அழிந்து கிடப்பவை இன்றுங் காணப்படுகின்றன வென்றும், ஆண்டிருந்த சிலைகள் பலமேனாட்டு லீடன் பொருட்சாலையின் கண்ணுள்ளன வென்றும் கூறுப. இனி, தமிழ் இலக்கியங்களிற் காணப்படும் 'சோனகம்' என்ற சொல் அராபிய நாட்டைக் குறிக்கும். இவ்வாறே, ராட்லர் என்பார் எழுதுகின்றார். ஆகலான், சோனகரென்பார் அராபியராவர். இவர்கட்குந் தமிழ்த் துருக்கர்கட்கும் யாதொரு இயைபுமின்று. இவர்கள் வணிகஞ் செய்வான் முதன் முதற் பாண்டிய நாட்டிற்குப் போந்து காயற்பட்டினத்தின் கண் குடியேறினர்.

ஆகலான் இது 'சோனகர் பட்டினம்' எனவும் வழங்கப் பட்டது; இவர்கட்கும் நம் தமிழ்மக்கட்கும், வணிகம் நடத்தும் முறைகளும், வழக்கங்களும், விதிகளும், பல இருந்தனவென்றும், அவைகளை முற்றுந்தாம் சேகரித்திருப்பதாயும் சர் அலெக்சாண்டர் ஜான்ஸ்டன் (Sir Alexander Johnston, K.N.T., V.P.R.A.S.) எழுதுகின்றார். மற்றுஞ், 'சிந்து' எனப்பெயரிய மெல்லிய நுண்ணிய ஆடை (Muslin) பாபிலோனியாவில் இறக்குமதி செய்யப்பட்டதென்றும்; அஃது இந்தியாவில் நெய்யப்பட்டு தமிழ் மக்களாலேயே ஆண்டு கொண்டுவரப்பட்டதென்றும், வேத இந்தியா ஆசிரியர் கூறுவர். இவ்வுண்மைக்குச் சான்றாக

> 'நோக்கு நுழை கல்லா நுண்மைய பூக்கனிந்
> தரவுரியன்ன வறுவை.'

(பொருள்: கண்ணிற் பார்வை இஃது இழைபோன வழியென்று குறித்துப்பார்க்க வராத நுண்மையுடையவாய்ப் பூத்தொழில் முற்றுப்பெற்றதன்மையாற் பாம்பினது தோலை யொத்த துகில்.) என்ற அடிகள், இத்தகைய நுண்ணிய மஸ்லின் ஆடைகள் தமிழ் நாட்டில் செய்யப்பட்டன என்பதை வெளிப் படுத்தும். இனி பிளினி என்னும் பேராசிரியர், 'ஆண்டு தோறும் ஏறக்குறைய 15 கோடி ரூபாய் பெறுமதியான பொன் நாணயங்களை உரோமபுரி தமிழ் நாட்டிற் அனுப்பி வந்ததென்றும்,

இவைகட்கு மாறாக இவணிருந்து ஏற்றுமதியான சரக்குகள் அந்நாட்டில் 100 மடங்கு மிகுதியான விலைக்கு விற்றன வென்றும்' தம்குறிப்பில் எழுதியுள்ளார். ஸ்திராபோ என்ற மற்றொரு ஆசிரியர் 'செங்கடற் துறைமுகத்தினின்றும் 120 கப்பல்கட்குக் குறையாதவை இந்தியாவிற்குப் புறப்பட்டுப் போகப்பார்த்தேன்' எனக்குறிப்பிடுகின்றார். ஆகவே மேற்கூறிய சான்றுகளான் தமிழ் மக்களுக்கும், அந்நிய நாட்டாருக்கும் பெருத்த வணிகம் நடந்ததென்பது வலியுறுத்தப் பட்டதன்றோ! இனி இவர்கள் வணிகஞ் செய்யத் துவங்கிய காலத்தை ஆராய்வாம்.

### காலம்

நமக்குக்கிடைக்கும் பல சான்றுகளைக்கொண்டு முடிவு செய்யுங்கால், நம்மக்கள் இற்றைக்கு 5000 ஆண்டுகட்கு

முன்னரே பெருத்த வணிகஞ் செய்தனரென்பது போதரும். 'இராஜாவுக்கு (சாலமனுக்கு) சமுத்திரத்திலே ஈராமின் கப்பல்களோடே கூடத் தர்ஷீசின் கப்பல்களுமிருந்தது. தர்ஷீசின் கப்பல்கள் மூன்று வருஷத்திற்கு ஒருதரம் பொன்னையும், வெள்ளியையும் யானைத் தந்தங்களையும், குரங்குகளையும், மயில்களையும் கொண்டுவரும்' (இராஜாக்கள் 1122) என்ற வரிகள் பைபிலில் காணப்படுகின்றன. இப்பொருள்கள் தமிழ் நாட்டிலிருந்தே கொண்டுவரப்பட்டன.

ஏனெனின் சந்தனக்கட்டை, தந்தம், குரங்கு, மயில் முதலியவை களைக் குறிக்கும் ஹீபுரு மொழியிலுயுள்ள சொற்கள், நல்ல கொழுத்த தமிழ்ச் சொற்கள் எனப், பேரறிவு வாய்ந்த பிசப் கால்ட்வெல் அவர்கள் விளக்கிக் காட்டியிருக்கின்றனர். இரண்டாவதாக அவர்கள் ஒப்பீருக்குப் போய் அவ்விடத்திலிருந்து நானூற்று இருபது தாலந்து ராஜாவாகிய சாலமோனிடத்தில் கொண்டு வந்தார்கள் (இராஜாக்கள் 928) 'ஒப்பிரிலிருந்து பொன்னைக் கொண்டுவருகிற ஈராமின் கப்பல்களும்' 'ஒப்பீரிலிருந்து 1 மிகுந்த வாசனை மரங்களையும் கொண்டு வந்தது (இராஜாக்கள் 1011) என்ற வரிகள் பழைய ஏற்பாட்டில் காணப்படுகின்றன. இவண் 'ஒப்பீர்' என்ற துறைமுகம் குறிப்பிடப் படுகின்றது. இத்துறைமுகம் ஒருசிலர் தென் ஆப்ரிக்காவிலிருப் பதெனக் கருதினர்.

ஆனால் இப்பொழுது தென்னிந்தியாவிற் பாண்டிய நாட்டைச் சார்ந்ததென விளக்கப்பட்டுள்ளது. ஏனெனின், பொன்னையும், சந்தனக்கட்டை முதலிய நறுமணக்கட்டைகளையும் ஒருங்கே ஏற்றுமதி செய்யுந் துறைமுகம் நம் தமிழ் நாட்டகத்தே இருத்தல் வேண்டும்; நம் பாண்டிய நாட்டின்பாற் பொன்னும் சந்தனக் கட்டையும் பண்டு மிகுதியாக இருந்தனவென்பதைத் தமிழ் நூற்களைப்பார்த்தார் எல்லோருங்கூறுவர். ஆகலான் ஹீபுரு மொழியில் 'ஒப்பீர்' என்றழைக்கப்படும் துறைமுகம், இப்பொழுது தூத்துக்குடிக்குத் தென்பாலுள்ள 'உவரி' என்ற ஊரைக் குறிக்கும் எனப் பண்டிதர் திரு. சவரிராயர் முடிவு செய்கின்றார்.

இவ்வுவரி என்னுமூர் இன்றைக்கு 3000 ஆண்டுகட்கு முன்னர் சீருஞ் சிறப்புமுற்ற துறைமுகமாய் விளங்கிற்று. இதுவே

பாண்டியன் தலைநகராய் முதற் சங்கம் அமைந்திருந்த கொற்கையின் கடற்பாக்கமெனக்கூறுவர். ஆகலான் 'ஒப்பீர்' என்பது பாண்டிய நாட்டிலிருந்ததெனப் போதரும்; எனவே தமிழ் நாட்டிலிருந்தே சாலமன் அரசர்க்குப் பொன், குரங்கு, மயில் முதலியன சென்றிருத்தல் வேண்டுமென்பது கண்டோம். இனி சாலமன் சொங்கோலோச்சிய காலம் கி.மு. 1000 ஆகலான், நம்மக்கள் இற்றைக்கு 3000 ஆண்டுகட்கு முன்னரே வளப்பம் பொருந்திய வணிகஞ் செய்து, நாகரிகத்திற்றலை சிறந்து மிளிர்ந்தனர்.

ஆனால் பிறிதொரு மறுக்க இயலாத சான்றான் நம்மக்கள் இற்றைக்கு 5000 ஆண்டுகட்கு முன்னரே வணிகத்தில் பெரும் பெயர் படைத்திருந்தனரென்பது தெரியக்கிடக்கின்றது. வேத இந்தியா ஆசிரியர் 'கி.மு. 3000 ஆண்டுகட்கு முன்னர் ஊர்யா (Urea) என்னும் பாபிலோன் அரசரால் கட்டப்பட்டு, இப்பொழுது அழிந்துகிடக்கும் முகீர் (Mughar) இன்னும் பெரிய ஊரின்கண் ஒரு துண்டு இந்திய தேக்கு மரம் கிடைத்தது.

இத்துண்டு பாபிலோனியாவுக்கும், தென்னிந்தியாவிற்கும் வணிகம் நடந்ததென்பதை ஐயமறவிளக்கிக்காட்டும். ஏனெனின் தேக்குமரம், தெற்கே மலையாளக் கரையின்பால் மட்டும் வளருகின்றது' என எழுதுகின்றார். ஆகலான், இம்மறுக்க வொண்ணா சான்று, நம்தமிழ் மக்கள் இற்றைக்கு 5000 ஆண்டுகட்கு முன்னரே பிறநாட்டுகளுடன் வணிகஞ் செய்யத் துவங்கி விட்டனரென்பதை வலியுறுத்துமன்றோ! ஆ! எம் தமிழ்மக்கள் பண்டைய வளப்பத்தையும், நாகரிகத்தையும் என்னென்போம்!

### அறுவை வணிகம்

முதன் இதழில் பலசான்றுகள் வாயிலான், நம்பண்டைத் தமிழ்மக்கள் இற்றைக்கு 5000 ஆண்டுகட்கு முன்னரே, பிறநாடுகளுடன் வணிகஞ் செய்தனரென்பதை விளக்கினாம். இனி இவர்கள் ஏற்றுமதி செய்த பலதிறப்பட்ட பொருள்களைக் கூறுவாம்.

இவர்கள் செய்த பலதிறப்பட்ட வணிகங்களுள், அறுவை வணிகஞ் சிறப்புவாய்ந்ததாம். அறுவை வணிகமென்பது

துணிவியாபாரமெனப் பொருள்படும். நம்மக்கள் துணிகள் நெய்வதிற் பேராற்றல் உடையாராய் விளங்கினரென்பது, நம்பண்டைத் தமிழ் நூல்களை நோக்குவார்க்கு இனிது புலப்படும். இத்துணிநெய்தற்றொழில் நம்நூல்களில் 'காருகவினை' என்றழைக்கப்படும். இவ்வுண்மையை

*'பருத்திநூரல் பட்டுநூரல் அமைத்தாடை யாக்கலும்*
*சுமத்தலும் பிறவுங் காருக வினைத்தொழில்'*

என்பவைகளான் உணர்க. இத்தொழிலை ஆண் மக்களன்றிப் பெண் மக்களுங்கையாண்டு வந்தனர். இதனாற்றான் 'காருகமடந்தை' 'பருத்திப் பெண்டின் பனுவலன்ன', 'நுண்ணிய பலவாய பஞ்சின்னிகளாற்கைவன் மகடூஉத் எனது செயற்கை நலந்தோன்ற ஓரிழைப்படுத்தலாம் உலகத்து நூனூற்றலென்பது' என்ற சொற்கள் நம் பழந்தமிழ் இலக்கியங்களிற் காணப் படுகின்றன.

இவ்வாறு நெய்தற்றொழிலிற்றலைசிறந்த இக்காருநர் தனி இடங்களில் வசித்தனர்; இத்தனியிடம் 'காருகர் இருக்கை' என அழைக்கப்படும். இவர்கள் பட்டினாலும், மயிரினானம், பருத்தியினாலுந் துணிகள் செய்தனர். இது

*'பட்டினும் மயிரினும் பருத்தி நூரலினும்*
*கட்டும் நுண்வினைக்காருகர் இருக்கையும்'*

என்ற அடிகளான் உணர்த்தப்படும். முதற்கண் பட்டினாற் செய்த ஆடைகளின் இயல்பை நோக்குவாம்! பட்டினாற் பலதிறப்பட்ட ஆடைகள், பலதிறப்பட்ட நிறங்களிற் செய்யப்பட்டன; இவைகளுள் ஒருசில ஈண்டுக்குறிப்பிடுவாம்.

"கோசிகம், பீதகம், பச்சிலை, அரத்தம், நுண்டுகில், சுண்ணம், வடகம், பஞ்சு, இரட்டு, பாடகம், கோங்கலர், கோபம், சித்திரக்கம்பி, குருதி, கரியல் பேடகம், பரியட்டக்காசு, வேதங்கம், புங்கர்க்காழகம், சில்லிகை, தூரியம், பங்கம், தத்தியம், வண்ணடை, கவற்றுமடி, நூல்யாப்பு, திருக்கு, தேவாங்கு, பொன்னெழுத்து, தேவகிரி, காத்தூலம், இறஞ்சி வெண்பொத்தி, செம்பொத்தி, பணிப்பொத்தி' என்பனவாம்.

இப்பெயர்கள் படிக்குந்தோறும் கேட்குந்தோறும் இன்பம் பயக்கின்றன. இவைகளை ஆராயுங்கால், நம்மக்கள் இன்னும்

எத்துணையோ பட்டாடைகளை நெய்திருத்தல் வேண்டுமென்பது வெளிப்படுகின்றது.

இரண்டாவதாக, மயிராடைகளை ஆராய்வாம், மயிரினும் என்பதற்குச் சிலப்பதிகாரத்துள் அடியார்க்கு நல்லார் எலிமயிரெனப் பொருள் கொள்ளுகின்றனர். இவ்வெலி மயிரான் நெய்யப் பட்டவைகளை மிக நுண்ணிதாகலின், பெரிதுங் கொண்டாடி யிருக்கின்றனர், இவ்வாடைகள் அக்காலத்து, குளிர்காலங்களில் இருபாலரானும் பயன்படுத்தப்பட்டன. இவ்வுண்மைகள்,

*"பனிமயிர் குளிர்ப்பன பஞ்சின் மெல்லிய*
*கனிமயிர் குளிப்பன கண்கொளாதன*
*எலிமயிர் போர்வை."*

*"செந்நெருப் புணுஞ் செவ்வெலிம்மயிர்*
*அந்நெருப் பளவாய்பொற் கம்பலம்*
*மன்னுருப்பன மகிழ்ந்து தாங்கினார்*
*என்னரொப்பு மில்லவர்களென்பவே."*

*............... மாதரார்*
*பங்கயப்பகைப்பருவம் வந்ததென*
*எங்குமில்லன எலிமயிர்த்தொழிற்*

பொங்கு பூம்புகைப் போர்வை மேயினார்' என்ற அடிகளான் தெரியக்கிடக்கின்றன.

இறுதியாக இவர்கள் நெய்த பருத்தி ஆடைகளைக் குறித்து எழுதுவாம். இவைகள் 'சேலைகள்' 'கலிங்கம்' காழகம்' எனப் பெயர் பெறும். இவ்வாடைகள் வெண்மைநிறத்தானன்றி, பலதிறப்பட்ட நிறங்களானும் நெய்யப்பட்டன. 'சிறந்த கருமை நுண் வினைநுணங்குஅறல்' என்ற அடி அக்காலத்து விளங்கிய ஒரு கரிய ஆடையைக்குறிக்கும். இப்பருத்தி ஆடைகள் மிக நுண்ணியவாய், மாசு நீங்கியவைகளாய், விளங்கின. அவ்வாடைகளின் மேன்மையைக் குறித்து விளக்குஞ் சில அடிகளை ஈண்டுக் குறிப்பிடுவாம்.

*'உருவஞ்சாதிடை காட்டுமுடை கழலந்துகில்'*
*'கண்ணுமை கல்லா நுண்ணூற் கைவினை*
*வண்ண அறுவையர்'*
*'காம்பு செலித்தன்ன அறுவை'*

*(உரை: மூங்கிலாடையை உரித்தாலொத்த மாசில்லாத உடை)*

*'ஆவியன்ன அவிற்நூற் கலிங்கம்'*

*(உரை: பாலாவியை யொத்த விளங்குகின்ற நூலாற் செய்த துகில்.)*

*'வெயிற் கதிர் மழுங்கிய படர்கூர் ஞாயிற்றுக்*
*செக்கரன்ன சிவந்து நுணங்குருவிற்*
*கண்பொரு புகூஉ மொண் பூங்கலிங்கம்'*

*(உரை: வெயிலையுடைய கிரகணங்கள் ஒளி மழுங்கிய செலவு மிக்க ஞாயிற்றையுடைய செக்கர் வானத்தை யொத்த, சிவந்து நுண்ணிதாகும். வடிவாலே கண்களை வெறியோடப் பண்ணிச் சிந்தி விழுமாறு போன்ற ஒள்ளிய பூத்தொழிலை யுடைய சேலைகளை.)*

*'பாம்பு பயந்தன்ன விடிவின காம்பின்*
*கழைபடு சொலியின் இழையணிவாரா*
*ஒண் பூங் கலிங்கம்.'*

*(உரை: பாம்புச் சட்டை போறலால், அது பயந்தது போன்ற வடிவுடையனவும் மூங்கிற் கழையில் உண்டாம் ஆடைபோல இழைப்பு கண்ணுக்குத் தோன்றாதெனவும், ஒள்ளிய பூத்தொழில் உடையனவுமான ஆடையென்க.)*

மேற்கூறிய அடிகள் நம்மவரின் நெய்தற்றொழிலின் சிறப்பை விளக்குகின்றது. நம் நாட்டில் இவ்வாறுதான் நெய்தற் றொழில் செய்யவேண்டுமென்பதைத் துலக்கும் 'ஆடைநூல்' இருந்ததாகத் தெரிகின்றது; நாம் நுண்ணிய ஆடைகள் செய்வதில் பேராற்றல் உடையவர்களால் இருந்தமையற்றான், நம்மவர்கள் சிங்கள நாட்டிற்கு அழைக்கப்பட்டிருகின்றனர். இவ்வுண்மை Sir. A. Johnston கீழ்க்கண்டவாறு,

> '13ம் நூற்றாண்டுக்குமுன் சிங்கள நாட்டார்க்கு நுண்ணிய ஆடைகள் நெய்யத் தெரியாது; ஆனால் இத்தொழில் இந்தியர்க்குத் தெரிந்திருந்தது. ஆகலான் இந்தியா விலிருந்து நுண்ணிய ஆடைகள் நெய்வதில் வல்லாரைக் கொண்டு வருவார்க்கு மிகுந்த பரிசில் கொடுப்பதாய் சிங்கள அரசர்கள் அறிக்கை செய்தனர். அதற்கேற்ப,

கலித்துறை ஜில்லாவைச் சார்ந்த பெர்வல்லா சோனகர் ஒருவர் 13ம் நூற்றாண்டின் முற்பகுதியில் இந்தியாவிலிருந்து எட்டு நெசவுத் தொழிலாளரைக் கொண்டுவந்தனர்.

அக்காலத்திலிருந்த சிங்கள அரசர் இத்தொழிலாளரை அன்புடன் ஏற்றுக்கொண்டதோடு, பெருமைசான்ற பெண்களுக்கு மணஞ் செய்வித்து, அவர்கட்கு வீடுகள் கட்டிக்கொடுத்து, தன் அரண்மனைக்கு அண்மையில், ஓர் நெசவுச் சாலை ஏற்படுத்தி, பெரிய பட்டங்களுங்கொடுத்தார். இவர்களுள் தலைவர்க்குப் பல்லக்கில் வரும்படியான பெருமையும் கொடுக்கப்பட்டது.'

என Royal Asaitic பத்திரிகையில் எழுதியிருக்கின்றமையான் தெரியக் கிடக்கின்றது. ஆகலான் பலவாற்றானும் ஆராய்ச்சி செய்யுங்கால் நம்மவர்கள் நுண்ணிய ஆடைகள் செய்வதில் வல்லுநரென்றும், இவ்வாடைகள் பிற நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டன வென்பதும் வெள்ளிடை மலைபோல் விளங்குகின்றன. நம் நாட்டு ஆடைகளையும் பஞ்சையும், பல பேராசிரியர்கள் புகழ்ந்துள்ளனர்.

ஸ்ரீமான் சனக–சங்கர–கண்ணப்பன்

மலர் 2 இதழ் 4 பக் 52 - 55

மலர் 2 இதழ் 5 பக் 68 - 80

மலர் 2 இதழ் 6 பக் 86 - 89

(மலர் 2 இதழ் 6, 89 பக்கத்தில் இக்கட்டுரைத் தொடரும் என அறிவுப்பு வெளியிடப்பட்டுள்ளது, ஆனால் 7 - 11 இதழ்களில் இதன் தொடர்ச்சி இடம்பெறவில்லை, பதிப்பாசிரியர்)

## நல்லாரிணக்கம்

*'குலமும் ஒன்றே குடியும் ஒன்றே*
*இறப்பும் ஒன்றே பிறப்பும் ஒன்றே*
*வழிபடு தெய்வமும் ஒன்றே யாதலால்*
*முன்னோருரைத்த மொழி தவறாமல்*
*எந்நாளாயினம் இரப்பவர்க்கிட்டுப்*
*புலையுங் கொலையுங் களவுந் தவிர்ந்து*
*நிலைபெற அறத்தின் நிற்பதை யறிந்து*
*ஆணும் பெண்ணு மல்லதை யுணர்ந்து*
*பேணி யுரைப்பது பிழையெனப் படாது*
*சிறப்புஞ் சீலமு மல்லது*
*பிறப்பு நலந்தருமோ பேதையிரே'*
*கபிலர் அகவல்*

### முன்னுரை

பல்வளம் பழுனிய நம் நாட்டின்கண் அறியாமையினின்று மிறங்கிய கொடிய பருத்த வேரொன்று இறுக ஆழத்திற் பதிந்துவிட்டது. அஃதென்னையெனின் கல்வி, அறிவு, ஒழுக்கம் முதலிய விழுமிய பொருள்களை ஓராது நடுநிலைக்கு முற்றும் முரணாகத் தாய் வயிற்று நின்றுந் தோன்றிய தொன்றனையே கொண்டு 'இவன் நல்லான்' 'இவன் உயர்ந்தான்' எனப் பிதற்றலே. இக்கொடிய வழக்கம் ஒருசில குறும்பர்களான இடையில் முளைத்து நீண்ட காலமாகத் தொடர்ந்து வந்திருக்கின்றமையான் பிழைப்பில்லா மக்கள் பலரும், படித்த மக்கள் சிலரும் இதனுள் மயங்கிக் கிடந்துழன்று அறியாமைச்சேற்றான் மூடப்பட்டிருக்

கின்றனர். இருக்கின்றாராதலின் பிறப்பொன்றனையே நினைந்து, இழிந்து செய்கை உடையோரெனினும், தாமே உயர்ந்தார்,

பிர்ரம்மாவின் முகத்தினின்றுந் தோன்றியார் என்ற இறுமாந்து கிடக்கும் அகன்ற வாயையுடைய ஒருசில போலிமக்களை அணுகி இழுக்கடைந்து இடர்ப்படுகின்றனர். அங்கன மிடர்ப்படுவோரை அக்குறும்பர்கள் மாயவலையினின்றும் அறுத்துவிடுதல் சால்புடைத்தாம். இதுவே அறிவுடையோரது செய்கையுமாம். இதை உணர்ந்துதான் இதுபோழ்து நம் பிராமணரல்லாதா ரெல்லோரும் அத்தூய துறையின் கண் இறங்கியுள்ளனர் என்க. இதற்காகத்தான் தானிலை திரியா நம் தண்டமிழ் ***'ஆதி திராவிடன்'*** தோன்றித் தன் அறிவொளியை பரப்புகின்றதென்க. ஆகவே உண்மை அன்பர்கள் யாவரும் நம் ***'ஆதிதிராவிடன்'*** கொள்கைகளைப் பரப்பவேண்டிய வராதலின், நானும் அங்ஙனஞ்செய்ய முற்பட்டு இக்கட்டுரையை விடுவித்து நல்லார் இவரென நாட்டப் புகுந்தனன்.

## நல்லார் தோன்றற்குக் காரணம்

ஆன்மாக்கள் ஒரு நிலையில் அறிவுஞ் செயலுமற்று வெறுங்கல்லைப் போன்றுங்கிடக்கின்றன. அப்போழ்து அன்புருவாயநம் ஐயன் அருட்பெருக்கத்தான் அவ்வான் மாக்கள் உய்தற்பொருட்டு உடம்பினையும் உலகத்தினையும் அருளுகின்றார். அருளியஞான்றும் அவைகள் சிற்றறிவும் சிறு தொழிலும் உடையவைகளாய் இருக்கின்றமையான், தாங்களே யாதொன்றுஞ் செய்ய இயலாதனவாய் இருக்கின்றன; ஆதலான் எப்போழ்தும் ஒன்றைப் பற்றிக்கொண்டு, அப்பற்றிக் கொண்டதினியல்பைப் தம் பாற்றோற்றுவித்துக் கொள்ளும் நீர்மை உடையன.

இதனாற்றான் அருட்பெருங்குரவராகிய தாயுமானவர் 'யாதொன்று பற்றின் அதன் இயல்பாய்நிற்கும் பந்தமறும் பளிங்கனைய சித்து நீ' என்றருளியது மென்க. இனி மக்களும் ஆன்மாக்களுள் அடங்குகின்றாராதலின், எப்போழ்தும் ஓர் உதவியை நாடுகின்ற பான்மை உடையர் இதனை 'Man is a social being' என்ற ஆங்கிலப்பழமொழியே வற்புறுத்துமென்க. இந்நீர்மையுடைய மக்கள் சிற்றறிவின் கொடுமையான உண்மை

உணராது நல்லோரெனப் பொய்வேடம் பூண்டோரை அணுகி இடர்படுங்காலத்தே நம் ஐயன் திருவருளால் சில பெரியோர்கள் தோன்றுகின்றனர். இப்பெரியோர்கள் தம் நல்லுரையானும், செயற்கரிய செய்கையானும், தனக்கென வாழாப் பிறர்க்குரியராந் தன்மையானும், தம் அரிய பெரிய நூலானும், சிற்றறிவுடைய மக்களைத் தம்பால் இழுத்து மெய்நெறியின்கண் புகுத்தி அறிவு கொளுத்துகின்றனர்; அல்லது உம் பத்தியிற்சிறந்த மெய்யடியார்களாய திருஞான சம்பந்தர், மணிவாசகப் பெருந்தகையாளர், மங்கையற்கரசியார், நம்மாழ்வார், ஆண்டாள் முதலிய பெரியோர்கள் தோன்றி ஞான்ருறிரந்த நாட்டின் நிலைமையையும், மக்கள் நிலைமையையும் அப்பெரியார்கள் செய்ததையும் உய்த்துணர வல்லார்க்கு மேலே கூறிய உண்மை தெற்றெனத்தெளிவாம். இங்ஙனந்தோன்றி உலகினர்க்காக இடையறாது உழைக்கும் புகழ்பொருந்திய பெரியார்களே நல்லோர்; இவர்களே அந்தணர்; இவர்களே நிறைமொழிமாந்தர்; இவர்களே அறவோர்; இவர்களே சான்றோர்.

### நல்லோர் இல்லறத்தாரோ துறவறத்தாரோ?

இனி நம் தமிழ் மக்கட்குப் பகுக்கப்பட்ட இரு நிலைக்குள் இல்லறத்தில்நிற்போர் நல்லோரா அன்றித் துறவறத்தில் துலங்குவோர் நல்லோரா? இருநிலையில் உள்ளார்களும் நல்லவர்களே. தத்தமக்குரிய ஒழுக்கத்தில் உறைத்து நின்று உலகத்திற்குழைத்து அருளறம் பூண்டவர்களாய்த் திகழ்வார்களெனின் என்னை? நல்லோர்களாய நம் நாயன்மார்கள் ஆழ்வார்கள் இவர்களில் சிலர் இல்லறத்தாராயும் சிலர் துறவறத்தாராயும் நிகழ்ந்திருக்கின்றாராதலின். அன்றியும் ஒருவருக்கொருவர் துணையாய் மிளிர்கின்றமையாலுமென்க.

### ஆண்மக்களோ? பெண்மக்களோ?

இனி நல்லார் என்போர் ஆண்பாலரா அன்றிப் பெண் பாலரா என்ற வினா கிளம்புகிறது. இரு பாலருமே நல்லார்; ஒவ்வொருவரும் தத்தம் ஒழுக்கத்திற்றலைசிறந்து நின்று, அருளறம் பூண்டு உலகினர்க்கு வழிகாட்டிகளாய்த் துலங்கி, உலகினை மேம்பாடான நிலைக்குக் கொணர்ந்து தமக்கென

வாழாப் பிறர்க்குரியாராய் மிளிர்வார்களெனின். இந்த உண்மையை வெளிப்படையாய்க் காட்டுவதற்கே பத்தியிற்சிறந்த நாயன் மார்களிலும் ஆழ்வார்களிலும் ஏனைய பெருமைசான்ற பெருந்தகையாளர்களிலும் ஆண்மக்களும் பெண் மக்களுந் தோன்றியுள்ளார்கள். மக்களுள்ளும் இருபாலர் இருக்கின்ற மையான் நல்லோருள்ளும் இருபாலார் இருத்தல் வேண்டும். ஏனெனின் யானைப் பிடித்தற்கு யானையே வேண்டும்; மானை இழுத்தற்கு மானே வேண்டும். அதைப்போன்ற மகனை நல்வழியில் இழுத்தற்கு மகனும் மகளை இழுத்தற்கு மகளும் இன்றியமையாது வேண்டற்பாலார் ஆகலான இருதிறத்தாரும் நல்லாரே.

நல்லார் சாதி என்னை?

இக்கேள்விக்கு விடையிறுத்தல் மிகவும் இன்றியமையாத தொன்றாம்; ஏனெனின் பிறப்பான் மட்டும் உயர்வு உண்டு என்று போலிப்பார்ப்பனர்களும் அவர்கள் நடுநிலை திரும்பிய மனுதரும சாத்திரமுங் கூறுகின்றன. இம்மறநூலாகிய மனுதருமம் நல்லார்களை ஒரு சாதிக்கே அடைக்கின்றது. எத்துணை உயர்த்த வேண்டுமோ அத்துணை உயர்த்துகின்றது பிராமணர்களை.

> 'பத்து வயதுள்ள பிராமணனையும், நூறு வயதுள்ள க்ஷத்திரியனையும் தகப்பன் பிள்ளையாக அறியவேண்டியது அதில் பிராமணன் தகப்பன் மரியாதையும் க்ஷத்திரியன் புத்திரன் மரியாதையும் வகிக்கவேண்டியது.
>
> (சுலோகம் 1352 - வது அ)

> 'இப்படிப்பட்ட புண்ணிய தேசங்களைத் துவிஜர்கள் வேறு தேசத்திற்பிறந்தவரா யினும் வந்தடைய வேண்டியது; அல்லது சூத்திரன் ஊழியத் தொழிலைவிட வேறு விர்த்தியை எந்தவிடத்தில் அடையமாட்டானோ அந்த விடத்தில் வசிக்கத்தக்கது'
>
> (சுலோகம் 24 2வது அ)

> 'பிராமணன் பிறப்பானது தருமத்தின் அழிவில்லாத உருவமாக விருக்கின்றது'
>
> (சுலோகம் 98)

'பூமியிற் பிறந்திருக்கிற பிராமணன் பெருமைபெற்றவனாய்ச் சகல வருணத்தாருடைய தருமமென்னும் பொக்கிஷத்தை அரசன்போற் காப்பாற்றுகிறான்'

(சுலோகம் 98)

'பிராமணன் முதல் வருணத்தானானதாலும் பிரம்மாவின் முகமாகிய உயர்ந்தவிடத்திற் பிறந்ததினாலும் இந்த உலகத்தில் உண்டாயிருக்கிற சகல வருணத்தாருடைய பொருள்களையும் தானம் வாங்க அவனே பிரபுவாகிறான்.

(சுலோகம் 100)

'ஆதலால் பிராமணன் ஒருவரிடத்தில் தானம் வாங்கினாலும் தன் பொருளையே சாப்பிடுறான். தன் வஸ்திரத்தையே உடுத்துகிறான். தன் சொத்தையே தானஞ்செய்கிறான், மற்றவர்கள் அவன் தயையினாலேயே அவற்றை யனுபவிக்கிறார்கள்'

(சுலோகம் 101)

நாம் மேற்கூறியதற்குச் சான்றாக கொடிய மனுதரும சாத்திரத்தின் சுலோகங்களைக் காட்டியுள்ளோம். இத்தகைய மறமேற்கோள் அடங்கிய நூலும் அற நூலா? இதனைப்பசுவின் தோலைப் போர்த்திக்கொண்ட புலிக்கு ஒப்பிடலாம். ஆகவே இந்த நூலை அடிப்படையாகக் கொண்டு நல்லோர் பிராமணர்களே என்று முடிவுகட்டல் அந்தோ! அறக்கொடிது! அறக்கொடிது! என்னை? இங்ஙனம் முடிவுகட்டல் அறத்திற்கும், அருளுக்கும் இறைவன் படைப்புக்கும் முற்றும் முரணாக இருக்கின்றமையான் ஒரு பார்ப்பான் அருளறம் இல்லாதவனாயும், கல்வி அறிவு இல்லதவனாயும் இருந்தானெனினும் உயர்ந்தானாம் பள பளா! பள பளா!

ஆகலான் இம்மனு நூல் கொடிய மறநூலாயும் போலிப் பார்ப்பனர் பொல்லாத நூலாயும் இருக்கின்றமையான் இதனை நாம் ஒரு சிறிதும் போற்றல் கூடாது; மற்ற அற நூல்களையும் இறைவன் படைப்பையுமே நோக்கி நல்லார் சாதியை முடிவு கட்டுதல் வேண்டும். மனுதரும சாத்திரத்தின் கொள்கைப்படி முடிவுகட்டுவோமெனின் மெய்யடியார்களாய் நாயன்மார்களும், ஆழ்வார்களும், ஏனையமாதவர்களும், ஒரே சாதியிலே

தோன்றியிருத்தல் வேண்டும். அப்படித் தோன்றியிருக்கின்றா ரல்லர்.

என்னை? திருத்தொண்டர்களில் திருநாவுக்கரசு சுவாமிகள், இளையான் குடிமாற நாயனார் முதலிய பதிமூவர் வேளாளர்; இயற்பகை நாயனார், அமர்நீதி நாயனார் முதலிய ஐவர் வணிகர்; திருமூல நாயனார், ஆனாய நாயனார் இருவர் இடையர்; குங்கிலியக்கலய நாயனார், முருக நாயனார் முதலிய பன்னிருவர் பிராமணர்; சுந்தரமூர்த்தி நாயனார், இசைஞானியார் முதலிய நால்வர் ஆதிசைவர், சேரமான் பெருமாணாயனார் மங்கையர்க்கரசியார் முதலியவர் அரசர்;

திருநீலகண்ட நாயனார் குயவர், திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் பாணர், அதிபத்த நாயனார் பரதவர், கண்ணப்ப நாயனார் வேடர், ஏனாதி நாயனார் சான்றார், நேச நாயனார் சாலியார், கலிய நாயனார் செக்கார், திருக்குறிப்புத் தொண்ட நாயனார் ஏகாலியர், திருநாளைப்போவார் நாயனார் பறையர். இதுபோன்ற ஆழ்வார்களும் ஏனைய அடியார்களும் பலதிறப்பட்டார். இதனான் அன்புவடிவாய் கடவுள் சாதிவேற்றுமையைப் பார்க்கின்றாரல்லர் என்பதும் அடியார்கள் இன்ன சாதியிற்றான் பிறப்பரென்பதை முடிவு கட்டுதல் இயலாதென்பதும் தெற்றென விளங்கவில்லையா? இதனை வலியுறுத்துவதற்காகவே

*கள்ளி வயிற்றி னகில்பிறக்கு மான்வயிற்றி*
*னொள்ளரி தாரம் பிறக்கும் பெருங்கடலுட்*
*பல்விலைய முத்தம் பிறக்கு மறிவார் யார்*
*நல்லாள் பிறக்குங் குடி.*

என்ற அரிய அறவாக்கு எழுந்ததென்க. நல்லார்கட்குப் பிறப்பின் இறுமாப்பு இல்லை. அவர்கட்கு ஒழுக்கமும் அன்பும் அருளும் அறமுமே இருக்க வேண்டுமென்ற கருத்து; ஆகவே அவர்கள் பிறப்பைப்போற்றாது அன்பொன்றனையே பெரிதுங் கருதுகின்றார்களாகலின் அவர்களை 'அன்பர் குழாம்' என்றதொரு சாதியிலேதான் அடக்க வேண்டும்; வேறு எந்த சாதியிலும் அடக்குதல் இயலாதென்க; இதனாற்றான் வாக்கிற் சிறந்த சேக்கிழார் சுவாமிகள் அன்பு வடிவாய் அப்பூதியடிகட்கு முதற்கண் சாதியைக் கூறுங்கால் பிராமணர் என்று கூறாது அன்பர் குழாம் என்ற செம்மையாய்த் தீட்டினாரென்க.

ஆகவே இத்துணையுங் கூறியவாற்றான் நல்லார்கள் போலிப் பார்ப்பனர் இடையில் நாட்டிய சாதிகளில் கட்டுப்பட்டார் என்பதும், இறைவனுக்கும், சான்றோர்க்கும், அறநூல்கட்கும் உகந்த அன்பர் குழாம் என்றதொரு உயரிய பகுப்பிற்றான் அடங்குவ ரென்பதும் காட்டினாம்.

முன்பு நல்லாரிலக்கணம் அறத்திற் சிறந்த நல்லார்க்குப் பிறப்புச் சாதி இல்லையென்றும், அவர்கள் அன்பர்கள் குழாமில் அடங்கியாரெனவுங் கூறினாம். இனி இப்பெருந்தகை யார்கட்கு இலக்கண மென்னை என்ற விடைக்குவருவாம்:– கடிவன கடிந்து, காப்பன காத்தலே தள்ளற்பாலன அவைகள், பொய், காமம், கொலை, களவு முதலியவைகளே. என்னை?

> *'கள்ளும் பொய்யுங் காமமுங் கொலையும்*
> *உள்ளக் களவுமென் றுரவோர் துறந்தவை.'*

என்றாராகலின், இனிக் கொள்ளற்பாலன அருள், அன்பு, அறம் முதலியனவே. இவைகளை முறையே ஆராய்வாம்.

கொலை

முதற்கண் நல்லார் தள்ளற்பாலது கொடிய செய்கையாய் கொலை யொன்றே என்னை? கொலை செய்து ஒரு அரிய உயிரைத் தொலைத்தல் மறச்செய்கையாம்; அம்மறத் தொழிலைக்கொண்டு ஒழுகுவோமாயின் அறக்கடவுளை அடைதல் இயலாததொன்றாம். தண்ணீர் வேண்டுவோர் தண்ணீரில்லாக்கிணற்றை அடைவதாற் பயன் என்னை? தண்ணீருள்ள கிணற்றினையன்றோ அடைதல்வேண்டும். ஆனால் ஒரு சாரார் தமக்கு நன்மை உண்டாவதாயின் கொல்லலாம் என்று கூறுகின்றனர். அருளுடையாரும் உயர்ந்த வகுப்பாரும் என்று சொல்லிக்கொள்ளும் ப்ராமணர்கள் நூலாகிய கொடிய மனுதரும் சாத்திரம்.

> 'எக்கியத்திற்காகவே பசுக்கள் பிரமனால் சிருட்டிக்கப்பட்டிருக்கின்றன. அந்த எக்கியஞ் செய்தால் உலகமெல்லாம் க்ஷேமத்தை அடைகின்றது. ஆகையால் எக்கியத்தில் செய்யும் பசுஹிம்சை ஹிம்சையல்ல.'
>
> (சுலோகம் 39. 5வது அத்.)

'கொடிகள்-பசுக்கள்-விருக்ஷங்கள்-மிருகங்கள்-பக்ஷிகள் இவைகளை எக்கியத்திற் குபயோகப்படுத்தினால் பின்பு அவைகளுயர்ந்த கதியை அடைகின்றன.'

(சுலோகம். 40)

'மதுபர்க்கம்—எக்கியம் சிரார்த்தம் இவைகளுக்கு மாத்திரம் ஜெந்து ஹிம்சை செய்யலாம். மற்ற விஷயத்திற் கூடாதென்று மநுப்பிரஜாபதி ஆக்ஞாபித்திருக்கின்றார்.'

என்று இங்ஙனஞ் சிராத்தங்கட்கும், எக்கியங்கட்கும் கொலைசெய்தல் பாவமில்லையென்று அறியாது கூறுகின்றது. மற்றும் இந்திரப்பதவி கிடைத்தற்கும் பிள்ளைகள் பிறத்தற்கும், பெரும்பொருளடைவதற்கும் பசுக்களை கொல்லுகின்ற கொடிய யாகங்களும் குதிரைகளைக் கொல்லும் அசுவமேத யாகங்களும், மனிதர்களை கொலையிடும் நரபலியாகங்களும் புரிந்திடலாமென்று போலிப் பார்ப்பனர்கள் நூல்கள் விரிவாய்க் கூறுகின்றன.

இவைகள் ஆழத்தினையும் நடு நிலையையும் நோக்குவாம். எமக்குச் சேய்கள் பிறத்தற்காக உதவியற்ற ஏனைய உயிர்களைக் கொல்லுதல்தான் சிறந்த அறமோ? எமக்குப்பெரும்பொருளும், பெரும் பதவிகளும் கிடைத்தற்காக வன்னெஞ்சங்கொண்டு பிற உயிர்களின் அருமையான இரத்தத்தைச் சிந்துதல்தான் சிறப்புடைத்தோ? எமக்குச் செல்வம் வருதல் வேண்டுமெனின் பிறரைக் கொல்லலாம் போலும் நன்று நன்று! இந்நூலின் நடுநிலைமைதான் என்னோ? இஃது தாங்கள் மட்டும் பயன்பெற எல்லாமக்கள் பேரால் ஒரு சில பார்ப்பனர்கள் இது போழ்து சுய ஆட்சி கேட்பதை ஒத்திருக்கின்றது; இப்பார்ப்பனர்கள் இந்நூலைப் போற்றுகின்றவர்களன்றோ? ஆகலான் இம்மனுதரும மறநூலின் போலி மொழிகளை ஒரு மூலையிற்கொட்டிவிட்டு அறநூல்கள் யாது கூறுகின்றன என்பதைப் பார்ப்பாம்.

சனக சங்கர கண்ணப்பர்.

மலர் 2 இதழ் 9 பக் 133 - 134
மலர் 2 இதழ் 10 பக் 147 - 149
மலர் 2 இதழ் 11 பக் 158 - 160

இக்கட்டுரை தொடரும் என அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

# மானிட சரீரமும் அதன் வாழ்க்கையும்

**மா**னிட சரீரமானது தோலோடு கூடிய மாமிசத்தாலும், எலும்பாலும் நரம்பாலுமமைக்கப்பெற்ற ஒன்பது துவாரங் களுடைய ஓர் கூடு. இந்தக் கூட்டுக்குள் ஆத்மாவெனும் உயிர் நுழைந்தால் மட்டும் இவ்வுடலால் உலகத்திற்கு ஏதேனும் பிரயோசனப்படக்கூடிய தாயிருக்கும். அன்றேல் நாய், நரி, பேய், கழுகுகளுக்கே பயன்படக் கூடியதாயிருக்கும்.

**இதன் உற்பத்தியாவது:** ஓர் புருஷனும், ஓர் பெண்ணுமாக இருவருங் கூடிக்கலந்தபோது ஆணினிடத்திலுண்டாகும் சுக்கிலமானது பெண்ணினிடத் திலுண்டாகும் சுரோனிதத்துடன் கலந்து பனித்துளியினும் பாதித்துளியளவாகிப் பெண்ணின் கருப்பையிற்குள் நுழைந்து 300 நாட்கள் வரை அக்கருப்பையிற்குள்ளே வெந்துழன்று கால், கை, உடல், தலை, கண், மூக்கு, காது, வாய் முதலிய உறுப்புக்களமைக்கப்பெற்று இப்பூமியில் விழுகிறது. விழுந்த உடனே, "ஐயோ! ஏன் இப்பாவ பூமியில் வந்து விழுந்தேன்" எனக் கோவென்றழத் தொடங்குகின்றது.

அச்சமயம் பிராணாவஸ்தையடைந்து கொண்டிருக்குந் தாயானவள் குழந்தையின் அழுகுரலைக் கேட்டு மனஞ்சகியாது தன் வருத்தத்தையும் பாராது அக்குழந்தையை எடுத்து மார்போடணைத்துப் பாலூட்டித் தாலாட்டிப் பாதுகாத்து வருகிறாள். குழவியும் நாளுக்குநாள் கைகால் திடப்பட்டு பூமியில் தாவியும், பிறண்டுருண்டு காலையுங்கையையுமசைத்துக் கொண்டு சிறிது சிறிதாகத் தவிழவும், அமரவும், அதன்பின்

எழுந்திருந்து நடக்கவும், துள்ளிக் குதித்து ஓடவும், ஆடவும், தன் மழலை வார்த்தைகளால் யாவரையும் அகமகிழச் செய்வதுமாகவிருக்கும்.

இவைகளைக் கண்ட தாயும் தந்தையும் ஆனந்தப் பரவச மடைந்து அக்குழந்தையைப் பட்டு வஸ்திரங்களாலும், பலவித ஆபரணங்களாலும் அலங்கரித்து ஆதரித்து வருகிறார்கள். 5 வருஷங் கிட்டியதும் பாலகனைப் பள்ளிக்கனுப்பி கல்வி பயிற்றுவித்து 16 வயதடைந்ததும் பாலகனென்ற பெயரைப் போக்கி வாலிபனென்ற பெயரைச் சூட்டுகிறார்கள்.

இவ்வாலிபனுக்கு முறுக்கு மீசையும் முகவசீகரமு முண்டாகவே தாயுந் தந்தையும் ஓர் பெண்ணைத் தேடி விவாக காரியங்களை மிக விமரிசையாய் நிறைவேற்றி வைக்கிறார்கள். இப்போது குடும்ப பாரத்தைத் தானே தாங்கக்கூடிய நிலைக்கு வந்ததும் தனந்தேட ஆரம்பிக்கிறான். அதுமுதல் உத்தி யோகத்தினாலோ, கைத்தொழிலினாலோ, வியாபாரத்தினாலோ அல்லது *வேறெவ்வித பிரவர்த்தியாலோ நியாயமற்ற வழியாலாவது பணத்தைச் சம்பாதித்துக் குபேரனெனப் பெயரெடுக்கிறான்.

இந்த நிலைக்கு வந்ததும், சாதாரணமாய்ச்சனிவரனும் அன்னவருடன் கூடவிருந்து கூத்தாடுவது சகஜம். அதற்கேற்ப துர்புத்தி மந்திரிகளும் வந்து சேருவார்கள். இப்பேர் வழிகளிலொருவன் நியாயத்தை அநியாயமாகவும் பாவத்தைப் புண்ணியமாகவும் பாவித்து தன் மனம்போன போக்கிலே நடந்து பாவத்துக்குள்ளாகிறான். மாடமாளிகைகளைக் கட்டிக்கொண்டு, கட்டிய பெண்ணிருக்க, காசுக்கொரு வேசையாகப் பல வேசைகளை வைத்துக்கொண்டு மஹோன்னதமாய் ஆடல்பாடலுடன் ஆனந்தசாகரத்திலமிழ்ந்து விடுகிறான்.

மூத்திரமும், மலமுந்தங்கிய பெட்டி, நல்வினை, தீவினை நிறைந்த பொய்யிடம், வாதம், பித்தம், சிலேட்டுமம் என்கிற முப்பிணிகளும் வாசஞ்செய்கின்ற சிறியவூர். நாலுமுழ நீளமும் ஒன்பது துவாரங்களுமுள்ள கிழிந்த துண்டுத்துணி. சோற்றினையூதுந் துருத்தி. உள்ளும் புறமும் சகிக்கக்கூடாத துர்நாற்றத்தையுடைய இவ்வுடலை வாசனைப் பொருந்திய சோப்புக்களாற் சுத்தஞ்செய்து, சந்தனம், சவ்வாது முதலிய

பரிமளங்களைப் பூசிக்கொண்டு, அழுக்கு நாற்றமெடுக்கும் மயிரை வாசனை எண்ணையாலும் புஷ்பங்களாலும் சிங்காரித்துக் கொண்டு கண்டவர் ஆசைகொள்ளும் வண்ணம் இடுப்புக்கு 8 முழ நீளமுள்ள பட்டுக்கரை போட்ட வேஷ்டி, உடலுக்குப் பட்டால் தைக்கப்பட்ட கோட்டு, மேலே போட்டுக்கொள்ள விலையுயர்ந்த ஜரிகை அங்கவஸ்திரம் கற்களாலமைக்கப் பெற்ற மோதிரங்கள் தங்க கடிகாரம் முதலியனவைகளால் தன்னை அலங்கரித்துக்கொண்டு, தன் துர்ப்புத்தி மந்திரிகளோடும் துர்ச்செய்கையையுடைய மங்கையர்களோடும் மோட்டார் கார், குதிரைவண்டி முதலிய அழகிய வாகனங்களொன்றிலேறி உல்லாசமாகச் சல்லாபத்துடன் உலாவித்திரிந்துக்கொண்டு இவ்வுலகில் சதாவுஞ் ஜீவித் திருப்போமென்கிற எண்ணத்துடன் மனோரஞ்தமாய் தன் வாழ்நாட்களைக் கழிக்கின்றான்.

அன்றியும் தன்னைப் போன்ற சரீர உருப்பையுடையவர் களாயும் தான் வந்த வழியே வந்தவர்களாயுமுள்ள தன் சகோதரர்களாகிய ஏனைய ஆன்மாக்களைத் தனக்கு அடிமைகளாக ஏற்படுத்திக்கொண்டு, அன்னவர்களைப் பறையரென்றும், பள்ளரென்றும், புலையரென்றுந் தாழ்வுப்படுத்தி அடி உதைகள் கொடுத்துச்செத்த மிருகங்களை எடுத்துண்ணும்படிக்கு வற்புறுத்தியும், அன்னவர்களைச் சமீபத்தில் நெருங்கிவரக் கூடாதென்றும், தீண்டக் கூடாதென்றும், கல்விகற்கக்கூடாதென்றும், நாகரிகமாக உடுத்தி வெளிக்குவரக் கூடாதென்றும் இன்னமும் பற்பல இம்சைகளையுஞ் செய்து வருகிறான். அந்தோ! என்ன பேதமை?

இவ்வண்ணம் இறுமாப்புடன் வாழ்ந்துவரும் யௌவன புருடன் சிறிது காலஞ் சென்றபின் இளமைகெட்டு, மூப்படைந்து, முள்ளுந்தோலுமாகி அழகுகெட்டு, பற்களுதிர்ந்து, நேந்திரங்கள் மறைந்து, நரையுந்திரையு மதிக்கப்பட வாதநோயும், எந்நேரமும் கோபமும் கொண்டு கையில் ஓர் கோலும் பிடித்துத் தள்ளாடித் தட்டுண்டு, ஒரு முதுகுகூனுடன் வருவதும், போவதுமாகிக் குரங்கினைப் போலக் குந்திக்குந்தி நடந்து, அறிவு கெட்டுச் செவிடு பட்டு இன்னது சொல்லிய தென்றியாமல் எந்நேரமும் பேசித் தூங்குகின்ற சமயத்தில் இருமல் சகிக்கக்கூடாமல்

தொண்டையும் மார்பும் உலர்ந்து வறண்டு, இடுப்பிலுள்ள வஸ்திரம் நழுவச் சுரணையின்றி எல்லோரும் உதவி செய்யப்பெற்று,

மலமும், சலமும் பெருகிக் கால் வழியாகத் தேகமெங்கும் பொருந்தவழிந்து, மனத்தெளிவின்றிக் குளறுபாடு வார்த்தையடைந்து, மனமும் எண்ணமும் அலைந்து நல்ல ஆதரவின்றி ஆடையுமின்றி வருந்திப்பாயும் படுக்கையுமாகப் பேசுகிறதற்கு நாவானது உள்ளிழுத்துக்கொள்ள, கைகளினாலே சாடைகாட்டி, வாயில் வார்க்கும் கஞ்சி பக்கங்களிலொழுகிட பஞ்சபூதங்களும் விடுகின்ற பிராணவாயுவுங் குறைய, மனத்தடுமாற்றமுண்டாகி வருந்துங் காலத்தில் இயம தூதுவர்கள் வந்து உடலென்னும் கூட்டிலடைபட்டிருக்கும் உயிரைப் பிடித்துக் கொண்டேகப், பெண்சாதி பிள்ளைகள் சுற்றத்தார் யாவருங்கூடி உடலென்னம் வெறுங் கட்டையைச் சூழ்ந்திருந்து புலம்பி அழவும், மற்றோர் இத்துர்நாட்டமுடைய தேகத்தை 24 மணிக்குமேல் வைக்கப்படாதென

ஆரவாரத்துடன் கட்டிச் சுருட்டிச் சுடுகாடடைந்து "இவ்வளவு தானோ உன் வாழ்வு" எனச் சொல்லி விறகு அடுக்கித் தீமூட்டி, பிணம் வெந்து விழுந்து முறிந்து கொழுப்பு உருகி சூட்டினால் நரம்புகள் முறுகி திடீரென எழுந்திருக்குஞ் சமயம், தீண்டப்படா ஜாதியனெனச் சொல்லப்படுகின்ற வெட்டியானானவன், அப்பிணத்தை இரும்பு சலாகையால் அடித்து முறித்து நெருப்பில் தள்ளவும் எண்சாண் உடம்பும் ஒருபிடி சாம்பலாகிவிடுகிறது. (சில பிணங்களைக் குழிதோண்டி அக்குழியில் போட்டு, வந்திருந்தவர்களால் ஒவ்வோர் கைபிடி மண் போடவும், கவட்டியான் மண்வெட்டிகொண்டு மண்ணைச் சேர்த்து மண்ணுக்குமண்ணாய் தன் கால்களால் மிதித்து மிதித்து மூடிபோடுகின்றான்.) இதுவே மனிதனின் வாழ்வு.

மாண்டு மடிந்த மஹாப்பிரபுவே! இப்போது உம்மைப்பெற்ற தாய் தந்தையரெங்கே? உடன்பிறந்தாரெங்கே? உன்னோடு நானும் மடிந்து போவேனென்று சொல்லும் மனைவியெங்கே? மக்களெங்கே? உற்றார் உறவினரெங்கே? வீடுவாசல் மாடமாளிகைகளெங்கே? ஜரிகை வேஸ்டிகளெங்கே? துப்பட்டாக்களெங்கே? காலுக்குச் சிலிப்பரெங்கே? கைக்குக்

காப்புகளெங்கே? விரலுக்கு மோதிரங்களெங்கே? வாசனைத் திரவியங்களெங்கே? உல்லாசமாகச் செல்ல மோட்டார்காரெங்கே? குதிரைவாகனமெங்கே? கூலிக்காரர்களெங்கே? வேலைக்காரர் களெங்கே? அடிமைகளெங்கே? பெருமைகளெங்கே? ஜோக் செய்வதெங்கே? சுகமெடுக்கிறதெங்கே? படுக்கப் பஞ்சணை எங்கே? தின்பதற்குத் தின்பண்டங்களெங்கே? கூத்திமார் களெங்கே? கூட்டாளிகளெங்கே?

இப்போது நீவிரிருப்பதெங்கே? எல்லாம் மாயமாய் மறைந்துவிட்டதன்றோ! கைப்பிடி சாம்பலுக்கோ, மண்ணுக்கோயிரையானீர். இனிமேல் யாரை அடிமைகொள்வீர்? யாரைத் தொடாதென்பீர்? யாரைப் பறையனென்பீர்? யாரைப் புலையனென்பீர்? உம்முடைய அதிகாரமெங்கே? ஆரவாரமெங்கே? உத்யோகமெங்கே? கௌரவம் எங்கே? கூட்டுறவு சகாக்களெங்கே? எல்லாம் மாயமாய் பறந்துவிட்டனவன்றோ? இனி எப்பிறவியடைவீரோ அறியோம்.

இதனை வாசிக்கும் கனதனவான்களே! பெரியோர்களே! நம்முடைய வாழ்வும் இவ்விதமே. ஒரு சிறு அளவான சளியைப் போன்ற வஸ்துவானது ஒரு பெண்ணின் வயிற்றிற்குட்புகுந்து சிறிதுசிறிதாக வளர்ந்து மனித உருவெடுத்து இவ்வுலகிற் பிறந்து பல அட்டகாசங்களும் ஆரவாரங்களுஞ் செய்து இறுதியில் எண்சாண் உடம்பும் ஒருபிடி சாம்பலாகவோ அல்லது மண்ணுக்கு மண்ணாகவோ ஆய்விடுகின்றது. இதன் உண்மையை யறிந்திருந்தும் நம்முடைய ஜீவியகாலத்தில் சிறிதேனுமிதை நினைத்து நடக்கிறோமா? மார்க்கண்டேயரைப்போல் என்றும் பதினாறு வயதுடையவர்களாயிருப் போமென்றெண்ணியல்லவோ நடக்கிறோம். காலனோ கள்வனைப்போல் வருவானென்பதைச் சிறிதும் நினைப்பதில்லை. நம்முடைய வாழ்வோ அற்ப வாழ்வு. நம்முடைய நினைவோ கனவுபோலாம் எமதூதுவர்கள் எப்பொழுது வருவார்களென்று கணிக்க இயலாது.

பூனையானது ஒரு வஸ்துவைப்பார்த்துப் பதுங்கிக் கொண்டிருந்து அபக்கென்று பாய்ந்து கௌவிக்கொண்டோடும் வண்ணம், எல்லோரும் சூழ்ந்து பார்த்துக் கொண்டிருக்கும்போதே இயமனும் திடீரென்று வந்து உயிரைப் பிடித்துக் கொண் டேகுவான். தாயின் வயிற்றினிலிருக்கும்போதோ அல்லது

பிறந்த அன்றோ அல்லது பிறந்து ஒரு கிழமைக்குள்ளோ, ஒரு மாதத்திற்குள்ளோ, ஒருவருஷங்களுக்குள்ளோ ஆத்மா நம்மை விட்டகலுமென வறியோம். மேலும், பேசிக்கொண்டிருக்கும் போதோ, நடக்கும்போதோ, இருக்கும் போதோ, சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போதோ, உல்லாசமாக வண்டிகளில் போய்க் கொண்டிருக்கும்போதோ, வேலைசெய்து கொண்டிருக்கும்போதோ, எந்த வேளையோ இயமன் வரும் நேரம். ஒரு நாளைக்கு எத்தனையோ பிறக்கிறது; எத்தனையோ இறக்கிறது.

இச்சம்பவங்களை எல்லாம் நாம் கண்கூடாகப் பார்த்திருந்தும் நமக்கும் இதுவே கதி என்பதைச் சிறிதும் நினைப்பதில்லையே! என்ன ஓர் விந்தை! இந்த அற்ப உடலையும் வாழ்வையும் பெருமையாக எண்ணி நாம் எவ்வளவோ பாவ கருமங்களைச் செய்து பாவிகளாகின்றோம். மானுட உடலை எடுத்த நாம் எல்லோரும் ஓர் தாயின் வயிற்றினின்று பிறந்த மக்களெனப் பாவிக்காது மேலோரென்றும் கீழோரென்றும் பிரிவினை செய்வது கீழ் மக்களை மேலேறவிடாதபடி சதாவும் இம்சித்து வருவது தருமமாகுமா? மேல்குலத்தவர்களென்று சொல்லிக் கொள்ளுபவர்களுக்கும் கீழ்குலத்தவர்களென்று தாழ்த்தப் பட்டவர்களுக்கும் பிறப்பிலும் இறப்பிலுமுள்ள வித்தியாச மென்னவென்பதை அறிவுடைய பெரியோர்களே சற்றாலோசித்துப் பாருங்கள்.

*"எத்தனை நாள் கூடி யெடுத்த சரீரமிவை*
*யத்தனையும் மண்டின்பதல்லவோ வித்தகனார்*
*காலைப் பிடித்து மெள்ளக் கங்குல் பகலற்றிடத்தே*
*மேலைக் குடியிருப்போமே." (பட்டினத்து சுவாமிகள்.)*

புல்லாய்ப் பூண்டாய்ப் புழுவாய், மரமாய், மிருகமாய்ப், பறவையாய்ப், பாம்பாய்க், கல்லாய், மனிதராய் என்றபடி) எத்தனையோ ஜென்மங்களெடுத்தபின்னர் மனிதப் பிறப்பையெடுக்கப்பெற்றும் அம்மனிதப் பிறப்பை மண்ணுக்கு வீணாகக் கொடுக்காமல் அப்பிறவிலேயே சிவபெருமான் திருவடித் தியானஞ்செய்து மோட்சவீட்டை அடைதலே தகுதியாம்.

மேலும்,

*"இருப்பதுபொய் போவதுமெய் யென்றெண்ணி நெஞ்சே*
*யொருத்தருக்குந் தீங்கினையுன்னாதே பருத்த தொந்தி*

*நம்மதென்று நாமிருக்க நாய் நரிகள் பேய்க் கழுகு*
*தம்மதென்று தாமிருக்குந்தான். (பட்டினத்து சுவாமிகள்)*

மனமே உலகிலிருப்பதோ பொய், இறப்பதோ மெய் என்று ஆலோசித்து ஒருவருக்காயினும் எவ்விதமான கெடுதியுஞ் செய்ய நினையாதே. பெருத்த வயிறானது நம்முடையதென்று நாமிருக்க, நாயும், நரியும், பேயும், கழுகும், தம்முடையதென்று தாமிருக்கும்.

*ஆகையான், பெரியோர்களே!*
*"இன்றைக்கிருப்பாரை நாளைக்கிருப்பாரென்*
*றெண்ணவுந் திடமில்லையே"*

என்ற தாயுமானவ சுவாமிகளின் திருவாக்கைச் சிரமேற் கொண்டு நம் வாழ்நாளைக் குறித்துச்சிந்தித்து ஒவ்வொரு நிமிஷமும் இயமன்வரும் நேரமென்றெண்ணி சதாவுங் கடவுளைத் தியானித்து இவ்வுலகில் ஒருவருக்கும் தீங்கு செய்யாது தங்களாலியன்ற தருமங்களைச் செய்து தங்களைப்போன்ற சாயலையுடைய மக்களைத் தங்களைப்போலவே தாயின் வயிற்றில் 300 நாட்களிருந்து பிறந்த பிள்ளைகளைக் கீழ்மக்களென்று அடிமைகளாக்கி மிக்க கேவலநிலையில் வைத்து இம்சித்து வராமல் அன்னவர்களைத், தங்களோடுங்கூடப் பிறந்த பிறவிகளெனப் பாவித்து அன்னவர்கள் முன்னேறும் வழியைக் காட்டி, நன்மார்க்கப் போதனைகளைப்போதித்து நன்மைசெய்துவரின் இம்மைப்போகங்களையும் மறுமைப் பலன்களையும் பெற்று சுகித்திருப்பீர்களென்பதற்கையமில்லை.

*"ஆவியொடு காய மழிந்தாலு மேதினியிற்*
*பாவியென்று நாமம் படையாதே மேவியசீர்*
*வித்தாரமுங் கடம்பும் வேண்டா மடநெஞ்சே*
*செத்தாரைப்போல திரி" (பட்டினத்து சுவாமிகள்)*

அறியாமை வாய்த்த மனமே! உயிருடங்கூடிய சரீரமானது அழிந்து போனாலும், உலகத்திலே பாவியென்ற பெயரினைப் படைக்காதே, பொருந்திய சிறப்பினைவாய்ந்த விஸ்தார வார்த்தையும் உலகவுறவும் உனக்கு வேண்டாம். மாண்டவரைப்போலத் திரிவாயாக. ஓம் தத் ஸத்.

மலர் 2 இதழ் 2 பக் 17 - 21

## ஆதி திராவிட சமூகத்தினரின் முன்னேற்றம்

**ந**மது பாரத நாட்டின் பொருளாதாய அபிவிருத்திக்கும் சரி, மற்றெவ்வித அபிவிருத்திக்கும் சரி அஸ்திவாரமாயுள்ளவர்கள் ஆதிதிராவிடர்களே. இவர்களுடைய முன்னேற்றத்தினால் மற்றெல்லா வகுப்பினரும் முன்னேறுவார்கள் என்பதற்கைய மில்லை. ஆகவே, முன்னேற்றமடையவெண்ணும் ஒவ்வொரு வகுப்பாரும் சுயநலங் கருதியாவது இவ்வகுப்பாரின் முன்னேற்றத்தில் கவனம் செலுத்தி உழைக்க வேண்டும்.

ஒரு சமூகம் முன்னேறுவது என்றால் ஐரோப்பிய நாகரிகத்தைப் பெறுவதல்ல. சட்டையும், தொப்பியும் போட்டு வெளிக்கிளம்பு வதால் ஜனசமுகம் முன்னேறிவிட்டது என்று சொல்லிவிட முடியாது. உண்மையாகவே முன்னேறவேண்டுமானால், கல்வியிலும், பொருளிலும் விருத்தியடையவேண்டும். கல்விச் செல்வம் எல்லாவிதச் செல்வத்திலும் மேன்மையானது என்பதை மறுக்கமுடியாது. கல்விச் செல்வத்தினால் எல்லாவித நன்மையும் பெறலாம். கல்விச் செல்வம் ஒரு சமூகத்தினருள் பரவவேண்டுமானால், அச்சமூகத்தினருள் ஏராளமான முயற்சியும், ஒத்துழைப்பும் அவசியம். பொருள் ஈட்ட இக்காலத்தில் ஒரே வழியுண்டு. அதாவது வியாபாரம், கைத் தொழில் முதலியவற்றில் தலையிட வேண்டும். கைத்தொழிலும், வியாபாரமும் ஜாதிக்கிழிவென்று நினைத்து உத்தியோகங் களையே பெரிதாகவெண்ணிக் காலங்கழிக்கும் உயர்ந்த வகுப்பார்

என்று பெயர் வைத்துக்கொண்டு சாப்பாட்டிற்குக் கஷ்டப்படும் மற்ற வகுப்பினரைக் கண்டு நீங்கள் மயங்க வேண்டாம்.

"மேழிச்செல்வம் கோழைபடாது" என்பது நமது மூதாதை வாக்கு. ஆகவே, கூடியவரையில் விவசாயத்தைக் கைவிடலாகாது. நமது தாய்நாட்டில் விவசாயத்திற்கு போதிய வசதிகள் இருந்து வருகிறது. உலகத்தில் ஜனத்தொகை வெகு வேகமாய் ஏறிக் கொண்டுவருங் காரணத்தால் ஆகாரதானியம் முதலியன பயிர் செய்யும் தொழிலாளர்களுக்கு ஏற்படக்கூடிய மதிப்பும், கௌரவமும் வேறு எந்த வகுப்பாருக்குங் கிடைக்காது.

விவசாயத் தொழிலைச் செய்தபோதிலும், பிள்ளைகளுக்கும் சரி, மற்ற பெரியவர்களுக்கும் சரி, கல்விகொடுக்க வேண்டுவது மிக்க அவசியம். கட்டாயப்படிப்பாய் ஏற்படுத்தினாலன்றி கல்வி பரவுவது கஷ்டமாகிவிடும். கட்டாய கல்விக்கு பொருள் வேண்டும். மேலும், தொழிலாளர்களின் குழந்தைகள் தொழில் செய்து சம்பாதித்துப் பெற்றோர்களுக்கு உதவிசெய்ய வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். கவர்ன்மெண்டார் கட்டாயக் கல்வியை ஏற்படுத்தும் வரையில் சமூகத்தினர் காத்திருப்பது முடியாத காரியம். கூடியவரையில் ஜனசமூகத்தினரே தங்களுக்காக வேண்டியவற்றைத் தேடிக்கொள்ள வேண்டும்.

சமூகத்தினர் சிறுவர்களுக்குப் படிப்பு கொடுக்க வேண்டியதைப் பற்றி முதலில் கவனிக்க வேண்டும். கட்டாயமாய் ஒவ்வொருவரும் படித்திருக்க வேண்டுமென்றிருப்பதை சமூகக் கட்டுப்பாடாய் ஏற்படுத்திக்கொள்வது சுலபமாக முடியும் என்று எண்ண வேண்டும். தென் இந்தியாவில் நாடார் சமூகத்தினர் இவ்விதத்திய தீர்மானங்கொண்டு வேலைசெய்து கொண்டுவருகிறார்கள். அவர்கள் வெற்றியடைவார்கள் என்பதற்கையமில்லை.

விருத்தியடையவேண்டுமென்று ஒரே நோக்கத்துடன் உண்மையாய் வேலைசெய்யும் எவனையும், எந்தச் சமூகத் தினரையும் ஒருவரும் தடுக்கமுடியாது. இவ்வாறு உண்மையாய் உழைப்பவர்களுக்கு தெய்வம் பக்கபலனாய் நிற்கும் என்பதை மறந்துவிடக்கூடாது. "குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம் மடிதற்றுத் தான் முந்துறும்" என்பது பொய்யாமொழி

திருவள்ளுவர் வாக்கு. வேண்டிய தொகையையும் முதலில் சனசமூகத்தினருள்ளே மகிமைமூலமாய் ஏற்பாடு செய்து கொள்வது நன்மை பயக்கும். இதன்பிறகு மற்றவர்களும் உதவி செய்வார்கள் என்பதற்கையமில்லை.

சாதாரணமாய் வீட்டு விவசாயத்திலும் சரி, வேறு தொழில் களிலும் சரி, தொழிலாளர்களுக்கு முழு வேலையிருக்கும் என்பதற்கிடமில்லை. ஆகவே, ஒவ்வொரு குடும்பங்களிலும், வீட்டுத் தொழிலாக சில சில்லரைத் தொழில்களைச் செய்வார்களானால், நன்மை பயக்கும். எவ்விதமான தொழில்களைச் செய்வது என்பது அவரவர்களுடைய வசதிகளுக்குத் தக்கவாறு செய்துகொள்ள வேண்டும். இவ்விதமான சிறு தொழில்களைச் சிறுவர்களும், சிறுமிகளும் பள்ளிக்கூடங்களில் பழகும்படி செய்வது சுலபமாகும். பிலிப்பைன் தீவிலுள்ள பள்ளிக்கூடங்களில், சுமார் 33 தொழில்கள் வரையில் பயிற்றுவைத்துவருவதாக அறிகிறோம். அவ்வித ஏற்பாட்டை நமது நாட்டிலும் அவ்விதப்பள்ளிக்கூடங்களை ஏற்படுத்த ஜனங்கள்தான் முன்வரவேண்டும்.

எந்த விஷயத்தை எடுத்துக்கொண்டபோதிலும் கவர்ன் மெண்டார் செய்யவேண்டுமென்றும், செய்யவில்லையென்றும் வீண் பேச்சு பேசிக்காலங் கழிப்பதைவிட சில காரியங்களைச் செய்து காட்டி உதவி செய்யவேண்டுமெனக் கேட்டுக்கொண்டால் உதவி எப்பொழுதும் கிடைக்கும் என்பதை மறந்துவிடக்கூடாது. “தன் கையே தனக்குதவி” என்று முயற்சிப்போருக்கு எப்பொழுதும் வெற்றி கிடைக்கும். இதனை நமது சகோதரர் கவனித்து உழைப்பார்களாக.

நடேச அய்யர்,

‘வர்த்தக மித்திரன்’ பத்திராதிபர்.

இதழ் 2 மலர் 2 பக் 21 - 23

## தெய்வமிகழேல்

'அரிதரிது மானிடராதலரிது' என்பது ஆன்றோர் வாக்கு. இத்துணை அருமைவாய்ந்த இம்மானிட ஜெனனமடையப் பெற்றது யாரால் என்பதை நாம் முதலாவதாக கவனித் தலுத்தமம். எல்லாவற்றையும் படைத்தவரும், சர்வ வல்ல வருமாகிய பரமதயாநிதியினருளினாலன்றோ என்பதை சொல்லவும் வேண்டுமா! அவராலன்றி இந்நிலவுலகில் நாமிந்த நிலையை யடைவது கூடாத காரியம். எனவே அவர் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்தவராயிருப்பினும் ஒருகால் வெளிப்பட்டு உயிர்களுக்குக் கிருபை செய்வர். அவர் எவ்வித ஜீவன் களிடத்தும் மிக்க இரக்கமுடையவர். இது

*'கருப்பைக்குண் முட்டைக்கும் கல்லினுட்டேரைக்கும்*
*விருப்புற் றமுதளிக்கும் மெய்யர்'*

என்பதால் அறிவுறுத்தப்படும். நிற்க, பிறவிகளிலே நுழைந்து வினைப் போகங்களை ஊட்டியும், உய்யும் வழிகளைக் காட்டியும், முத்தியிற்கூட்டியும் உயிர்கட்கு அருள்புரிவர் ஆதிநாயகர். ஆ! எல்லா வல்ல இறைவனது மகிமையை எவ்விதமெடுத் தோதுவது? இவ்வியல்புடையவராகிய அந்த பரம தகப்பனுக்குத் தோத்திரஞ் செய்து பலமுறையும் பக்தியோடு வணங்கி நம்மாலியன்ற தொண்டுகளைச் செய்து அவருக்குச் செலுத்த வேண்டிய அன்பை வளர்த்து உலக இன்பங்களிலுள்ள விருப்பத்தைக் கெடுத்து அவரையே துணையென்றுணர வேண்டும்.

மற்றும் கடவுளை நினையாதவர்கள் தங்களுக்குற்ற கவலையோ, அல்லது கஷ்டமோ இவைகளை விடுவித்துச் சந்தோஷ சாகரத்

துளிருக்கவியலாது கிடந்துழல்கின்றமையாவர்க்கும் தெளிவாய்த் தெரிவதொன்றல்லவா? ஆகவே சிலர் சதா சிவா! சிவ!! சங்கரா!!! என மனத்தினுள்ளே சிந்திப்பதோடு பலரறியவும் சொல்லிக் கொள்ளுகிறார்கள். ஆனால் மற்றும் சிலரோ எவ்வேளையும் கடவுளை மனத்துள்ளேயே பிறருடைய புகழ்ச்சியை எதிர்நோக்காது தியானித்துவருகின்றமை கண்கூடாகக் கண்டுள்ளோம்.

இங்ஙனமாக மனிதர் புகழ்ச்சிக்கிடங்கொடாது கடவுளைத் தியானித்து வருமொருவனை 'தெய்வபக்தி' யில்லாதவனெனக் கூறல் பொறுத்தமானதன்று. 'சமுத்திரத்தினாழத்தைக் கண்டு பிடிப்பினும், மனிதனுடைய நெஞ்சினாழத்தைக் கண்டுபிடிப்பதரிதே' என்பது பழமொழி. இது நிற்க, சிலர் மேற்கூறியவாறு சதா பகவானே! பகவானே!! என உண்மையாகவே தெய்வ பக்தி நிறைந்தவர்கள் போன்ற வேடம் பூண்டு அநேகமாக பிரஜைகளை ஏமாற்றி வருகின்றனர். ஐயோ என்னே இவர்களின் மடமை!

இவ்வித குணமுடையவர்கள் கீழான நரகத்தில் கிடந்தழுந்து வார்க ளென்பது சொல்லாமலே நன்கு புலப்படும். அதுவுமன்றி மற்றுஞ் சிலர் தாங்கள் கஷ்டமடையுங் காலங்களில் கடவுளுக்குக் கண்ணில்லை, பாழுந் தெய்வமே, சண்டாள தெய்வமே, என அறியாமையினாற் கடவுளைக் குறைகூறி நிந்திக்கின்றார்கள். ஐயோ இஃதென்ன விந்தை! தான் முன் ஜென்மத்தில் செய்த தீவினையாலோ அல்லது இந்த ஜென்மத்திற் செய்த தீவினை யாலோ அதன் பலனை அனுபவிக்கும் வேளையில் அந்த தயாபரக் கடவுளை நோவதில் யாது பயன்? இது

'தாந்தாமுன் செய்தவினை தாமேயநுபவிப்பார்
பூந்தாமரைபோன் பொறிவழியே _ வேந்தே
ஒறுத்தாரை யென்செயலா மூரெல்லாமொன்றா
வெறுத்தாலும் போமோ விதி!'

என நமது ஞானத் தாயாகிய ஔவைப் பிராட்டியார் கூறியவாற்றான் தெரியக்கிடக்கின்றது. காரியமில்லாது காரணமுண்டாகாது என்றவாறு தாந்தாஞ் செய்த தீவினை களைத் தாந்தாமே கட்டாயமாக அனுபவித்தே தீரவேண்டும். அங்ஙனமின்றி தான் முன்னர் செய்த தீவினைகளைத் தற்போது அனுபவிக்காது தப்பித்துக்கொள்ள வழிதேடினால்

அது முடிகிற விஷயமா? அஃது ஒருபோதும் இயலாது. அல்லது தன் மனங்கொண்டவாறு கடவுளைத் தூஷித்தாலும் கொடுஞ்சொற்கள் பேசினாலும் அவர் பயந்துகொள்ளுவாரா? அற்றன்று. அப்படியானால் வீணாக அந்த தயாபரநிதியாகிய கடவுளை நிந்திப்பதினால் நாமடையும் பயன்தானென்னை? இதற்குதாரணம் 'இரணியன்' சரிதை வாசித்த கனவான்களுக்கு நன்கு புலப்படுமென்பது எனது துணிபு. எனினும், 'அன்றெழுதினவன் அழித்தெழுதப்போவதில்லை' என்பதொப்ப நாம் முன்னர் செய்த தீவினையால் தற்போது எதுவரினும் வருகவென அநுபவிக்கவேண்டியது நமது கடமையே.

சிலர் என் தெய்வம் உன் தெய்வம் என ஒருவருக்கொருவர் வாதுகள் புரிந்து தாந்தாம் வழிபடும் தெய்வங்களையே பெருமையாகக் கூறிக்கொண்டு மற்றை தெய்வங்களை வீணாகத் தூஷிக்கின்றனர். இது மிகவும் பிசகெனவே வெகு அழுத்தமாகக் கூறலாம். 'உலகம் பலவிதம்' என்பதற்கிணங்க பலரும் பலவிதமான மதங்களைத் தழுவி அவரவர்கள் மதத்தையே மிக்க புகழ்ந்து கூறுதல் இயல்பே. கடவுள் ஒருவரே. அவருக்கோ இன்னவித நாமரூபமென்று சொல்ல இயலாது. அவ்வாறாயினும் பல மதஸ்தர்களும் பற்பல நாமங்களாலும் ரூபங்களாலும் அவரைப் போற்றித் துதித்து வருகிறார்கள்.

ஆனாலவையெல்லாம் அந்த ஒரே கடவுளுக்கேயன்றி வேறன்று. இவ்விதமாக அப்பகவானை பற்பலவிதமாக கொண்டாடி போற்றித்துதித்து வராவிடின் உலக விவகாரங்கள் நடைபெறாதென்றே சொல்லலாம். ஆகையான் புறமதங்களைத் தூஷிப்பதானது தான் வழிபடும் கடவுளையே தூஷிப்பதாகும். இதை உணர்ந்த ஒவ்வொருவரும் நம்மைச் சிருட்டித்த முழு முதற் கடவுளொருவருண்டே, அவரையே எவ்வேளையுந் தியானிக்க வேண்டும். அஃதன்றி புறமதங்களைச் சிறிதேனுங் குறைகூறவாவது, தூஷிக்கவாவது கூடாது. இதுபற்றியே 'தெய்வமிகழேல்' என ஒளவைப்பிராட்டியார் கூறியுள்ளார்.

*'எப்பொருள் யார்யார்வாய் கேட்பினு மப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்பதறிவு' (திருக்குறள்)*

மலர் 2. இதழ் 3. பக் 34 - 35

# சிருஷ்டி கர்த்தாவின் திருவடி வணக்கமும் அத்திருவடியினின்று முதித்த சூத்திரரும்

சர்வ சிருஷ்டி கர்த்தாவாகிய சர்வேஸ்பரனை துதிசெலுத்த வேண்டுமாயின் இந்துக்கள் திரேக சுத்தியோடும் மனச்சுத்தி யோடும் க்ஷேத்திரங்களுக்குச் சென்று

'நின்பாதாரவிந்தங்களே தஞ்சம்.'
'நின் திருவடிகளைப் போற்றித் துதிக்கின்றேன்.'

எனத் தலைவணங்கி, கைகூப்பி, மிகபயபக்தியுடன் நமஸ காரஞ் செய்வதோடும், சாஷ்டாங்கமாக (கீழேவிழுந்து) மெத்தப் பணிவுடன் பாதநமஸ்காரஞ் செய்கிறார்கள்.

இங்ஙனமே ரோமன் கத்தோலிக்கிருஸ்தவர்களும் அன்னவர்கள் வழிபடும் தேவசொருபங்களின் பாதங்களைத்தொட்டு நமஸ்கரிப்பதையும், பாதங்களை சுத்தி செய்கிறதையும் நாம் கண்கூடாகக் கண்டுவருகின்றோம்.

அங்ஙனமே புத்தசமயத்தவர்களும் நமஸ்கரிக்கின்றார்கள். நிற்க முனிவர்களுக்கும் தபசிகளுக்கும் அதேமரியாதையைச் செலுத்துகின்றார்கள்.

புத்த சமயக்குருக்களை, புத்த சமயத்தோர், தங்கள் கிருகங் களுக்கழைப்பித்தால் அக்குருக்களின் பாதங்களை அழைக்கிற வர்களே தங்கள் கைகளால் நீர்கொண்டு கழுவி சுத்தி செய்து, பாதநமஸ்காரஞ் செய்து வீட்டிற்குள்ளழைக் கிறார்கள்.

அக்குருக்கள்மார்களுக்கு அன்னம்படைத்து பாதநமஸ்காரஞ் செய்கிறார்கள். இஃது இவ்விலங்கையில் நடந்து வருகிறதை நம் கண்கூடாகக் கண்டும் வருகின்றோம்.

ஆகையால் கடவுளை பற்பலவிதமாகப் போற்றித் துதித்து வணங்கினாலும், முழுசொருபத்தையுங்கண்டு நின்று வணங்கு வதைவிட பணிந்து பாதநமஸ்காரஞ்செய்வதே சிறந்ததென விளங்குகின்றதன்றோ? அவ்வித சிறந்தவணக்கமே கடவுளின் கருணையை இலகுவாய்ப்பெற ஏதுவாகின்றது.

ஆதலான், கடவுளின் திருவடிகளுக்கு அவ்வளவு மகத்துவமும், மரியாதையும், மேன்மையுமுண்டாயிருக்க, (மநுதர்ம சாஸ்திரத் தின்படி,) அத்திருவடிகளினின்று முற்பதி யான சூத்திரர்களை ஏன் கேவலமாக மதிக்க வேண்டும்? அதினும் ஏன் ஆதிதிராவிடர் களை தீண்டாத ஜாதியாரென அவமதிக்க வேண்டும்? சூத்திரர்கள் கடவுளின் பாதங்களினின்று முற்பத்தியானவர்களென்றால் அக்கடவுளின் பாதங்களுக்கு கிடைக்கும் மரியாதை, அப்பா தங்களினின்று முற்பத்தியான சூத்திரர்களுக்கும் உரித்தன்றோ? அங்ஙனமன்றேல் சூத்திரர்களை அவமதிக்கும் அவமானம் அக்கடவுளின் பாதங்களை அவமதித்ததாகாதா?

ஆகையான் மேல் ஜாதியாரென சொல்லிக் கொள்ளுபவர்கள் இதற்கென்ன விடையளிப்பார்கள்?

மலர் 2 இதழ் 6 பக் 84 - 86

## திவிதெ எற் இம்பெரா (Divide et Impera)

திவிதெ எற் இம்பெரா என்ற வாக்கியம் லத்தீன் பாஷையின் முதுமொழிகளிலொன்று. பிரிவினை செய்து அரசாளென்பதே இஃதினர்த்தம். ஒரு தேயத்தினரையல்லது கூட்டத்தினரை எளிதாய் ஒருவர் வசப்படுத்தி தமக்கடங்கி நடந்து வரவேண்டு மென்று விரும்புவரேல் அவர்களுக்குள் அந்தரங்கோபாயமாய் பிரிவுகளை யுண்டுபண்ணிவிட வேண்டு மென்பதே பிரஸ்தாப பண் மொழியின் போதகம்.

ஐரோப்பாக் கண்டமென்ற மேனாடுகளில் நாகரீகமென்ற ஜோதி யாதித்தன் உதயமாகிறதற்கு அநேக நூற்றாண்டுகளுக்கு முன் சீருஞ்செல்வமும் க்ஷேமமும் நிறைந்து, சோதிட வைத்திய ரசாயன கணித முதலிய அனேக சாஸ்திரங்களில் தேர்ந்து, ஒப்புவமையற்றவிதமாய் நாகரீகத்தின் மகோன்னத சிகரத்தில் வீற்றிருந்து, தன தரசாட்சியை கிழக்கே சுமாத்ரா முதலிய துவீபங்கள் வரையும் மேற்கே மடகாஸ்கார் தீவுவரையும் ஸ்தாபித்து, கல்வி கேள்விகளில் சிறந்து கலாபாண்டித்யம் பெற்ற பல்லாயிரவ மேதையரை ஈன்றெடுத்து தேசோமயமாய் நமதன்னையாகிய பாரதமாதா பிரகாசித்தாளென்பது மறுக்கப்படா உண்மையே, நம்மிதநுதாபமற்ற சரித்திராசிரியர்கள் முதலாய் எதிர்பேசா மௌனத்துடன் இக்கூற்றை மெய்யென் றெடுத்துக் கொள்ளுகின்றனர்.

வைத்தியம், சோதிடம், கணிதம், ரசாயனம் முதலிய சாஸ்திரங்களை மேனாட்டினர் நம் பரத கண்டத்தினின்று

கவர்ந்து சென்றது போல பிரஸ்தாப முதுமொழியையுந் நம் தேசத்தில் கற்றுக்கொண்டு லத்தீன் பாஷையில் மொழி பெயர்த்துக் கொண்டனர். இம்முது மொழியினின்றே ஜாதி வித்தியாசம் ஜெனித்தது. மேல்ஜாதியாரென்று தங்களைச் சொல்லிக் கொள்கிற விப்பிரர் முதலானோர் பகர்வதற்கரிய பன்னூற்றவ தீங்குகளை விளைவித்து பாரதமாதாவின் புத்திரர்களை யதோகதியாக்கின. ஜாதிவித்தியாசத்தை யபிவிர்த்தியாக்கினர்.

மனுவென்பவர் பிரம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்று நான்கு வருணங்களாக வகுத்தினரென்று சொல்லிக்கொண்டு நான்கை நானூற்றுவ ஜாதிகளாக பிரித்து போட்டனர் ஏன்? திவிதெ ஏற் இம்பெரா வென்ற முதுமொழிப்படி அங்ஙனம் பிரிவுகளை யேற்படுத்தினால் தான், அக்கொடிய வேற்றுமையை அன்னோர்மத்தியிலியங்கச் செய்தால்தான், தாங்கள் நினைத்தகாரியங்கள் அனுகூலமாகும், ஒற்றுமையின்மையின் ஜேஷ்ட புதல்வனாகிய வல்லபமின்மையவர்கள் மத்தியிலியங்கிக் கொண்டிருக்கும், தமக்கவர்களடிமைகளைப் போல கீழடங்கி நடப்பார்களென்று, துரதிருஷ்டியற்ற அம்மந்த மதியினர் கருதினர்.

இந்த அமானுஷ்ய துஷ்ட வெறுக்கப்பாலதாகிய ஜாதி வித்தியாசமென்ற இயக்கத்தினால் பரதகண்டதிற்கு காலா வட்டத்தில் வரும் கேடுகளைப் பற்றி சிறிதேனும் கவனித்திலர். அந்தோ! இந்த சபிக்கப்பட்ட ஜாதி வித்தியாசத்தினால் நேர்ந்த துன்ப துயர்களையும், கஷ்ட நஷ்டங்களையும், பரத கண்டம் விம்மி தேம்பி பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கிறதையும் பற்றி சிந்திக்குங்கால் பாரதமாதாவின் உண்மையான புதல்வனின் ஹிர்தயகமலம் கஸ்திபெருக்கத்தால் வெடியாமலிக்குமோ?

உண்மையான தேச பக்தர்கள் கண்ணீருக்காமலிரார், கபோதி கதிரவனின் ஜோதியையறிவனோ? அப்பரிசே விசாலிய புத்தி தீக்ஷண்யமற்ற சுயநலப்பிரியரான அறிவிலிகளுக்கு ஜாதி வித்தியாசத்தினாலெய்தி அணைகடந்த தீமைகளைப் பற்றி யாராய்ந்துணரும் ஞானம் கிஞ்சிற்றேனுமிராதென்று சொல்லவும் வேண்டுமோ? பலவளங்களையும் கொண்ட இப்பரத கண்டத்தில் உத்தரதக்ஷண துருவ தீரங்களிலும், சீதள கண்டங் களிலும், மத்திய ரேகையையடுத்த உஷ்ணப் பிரதேசங்களிலுமுள்ள

மரஞ்செடி முதலிய தாவரவர்க்கங்களை யாங்காங்கு திருஷ்டிக் கலாம், கடல், மலை, நாடு படுந்திரவியங்களை யதேஷ்டமாய் தன் கர்ப்பத்தி லடக்கிக் கொண்டிருக்கின்றாள் நம் பாரத மாதா. இவ்வுலகத்தி னெண்டிசாமுகமாய் நமது நேத்திரங்களைத் திருப்பி திருஷ்டித்தாலும் நம் பாரத கண்டத்தை நிகர்த்த சகல வளங்களு மொருங்கே அமையப்பெற்ற ஒரு தேசத்தை காண்டலரிது.

புஜபல பராக்கிரமமிகுந்த ஜனங்களில் மிகுந்த தொகையினரைக் கொண்ட இத்தேசம், மேனாட்டினரை நிகர்த்து இதர தேசங்களைப் பிடித்து அரசாளும் வல்லபமிகுந்த ஏகாதிபத்ய ராஜ்ஜியமாய் உருவகமடைய தடையாய் நின்றது ஜாதி வித்தியாசமே! விஸ்தீரணத்திலும் ஜனத் தொகையிலும் பன்மடங்குகுறைந்த மேனாட்டினரால் அரசாளப்படுகிறதற்கு காரணம் ஜாதி வித்தியாசமே. சீருஞ் செல்வமும் குன்றிப் போக பாரதமாதாவின் புத்திரர்கள் நல்குரவால் நலிவுற்று பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கிறதற்கு காரணம் ஜாதிவித்தியாசமே, அன்னிய தீவு தேசாந்திரங்களிலுள்ள தோட்டங்களில் அடிமைகளைப் போல் நடத்தப்பட்டு அடிமிதிகளுக்காளாகி பட்டினி பசியால் லக்ஷாலக்ஷங் தொகையினரான தன் மக்கள் துன்புறுவதைக்கண்டு பாரதமாதா புலம்பி பிரலாபிக்கிறதற்கு காரணம் ஜாதிவித்தியாசமே.

தற்பொழுது ஒத்துழையாமை, தொழில் நிறுத்தமுதலிய இயக்கங்கள் நிகழ்வதற்கும் காரணம் ஜாதி வித்தியாசமே. ஏனோவெனில் ஜாதிவித்தியாசத்தினால் சூத்திரரென்றும் பஞ்சமரென்றும் தீண்டாஜாதியினரென்றும் ஒதுக்கி வைக்கப்பட்ட பிரஜைகளில் வீரதீர புஜபல பராக்கிரமமுள்ளவர்கள் அநேக லக்ஷக்கணக்காய் எக்காலத்திலுமிருந்தே வருகின்றன ரென்பதை மறுப்பாரெவர்? க்ஷத்திரியரே யுத்தத்துக்குரியவரென பஞ்சமரை தங்களுடைய மூடத்தனத்தால் ஒதுக்கினார்.

அவர்களுக்கு யுத்தாப்பியாசங் கற்றுக்கொடுத்தால் தங்களை மதித்து சங்கைப் பண்ணார் என்று கருதினரோ? ஓ மூடத்தனமே! எத்தன்மைய பேராபத்தை பரதகண்டத்தின் மேல் விழும்படி செய்தாய், பரஸ்பர அன்பே அன்னியோன்னிய சங்கைக்கு மூலாதார மென்பதை நீயறியாமற்போனதென்னோ?

நின் மூடத்தினத்தினாலுண்டான கேடு எஞ்ஞான்றும் எம் மத்தியிலிராதென்பதே எமது நம்பிக்கை. டேரையஸ், செமிராமிஸ் மஹா அலெக்சாந்தர் முதலிய வேற்றரசர்களும், ஆப்கானிய மொகலாய மன்னர்களும் நந்தேயத்தின் மீது படையெடுத்து வந்து ஜெயசீலராயாகிறதற்கு காரணம் ஜாதி வித்தியாசமே.

ஈற்றில் நமது காருண்ய பிரிட்டிஷார் ஜாதி வித்தியாசத்தால் நலிந்து மெலிந்து இருந்த நம் தேயத்தை எளிதாய் பிடித்தரசாண்ட போதிலும் ஜாதி வித்தியாசமென்ற பைசாசத்தை யதங்செய்யு முபகரணமாக பிரிட்டிஷ் ராசாங்கத்தை சரவஞ்ஞத்வர் தெரிந்து கொண்டதைப் பற்றி யாம் ஆனந்திப் போமாக. அன்னோர் நம்மை நாமே அரசாளும் சுயராஜ்ய சுதந்தரம் பூரணமாயளிக்கப்பட வேண்டுமானால் சாதி வித்தியாசத்தை முற்றுமகற்றி ஒற்றுமை, சமத்வம், சகோதரத்வம் முதலிய சுகுணாலட்சணங்கள் திரிகரணசுத்தியாய் இந்திய பிரசைகளுக்குள் இயங்க வேண்டுமென்றனர்.

அதுவரையில் புதிய அரசியல் சீர்திருத்தம் குறைவுற்றதா யிருக்கும். இஃதை நன்குணர்ந்த மேதாவிகள் சாதிவித்தியா சத்தை நீக்கத்தக்க சாதனங்களையனுட்டிக்கத் தொடங்கி விட்டனர் சமபந்தி போசனம் செய்து முனிசிபல், லோக்கல் போட்சட்ட சங்கங்களுக்கு பஞ்சமர் என்று சொல்லப் பட்டவர்களை யங்கத்தினராகத் தேர்ந்தெடுத்தனர். புதிய சட்ட நிரூபண சங்கத்திலும் பஞ்சமர் அங்கத்தினராவர். ஆதலின் இன்னும் சில வருடங்களில் பஞ்சமர் தீண்டாசாதியினர் என்ற வேற்றுமை மறைந்துவிடும். பாரதமாதாவின் புத்திரர்கள் அன்பும் ஒற்றுமையுனிறைந்தவர்களாய் சீருஞ் செல்வமும் பெற்று கைத்தொழில்களிலும், வணிகத்திலும் கல்வியிலும் வல்லபத்திலும் ஞானத்திலும் தேர்ச்சிபெற்று ஏனைய தேசத்தினர் பிரமிக்கும் படியான மிகோன்னத பதவியில் பிரகாசிக்குங்கால மதிகதூரத் திலில்லை யென்பது சர்வநிச்சயமே.

தேவதத்தன்

மலர் 2 இதழ் 9 பக் 130 - 132

## உண்மையின் உயர்வும் பொய்யின் இழிவும்

இவ்வுலகில் பிறந்த மனிதர்களுக்குச் சகவாச தோஷத்தால் இயல்பாயுண்டாகும் தீய குணங்கள் பலவற்றுள்ளும் பொய் என்பது முதலாவதாகும். பொய் என்பது எக்காரணத்தைக் கொண்டேனும் உள்ளதை மறைத்து இல்லாததைச் சொல்லுவதாகும். அவ்விதமின்றி உள்ளதையுள்ளவாறு சிறிதேனும் மறைக்காது கூறுவதே உண்மை எனப்படும். ஒருவன் பொய் பேசுவதால் இழிவும் உண்மை பேசுவதால் உயர்வும் அடைவான். பொய் என்பது பலவகையிற் கூறப்படும்.

அவை உண்மையிலுள்ள ஒன்றை யதனளவுக்கு மீறி குறைத்து அல்லது அதிகப் படுத்திக் கூறுதலும், உள்ளதை முற்றும் மறைத்துக் கூறுதலும் இல்லாததையுண்டென்று கூறுதலும், ஒன்றை மறைத்து மற்றொன்றாகக் கூறுதலும் இன்னும் பலவகையாகும். இவ்விதம் நாம் பொய் கூறுவதால் ஒருமுறைக்குப் பின்னர் நம்மிடத்துப் பிறருக்கு நம்பிக்கையில்லாமற் போவதும் அதனால் நமக்குப் பல துன்பங்கள் உண்டாகவும் காரணமாகிறது. சில சமயங்களில் நாம் கூறும் பொய் பிறருக்குத் தெரியாமற் போவதால் நமக்குப் பிறரிடத்தில் இழிவுண்டாகாமலிருக்கலாம்.

ஆயினும் நாம் கூறிய பொய்க்கு நம்மனச்சாக்ஷி என்றும் நம்மை வருத்தி நிற்கும். நம்மனச்சாக்ஷிக்குத் தெரியாது நாம் நினைப்பதும் சொல்லுவதும் செய்வதும் ஒன்றுமில்லை யாதலின், நாம் உண்மையை மறைத்துக் கூறுவதால் மனத்திற்குச் சமாதான

மின்றி சதா குழப்பதையும் திகிலையும், வருத்தத்தையும் உண்டாக்கும். இக்கருத்தையே

'தன்னெஞ்சறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச் சுடும்.'

என்னும் குறட்பா வலியுறுத்துகிறது. இவ்விதம் பல தீமை களையுண்டாக்குந் தகைமையினாலேயே யன்றோ ஆன்றோர் மனிதர்கள் செய்யத்தகாத பஞ்சமகாபாதங்களுள் இதையு மொன்றாகக்கூட்டி 'காதல், கவறாடல் கள்ளுண்டல் பொய்மொழிதல் ஈதல் மறுத்தல் இவைகண்டாய்' எனக் கூறியுள்ளார்! பின்னும் உலகில் நடைபெறும் கொடுஞ் செயல்கள் பலவற்றிற்கும் பொய் சொல்லுதலென்பது துணைக் கருவியாகும். பொய் சொல்லுவதாலேயே பிறருக்கு நம்மேல் துவேஷமுண்டாகிறது.

பொய் பேசித் துன்புற்றாருலகில் அநேகருளர். ஒவ்வொருவரும் தத்தம் அனுபவவாயிலாகவும் அறிந்திருக்கக்கூடும். இத்தகைய விஷயங்களை யுய்த்துணர்ந்தே ஆன்றோர் 'உண்மையே பேசு', 'சத்தியம் வத' வாய்மைகடைப்பிடி' 'உள்ளதை மறைத்து இல்லதைச் சொல்லேல்' எனப் பல்காலும் வற்புறுத்திப் பகர்ந்திருக்கின்றனர். இவை சாமானிய வாக்கியங்களல்ல. இவற்றில் எவ்வளவோ ஆழ்ந்த கருத்துகடங்கிய பொருள்கள் மலிந்து பதிந்து கிடக்கின்றன. ஆதலின் என்றும் பொய்பேசாது உண்மையையே பேசுதல் வேண்டும். உண்மை பேசுவதால் நமது மனச்சாக்ஷிக்குத் திருப்தியும், நம்மீது அனைவருக்கும் சந்தோஷமும் ஏற்படுவதுமன்றி புகழும் புண்ணியமு முண்டாகும்.

உண்மையென்றும் தன்னைக் கடைப்பிடித்தாரையுயர்த்தி நிற்கும். உண்மைக்கு ஒருபோதும் அழிவில்லை. 'ஸத்யாத் நாஸ்தி பரோதர்ம' என்றதால் உண்மையைவிட வேறு முக்கிய அறங்கள் இல்லையென்பதும் உண்மையே எல்லா தர்மங்களுக்கும் மேலானதென்பதும் பெறப்படுதல் காண்க. 'உண்மையே வெல்லும்', 'சத்தியமேவ ஜயதே' என்பன கவனிக்கத் தக்கவை. உண்மையுடையோனுக்கு தைர்யமிருக்கும்.

உண்மையில்லா தான் தன் பொய் எங்கு வெளிவந்து விடுகிறதோவென்று சதாதிகிலுடன் தைர்யத்தையிழந்து

விடுகிறான். இவ்விதமிருக்க அநேகர் பரிகாசத்திற்கெனவும் விளையாட்டுக்கெனவும் பொய் பேசத் துணிகின்றனர். விளை யாட்டே வினையாய் முடிந்ததென்றபடி விளையாட்டுக்குப் பொய்பேசி துன்புற்றார் அநேகர். இதற்குப் புலி வருகிறதென்று விளையாட்டுக்குக் கூறி பின்னால் அபாயத்திற்குள்ளான இடைப்பையன் கதையைச் சான்று கூறலாம். சிலர் தாம் கூறுவது உண்மையேயாயினும் அதைக் கூறும் தந்திரத்தால் பொய்யாக்கிவிடுகிறார்கள்.

அதாவது தன்முன் ஒரு திருடன் ஓடிவந்து தன் தலைக்கு மேலிருந்த அட்டாலியிலேறி ஒளிந்து கொண்டதை ஒருவன் பார்த்துக் கொண்டிருக்கிறான். பின்னால் திருடனைத் தேடிக் கொண்டு வந்தவர்கள் இவனை விளித்து நீ இங்கு வந்த திருடனைக் கண்டாயா என்று கேட்டதற்கு 'இதோ என் தலைமேலிருக்கிறான்' என்று சொல்ல, வந்தவர்கள் இவன் பரிகாசம் செய்கிறானென்று சென்றுவிட்டனர். இங்கு அம்மனிதன் கூறியது உண்மையேயாயிலும் கூறிய தந்திரத் தோற்றத்தால் பொய்யாக்கிவிட்டான். இவ்விதம் பேசுவது உண்மை யென்பதற்குச் சிறிதும் அடுக்காது. நிற்க.

நாம் பொய்பேசித் தீரவேண்டிய சந்தர்ப்பங்களும் சில வாய்ப்பதுண்டு. சந்தர்ப்பம் நோக்கி அவ்விதம் பேசும் பொய் பெரும்பயனளிக்கிறது. எவ்விதமெனில், ஒரு துஷ்டனால் கற்பழிக்கத் துரத்தப்பட்டு ஓடிவந்த ஒரு மங்கை நம் கண்முன்னர் ஓரிடத்தில் மறைந்து ஒளிந்து கொள்கிறாள். பின்னால் ஓடிவந்த துஷ்டன் அந்தப் பெண்ணை கண்டாயா வென்று நம்மைக் கேட்கையில் நாம் பார்த்திருந்தும் பார்க்கவில்லையென்று ஒருபோக்குச் சொல்லி அந்தப் பெண்ணைக் காப்பாற்ற வேண்டுவது முறையாகும்.

இவ்வித சமயங்களிலன்றி சாதாரணமாய்ப் பொய்பேசுவது பெருந்தவறாம், சிலர் சிறு குழந்தைகளுக்கு விளையாட்டாக அப்பொழுதே பொய்பேசக்கற்றுக் கொடுக்கின்றனர். அவர்கள் முன் தாமும் பொய் பேசி நடக்கின்றனர். இதனால் சிறு வயதிலேயே இத்தீய குணம்படிந்து பிள்ளைகள் பெரியவராகையில் பெரும் பொய்யராகின்றனர். உண்மையே பேசிவரத் தலைப்

பட்டால் நம் ஒழுக்கமும் நல்லதாவதோடு புகழும் புண்ணியமு முண்டாம்.

நாடு நகரம் பெண்டு பிள்ளையாவும் துறந்து துன்பமெய்திய காலத்தும் வாய்மை என்னும் உண்மையைக் கடைப்பிடித்தொழுகி கீர்த்தி வாய்ந்த அரிச்சந்திரனது சரித்திரம் ஒவ்வொருவரும் கவனிக்கத்தக்கது. ஓம் சுபம்.

என். வெங்கடரமணன்

மலர் 2 இதழ் 11 பக் 160 - 162

# ஆதி திராவிடரே இந்தியர்கள்

இந்தியரென்போரியார்? இந்து தேசத்தில் வாழ்வோர் இந்தியரெனப்படுவரெனின், ஐரோப்பியரும் இந்து தேசத்தில் வாழ்ந்து வருவதால் இந்தியரெனப்படுவரோ? ஐரோப்பியர்கள் சுமார் 150 வருட காலங்களுக்கு முன்தான் இந்து தேசத்தில் வியாபார விஷயத்தை முன்னிட்டுக் குடியேறி அரசாளு முரிமையைப் பெற்றிருப்பதாலவர்களை இந்தியரென்றெங்கனக் கூறலாமெனின், அங்ஙனமே மகமதியரும் இந்தியாவில் சுமார் 1000 வருடங்களுக்குமுன் குடியேறி, அரசுரிமைபெற்று மகமதியரல்லாதாரைப் பற்பல இம்சைகள் செய்து அவர்களது ஆலயமாதிகளைத் தொம்சப்படுத்திப்பிறகு ஆங்கிலேயரால் அரசிழந்து இந்தியாவில் வாழ்ந்து வருபவராகையாலன்னவர் களையுமெங்ஙனம் இந்தியரென்று கூறலாம்?

இங்ஙனமே மற்றுஞ்சிலர் இந்தியாவில் வாழ்ந்து வருவதால் அவர்களையுமிந்திய ரென்னலாமா? என்னலாகாது ஆனால் ஆரியரென்போரை இந்தியரென்ன லாகாதோவெனின், இவர்களும் சுமார் 3000 வருடங்களுக்குமுன் மத்திய ஆசியாவினின்று சிந்து நதிக்கரையோரமாய் வந்து இந்து தேசத்தில் குடியேறிப், பாழான ஜாதிபேதத்தைக் கற்பித்துப் பாரதமாதாவின் இலக்ஷிமிக்கலையைக் கெடுத்தவராகையால் இவர்களு மிந்திய ரென்னுஞ் சப்தத்திற் கருகால்வர்.

பிரஹ்ம, க்ஷத்திரிய, வைசியர்கள் ஆரிய வர்க்கத்தைச் சார்ந்தவர் களாகச் சரித்திரங்கள் கூறுவதாலிவர்களும் இந்தியரென்பதற்

கிடமேயில்லை என்றாலும், தற்போது பிராமணரென்றழைக்கப் படுவோர் ஆரியரல்லரென்று இராமசந்திர தத்தர் கூறுகிறார். ஸ்ரீமத் இராமானுஜாச்சாரிய ஸ்வாமிகள் காலத்திலநேக திராவிடர்களாரியர்களானார்களென்று பெரியோர்களாற் கருதப்பட்டிருக்கிறது. ஆரியர்கள் இந்திய தேசத்தில் குடியேறிய காலத்தில் திராவிடப் பெண்களை நாயகிமார்களாகக் கொண்டார் களென்று சரித்திரங்கள் முறையிடுகின்றன.

திராவிடர்களே சூத்திரரெனப்படுகின்றார்கள். இவர்களையேனும் இந்தியரென்று கூறலாமேயெனின் இவர்களும் ஆரியர்களது இயந்திர, தந்திர, ஜால, மந்திரவலைக்குட்பட்டு ஜாதிபேதத்தைக் கொண்டவர்களாயிருப்பதால் இவர்களையு மெதார்த்த இந்தியர்களென்று கூறநியாயமேயில்லை. இவர்கள் ஆரியர்களின் ஜாதிவடிவ தீட்டுப்பட்ட இந்தியர்களேயாவர். ஆனால் பண்டைய சாஸ்திர, சரித்திர ஆதாரங்களி னால், ஆதி திராவிடரே பாரதமாதாவின் பிரதம புதல்வர்களாகின்ற இந்திய தேசத்தின் பழங்குடிகளும், இந்தியாவின் சுதந்தரக்காரர்களுமாக விளங்குபவராகையால் இவர்களே இந்தியரென்றழைக்கப்பட முழுவுரிமை பெற்றவர்களாகின்றார் களென்பதைக் குறிப்பிக்கவும் வேண்டுமா? இதனால் ஆதி திராவிடர்களே இந்தியர்களென்பது பெறப்பட்டது. இஃதிவ்வாறிருக்க,

'சுய ஆட்சி'

யாருக்கு வேண்டுமென்பதை யோசிக்குங்கால், தற்போது ஜாதிபேதத்தைத் தலைச்சுமையாய் வைத்துக்கொண்டு 'சுய ராஜியம்' வேண்டுமென ஓலமிடுமிவர்களுக்கா? அல்லவே அல்ல. சுய ஆட்சியை விரும்பவேண்டியவர்கள் ஆதி திராவிடர் களாகிற இந்தியர்களே நாங்கள் மேல் சாதியாரென்று சொல்லப் படுகிறவர்களால் நசுக்கப்பட்டுக் கல்வி, அறிவு, ஆச்சாரமாதிகளை இழந்தவர்களானோம். பண்டைய நூற்களே இதற்குச் சாக்ஷிபகரும்.

இப்போதுங் கவர்ன்மெண்ட் கிராண்ட் பெற்று விளங்கும் பள்ளிக்கூடங்களிலும், பொதுசத்திர, சாவடி, குளங்களிலும் எங்களைப் பிரவேசிக்கக்கூடாதென நிபந்தனை செய்து வருவதே பிரத்தியக்ஷானுபவசாக்ஷியாகும். எங்குல மகன் தெய்வப்புலமை திருவள்ளுவரியற்றிய 'திருக்குறள்' ஒன்றே எங்களது கல்வி,

அறிவு, ஒழுக்கமாதிகளை இனிது விளக்குங்கருவியாகும். இங்ஙன மிருந்த எங்கள் மீது இராஜாங்கத்தார் கருணையும் பூரணமாகத் திரும்ப வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

இதளவு இராஜாங்கத்தாரெங்களுக்கு வேண்டிய கல்வி உதவியை விசேஷமாகச் செய்ததாகத் தெரியவில்லை. கட்டாய இலவசப் படிப்பையேனுமெங்களுக்கு முன்னமேயேற்படுத்தி யிருந்தால், அதையனுசரித்து நடுத்தரக் கல்வியையும், உயர்தரக் கல்வியையுங் கற்றிருப்போமல்லவா? ஜாதிபேத துவேஷமுடையார் இராஜாங்கத்தாரோடு ஒத்துழைக்கக் கூடாதென்று கூறுமிக்காலத்தில் நாங்களெவ்வளவோ ராஜாங்கத்தாருக்குப் பயன்படக் கூடியவர்களாயிருப்போமல்லவா?

மேல் ஜாதியாரென்று சொல்லப்பட்டவர்கள் அதிகாரத் துரையிலிருந்து வருவதனாலன்றோ நாங்களநேகமாக உண்ண உணவுமின்றிப் பட்டினிக் கிடந்து மாண்டு வருவதற்குரிய சட்டங்களை ஏற்படுத்தி வைத்திருப்பதாகச் சந்தேகிக்க வேண்டி யிருக்கிறது. எங்களது குறைகளை ராஜாங்கத்தாரரறியாதவர் களாயிருக்கின்றீர்களா? ஆமாவென்னும் ஆயாள் வேலை செய்யும் ஆதி திராவிடச் சகோதரிமார்களது பாலையுண்டு வளர்ந்த ஐரோப்பியர்களெத் தனையோ பெயர்களிருக்கின்றார்களென்பதை நாங்கள் மறந்தவர்களல்ல எங்களது சத்தான இராஜாங்கத் தாருதிரத்தில் சம்பந்தப்பட்டிருப்பதைக் கருத எங்களுக்கெவ் வளவோ பெருமையுண்டாயிருக்கிறது.

இராஜாங்கத்தாராகிற உங்களை எங்களது குழந்தைகளைப் போல் உணவாலும், உடையாலும் மற்ற ஏதுக்களாலுங் கவனித்து வருகின்றோ மென்பதைக் குறிப்பிக்கவும் வேண்டுமோ? இராசாங்கத் தாருக்காக எங்களது உயிரையும் போக்கிக்கொள்ளக்கூடிய இராஜபக்தர்கள் ஆதி திராவிட வீரசிங்கங்களென்பது சொல் லாமலே அமைந்திருக்கின்றதல்லவா? இங்ஙனமிருக்கும் நாங்கள் விரும்பவேண்டிய சுய ஆட்சியை மேல் ஜாதியாரென்று சொல்லப்படுகிறவர்கள் பேசவுங், கேழ்க்கவுமணுத்துணையேனு மதிகாரமுண்டா? இல்லவே இல்லை.

வேண்டுமானால் இப்போது சுய ஆட்சியை விரும்புகிறவர்கள் இராஜாங்கத்தார் குறிப்பிக்கும் வண்ணம் முதலில் ஜாதிபேத

ஊழலை இந்திய தேசத்தினின்று ஓட்டிவித்து, மனிதனை மனிதனாக நேசிக்குஞ் சகோதரத்துவமும், ஒற்றுமையுமுண்டாக்கி வைக்கட்டும். இது உண்டாகாதளவு மிவர்களுக்கெவ்வித சுதந்திரமுஞ் சொப்பனத்திலுங் கூடக் கொடாமலிருக்கக் கருணையும் நீதியுங் கலந்தோங்குமாறு எங்களை ஆட்சிபுரியும் பிரிட்டிஷ் ராஜாங்கத்தாரைக் கேட்டுக்கொள்ளுகின்றேன். ஆதி திராவிடரே இந்தியாவின் சுதந்தரக்காரரென்பதை இராஜாங் கத்தாரறியாதவர்களல்ல. ஆகையால் இந்தியாவின் சுய ஆட்சியை எங்களுக்கே கொடுக்கவேண்டிய காலத்தில் கொடுக்கும் படியாகப் பிரார்த்திக்கின்றேன்.

ஸ்வாமி அத்வைதானந்தா

மலர் 2 இதழ் 11 பக் 162 - 164

## பருவத்தே பயிர்செய்

ஆதி திராவிட சகோதரர்களே,

**கா**லமறிந்துண் என்று நாம் ஆத்திசூடி விளக்கத்தில் வாசித் தோமல்லவா? சகோதரர்களே, தற்போது நாம் காலதேச வர்த்த மானத்தை அறிந்து நாம் நடக்குமுறையைக் கவனிக்க வேண்டு மல்லவா? ஆதி திராவிட குல குருவான மஹாத்மா ஸ்வாமி சகஜாநந்தம் அவர்களை எத்தனையோ முறை நமக்கு நல்வழியைப் போதித்து வருவது நாம் யாவரும் அறிந்த விஷயமே. ஆனாலும் சில விஷயத்தை இங்கு கவனிப்போம்.

பருவத்தே பயிர்செய்: தகுந்த காலத்தில் பயிர்த்தொழிலைச் செய் என்பது இதன் பொருள். அஃதாவது, உழுது பயிரிட்டு அறுவடை செய்து முடித்தலாகிய பயிர்தொழிலை எல்லாம் தகுந்த காலங்களில் தவறாமல் செய்தல் என்பதாயிற்று. எத் தொழிலையும் காலமறிந்து செய்தால்தான் பிரயோசனப்படும். அவ்வாறின்றி தகாத காலத்தில் எவ்வளவு முயற்சி செய்தாலும் வீணாகுமேயன்றி காரியம் நடந்தேறாது.

*இன்சொல்விளை நிலனாவீதலேவித்தாக*
*வன் சொல்களை கட்டுவாய்வை ஏருவிட்டு*
*அன்புநீர்பாய்ச்சி அறக்கதிரீனவோர்*
*பைங்கூழ் சிறு காலைச் செய்*

தருமம் நடத்துவதாகிய சிறந்த பயிர்த்தொழிலை இளமை பருவமாகி தகுந்த பருவம் வரையில் செய்துவர வேண்டும். ஆனதால் தகுந்த காலம் இளமையாதலாலும் முதுமையில்

அதின்பழக்கத்தால் மனோபலம் ஏற்பட வேண்டுமாதலால் கூறலாயிற்று.

*காலை செய்வோம் என்றறத்தைக் கடைபிடித்து*
*சாலைச் செய்வாரே தலைப்படுவர் மாலை*
*கிடந்தானெழுத அறிதான் மற்றென் சொல்*
*அறங்காலைச் செய்யாதவாறு _*

என்று அறநெறிச்சாரத்தாலும்,

*காராரு மாணவக் காட்டை களைந்தறக்கண்டகங்காரமென்னும்*
*கல்லைப் பிளந்து நெஞ்சகமான பூமி வெளி காணத்திருத்திமேன்மேல்*
*பாராதியறியாதமோன மாம்பித்தைபதித்தன் புநீராகவே*
*பாய்ச்சியது பயிராகுமட்டுமா மாயைவன் பறவையணுகாதவண்ணம்*
*நேராக நின்று விளைபோகம் புசித்து பாத்திந்த நின்னன்பர்கூட்டமெய்த*
*நினைவின் படிக்கு நீ முன்னின்று காப்பதே நின்ன ருட்பாரமென்று*
*மாராறுமறியாதசூ தான வெளியில் வெளியாகின்ற துரியமயமே*
*அண்டபகிரண்டமும் அடங்கவொரு நிறைவாகியானந்தமானபரமே*

என்று தாயுமானஸ்வாமியால் பயிரிடும் விஷயத்தை நன்கு வெளிப்படுத்தப் பட்டிருப்பது யாவரும் நன்கு அறிந்த விஷயமே. இம்மாதிரியாக ஞானப் பயிர்த் தொழிலையும் காலமறிந்ததே செய்ய வேண்டும் என்பதாயிற்று. ஆழ்வார்களும் (கிளறொளி யிளமை) என்று கூறியுள்ளார். ஆனதால் ஒவ்வொன்றிற்கும் தக்க காலம் உண்டு. கல்விக்கும் இளமையே தக்க பருவம். ஒளவை மூதாட்டியாரும் (இளமையிற்கல்) என்று கூறியுள்ளார். ஆகையால் எந்தக் காரியத்தையும் தக்க சமயத்தில் செய்ய வேண்டும். சகோதரர்களே பருவத்தே பயிர்செய்யாது தவறினதால் தீராத்துயரத்திற்கு ஆளாகி முடிவில் இறக்கும்படி நேர்ந்ததற்கு (ஷேக்ஸ்பியர்) வரைந்துள்ள (ஹாம்லத் நாடகமே) போதுமான சாட்சியாயிருக்கிறது. ஹாம்லட்டின் சிற்றப்பன் தகப்பனைக் கொன்று இராச்சியத்தைக் கைப்பற்றினான். இரகஸ்யமாய் நடந்த இக்காரியம் ஹாம்லட்டிற்கு அவன் தகப்பன் பிசாசால் தெரியவந்ததும் அவன் கட்டளைப்படியே அவன் தன் சிறிய தகப்பனை கொன்றுவிடுவதாக தீர்மானித்தான். கிராமத்தார்களுக்கெல்லாம் சிறிய தகப்பன்பேரில் சந்தேகந்தான். இந்தச்சமயத்தில் பலரறிய ஹாம்லட் அவனைக் கொன்றிருந் தாலும் ஒரு கெடுதியும் வந்திராது. அவன் தாய் சிற்றப்பனை கலியாணம் செய்து கொண்டிருந்தாலும் ஒருவேளை பிசாசு

கூறியது உண்மையாக இல்லாவிட்டால் என்ன பண்ணுவது என்று சந்தேகித்தாலும் தன் காரியத்தை தள்ளிவைத்து சுமார் இரண்டு மாதம் பைத்தியம்போல் வேஷம்போட்டுக்கொண்டு வீண்போக்கிவிட்டான். ஆனால், சிற்றப்பன் உளவை இதன் மூலமாகத் தெரியவேண்டும் என்று நோக்கம் மாத்திரம் இருந்தது. சிறிய தகப்பனுக்கு மாத்திரம் ஹாம்லட்டின்பேரில் சந்தேகந்தான். அவன் உட்கருத்தை அநேகரைவிட்டு அறியமுயன்றான்.

ஆம்லெட் அவ்வூர் மந்திரி பெண்ணாகிய ஒபீலியாவிடம் காதல் கொண்டிருந்தான். அவள் மூலமாகவும் ஹாம்லெட்டின் வேஷ ரகசியத்தை உணரப்பார்த்தான் சிற்றப்பன். இது இப்படியிருக்க, சில நாடகக்காரர்கள் வர அவர்களைக்கொண்டு தன் தகப்பன் கதையை நாடகமாக நடிக்கும்படி ஹாம்லட் ஏற்பாடு செய்து அதற்குச் சிற்றப்பன் தாயார் முதலியவர்களை அழைத்திருந் தான். நாடகம் நடிக்கையில் அதில் அரசனைக்கொலை செய்யும் காட்சி நடைபெறுங்கால் சிற்றப்பன் நடுநடுங்கி எழுந்தோடி விட்டான். எல்லோரும் திடீரென்று போய்விட்டனர். இதனால் ஹாம்லெட்டிற்குச் சிற்றப்பன் குற்றம் தெரிந்ததுமல்லாமல் சிற்றப்பனுக்கு ஹாம்லெட் விஷயத்தில் உள்ள சந்தேகம் திடப்பட்டுவிட்டது. எப்படியாவது ஹாம்லெட்டைத் தொலைத்துவிடவேண்டுமென்று தீர்மானித்துவிட்டான்.

அன்றிரவே ஆம்லெட்டிற்கு அவன் தாயைக்கொண்டு புத்தி சொல்லச் சொல்லி அப்பொழுது வரும் ஹாம்லெட்டின் வாய் மொழியால் அவன் ரகஸ்ய விஷயங்களை உணர மந்திரியைத் தாயார் இல்லத்தில் ஒளிந்திருக்கும்படிச் செய்தான் சிற்றப்பன். பின்னர் தன் குற்றங்கள் ஞாபகம்வர தன்னை மன்னிக்கும்படி கண்ணை மூடிக்கொண்டு கடவுளை வேண்டிக்கொள்ளத் தொடங்கினான். அப்பொழுது தாயார் அறைக்குப் போய்க் கொண்டிருந்த ஆம்லெட் அங்குவர சிற்றப்பன் தனிமையாக இருப்பதைக்கண்டு அவனைக்கொன்றுவிட யோசித்தான். இவன் பகவானை நினைத்திருக்கிறான், இவனை இப்பொழுது கொன்றுவிட்டால் இவனுக்கு சுவர்க்கமல்லவா வரும், பகவானும் கீதையில் எந்த சமயத்தில் என்னை நினைக் கிறானோ நானும் அவனே ஆகிறேன் என்று திருவாய் மலர்ந் திருக்கிறார். ஆனதால் இவனுக்கு நரகம் வரும்படியல்லவோ

கொல்லவேண்டும் என்று எண்ணி நல்ல தருணத்தை விட்டு விட்டுத் தாயாரிடம் சென்றான்.

இந்த தருணத்தை தவறவிட்டதால்தான் இவனுக்கு விளைந்த ஆபத்துக்கோ அளவில்லை. தாயாருடன் அவன் சிற்றப்பனைக் கலியாணம் செய்து கொண்டிருப்பது தவறு என்று வெளிப் படையாகக் கூறிவருகையில் ஒளிந்து ஒருவன் கேட்டிருப்பது ஆம்லெட்டிற்குத் தெரியவந்தது. அவன் ஒருவேளை சிற்றப் பனாக இருக்கலாமென்று ஒரு எண்ணம் அவனுக்குத் தோன்ற திடீரென்று கத்தியை எடுத்து அந்தவிடத்தை நோக்கி குத்தி விட்டான். சவத்தை வெளியிலிழுத்து நோக்கவே தன் காதலி தகப்பாக விருந்தது. என்ன செய்வான் பாவம். இதனால் சிற்றப்பன் இவன் பித்தந்தெளிய இவனை வெளியூருக்கு யாத்திரையனுப்பு வதாகக்கூறி இவனை வழியில் கொல்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்தான். தகப்பன் இறந்த துக்கத்தாலும் ஆம்லெட்டிற்குவந்த பயித்தியத்தால் ஏற்பட்ட துக்கத்தாலும் ஒபிலியா பித்துப் பிடித்து இறந்தாள். ஒபிலியா தமயன் (லீயார்டிஸ்) விரோதமும் ஹாம்லெட்டிற்கு வந்துவிட்டது, இதைச் சிற்றப்பன் அதிகப் படுத்திவிட்டான்.

தேசாந்திரம் அனுப்பப்பட்ட ஹாம்லெட் தப்பி திரும்பிவர லீயார் டிஸ்ஸுக்கும் அவனுக்கும் விளையாட்டாக ஒரு கத்திச் சண்டையை ஏற்பாடு செய்து ஹாம்லெட்டை கொல்ல யோசித்துவிட்டான். சிற்றப்பன் கத்திச்சண்டையன்று விஷம் கலந்தபானம் ஒன்றைத் தயார் செய்து கத்தியால் ஹாம்லெட்டு இறவாது தப்பித்துவந்தால் அதைக் குடிக்கக் கொடுத்துக் கொல்லவுந் தயாராயிருந்தான். கொடிய சிற்றப்பன் ஏற்கனவே ஹாம்லெட் வாக்கால் புண்பட்டிருந்த தாயார் விஷபானத்தை குடிந்து இறந்தாள். ஆம்லெட்டிற்கு நல்ல கத்திக்காயமும் பட்டது. லீயார்டிஸ் ஹாம்லெட்டின் பெருந்தன்மையைக் கண்டு தன் பேரிலும் காயம்பட்டுவிட்டதால் இறக்கும் முன் அவனுக்கு ஒரு உதவி புரிய எண்ணி சிற்றப்பன் சதியாலோசனைகளை வெளியிட்டான். ஹாம்லெட்டிற்கு தன் மரணம் அணுகிவிட்டது என்று கண்டு அவசரமாகச் சென்று சிறிய தகப்பனைக் குத்தித் தள்ளி அவன் வாயில் மிகுதியிருந்த விஷபானத்தையும் வார்த்து விட்டான்.

கொஞ்சநாழிகையில் ஹாம்லெட்டு இறந்துபோனான். இங்கு ஹாம்லெட்டு முதலில் அகப்பட்ட தகுந்த காலத்தை சற்று அசாக்கிரதையாக குதர்க்கத்தால் விட்டுவிட்டதால் சிற்றப்பன் ஒருவன் இறக்க வேண்டியதற்குப் பதிலாக தன் மாமனார், காதலி, மச்சினன், தாயார், சினேகிதர்கள் முதலியவர்களை இழந்து முடிவில் தானும் இறக்கும்படி நேர்ந்தது. ஆகவே, தகுந்த காலத்தில் சகோதரர்களே நமது கடமைகளைச் செய்யாது விட்டால் பெருங்கேடு விளையும். பருவத்தில் பயிர்த்தொழில் களைப் பார்க்காத குடியானவர்களுக்கு நஷ்டம் ஏராளமாக ஏற்படும் என்று கூறவேண்டியது அவசியமில்லை. இதற்குத் திருஷ்டாந்தம் நமது முன்னரே ஏற்படுவதை எல்லாரும் காணலாம். இந்த விஷயமாகத்தான் ஆத்திசூடி வெண்பாவும் அமைந்துள்ளது. ஆகையால் நாம் சீக்கிரத்தில் காலத்தை அறிந்து நடந்துகொள்ள வேண்டியது அவசியம்.

லெ. பெருமாள் மூர்த்தி

மலர் 2 இதழ் 3 பக் 35 - 38

இக்கட்டுரை தொடரும் என அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

## குலத்தளவேயாகுமாங் குணம்

பரதகண்டமாகிய இந்தியாவிற்கு ஆங்கில ஆட்சி வந்த நாண்முதல் அநாகரிகம் ஒழிந்து நாகரிகம் நாளுக்குநாள் அதிகரித்து சுயநலப் பிரியர்களால் நசுக்குண்ட பாமரஜனங்களும் கல்வி கேள்விகளில் தேர்ச்சியடைந்து கொண்டே வருகிறார்களென்பது வெளிப்படை. இவ்வாறு நந் தாய் நாடு மேம்பாடடைந்து ஒவ்வொரு வகுப்பினரும் நன்னிலமைக்கு வந்துகொண்டே யிருப்பதை கண்கூடாகக் காண்கிறோம். ஆனால், தாமே வாழவும் பிறர் தாழவுங் கருதிய கொடுநெஞ்சம்படைத்த சில வஞ்சகர்களுக்கு மாத்திரம் நல்லறிவுண்டாவதில்லை.

ஏனெனில், 'குலத்தளவேயாகுமாங் குணம்' என்னுமொழிப்படி அவர்கள் சனிக்கும்பொழுதே வஞ்சகநெஞ்சமுடையவர்களாய் ஜெனித்து விடுகின்றனர் போலும். ஆனபடியாற்றான், 'பொல்லாத மூர்க்கருக்கு எத்தனைதான் புத்தி போதிக்கினும் நல்லாருக்குண்டான குணம் வரா' என்றபடி அவர்களுக்கு எவ்வித நல்விஷயங்களை எடுத்தோதினும் நல்வழிப்படுகிறார் களிலர். ஒருகால் 'கற்ககற்கக் கசடறும்' என்னுமுதுமொழிப்படி நூற்பல கற்று நுண்ணறிவுடையோர்களாக விருக்கிறார்களோ வென்றால் அதுவுமில்லை. அப்படி நன்னூற்களைப் பயின்று நல்லறிவுடையோர் களாயிருப்பார்களேயானால் இக்காலத்து அன்னவர்களால் வெளிவரும் நவீன நூல், சஞ்சிகை, பத்திரிகை முதலியவைகளில் எந்தக் குலத்தையும் சொந்த குலமாகவும் எம்மதத்தையும் தம்மதமாகவும் ஆதரித்து தங்களை உயர்த் தாமலும் பிறரை தாழ்த்தாமலும் சமத்துவங்களைக் காட்டி யன்றோ எழுதிவரவேண்டும்.

அஃதல்லவா அறிவாளர் செய்கை. அதனைவிடுத்து தாங்கள் வாழவும் ஏழைகள் தாழவுங் கருதி வேஷமிட்டு மோசஞ் செய்து நாசப்படுத்திவருவதுமல்லாமற் பின்னுள்ள சந்ததியாரும் அவர்களுடைய வழியைக் கடைப்பிடித்தொழுகும்வண்ணம் நவீன நூற்களையும் சஞ்சிகைகளையும் எழுதிவைக்கின்றார்கள். என்னே இவர்களுடைய சூழ்ச்சி! 'தட்டிகேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன்' என்னும் கதையாகவன்றோ முடியும்? கடந்த சின்னாட்களுக்குமுன் நந்தமிழ் நாட்டின்கண் வெளிவந்துள்ள ஓர் அரியபெரிய மாதாந்த சஞ்சிகையில் உண்மையின்னதெற்றியாமல் உயர்சாதியாரென்று கூறிக் கொள்பவர்களையே புகழ்ந்தெழுதப்பட்டிருக்கின்றது. அவற்றில் முக்கியமான இரண்டொரு விஷயங்களை ஈண்டுக் குறிப்பிட வேண்டியதவசியமாயிருக் கின்றது.

1. 'மானிடவர்க்கத்தின் பல ஜாதிக்குள் சிறந்து விளங்குவது பிராமண ஜாதியே' என்றும், 'தான் மாத்திரம் அல்லாமல் கப்பலானது எவ்வாறு தன்னையடைந்தவரைக் கரை சேர்க்கிறதோ அதுபோலவே (பிராமணர்) தங்களையடைந்த வரையும் கரைசேர்க்கின்றனர்' என்று தற்பெருமைகொண்டே எழுதப்பட்டிருக்கிறது. இவற்றில் நாம் ஒன்றைக் கவனிக்க வேண்டும். தங்களைச் சரணமடையும் பாமரஜனங்களைக் காத வழி நிற்கும்படி துரத்திக் குரைக்கும் பிராமணர்களா கப்பல் தன்னையடைந்தவர்களைக் கரைசேர்ப்பதுபோல ஏழை மக்களைக் கரைசேர்ப்பார்கள்? என்னே இவர்களின் பசப்பு சொற்கள்!

2. 'சிரம், கரம், தொடை, பாதம் என்னும் இன்னான்கில் ஒரு அங்கம் இல்லாதவன் கிரிகைகள் செய்ய வருத்தமுறுவானோ, அதுபோலவே இன்னான்கு வருணத்தாருக்கும் ஒற்றுமையில்லா விடில் காரியங்கள் நடவாது' என்றும் எழுதப்பட்டிருக்கிறது. இதனை கவனிக்குமிடத்து 'தம்பி கால்நடை பேச்சுப் பல்லக்கில்' என்ற கதையாகப் பத்திரிகைகளில் வெளிப்படையாயெழுதி விடுகிறார்களேயன்றி செய்கையில் ஒன்றுங் கண்டிலேம். இத்தகையோர்களா ஒத்துழைப்பார்கள்? ஒற்றுமைப்படுவார்கள்? ஒருகாலுமில்லை! கேவலம், அற்ப ஜெந்துவாகிய எறும்பு களிடத்தும் ஒற்றுமையின் மகத்துவம் விளங்குகின்றது.

*3.* 'மேல்நாட்டில் உதித்தவரே மிக மேம்பட்டவர்களென மதித்து, அவர்களின் நடையுடை பாவனையைப் பின்பற்று கிறார்கள்' என்று (நம்மவர்களின்மீது) ஆற்றாமை கொண்டு ஆத்திரத்தோடு எழுதப்பட்டிருக்கிறது. இதனால் 'மேல் நாட்டினாரைப் பின்பற்றி மேம்பாடையாதீர்கள். ஆனால், கீழ்நாட்டாராகிய எங்களுக்கு (உயர்சாதியாருக்கு) கீழ்ப்படிந்து கீழாகுங்கள்' என்னுங் கருத்தமைத்துக் கூறிச் செல்வதாகும். அந்தோ! என்னே இவர்களின் ஆத்திரப்புத்தி! இத்துணை காலமாக பாமரஜனங்களை அடிமை யாயாண்டு ஆறு, குளம், கோயில் முதலிய பொதுவிடங்களுக்கப் போகவிடாமல் அந்த காரத்தில் ஆழ்த்தியது போதாதா? இன்னமுமா அடிமையாக்க எத்தனிக்க வேண்டும்? இராப்பகலுண்டென்பதை இவர்கள் அறியார்களா? உயர்ந்தவை தாழும் தாழ்ந்தவை உயரும் என்பதை மறந்தார்களோ? என்னை இவர்களுடைய அறியாமையின் கூற்று.

சகோதர சகோதரிகளே, ஜீவகாருண்யமுள்ள மேல்நாட்டார்கள் கீழ் நாட்டிற்கு வந்த பின்னரே மிருகங்களிலும் கீழாக மதித்து ஒடுக்கப்பட்ட நாம், 'மேம்பாடைந்து கொண்டே வருகிறோம், சட்ட சபைகளிலும் சரியாசனங் கிடைக்கப்பெற்றோம் என்பதைக் கவனியுங்கள்! கற்றபடி நடமின்கள்!! பசுத்தோல் போர்த்த புலிபோலும் வேஷமிடும் நாசகர்களை முற்றும் ஒழியுங்கள்!!! இனி அவர்களுடைய காலஞ் செல்லாது. *'திராவிடன்', 'ஆதிதிராவிடன்'* பிறந்ததும் அந்தகாரம் ஒழிந்ததுமே நித்திரையிலிருந்து எழுந்திருக்க வேண்டும். 'துணிந்தவனுக்குத் துக்கமில்லை' என்பதைக் கவனித்து நம் வேலையைத் துணிந்து செய்ய வேண்டும். நம் *'ஆதி திராவிட'*னுக்குச் சந்தாதாரைச் சேர்க்கவேண்டும். இதுவே நாம் செய்யவேண்டிய வேலைகளில் முதன் வேலையாகும். ஆனால், வியாதியுள்ள பிள்ளைகள் மருந்தைக் கண்டால் மறைந்தோடுவது சகஜம். என்றாலும் தாய்மார்கள் பிள்ளை களுடைய சுகத்தைக் கருதி அவர்களை பலவந்தப் படுத்தியாவது மருந்தையூட்டுவார்கள். அதுபோலவே அறிவீனர்களால் நசுக்கப்பட்ட நம்மரபினர்கள் *நம்மாதி திராவிடனுக்குச்* சந்தாதாரராய் சேர பின்னடைவார்கள். எனினும் நாம் அவர்களை வற்புறுத்தியாவது சந்தாதாரராய்ச் சேர்க்க வேண்டும்.

இவ்விஷயத்திற் பின்னடைவோமானால் நம் கதி அதோகதி தான். ஆகையால், சகோதரர்களே காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ள முயற்சியுங்கள், முயற்சி திருவினையாக்கும். ஆழ்ந்த நித்திரைக்கு இது சமயமல்ல! மனவெழுச்சியில்லாதான் மனிதனல்ல!!

> 'எப்பொருள் யார்யார் வாய்கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்பதறிவு'

ஆ. பொன்னுசாமி

மலர் 2 இதழ் 3 பக் 40 - 44

## மமதை

மமதை என்பது இப்பிரபஞ்சத்தில் எல்லையற்ற மஹான் களையும் ஏனையவர்களையும் தனக்குச் சமதையல்லாத தாழ்ந்தவர்கள் என்கிற மனத்தடிப்பினால் ஏற்படும் அகம்பாவ செறுக்கு. அகம்பாவம் படைத்தவர்கள் பிறர் எவ்வளவு சத்திய மாயும், விசுவாசமாயும், சதா நன்மையையே கோரியவர்களாயும், உபகாரிகளாயும் நடந்துவந்தபோதிலும் அவ்வளவையும் அந்தக்ஷணமே மறந்துவிடுவார்கள். இத்தகைத் தான்தோன்றித் தம்பிரான்மார்களை உத்தம சிநேகிதர்கள் என்று நினைப்பவர்கள் அனைவரும் மதிமோசம் போகிறவர்களே. அம்மதைக்குள்ள பல பேதங்களில் தன்னுடையதோ அல்லது அன்னியருடையதோ கொள்ளை கொள்ளும் பொருள்களைப் பற்றியதுதான் மிகக் கொடுமையானது.

கல்வி, அறிவு, ஞானம், சரீரத் திமிர், ஜாதி மதக் கோட்பாடு தான் தருமம் முதலிய எதினாலாவது ஏற்படும் அகம்பாவம். பொருள் நடமாட்டத்தினால் ஏற்படும் மன தடிப்பைப்போல் அவ்வளவு தீங்கு செய்யாது. அத்தகைய மனிதர்கள் அப்பொருள் நடமாட்டம் தன்னைவிட்டு நீங்காமலிருப்பதற்கு வேண்டிய நயவஞ்சகம், தந்திரம், முதலியவைகளில் தேர்ச்சியடைந்தவர் களாகவே இருந்து வருவார்கள். அவர்களுக்கு ஏதாவது காரியம் கைக்கொள்ள வேண்டியிருந்தால், நெருங்கிய சிநேகிதர்கள் போலவும் மகா உபகாரிகள் போலவும், பரஸ்பரம், லாபநஷ்டம், சுகதுக்கம், முதலியவைகளில் பேதாபேதம் காட்டாதவர்கள் போலவும் நடிப்பார்கள்.

அவர்களுடைய அந்தரங்க நிலைமைகளை ஊன்றிப் பார்க்கும் பக்ஷத்தில் அவர்கள் எந்த அம்சத்திலும் மேம்பாடுடையவர்களே அல்ல. அப்படியிருந்தும் அவர்கள் அவர்களுடைய மேற்கண்ட நிலைமையை முற்றிலும் மறந்தவர்களிடத்தில்கூட ஏதோ ஒரு பெரிய நிலையில் இருப்பது போலவும் மற்றவர்கள் அவர்களுடைய தயவை எதிர்பார்த்தவர்கள் போலும் அலக்ஷியம் செய்வார்கள். அச்செய்கைகளோ ஒரு பெண் தன்னுடைய பிறந்த வீட்டு வரிசையைப் பற்றி அண்ணனிடத்திலேயே பெருமை பேசுவதை ஒக்குமே தவிர வேறில்லை. இன்னும் அவர்களுடைய அபிப்பிராயத்தில் தங்களைப் பார்க்கிலும் புத்திமான்களும் நாகரிகத்தில் வேறொருவருமில்லை; தாங்களே கரைகண்டவர்கள் காரியநிர்வாகிகளும் என்பதே தீர்மானம்.

அவர்கள் சம்பாஷிக்குங் காலங்களில் யாவரும் அவர்களை பிரமாதமாக மதிக்கவேணுமென்கிற எண்ணமாகவே எந்தவிதமாய் அபிநயிக்க வேண்டுமோ அந்தப்படிக்கே அபிநயங் காட்டுவார்கள். பொதுவாயும் சுருக்கமாயும் சொல்லுங்கால் அவர்கள் சொன்ன சொல்லைக் காப்பாற்றக்கூடியவர்களல்ல. சுயநலம் லாபம் முதலியவைகளையே கருதியவர்கள். வெளிவேஷங் காட்டுகிறவர்களே தவிர உண்மை வழியில் நடப்பவர்கள் அல்ல. நம்மவர்களுக்குள் அநேகரை கெடுப்பது அம்மமதையே.

அப்படிப்பட்டவர்களுடன் நாம் அதிக சம்பந்தம் வைத்துக் கொள்ளக்கூடாது என்பதைப்பற்றியே இதை வெளியிடலானேன்.

மமதையானது கோபத்தைப்போல் ஒரு நரம்புத்தடிப் பென்று சில தத்துவசாஸ்திரிகள் சொல்லக்கேட்டிருக்கிறேன். சகோதரர்கள் இன்னுமிதை விவரித்தெழுதவேண்டுமானால் எதார்த்தவாதி வெகுஜன விரோதியென மதிக்கப்படும்.

குறள்

'ஒழுக்காறாக்கொள்கவொருவன் றன்நெஞ்சத்
தழுக்காறிலாதவியல்பு'

மேற்படி குறளை நோக்கி (பொறாமை) என்பதை முற்றிலு மகற்றி எஞ்ஞான்றும் எல்லாரிடத்தும் மமதையின்றி நடப்பதே மஹா யுசிதம். மேற்படி பொறாமை இச்சிறு மூன்றெழுத்தைக் கவனித்து கீழிருந்து மை என்னுங் கடைசியெழுத்தை முதலாக

வைத்து வாசிக்க என்னவாகுமோ அவ்வண்ணமாய் மமதை யுடையார் செல்வார் என்று தீர்மானிப்பாம்.

*'செல்வர் யாமென்று தாஞ் செல்வுழியெண்ணாத*
*புல்லறிவாளர் பெருஞ்செல்வ _ மெல்லிற்*
*கருங்கொண்மூவாய் திறந்தமின்னுப்போற்றோன்றி*
*மருங்கறக்கெட்டுவிடும்'* (நாலடியார்)

செல்வத்தினாலும் செருக்கினாலும் மமதை கொள்பவர்கள் பொறாமை என்னும் சொல்லு எப்படி மாறியதோ அஃதொக்கும்.

எப்.சி.தம்புசாமி பிள்ளை

மலர் 2 இதழ் 3 பக் 44 - 45

## வள்ளுவர் பஞ்சமரே! பறையரே!

**26**.04.20ல் வெளிவந்த சுதேச மித்திரனில் வள்ளுவர் பஞ்சமரா என ஸ்ரீமான் கோ. குப்புசாமி அவர்கள் ஸ்ரீலஸ்ரீ சுவாமி சகஜாநந்தர் அவர்களை கேட்டிருத்தல் அனைவருக்கும் தெரிந்த விஷயமே. அது விஷயமாக எனது சிற்றறிவுக்கெட்டிய வாறு எழுதத் துணிந்தனன். இவ்விஷயமாக எழுதப்புகுந்தமை 'கற்றார்முன் கற்றசெலச்சொல்லி தாங்கற்றமிக்கா ருண்மிக்க கொளல்' என்பதற்கிணங்க என்னினும் அதிகங் கற்றால்பால் வள்ளுவர் யாரென்னும் உண்மை காண்டற்கேயாம்.

வகுப்பு வேற்றுமைகள் தொழிலைப்பற்றியனவேயன்றி பிறப்பைப்பற்றியனவன்று என ஸ்வாமி சகஜாநந்தம் அவர்கள் சிலோன் *ஆதி திராவிடனில்* நன்கு விளக்கியிருக்கின்றனர். மணிவிழுந்தான் குறவர் நாட்டில் நடைபெற்ற மஹாநாட்டு உபந்நியாசத்திலும் விளக்கியிருக்கின்றனர். தெய்வப்புலமை திருவள்ளுவரும் 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்' எனத் தெளிவாகக் கூறியிருக் கின்றனர். தொழிற்பற்றிவந்த வேற்றுமைகள் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என நான்கே. பின்னர் ஸ்மிருதி புராண முதலியவை அநுலோம பிரதிலோம எனப் பலவகைச் சாதிகள் கூறத் தொடங்கின.

தற்போது ஒவ்வொரு வகுப்பிலும் பற்பல பிரிவுகள் மலிந்து கிடக்கின்றன. அந்தணரென்பது ஒருவகுப்பாயினும் அதனுட்பிரிவு எண்ணமுடியாதனவாயிருக்கின்றன. அவ்வாறே நான்காம்

வகுப்பாகிய வேளாளர் குலத்திற் பிரிந்த பறையர்கட்குள்ளும் பல வகுப்புகள் அநுபவத்திலிருக்கின்றன. பறையர்களுக்குள் தங்கலான் பறையன், தாதப் பறையன், வள்ளுவப் பறையன், கோலியப் பறையன், குழிப் பறையன், கொம்புகாரப் பறையன், பள்ளப் பறையன் என்றற்றொடக்கத்தனவாக பதினெட்டு வகை வகுப்புகளுண்டு. அவை தற்போது அனுபவத்திலிருக்கின்றன. 'பறை_பதினெட்டு நுளை நூற்றெட்டு' என்னும் பழமொழியும் அதனை வலியுறுத்தும் பொருள்களின் உண்மையைப் புலப்படுப்பன அளவைகளே.

அவை காண்டல், கருதல், உவமம், ஆகமம், ஆண்டைய, அருத்தாபத்தி, இயல்பு, ஐதீகம், அபாவம், மிட்சி, யொழிவறிவு, யெய்தியுண்டா நெறி என்பனவாம். இவை தம்பால் பொருளின் உண்மைப்புலங்கொளல்வேண்டும். இவற்றுள் சிறந்தவை பத்தென்றும், எட்டென்றும், ஆறென்றும், நான்கென்றும், மூன் றென்றும், இரண்டென்றும், ஒன்றென்றும் பலசமயத்தினரும் பற்பலவிதமாகக் கூறுவர். ஆயினும் அவற்றுள் முன்னதாகிய காட்சியளவையே பெரிதும் வலியுடைத்து என்னை?

கோவிந்தனென்னும் ஒருவன் எதிரே யானை வருகிறதென வைத்துக் கொள்ளுவோம். அதனைக் கோவிந்தன் காட்சியள வையாகிய விழியிந்திரியத்தால் காண்கின்றான். அதுசமயம் இராமனென்பவன் எதிரே வருவது யானையை தும்பிக்கையு டைமையால் எனப் பிறர்பொருட்டனுமானத்தால் கோவிந்தனுக்கு உணர்த்துகிறான். கிருஷ்ணனென்பவன் யானை வருகிறதென ஆகம (சப்த) அளவையான் உணர்த்துகிறான். ஈண்டு கோவிந்தனுக்குள்ள மூவித அறிவில் காட்சியறிவே மேம்பட்டு ஆகம அறிவும், அநுமிதி அறிவும் கீழ்ப்பட்டு நிற்கும். இது அனைவருடைய அனுபவத்திலும் இருந்துவருகிறது. காட்சியளவையான் ஒன்றை ஐயந்திரிபின்றி உணர்த்து வோமாயின் பின்னர் ஏனைய அளவைகளான் துணியவேண்டு மென்பது அனாவசியமாகும். தற்போது வள்ளுவர் பறையரே யென்பதைக்காட்சியனுபவத்தால் காட்டுவாம்.

பெண் கொள்ளுதல், ஊண் உடை ஒரு சேரக் கலந்து நிகழ்தல், ஒருவகுப்பிற்குள்ளேய் தனித்தனி வகுப்பாயின் அன்னவை கலந்துநிகழா. அந்தணரும் பறையரும் வேறுவேறு வகுப்பராயி

ருத்தலின் அவ்விருவகுப்பினர்க்குள்ளும் பெண்கொள்ளல் ஊண் உடை கலந்துநிகழ்வதில்லை. அந்தணர்கட்டு அவ்வந்தணர் மாட்டே ஊண் உடைகள் கலந்து நிகழ்கின்றன. ஆதலின், அவ்வந்தணர்கள் ஒரு வகுப்பே. அவ்வாறே வள்ளுவப் பறையர் கட்கும் தங்கலான் கோலியன் முதலிய பறையர்கட்கும் பெண் கொள்ளலும் கூடியுண்ணலும் பிறவும் ஒருசேரக் கலந்துநிகழும். அனுபவம் இச்சிதம்பரநாட்டில் பல நிகழ்ந்துவருகின்றன. இதுவிஷயமாக அதிகமாக எழுதப்புகுவது மிகையாகும். அன்றியும் வள்ளுவர் வீடுகள் சேரிகளிலேயே இருக்கின்றன.

வண்ணான் அம்பட்டனும் ஒன்றே. 'பறையா பறையா என்பதைவிட வள்ளுவப்பறையா' என்பது விசேடமென உலகத்தவர் கூறும் மொழிகளும் கிடக்கின்றன. பறையரல்லாத ஏனைய வகுப்பினர் அந்தணர் முதல் படையாட்சி நாடார் வரை ஒன்றாகத் தொட்டுக்கொள்ளும் வழக்கம் காணப்படுகின்றன. ஆனால் அவர்கள் ஊரிலுள்ள வண்ணான் அம்பட்டன் பறையர் முதல் பதினெண்வகை பறையரையும் தொடுவதில்லை. வள்ளுவரைத் தொட்டாலும் பறத்தீட்டுவந்துவிடுகிறது. ஆகையால் இன்னோரன்ன காட்சியளவைகளான் வள்ளுவர் பறையரென்பதுதானே போதரும்.

இனி, ஆகம அளவைகளான் காட்டுவாம் வள்ளுவர் என்னும் பதமானது வள் என்னும் தாதுவினடியாகப் பிறந்திருக்கின்றது. வள் என்னும் தாதுவிற்கு பொருள்கள் வள்ளென்ப, காதுகூர்மை, வலி வளம் வாளே, வாராம் என மண்டல புருடோத்தமன் நிகண்டு கூறுகிறது. இவ்வாறனுள் எதனை வள்ளுவர் விஷயமாகப் பொருள்கொள்வது? இறுதிக்கண்ணதாகிய வாரென்பதையே கோடல் பொருத்தமு டைத்து. வாரால் இறுகக்கட்டிய பறையடிப்பவரையே வள்ளுவரெனக் கூறுவது கம்பராமாயணம் பாலகாண்டம் மந்தரைச் சூழ்ச்சி படலம்,

*'ஏவினவள்ளுவரீ ராமனாளையே*
*பூமகள் கொழுநனாய்ப்புனையுளமெலியிக்*
*கோநகரணி கெனக் கொட்டும் பேரியத்*
*தேவருங்களிகொளத்திரிந்து சாற்றினார்'*

யுத்த காண்டத்திலும், பாடல் 'வாணையுந்திசையும் கடந்தவான் புகழ்

*கோனையின் றெதிர்கொள்வான் கோலமாநகர்*
*தானையுமா சருமெழுக தானென*
*யானையின் வள்ளுவன் முரசமெற்றினான்'*

எனவும்,

மற்றும் அயோத்தியாகாண்டம், உத்தரகாண்டம் முதலியவற்றில் பல பாக்கள் வள்ளுவர் பறையடித்தாரெனக் கூறியிருக்கின்றன.

திருவிளையாடல் புராணத்தில் தடாதகைப் பிராட்டியார் திருவவதாரப் படலத்தில் 28ம் பாட்டு பிராட்டியார் திருவவதாரம் செய்யும்போது

*'சிறைவிடுமின் சிரைக்களமுஞ்சீத் திடுமினே ழாண்டு தேயத்தீட்டும்*
*இறைவிடுமின யல்வேந்தர் திறைவி மினிறை நிதியமீட்டுமாயத்*
*துறைவிடுமினாலயமும றப்புறமும் பெருக்குமெனத் தொழாரைக் காய்ந்த*
*கரைவிடுமின்னயில்வேலான் வள்ளுவனை கூப்பமுனை சங்கறங்கச்சாற்றி'*

எனவும் வரும் பாக்கள் வள்ளுவர் பறையடிப் பவரென்பதை வலியுறுத்துகின்றன. ஸ்ரீ ராமபிரானுடைய காலத்திலும் தடாதகைப் பிராட்டியார்காலத்திலும் இருப்பினும் இல்லாதொழியினும் கவிச்சக்ரவர்த்திகளாகிய கம்பர், ஒட்டக்கூத்தர், பரஞ்சோதி முனிவர் மாமூலர் முதலாயினர் வள்ளுவர் பறையடிப்பவரென அபிப்பிராயப்பட்டிருத்தலின் வள்ளுவர் பறையரேயெனக் கொள்வதற்கு இழுக்கென்னை? மனுஸ்மிருதியில் அந்தராண்டி சுடுகாட்டாண்டி என இருவகைப்பறையராகப் பிரித்திருக்கிறது. ஆண்டு சுடுகாட்டு ஆண்டி என்பவன் பிணத்தை சுடும் வெட்டியார்ப் பறையன் என்பது. அந்தராண்டி என்பவன் பிணத்தை குழியில் புதைப்பவன் என்பது. இவ்வழக்கம் பல இடங்களிலும் நிகழ்ந்து வருகின்றது.

சின்னாட்கு முன்னர் பின்னத்தூரில் செட்டிவகையராவில் ஒருவர் காலமானபோது குமரபண்டாரம் என்பவர் குழிவெட்டும் போது, அவர் சீடரான குப்பன் தலையாரி என்பவர் எனது குருவாயிருந்து உனக்குக் குழிவெட்டுகிற வேலையாயென அடித்திருந்திருக்கிறார். மஹேந்திரபள்ளியில் அண்ணாமலை பண்டாரம் குழிவெட்டாமல் வேறு கிராமத்திற்கு ஜோதிடத் திற்காகப் போயிருந்து வந்தபோது செட்டிகள் குழிவெட்டாமல் போகலாமாவென விசாரித்தார்கள். அப்பொழுது அண்ணாமலை பண்டாரம் இவர்கள் கொடுக்கும் வரும்படி

எனக்குப் போதவில்லை. ஆதலான் பிழைப்பதற்கு வெளியே போகவேண்டியதாயிருக்கிறது. நீங்கள் உத்தரவு கொடுத்தால் 20 குழிகள் ஒருங்கே தோண்டிவைத்து விடுகிறேன். பிணம் விழ விழ கொண்டு புதையுங்களெனக் கூறியிருக்கிறார். சிதம்பரம் ஓமக்குளத்துக்கரையில் பார்ப்போமானால் சங்கு ஊதிக் கொண்டு பிணத்தின் பின்னே போவதை கண்கூடாக காணலாம். ஆகையால், வள்ளுவர் பறையரே என்பதை வேறு பிராமணரால் உணர்த்தல் வேண்டாம்.

சிதம்பரத்திற்குத் தென்கிழக்கில் சுமார் ஐந்து மைல் தூரத்தில் வள்ளுவரிருக்கின்றனர். அவர்களுக்குப்பட்டம் தில்லை வெட்டியாரென வழங்கி வருகிறது. அவர்கட்குச் செப்புப்பட்டய முதலியவையிருக்கின்றன. காவேரிபட்டணம் மணிக்கிராமம் முதலியவைகளில் உள்ள வள்ளுவர்கட்கு நாளைப்போவார் என்னும் பட்டம் வழங்கிவருகிறது. அவர்கள் திருநாளைப் போவார் வம்சத்தாரென அவர்கட்கு முதன்மை பூண்டவராகிய திருநாளைப்போவார் வெட்டியார்த்தொழில் செய்திருந்தாரென்பது.

பெரியபுராணம்

'கூரிலைய முக்குடுமி படையண்ணல் கோயிறொறும்
பேரிகையே முதலாய முகக்கருவி பிறவினுக்கும்.
போர்வைத்தோல் விசிவாறென்றினையனவும் புகலுமிசை
நேர்வைத்த வீணைக்கும் யாழுக்கும் நிலை வகையில்
சேர்வுற்று தந்திரியும் தேவர்பிரானருச்சுனைகட்
கார்வத்தினுடன் கோரோசனையு மிவையரிந்துள்ளார்
'சுவலோடு வாரலை போவார் பின் பொரு சூழல்'
அவலோடு மடுதத்துகண்டாதரித்து குளம் தொட்டார்'

எனவருவன வற்றால் நாளைப் போவார். வெட்டியாரே என்பது வெள்ளிடைமலை. அவர்வம்சத்தாரும் அன்னா ரென்பது தானே பேரிதரும்.

சிலர் நாங்கள் திருவள்ளுவர் சந்ததிகள் என்கின்றனர். திருவள்ளுவருக்குச் சந்ததிகள் இருப்பதாகச்சரித்திரங்களில்லை, சீடர்களாயின் ஏலேலசிங்கர் முதலானவர்களும் வள்ளுவராக விளங்கவேண்டும். அங்ஙனமின்று. அவ்வாறியிருப்பானும் தெய்வப் புலமை திருவள்ளுவருக்கு புலமையால் தெய்வப்புலவரென்றும், பக்தியால் நாயனாரென்றும் இயற்கைப்பெயர் மாதானுபங்கி

யென்றும் ஜாதிப்பெயர் வள்ளுவரென்றும் வழங்கின. அவர் பறையர் குலத்தில் பிறந்தமையால் வள்ளுவரானார். அவர் அக்காலத்தில் பிறப்பால் பிறரால் இழிந்தவராகக் கருதப்பட்டா ரென்பது இடையாலும் கடையாலும் சங்கம் அழியுமென்பதாலும், திருவள்ளுவமாலையில் மாமூலனார் அறம், பொருள், இன்பம், வீடென நான்கின் திறம்தெரிந்து செய்ய தேவை மறந்தேயும் வள்ளுவனென்பரானோர் பேதை அவன் வாய்ச் சொல் கொள்ளார். அறியுடையார் எனக்கூறியுள்ளதாலும் தெரியக்கிடக்கின்றது.

அதனுள் மறந்தும் வள்ளுவனென்பானோர் பேதை என்னுமிடத்து வள்ளுவரென்பது இழிந்த குலமென்றே கருதப் பட்டிருந்தது. இவ்வாறு எழுதுகிற அடியேனும் வள்ளுவனே. அடியேன் எனது குலத்தைத் தாழ்த்தப் பிரியப்படமாட்டேன். இதுசமயம் உலகமெங்கும் சுதந்திர உணர்ச்சி தோன்றிருக்கிறது. உலகமோ வேகமாய் மாறிவருகிறது. இந்தச் சமயத்தில் உயர்ந்த வகுப்பினராகிய ஐயங்கார் பிராமணர்கள் தாழ்ந்த வகுப்பு முன்னுக்கு வரவேண்டுமென்று கருணைவைத்து சகோதரத்துவம் பாராட்டி உண்டுவருகின்றனர். இவ்வாறான உலகமாறுதலை உணராது எனது குலத்தவராகிய வள்ளுவர்கள் தஞ்சை ஜில்லாவில் கூட்டம் கூடித்தாம் உயர்ந்தவரென்றும் தங்களான் பறையர்களைத் தொடக்கூடாது சேரிகட்குப் போகக்கூடாது,

அவர்களுக்கு பஞ்சாங்கம் முதலியவைகளை செப்பக் கூடாது அவ்வாறு போகப்பட்டவர்களை கட்டுபாடு செய்ய வேண்டுமெனவும் துண்டு பத்திரிகைகள் வெளியிட்டிருந்தனர்கள். அதைக்கான எனது கூட்டம் எப்படி முன்னேற்றம் அடையும் என்னும் விசனம் எனக்குப்பலமாக உண்டாயிற்று. உயரவேண்டு மென்று எண்ணங்கொண்டவர்கள் மஹாத்மா ஸ்வாமி சகஜாநந்தம் கூறியதைப்போல் உயர்வதற்குரிய நிலையைச் செய்துக் கொள்ளாது உயர்ந்த வகுப்பினரெனச் சொல்லிக் கொள்ளுவோர் தாழ்ந்தவராகக் கருதப்படுவர். நம் சகோதரர்கள் ஆதி திராவிடர்களைத் தாழ்த்தி தாம் முன்னேற்றம் பெறக்கருதுவது நியாயமன்று. ஆதி திராவிடர் களாகிய எஞ்சகோதரர்கள் தம் குலத்தை குருகுலமெனக் கருதுங்கால் அவர்களை உயர்த்தி நாமும் உயராது

அவர்களை தாழ்த்தி உயர்வது விரும்பத்தகாததன்று. ஒருவரையும் தாழ்த்தாமல் முயற்சி செய்வதே அறிவுடமை

ஐயங்கார் முதலானவர்கள் பஞ்சமர்கட்கு விரோதியாக பலநாளாக கருதப்பட்டவர்கள் அவர்களே, தற்போது தங்கள் பெருமையைக் கருதாது தாழ்ந்தவர்களை உயர்த்த முன்வரும்போது நாமேற்படிம் நம் சகோதரர்களோடு சேர்ந்து உயர முயற்சியாது, மு ஐயங்கார் முதலானவர்கள் நகைக்காக குறுகிய நோக்கத்தைக்காட்டாது உயரவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். யாரேனும் வள்ளுவர் பஞ்சமரல்லர் எனத் தம் ஆதரவுகாட்டி எழுது வாராயின், அதனை நல்வரவேற்கத் தயாராயிருக்கிறேன்.

**வி. யல். பெருமாள் நாயனார்**

**மலர் 2 இதழ் 4 பக் 55 - 58**

# இராமநாதபுரம் கல்லல், கிராமம், உயர்குலத்தோ ரென்றழைக்கப்படும் உண்மைச் சூனியர்கட்கோர் உத்தம அறிக்கை

**க**னவான்களே!

*1920 வருடம் பெப்ரவரி மாதம் 15 தேதியன்று வெளிவந்த 'ஆதிதிராவிடன்' பத்திரிகையின்கண், நீங்கள் தாழ்ந்த வகுப்பார்களென்றழைக்கப்படுகின்ற ஆதி திராவிடர்களைப் படுத்திய பலவித ஹிம்சைகளைக் கண்ணாரக்கண்டு, வாசித்து, உங்களுக்கிருக்கிற மதிதீக்ஷண்யமான மூளையின் சக்தியையும், லௌகீக, வைதீக, அனுபோகங்களையும், கனங்கொண்ட மற்ற தன்மைகளைப் பற்றியும் மிக்க வானந்தங்கொண்டனம். அந்தோ! உங்கட்குற்ற அறிவீனந்தானென்ன, நுந்தம் பொறாமை, அழுக்காறு, முதலிய துற்குணங்களே எங்களை அதோகதியாக்கு மென்பதற் கோரையமுளதோ. கலியாண முதலிய சத்காரியங்கட்குப் பந்தல் போடக் கூடாதென்றும், சாஸ்திர சம்பந்தங்கள் கூடா தென்றும், கலியாணம் என்னும் வார்த்தையையே சொல்லக் கூடாதென்றும், சண்டாளர்களுக்கு மில்லாத மூட நிபந்தனை களைக் கொண்டுவந்த, உங்கள் மானிட ஜன்மத்தை ஜகதீஸன் என்ன காரணத்திற்காக சிருஷ்டித்தானோ தெரியவில்லை. இவ்விதத்தடைகளையெல்லாம்,*

*ஆதி திராவிடர்களுக்கேற்படுத்திவிட எந்த அரசனுடைய அதிகாரச் சட்டமுங்கட்குக்கிடைத்தது. அல்லதெந்த விதிகாச புராண, ஆதரவைக்கொண்டீர்கள். உங்கள் புத்தியற்ற சித்த சபலத்திற்காக நாம் மெத்தவும் விசப்படுகின்றோம். மரண*

மடைபவன் கடைசியாக உதைத்துக்கொண்டு உயிர்விடுந்தன்மை போலுமுளதுங்கட்கூற்று. குளங்களிற் தண்ணீரெடுக்கக் கூடாதென்றும், வீடுகளுக்குத் திண்ணைகள் வைக்கக் கூடாதென்றும் ஏற்படுத்திய நிபந்தனைகள் ஒவ்வொன்றும் ஒருகோடி பெறும். போலிமாக்களே, புல்லாளை செய்து கொல்லையிற் வைத்தாற் போல, பிரம சிருஷ்டியில் அசத்துகளாயத் தோன்றி அதோகதிக்கு ஆஜராயிருக்கும் நீங்கள் மகாத்மாக்களின் மரபிற்றோன்றியவர்களும், மானிடர்களிற் மிகச்சிறந்தவர்களுமாகிய 'ஆதிதிராவிடர்களே' அசட்டை செய்து அக்ரமம் புரிய பார்த்தால் எல்லாருக்கும் பொதுவாகிய திருவருள் உங்களைச் சும்மா விட்டுவிடுமா?

நீங்கள் தனவர்ந்தர்களாயும், சகல ஞான பண்டிதர்களா யிருந்தாலும், ஜீவகாருண்யமும் அன்புமில்லாவிடலாவதென்னோ! ஏ அறிவிலிகாள்! சகல விஷயத்திலுமுங்கட்கு சமானராயும், அரிதாகிய மானிட சொருபர்களாயுமிருக்கும், ஆதி திராவிடர் களை மிருகங்களைப்போல நடத்த முயன்ற, நீங்கள் நன்மை பெறுவீரல்லீர். எந்தக் காலத்திலும் எங்கள் மனத்தைப் புண்ணாகச் செய்யும் நீங்களுமுங்களைச் சேர்ந்தோர்களுமடையுங்கதி துற்கதிதான். 'யானையானது மதங்கொண்டால் தானே மண்ணை வாரி போட்டுக்கொள்வது போல' உங்களுடைய மூட விலாச அந்தகார நிபந்தனைகட்கு, அடிமைப் பத்திரமெழுதி கொடுக்க வற்புறுத்தியதும், அதை மறுத்தவர் களிலொருவரை நீங்கள் அடித்ததும்,

வீணாய் போய்விட்டதென்று நினையாதீர்கள். ஆதி திராவிட மஹா ஜனத்தலைவர்களும், மற்றுமேதாவிகளும், உங்கள் குறும்பு ஒடுங்கும்படி சீர்திருத்தமென்னும் ஒரே ராமபாணம் விடப்போகின்றார்கள். உங்களுடைய அக்ரமங்களை முன்னமே தெரிந்துகொண்டு, தங்களுடைய துஷ்டநிக்ரகம் என்னும் வீரகோதண்டத்தைத் தொடுத்திருக்கின்றார்கள். விடுக்கு முன்னமே, சரணாகதி யடையுங்கள். மமகாரங்களாலும், அழுக்காறு, துற்குண முதலியவைகளாலும் பருத்த கனவான்களே! உங்களுக்குச் சுருக்கமாக சில விஷயங்களைக் கூறி புத்திபுகட்டி, விளங்க வைத்து, இவ்வரிய வியாசத்தை முடிப்போமாக!

மானிடராய்ப் பிறந்த நாமொவ்வொருவரும் சமானரே. நான்கு வர்ணாசிரமங்களும், நம்மொவ்வொருவருக்கு மடுத்ததே.

பிராமணன் பறையனாகலாம், பறையன் பிராமணனாகலாம். தேவர்கள் நரர்களாய் வரலாம். நரர்கள் தேவர்களாய்ப் போகலாம். கள் குடித்து, புலால் தின்று காமுகனாய்க் கவறாடி கண்மூடிக் காலத்தைக் கழிக்கும் மானிட மூடப்பதர்களைச் சண்டாளர்கள் (தாழ்ந்த வகுப்பினர்) என்று உலகம் அழைக்கும். அஃதற்றவர்களை மேன்மக்கள் (உயர்குலத்தார்) என்று உலகம் அழைக்கும். இதுவே சாஸ்திர புராணங்கள் பெரியோர்கள், போதிப்பதும். ஆதி திராவிடர்களிலெத் தனைபேர், மேன்மக்களவைகளை நீக்கி புகழ் பெற்றிருக்கின்றனர். இல்லையென்று மறுக்க நீங்கள் மாத்திரம் பிரமவித்தையை தெரிந்தவர்களா? பிறப்பினாலும், கர்மத்தினாலும், சாதி பேதங்கிடையாது. உலகத்திற்றோன்றின பிறகு அவனவன் செய்கை கட்குத் தகுந்தபடி, சிறுமையும், பெருமையும் பெறுவானே தவிர வேறென்ன! நீங்களே தெய்வ சாக்ஷியாய் ஆராய்ச்சி செய்து பாருங்கள். வேலையற்ற அழகிய பட்டாசாரி தன் மகளுக்கு க்ஷவரக்கல்யாணஞ் செய்தது போல, வீணாக வாதிட்டு காலத்தைக்கழிக்காதீர்கள்.

பிறக்கும்போது, ஒவ்வொருவனும், சூத்திரனே! நீசனே யாவன். பின்பல்லவா செய்கைகட்குத் தக்கபடி நாலுவருணாச்ரமங் களிலேறுவதும் மேற்குலத்தானென்று பட்டம் பல பல பெறுவதும். ஜீவகாருண்யம், அன்பு, தெய்வபக்தி, தர்ம சிந்தனையுள்ளவர்களும், பழமையாகிய இந்த உலகத்தை லெளகீக வைதீகமென்னும் நெறிகளினூடை, அத்வைதமாகப் பார்ப்பவர்களுமே, மேம்மக்கள் சர்வஞான பண்டிதர். ஆதி திராவிடர்களிலெத்தனையோ பேர், அவ்வித நிலையிலிருக் கிறதையும், வீணாய் குதிரை முட்டையைப் போன்ற, மேல் குலத்தாராகிற உங்களிலவ்விதமில்லாததையும் உலகம் அறியும், தெய்வமறியும், நீங்களுமறிவீர்கள். அறிந்து மேனோ அறியா தாரானீர். கேண்மீன்! முன் உங்களால் நெருக்கப்பட்ட ஆதி திராவிட சகோதரர்களை, மறுபடியும் நெருக்காமல், பட்சமாய் இருக்கும்படி வேண்டிக்கொண்டு, இவ்வியாசத்தில் மலிந்து கிடக்கும் புத்திமதிகளை யுட்கொண்டு 'நல்லவனுக்கு ஒரு சொல். நல்லமாட்டுக்கு ஒருசூடு' என்னும் பழமொழியை உண்மைப்படுத்துங்கள்.

நீலகிரி, க.த. சந்திரகாச பாகவதன், பாசமை

மலர் 2 இதழ் 4 பக் 60 - 61

## மானத தரிசனம் அல்லது ஸ்பிரிட்லஷம் (Spiritualism)

**ந**ம் தேசத்தில் (இந்தியாவில்) ஆதிகாலத்திலிருந்தே 'மானத தரிசனம்' அல்லது 'மாய சிருஷ்டி' தியான தோற்றம் எனும் பல நாமங்களை புனைந்து ஞானமாகிய 'முக்தி'யை அடைய வேண்டி பல மகான்கள் தங்கள் தங்கள் தீர வைராக்கியத் தைக்கொண்டு கடவுளை கண்முன்கண்டு இன்பமுறலாயினர்.

இதை இக்காலத்தில், மெஸ்மெரிசம் மனோசக்தி ஞான தரிசனம், ஸ்பிரிட்லெஷம், தன்மனமருப்பு முதலியவைகளை நம்தேசத்தார்களும் இதர வருணத்தாரும், ஐரோப்பியரும் கண்டு மகிழ்வடைந்து அவரவர்களுக்கு எண்ணியவாறு எழுதுகிறதும் பேசுகிறதுமாக இருக்கிறார்கள். ஆனால் கடவுளை நாம் காண்பது இலேசான காரிய மல்ல. தன்னை அடக்குவதும், தன்னைப்போல், பிறர்மேல் பாசங்கொள்வதும் அடிக்கடி ஓம், ஆமேன், ராமா, மாயவா, கிருஷ்ணா, சிவமே! ஜெய், ஜெய்சீத்தாராம் என மனனம் செய்துகொள்வதும்.

இன்னும் தன்னால் கூடிய 'தம்' பிடிப்பதும் இக்காரணத்திற்கு ஓர் அரிகுறியாம், ஆனால் மிஸ்டர் கானன் டொயில் (Canondoyle) என்னும் 'ஸ்பிரிட்டல்' நிபுணர் வரைந்துள்ள புஸ்தகத்தை படித்தால் சிலது புலப்படுமாயினும் நமது இந்தியா நிப்புணர் களான சுதேசிகள் பன்மடங்கு துள்ளிபமாக காட்டியிருக் கிறார்கள். இதுமிக்க சிரேஷ்டம் என்பது எமது துணிபு. நாம் சாதாரணமாக 'கடவுளை' மனிதன் எப்படி காண்பது இது

வெல்லாம் பொய் என நமது பிடிபடாத நண்பர்கள் கேலி செய்யலாம். அது ஒருபோதும் பொய் இல்லை! வாஸ்தவமே.

நாம், இந்தியாவில் பிறந்தோமாயினும், நாம் எக்காலத்தில் ஜெனித்துள்ள 'பிதுர்கள்' என்பதை முக்கியமாக அறிய வேண்டிய ஓர் கருத்து என்பது நான் சொல்லாமலே விளங்கும். (பிதா பிதாக்கள் தலைமுறை) பூமி வடிவாயமைந்த காலத்திலிருந்தே நமது ஜெனனமும் சுழன்று சுழன்று வருகிறது. 'கடவுளும் நாமும்' ஒன்று என்பதும் அறியலாம். உமியாகியதோடு தானியத்தினின்றும் நீங்கினால் ஆகாரத்திற்கு எப்படி யுதவுமோ அவ்வண்ணமே நமது உயிர் நீங்கினால்'சதை' மிருகத்திற்கும் மண்ணிற்கும் ஆகாரமாகும். எனினும் நாம் இந்துவாக இருந்தாலும், மகம்மது, கிறிஸ்டியன், முதலிய எம்மதமுடைய வனாயினும் அவர்கள் கொள்கைப்படி சுவாமி தெரிசனம் செய்யலாம். எல்லாம் வல்ல இறைவனைக் காணலாகும்.

நெல்லைய்யா அருளானந்தம்

மதுரு பாஷிதம்.

மலர் 2 இதழ் 4 பக் - 62

## கடன் படல்

ஒருவர் மற்றொருவரிடம் ஓரவசரமாகவோ, ஓர் சுபகாரிய மாகவோ அல்லது மற்றெவ்வித ஓர் காரணத்தைக்கொண்டோ, கைமாற்றாக நாணயம் பெறுதலே கடன்படல் எனக்கூறலாம்.

ஆனாலங்ஙனம் கடன்படுவதினால் இம்மாநிலத்தில் அநேகர்களடையும் துன்பங்களை எங்ஙனமெடுத்தோதுவது? எத்துணைப் பெருந்தனவந்தராயிருப்பினும் கடன்படத்தலைப் படுவரேல் கூடியவளவில் தஞ்செல்வமெல்லாமிழந்து தரித்திரத் தசையடைந்து யாவராலுமிகழப்படுவர்.

இம்மையிலே மனிதர்களடையும் துன்பங்களெல்லாவற் றினையும் விட கடனாலுண்டாகும் துன்பத்தின் மிக்க துன்பம் பிறிதொன்றுமில்லை. பெரும் பான்மையோர் ஆபரணம் செய்வித்தற்கும் வீடு கட்டுவித்தற்கும் நிலம், தோட்டம் முதலியவை வாங்குவதற்கும் கடன்படுகிறார்கள். ஆனால், கடன்பட்ட ரொக்கத் துகையுடனே வட்டி என்னும் வாலும் கூட வளர்ந்த பின்னர்,

*'வட்டிமேல் வட்டியிட்டு வாங்குமிந்த தேசமதில்*
*செட்டிமார் கைவிழுவர் திரும்புவது கூடியதோ.'* _ இல்லறமாலை.

என்றபடி மேட்டிமையுடன் அக்கடனைத் தீர்க்கப் பிறிதொருவழியுமின்மையால் தாட்டிகமாக தாங்கள் முன்னர் கடன்பட்டு வாங்கிய ஆபரணங்களையும், வீடு நிலம் முதலிய சகலவைகளையும் விற்கத்தலைப்படுகின்றனர். அந்தோ! பரிதாபம்! ஆனால் அவைகள் வாங்கியவிலைக்கு விலையாகுதலே

அரிதிலமரிது; அங்ஙனமெனின் தான் பட்ட கடன் தொகையாகிய முதலுக்கும் வட்டிக்கும் எவ்விதம் போதும்? போதாமையினால் தங்களிடத்து முன்னுள்ள தாவரசங்கமப் பொருளை விற்றுக் கொடுத்துவிட்டு வறியர்களாய் வருந்துகின்றனர், ஐயோ என்னே அறியாமை!

*'கடன்கொண்டு வாங்கியதைக் கடன் தீர்க்க*
*விற்றுமந்தக்கடன் தீர்க்க ஏதுவில்லாக் கசடர் நிலை யென்ன நிலை'*

இல்லறமாலை

என்பதற்கிணங்க கடன்படுவோர் முதலாவதாகத் தனிகனைக் கண்ட மாத்திரத்தில் பசுவைக்கண்ட கன்றானது எவ்விதமனக் குதூகலத்துடன் ஓடிவருகின்றதோ, அந்தன்மைபோன்று வெகு பேரானந்தத்துடன் தனிகனிடத்தில் அஃதாவது கடன்கொடுப் பவனிடத்தில் வந்து வெகுவாக நயந்துவார்த்தையாடி அவனிடம் கட்டளைப்பிரகாரம் ஒப்புக்கொள்வதாக ஒப்பிக்கடன் படுகின்றனர். அந்தோ சிற்சில நாட்கள் கழிந்தபின்னர் தனிகன் எதிர்ப்படும் தருணத்தில் 'கடம் உடையார் காணப்புகல் இன்னா' (இன்னா நாற்பது) என்றவாறு அவனைக்கண்டு, பெரும் பூதத்தைக்கண்டாற்போல் மிக்க பயத்தோடும் நாணத்தோடும் நடுநடுங்கி ஒளிப்பிடம் தேடி ஓடுவர். ஐயோ என்னே மதி யீனம்! பொருளில்லையானால் கூலித் தொழில் செய்தாயினும் வயிறுவளர்க்கலாம். பிச்சை யேற்று உண்ணலாம். பசிப்பிணி தாங்கவொண்ணாது இறக்கினுமிறக்கலாம். இவைகளெல்லாம் அவமானங் களல்ல. இவ்வித செயல்களால் பிறருக்குயாதொரு கெடுதியும் நேராது. ஆனால் கடனோ இப்படிப்பட்டதன்று.

இது நிற்க பெருவியாதி முதலிய கொடியபிணிகளாலுண்டாகும். அவஸ்தை களையும் ஆறாத்துயரத்தையும் கஷ்டத்தையும் பொறுக்கினும் பொறுக்கலாம். ஆனால் கடனாலுண்டாகும் துயரத்தையோ ஹா! ஈசனே! பொருத்தல் மிக அரிதே. இது பற்றியே.

*'விடங்கொண்டமீனைப் போலும் வெந்தணல் மெழுகுபோலும்*
*படங்கொண்ட் பாந்தள் வாயிற்பற்றிய தேரைபோலும்*
*திடங்கொண்ட ராமபாணம் செருக்களத்துற்றபோது*
*கடன்கொண்டார் நெஞ்சம் போற் கலங்கினானிலங்கை வேந்தன்.'*

என இராமாயணத்தில் கூறிய வாற்றான் நாமறியக் கிடக்கின்றது.

எனவே, 'உத்தியோகம் புருஷலட்சணம்' என்பதற்கிணங்க ஒருவர்பதவியில் உத்தியோகம் புரிபவரொருவர் வரவுக்குமேல் செலவு செய்ய நேரிடுமேல் அன்னவரெவ்விதமும் கடன்படத் துணிவரென்பது பரம நிச்சயம். அங்ஙனம் நடந்துவருகின்றமையையும் நாம் கண்கூடாகக்கண்டும் வருகிறோம். இதுநிற்க சில உத்தியோகஸ்தர்கள் மேற்காட்டியவாறு வரவுக்கதிகமாக செலவு செய்துவிட்டு கடன்கொடுக்கும் தனிகர்களிடத்தில் பெரும்பாதிதொகைகளை நூற்றுக்கு *50* வீதம் வட்டியாக வாங்கிப் பின்னர் அக்கடனை தீர்க்கவழியில்லாது மீண்டும் மற்றொருபவரிடம் கொஞ்சநாணயங்களை வாங்கிக்கொண்டு சிங்கப்பூர்,பெனாங்கு, முதலிய தேசங்களுக்கு ஓடிவிடுகின்றமையை நம்நேயர்கள் அறிந்த விஷயமே. தவிரவும் தங்கள் தங்கள் வரவுக்கேற்ப மட்டாக செலவு செய்தலே அறிவாளர் கடமையாகும். அங்ஙனமின்றி வரவுக்குமேலே செலவு செய்யப்புகுவோர்,

*'ஆனமுதலிலதிகஞ் செலவானால்*
*மானமிழந்து மதிகெட்டுப் _ போன திசை*
*எல்லார்குங் கள்ளனாயேழ்பிறப்புந் தீயனாய்*

நல்லார்க்கும் பொல்லனா நாடு' என நம் ஞானத்தாயான ஔவை பிராட்டியார் கூறியுள்ளவாறு கடன் படத்தலைப்பட்டு மானமிழந்து எல்லாருமிகழப்படுவரென்பது வெளிப்படை. ஆகவே, கடன்படுவோர் பொய் சொல்ல அஞ்சார்; பொய்ப் பத்திரங்கள் பிறப்பிக்கவோ, பொய்வழக்கு பேசவோ, களவு செய்யவோ, அஞ்சாத தீரவீரர்களாவர். கடன்படல் எல்லாப் பாவங்களையும் வலிந்து கைபிடித்து அழைக்கும் என்பதை நன்குணர்ந்தும் இவர்கள் இக்கொடிய செய்கைக்கு உட்படுவதை யோசிக்கில் விசனிக்கற்பாலதாம்.

நிற்க, சிலர் கடனை வாங்கிக்கொடுக்க ஏதுவில்லாமற் தற்செயலாகக் கடன் கொடுத்தவன் இருப்பிடத்திற்கு சமீபத்தில் செல்லும் சமயம் கேவலம் பெண்களுக்குச் சமானமாக முக்காடிட்டு போகின்றனர். ஐயோ என்னே விந்தை! இம்மட்டோ அங்ஙனம் கடன்வாங்கிக் கடனில் மூழ்கியவருள்ளே அநேகர் தமது

வீடுவாசல் முதலிய சகல சம்பத்தையுமிழந்து இருக்க இல்லமின்றியும், உடுக்க வஸ்திரமின்றியும் அலைகடல் துரும்புபோல் அலைகின்றனர். இதில் சிலரோ உத்தியோகத்தினாலே ஜீவிக்கப்புகுந்தும் தங்களுக்குக் கிடைக்கும் வேதனத்தை அதாவது சம்பளத்தைத் தனிகர்கள் மாதந்தோறும் வந்து வட்டியின்பேரில் வாங்கிக்கொண்டு போய்விடவே இவர்களிடத்தில் யாதொரு நாணயமுமின்றி கண்கலங்கி நிற்க நேரிடுகிறது. யாண்டும் கடன் தீர்க்க வழியில்லாமல் உத்தியோகத்தை விட்டு ஒளித்துக்கொண்டு திரிவாரும், மேற்காட்டியவாறு ஊரைவிட்டு கண்ணுக் கெட்டாத தூர தேசங்களுக்கு ஓடிப்போவாருமநேகர்.

ஆயினும் சிலரோ, இவ்விதம் செய்தற்குக் கூடாமையினால் மனவருத்தத்தினாலும், நாணத்தாலும் நாடோறும் சரீரம் மெலிந்து துயருறுகின்றனர். அந்தோ பரிதாபம்! இவர்களது அறியாமைதானென்னை!

எனவே, கடன்படத்தலைப்படுவோர், தாம் கடன்படுவதற்கு முன்னர் தற்போது தமக்கு இந்தப்பணத்தொகை அவசியமாகுமா? அல்லது இக்கடனைத் தீர்க்க நமக்கு சக்தியுண்டா? தீர்த்தற்குப் பொருள்வழியிலேதேனும் நம்மிடத்திலுண்டா? இரண்டாவதாக அப்படியே நாம் கடன்படும் விஷயத்தில் தொகைக்கு வட்டி வளர்ந்துவிடுமன்றோ? அப்படியானால் நாம்படும் கடனுக்கு நமது தாவர சங்கமப்பொருளையும் விற்க நேரிடுமே; அங்ஙனம் தாவரசங்கமப்பொருளை விற்றுவிட்டபின்னர் நாம் கீழான திசையிலிருக்கும்படி நேரிடுமே என்பதைச் சற்று ஆலோசிக்க வேண்டியது அத்யாவசியம்.

அவ்வாறு சற்றுற்றுக்கவனிக்கில் அப்போது கடன்படுவ தாலுண்டாகும் தீமைகள் செவ்வனே புலப்படும் என்பது எமது துணிபு. இதுநிற்க சிலர் வியாபாரஞ் செய்வதற்காக ஓர்தனி கனிடத்தில் கடன்படுகின்றனர். ஆனால் வியாபாரத்திற்காக வாங்கும் தொகைகளோ பெருந்தொகைகளாகவேயிருத்தல் வேண்டும். வாங்கிய சிலநாட்களோ அல்லது மாதங்களோ கழிந்தபிறகு அத்தொகையை வட்டியுடன் மாதந்தோறும் சொற்ப சொற்பமாக செலுத்திக்கொண்டு வருகின்றனர். இப்படியாக செலுத்தி வருவதில் மொத்தமாக வாங்கிய தொகையின் வட்டியை மட்டுமே கட்ட ஏதுவாகிறதேயன்றி, முதற்பணத்தைக்கொடுக்க

வகையிற்றி இன்னும் பிறரிடத்திலும் ஏதேனும் ஆபாசமான அதாவது கந்த புராணத்திலுமில்லாத பொய்யுரைகளெல்லாம் ஒருங்கேயமைத்து நயமான வார்த்தைகளால் தனிகர்களை நயந்து எல்லாவாற்றானும் அவர்கள் மனதைத்திருத்தி கடன் படுகிறார்கள்.

முதலாவதாக தான் பட்ட கடன் தொகையில் சாமான்களை வாங்கியபின்னர் அதிகவிலைமுதலாக்கித்தான் தனிகனுக்கு செலுலத்தவேண்டியிருக்கிறது. அங்ஙனம் முதலும் வட்டியும் மாதந்தோறும் செலுத்தவேண்டுமெனில் வியாபாரம் நன்கு நடைபெற்றாலொழிய மற்றபடி தனிகனுக்கு வகைசொல்ல அறியாதபடி திகைத்துப்பின்னும் மறுகடன் படநேரிடுகிறது. ஆகவே ஒருவர் வியாபாரஞ்செய்யத் தொடங்கிக்கடன்பட்டு அதனைகொடுக்க சக்தியற்று அன்ன ஆகாரமின்றி வெட்கத்துடன் தான் எடுத்த ஓர்முயற்சியான கருமத்தையும் கைசோரவிட்டுத் துக்கசாகரத்தில் மூழ்கி துன்புறுகின்றனர். ஐயோ என்னே இவர்களின் கூற்று! என்னே ஓர் விந்தை!!

'எதிரதாக் காக்குமறி வினார்க்கில்லை
யதிரவருவதோர் நோய்.'

அஃதாவது வருந்துன்பங்களை முன் அறிந்துகாக்கும் அறிவுடையோர்க்குத் துன்பமில்லை என்பதேயாம். ஆனாலின்னுமநேகர் ஓர்தனிகனுக்குச் செலுத்தவேண்டிய முதலையும் வட்டியையும் மற்றொருதனிகனிடத்தில் வாங்கித் தீர்த்தும் சில காலங்கள் சென்றபின்னர் அக்கடனையும் அவ்வண்ணமே மற்றொரு தனிகனிடத்தில் வாங்கித் தீர்த்தும் வருகிறார்கள். இப்படியாக கடன்விர்த்தியாய்விட முடிவிலே தங்கள் ஆஸ்தி பூஸ்திதியாயுள்ள காணி பூமி ஏதாகிலுமிருப்பின் அவற்றை விக்கிரயஞ்செய்து அக்கடனை தீர்த்துவிட்டு ஏங்கித்தியங்கி நிற்கின்றனர். ஆகவே முதலாவதாக கடன்படும் சமயம் மிகவும் மனஞ் சந்தோஷமாகத்தானிருக்கும். பின்னர் அக்கடனைக்கொடுக்கும் சமயத்திலோ படும்துயரமோ செப்பத்தரமன்று! ஆகலான் 'முன் இனிக்கும் பின் கசக்கும்' என்பதை சற்றுற்று நோக்கியே எது ஒரு விஷயத்தையும் கவனமாக செய்தலுத்தமம்.

நானிதுகாறும் கூறிவந்தவைகளை தாங்கள் மிகவும் ஊக்கத்துடன் கவனித்து வந்திருப்பீர்களென்றே நினைக்கிறேன்.

ஆகவே கடன்படுகின்றமையால் வரும் துன்பங்களநேகமென்பது கனவான்களறிந்த விஷயமே. இது நிற்க சிலர் பின்வருபன வற்றை சிறிதேனும் யோசியாது செய்கின்றனர். இதுபற்றியே,

*'வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை யெரிமுன்னர்*
*வைத்தூறு போலக்கெடும்'*

எனத் தெய்வப்புலமை வாய்ந்த திருவள்ளுவநாயனார் கூறியிருக்கின்றார். அதனுண்மை பொய்க்காவண்ணம் பெரும்பான்மையோர் பலர் குடியைக்கெடுத்து தாமே வாழ நினைந்து அவரிடத்தே கடன்வாங்கிக்கொண்டு அவரை வஞ்சிக்கும் பொருட்டு எல்லாப் பொருள்களையும் தங்களினத் தாரிடத்திலாவது இதர நண்பர்களிடத்திலாவது அன்னவர்களை முழுவதும் நம்பி வைத்துவிட்டு பின்பு இனத்தார்களோ அல்லது நண்பர்களாலேயே வஞ்சிக்கப்பட்டு யாதாமொன்றும் பேசமாட்டாது ஏங்கி வருந்துகின்றனர் ஆ! ஆ! இவர்களது அறியாமையை யாதெனக் கூறலாம். தாம் பிறரை வஞ்சித்தும் தம்மைப் பிறர் வஞ்சியாரென்ற முழு எண்ணங்கொள்ளும் பேதமையை யாதெனக் குறிப்பிடலாம்.

*'கடம் உண்டுவாழாமை காண்டல் இனிது*
*நிறைமாண்பு இல் பெண்டிரை நீக்கல் இனிது*
*மனமாண்பு இலாதாரை அஞ்சி அகறல்*
*எனைமாண்பு நன்கு இனிது' (இனியவை நாற்பது)*

அதாவது கடன்வாங்கி ஜீவனஞ் செய்யாதிருத்தலைப் பார்த்தல் நல்லது. அன்றியும் ஒருவன் தன் சிநேகனிடத்தில் ஓரவசர நிமித்தமாக கடன்வாங்கி அதனை குறித்த தினத்தில் கொடுக்க தவறுகிற விஷயத்தில் அன்னவனது மனதானது எவ்வளவு வருந்துகிறது. மீண்டும் ஒருவருக்கொருவரிருந்த நட்பும் அகல நேரிடுகிறதன்றோ! என்னே பரிதாபம்!

எனவே கடன் வாங்கிய ஒருவன் தான் மற்றொருவனிடத்தில் வாங்கிய கடனை கொடாவிடின் உண்மையில் அவன் செய்த புண்ணியமெல்லாம் தனிகனை அதாவது கடன் கொடுத்தவனைச் சாரும். இதுவுந்தவிர வாங்கின கடனைத் தீராமல் ஒருவன் இறந்து போவானேயாகில் அவன் அளவில்லாத காலம் நரகத்திலே கிடந்தழுந்துவானென்பதாக பெரியோர்களினுரை களால் நாமறியக் கிடக்கிறது. ஆகலான் 'கடன்' எனும்

தீயவொழுக்கத்தையறவே யொழித்து எல்லாம் வல்ல இறைவனின் திருவருளால் நம்மிடத்து உண்டாய பாக்கியம் சொற்பமேயாயினும் அதனைக்கொண்டு நமது நல்லறிவோடுங் கூடி காப்பாற்றுதலே மிகவும் நன்மையை பயக்குமென்பது சிறியேனது துணிபு.

அறிவிற்சிறந்த பெரியோர்களே!

இதோ என் சிற்றறிவிற் கெட்டியவாறு 'கடன்படல்' என்னும் விஷயத்தைப்பற்றி ஈண்டு எழுதப் புகுந்தனன். ஆகலான் அன்னபட்சியானது பாலிலுள்ள நீரைப்பிரித்து எவ்விதம் பாலைமாத்திரம் அருந்துகின்றதோ, அத்தன்மைத்து யான் வரைந்திருக்கும் இவ்வியாசத்தின்கண் காணுங் குறைகளை,

*'குணநாடிக் குற்றமு நாடிய வற்றுண்*
*மிகைநாடி மிக்க கொளல்'*

என்பதற் கிணங்கவும் குற்றங்களைந்து குணத்தை மாத்திரம் கிரகித்துக்கொள்ளுமாறு மிகத்தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

*'எப்பொருள் யார்யார்வாய் கேட்பினு மப்பொருள்*
*மெய்ப்பொருள் காண்ப தறிவு'*

பொ. கனகசபை

1. மலர் 2 இதழ் 5 பக் 77 - 78

2. மலர் 2 இதழ் 6 பக் 91 - 93

3. மலர் 2 இதழ் 7 பக் 107 - 108

# திராவிட பாஷாபிவிர்த்தி

**ந**மது இளம் *'ஆதிதிராவிடன்'* சென்ற ஒரு வருட கால முற்றுப்பெற்று, ஐந்து மாதகாலமாய் செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல் என்றவாறு, நம்மரபினர்களுக்கோர் திலகம்போல் உருண்டு திரண்டு ஓர்வடிவமாகி சீர்பெறும் இலங்கை மாநகரின்கண், இந்தியவாசிகளாகி திராவிடர்களுக்காக கீழ் திசையிலுதயமாகும் சூரியனைப்போல், தனது கிரணங்களால், தாயானவள் தனது மதலைக்குற்ற துன்பத்தை கண்ணுராது, ஜீவனைக் கொடுப்பதுபோல், தனது மக்கட்குற்ற தீராத இகழ்ச்சியைச் சுட்டெரித்து, புகழ்ச்சியை நிலைநாட்ட முயற்சிக் கின்றதை நினைக்கின் சந்தோஷமே சந்தோஷம். பழங்குடிகளுக் குண்டான கொண்டாட்டமே, கொண்டாட்டம். நமதிளந்திராவிடன் நடைபெறும் நாள்முதல், இன்று பரியந்தம், நம்மரபினருக்கு வேண்டிய முன்னேற்றங்களை, அநேகபூமான்கள் நம்தாய்ப் பாஷையாகிய தமிழில் வியாக்யானித்திருக்கிறார்கள்.

கரும்பு தின்ன கைக்கூலி கேட்டகதைவாறு அநேகர், இச் சிறுமதலையின் சாராம்சங்களை வாசித்தரிய நேரமின்றி மூலைமுடுக்கில் போட்டு கடைசியில் குப்பையோடுசேர்த்து விடுகிறார்கள் என்னேபரிதாபம். இதுதானா நமது தாய் பாஷையில் அபிமானம் வைக்கிறது? இதுதானா நாம்பிறக்கும் பொழுதே தாய்ப்பாஷையோடு அஅ. ம்ம். மாவென்று குழறிக்கொண்டு பூமியில் வீழ்கிறது? எழுபது வயதானாலும் ஏடுகைவிடேல் என்று ஔவையார் போதித்ததுமிதுதானோ?

சிலர் தங்களுக்கு ஆங்கிலம் தெரியாதிருந்தாலும் ஆங்கிலப் பத்திரிகைகளை வாசிக்கத் தெரியுமென்பதாக கையில் வைத்துக்கொண்டே நடிக்கிறார்கள். தமிழ்ப் பத்திரிகளைக் காணும் பொழுதே கோபம்பிறந்துவிடுகிறது. ஆகவே நமது *திராவிடனில்* மாத்ருபாஷாபிமானி என்பவர், நம் தாய்பாஷையாகிய தமிழிலுள்ள கிரந்தங்கள், பத்திரிகைகள் வாசிக்கவேண்டுமென்றும், ஆங்கிலங்கற்றவர், கற்கிறவர், கற்பவர், கற்பிக்கப்படுகிறவர்யாவரும் தமிழ்ப்பத்திரிகைகள் கிரந்தங்கள் முதலியவற்றைப்படித்து அவைகளை விர்த்தியாக்கும் படி பாஷாபிமானத்தோடு யாவரும் நன்குணர எழுதியிருக்கிறார். ஆதலால் நாம் ஒடுக்கப்பட்டவர்களென்றும் நமது ஜீவகால உத்தியோகத்திற்காக ஆங்கிலம் இன்னும் இதரபாஷைகளை அபிமானிப்பதுபோல் நமது சுயபாஷையிலும் அபிமானம் வைக்கக்கூறுகின்றாம்.

*மடல்பெரிது தாழை மகிழினிதுகந்தம்*
*உடல் சிறியரென்றிருக்க வேண்டாம்*

என்று ஔவையார் கூறியவாறு நாம் ஒடுக்கப்பட்ட ஜாதி யென்றும், நாம் முன்னேற்றமடையக்கூடாதென்றுணர்கிறது பெருந்தவறு. பிரமாண்டமான பர்வதங்களை உடைத்துத்தகர்க்கக் கூடியதும் ஓர் சிறிய சிற்றுளியே. மனிதரால் வசப்படுத்தக் கூடாத கஜேந்திரனையும் அடக்கக்கூடியதும் ஓர் இரும்பு போன்ற சிறிய அங்குசமே. ஆதலால், நமது பாஷாபிவிர்த்தியை கல்விக் களஞ்சியங்களால் மேன்பாடடைய எதிர்நோக்குவாம்.

இந்தியாவில் நமது தாய்ப்பாஷையாகிய தமிழ் வழங்கப் பட்டதாவென்று ஆராய்வாம், சுமார் கி.மு. நாலாயிரம் வருஷங்களாய்த் திராவிடர்களும் அவர்கள் தமிழும், திராவிடர்கள் (அல்லது பூர்வகாலதேவர்) என வழங்கப்பட்டுளதென்று அமரர் புராணம் கூறுகின்றது. அஃதெப்படியெனில் இந்தியாவில் கி.மு. இல் வழங்கிய பாஷைகள் இரண்டு. அதில் வடகலை (சமஸ்கிருதம்), தென்கலை (தமிழ்) எனவாம். (வடகலை) சமஸ் கிருதத்திலிருந்து, உரியா, மராட்டி, பெங்காலி, உர்டு, ஹிண்டி, குஜராட்டி, சிண்டி, பஞ்சாபி என எண்கிளைப்பாஷைகளும் (தென்கலை) தமிழ்ப்பாஷையிலிருந்து, தெலுங்கு, கன்னடம், துளுவம், மலையாளம், சிங்களம் என ஐந்து கிளைப்பாஷை

களும் பிற்காலத்தில் உண்டாயினவாம். ஆனால் சமஸ்கிருதம் பேச்சுப்பழக்கமின்றி குன்றினதென்றும், தாயாகிய தமிழ் தன் ஆண்மைகுன்றாமல் பாலியத்திலே இருக்கிறதென்றும் வரைந்துள்ளன. சமஸ்கிருதப் பாஷைக்குமுன்னமே, இந்தியா முழுவதும் தமிழ்ப் பாஷைபரவியிருந்திருக்கிறதென்று கனம் டாக்டர் மக்ளீன் துரையவர்கள் சென்னை அரசாட்சி புத்தகத்தில் வரைந்துளராம்.

மூலபாஷையாகிய வடகலை தென்கலை, இரண்டிலும் பூர்வதேவர்கள் பேசியது தமிழே (தேவர்களென்று சொல்லப் பட்டவர்கள், தேவர்களல்ல. மானிடரென்பதை அமரர் புராணத்தில்காண்க) செந்தமிழ் அதாவது கலப்பில்லாத தமிழ் வழங்கிய பாண்டியநாட்டில் முதலாவது குடியேறின தேவர்களென்று சொல்லப்பட்ட ஜாதியாருக்குமுன் எந்த ஜாதியாருமிருந்ததில்லையென்றுரைக்கின்றன. ஆகவே முதலாவது பாண்டியநாட்டில் உற்பத்தியானது தமிழும் அதன் மக்களுமென்று ஸ்திரமான ஆதாரத்தை நிலைநாட்டுகின்றது. இன்றும் இதற்கு இணையாக:

நன்சொற்கடந்தெனை நாளும் வளர்த்த தாதை
தன்சொற்கடந்தெற்கரசாள் வதுதக்கதன்றால்
என்சொற் கடந்தாலுனக்கியாதுள தீனமென்றான்
தென்சொற்கடந்தான் வடசொற் கடற்கெல்லை தேர்ந்தான்.

(நகர்நீங்கு படலம்)

ஸ்ரீராமபிரான் வடநாட்டிலிருந்து, தென்னாட்டிற்கு வனவாசம் செய்யும்பொழுது தமிழ்ப்பாஷையிலும், சமஸ்கிருதத்திலும் தேர்ந்தகலைஞனாயிருந்தாரென்பது இதன் பொருள்.

ஆதலான் தென்னாட்டிற்கு முன்னமே வடநாட்டில் தமிழ்ப்பாஷை மாதாவாக வழங்கப்பட்டதென்றுணர்க, நமது தமிழ்ப்பாஷை பரம்பரையாய், மற்ற இதர பாஷைகளுக்கெல்லாம் மாதாவென்றழைக்கப்பட்டதென்று உணர்ந்தும்.

இன்றைக்கிருந்தார் நாளைக்கிருப்பாரென்

றெண்ணவோ திடமில்லையே. (தாயுமானவ சுவாமி பாடல்)

என்பதற்கேற்ப சிலர் தம்சுயபாஷையைப்புறக்கணித்து இதர பாஷைகளில் அபிமானம்வைத்து மாதா, பிதா, இனத்தார், சுற்றத்தார், குலத்தார்களை மறந்து தனது ஜீவனார்த்தத்திற்காக கால்சட்டை, சப்பாத்து, காலர், டை என்ற நாகரிகத்தினால், உலகவாழ்வில் மதிமருண்டு அலைந்துழல்கின்றனர். இத்தோடு தனது உத்தியோகத்திற் காக குலத்தையும் ஒழிக்கத் தலையிட்டு விட்டுனர், இதுநிற்க ஆரியர்கள் திராவிடர்களைக் கபடத்தனமாக வஞ்சித்தனரென்றும் கூறப்படுகின்றது. மத்திய ஆசியாக் கண்டத்திலிருந்து இந்து தேசத்திற்குக் குடியேறிய ஆரியர், சிந்து நதியைக்கடந்து அங்கு வாசம் செய்த அநாகரிக ஜாதியாரைச் சண்டையிட்டு வென்று வட இந்தியாவில் வசிக்கும்பொழுது, ஜனத்தொகை மேற்பட்டதால் ஆகாரமுதலியவைகளின் கஷ்டம் ஏற்பட்டது.

அப்பொழுது தெக்ஷணதேசம் செழிப்புற்றிருக்கிறதென்றும் அங்கு வசிக்கப்பட்ட திராவிடர்கள் நாகரிகமும் பலனும் பொருந்தியவர்களென்றும் அவர்களை ஜெயிக்கக் கூடாதென்றுணர்ந்து, தங்கள் இனத்தில் சமஸ்கிருதபாஷையில் பண்டிதரும் நிபுணராயுமிருந்த அகஸ்தியரை தெக்ஷணத்திற்குத் திராவிடர்களுக்கு பாஷாப்பியாசம் செய்யும்பாவனையின் கபடமாக அனுப்பி, சமையம் வாய்த்தபொழுது ஆரியரிற் சிலர் தொல்காப்பியனார் போன்று உள்நுழைந்து திராவிடர்களைக் கைவசப்படுத்திக் கொண்டார்களென்று, *'பிரஜாநுகூலன்'* பத்திராபதிபரால் வெளியிட்டிருக்கிற ஆநந்தகதாகல்பகத்தில் பண்டிதர் டி.எஸ்.இராஜம் ஐயர் பிரசுரித்திருக்கிறார். இப்படி ஆரியர்களின் கபடமார்க்கங்களையும், தீயச் செயல்களையும் வெளியிடவே, ஆதித்தன் நமது மரபினில் இளந்திராவிடனாய் உதித்திருக்கின்றனவாம்.

முடவன் கொம்புத்தேனுக்காசைப்பட்ட கதைவாறு, ஆரியர்களும் சமஸ்கிருதபாஷையைத் தமிழ்ப்பாஷையின் சொல்லிலக்கணங்களால் சிறப்பித்து திராவிடர்களையும் அடிமைப்படுத்தி ஆட்கைக்கொள்ளக்கொண்டாடின கொண்டாட்டத்தை இப்பொழுது திண்டாட்டமாயழிக்க, ஆதிதிராவிடவென்னும் குலசிகாமணி வந்ததென்றுணர்க.

முன் இதழ்களில், திராவிடர்களும், அதன் பாஷாபிவிர்த்தி யையும் வரைந்துள்ளோம். ஆனால், தமிழ் பாஷைக்கு ஆதியுமந்த

முமில்லையென்றே கூறுப. தமிழ் எது காலமுதற்கொண்டு துடங்கினதென்று எந்த இதிகாசங்களிலும், புராணங்களிலும், நூல்களிலும் கூறவில்லை என நம்புகிறதற் கிடங்கொள்க. இதுகொண்டே அகத்தியர் தென்னாட்டிற்கு அதாவது வட இந்தியாவிலிருந்து, தெக்ஷிணத்திற்கு சென்று, பாஷாப்பியாசஞ் செய்யுங்கால், தமது இலக்கண நூலால் ஒருவாறு தமிழை சீர்படுத்தினாரென்றும் அவரை இத்தமிழுக்கு முதல்வரென்று கூறலாகாதென்றும், கடவுளின் இயற்கையால் இவ்வுலகத்தின் கண் தமிழ் மாதாவாக விளங்குகிறதென்றும் பிரஜானுகூலன் பத்திராதிபர் வெளியிட்டிருக்கிற நூல்களில் கூறிக்கிடக்கின்றன.

இதுநிற்க நமது தாய்ப்பாஷையின் அபிவிர்த்தியை சீர்த்திருத்துவது போல் நமது முன்னேற்றத்திற்கு பணம், கல்வி, சம்பந்தம், முதலிய குறைகளுள என ஏற்படுகின்றனவாம்.

*பிறக்கும்பொழுது கொடுவந்ததில்லை பிறந்து மண்மேற்*
*இறக்கும்பொழுது கொடுபோவதில்லை இடைநடுவில்*
*குறிக்கும்பொழுது இச்செல்வம் சிவன் தந்ததென்று கொடுக்*
*கறியாதிறக்குங்கிலாமருக்கென் சொல்வேன் கச்சியேகம்பனே.*

*(பட்டினத்தடிகள்)*

என பட்டினத்தடி சுவாமி திருவாய்மலர்ந்தருளி இருக்கின்றனர். ஒவ்வொரு ஆன்மாக்களுக்கும் பணம் அவசியமே யாயினும் பணமென்றால் பிணமும் வாய்திறக்குமாம் என்றவாறு பணத்தை குவியல் குவியலாக திரட்டி உருட்டி மூலையிலிட்டு இன்னமும என்ன செய்வோமென்றேக்கங்கொண்டலையும் இறுமாப்புடையோ அநேரகறுள்ர். தன்னிலும் தனவந்தனில்லை என தாசிக்கும் வேசிக்கும் பணத்தை பணமென்றுணராமல் படாடோபம் செய்கிறவரநேகறுள்ர். சத்திரம் சாவடி கட்டி வீண்பிலுக்காக தானதர்மங்களிட்டு, வீட்டுவாயிலில் நிற்கும் யாசகனுக்கு பிச்சையிடாதுண்ணும், பிலுக்கரநேகறுள்ர். இறக்கும்பொழுது இச்செல்வத்தை எம் மார்க்கமாய் செலவிடுகிற தென்றுணராக ஏகாந்திகளநேகறுள்ர்

(இங்கு புனை யெருடன் ஏகாந்திகளென கூறப்பட்டவர்கள் கலியாணமில்லாதவர்களையும், கலியாணமென்னும் பந்த பாசத்தால் கட்டப்பட்டவர்களும், மனைவி மக்களையும் குடும்ப

சம்ரட்சணைகளையும் கவனியாது விலைமாதர்களிட மகப்பட்டு வைகுந்தத்திற்கேகும் மாத்திரைகளை வாங்கி பணத்தையும் வீண் விரயம் செய்துழல்பவரைக் குறிக்கும்) இத்தைகயோரிற் சிலரை நமது குலத்தவரின் முன்னேற்றத் திற்காக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சங்கத்திற்கு அங்கத்தினராக சேர விரும்பிக் கேட்டால், ஐம்பது சதத்தை ஆறு மாதத்திற்குக் கணக்கிட்டுக் கோட்டை கட்டுகின்றதுபோல், சங்கத்தில் சேருவதால் ஆதாயமென்ன? என்ற கேள்விகளுள் என்னே இதைப் பார்க்கிலும் அறிவிலித்தனமுண்டோ?

ஓர் மூடன் ஓர் வித்வானைப்பார்த்து ஆஸ்தி பெரிதா? ஞானம் பெரிதா? என்று கேட்ட கதைக்கேற்றவாறு தன் நிலத்தின்கண் பயிர்செய்து வருத்தப்பட்டு உழைத்தால் லாபம் பெறலாமென் றுணராமல் காற்றுள்ளபோதே தூற்றுக்கொள் என்றவாறு நம் குலத்தவரின் குறைகளை நிவிர்த்தி செய்ய இதுவே தருணமென் றுணராமல் ஆதாயத்தைத் தேடும் அறிவிலிகளை என்னென்று கூறுப நமது காலத்தில் நடைபெறாவிடினும் நமது பிதுர்க்களுக்கு அஸ்திவாரமாயிருக்குமென்றுணர்க.

இதுநிற்க பொருளில்லார்க்கின்பமில்லை என்றது போலும் பணமில்லாதவன் பிணத்திற்கு சமானமென்பது போலும் பணத்தினாலேதான் சகலவாழ்வுமுண்டு. ஆதலான் திரை கடலோடி திரவியந்தேடினும் தீயவழியிற் சிலவழிக்காமல் நன்மையான விஷயங்களிற் செலவழித்து நமது முன்னேற்றத்தைக் கருதுக.

'கல்விக்கழகு கசடறமொழிதல்' என மொழியும் மூதுரைப் படி கைக்கொள்வற் சிலரே. எந்தமரபினரும் தங்கள் தங்கள் சுயபாஷைகளையே மேன்பாடடையச் செய்வாரென்பது இங்கு கூறாமலே விளங்கும். ஆயினும் நாம் எப்பாஷையைக் கற்பினும் அப்பாஷையை சரிவர எழுதல், பேசல், வாசித்தல், நன்கென்றுணர்க. அப்படி கற்றவரிருப்பினும் அதை தழுவி நடப்பவர் சிலரே ஏனெனில் ஓர் பாஷையுடன் மற்றொரு பாஷையை கலந்து பேசுவதனால் இரண்டும் பயனற்றுப் போகின்றது ஓர் நண்பர் ஓர் சிறிய கதை சொன்னார். அதாவது இரண்டு கணக்கர் (Clerk) ஆங்கிலத்தில் சம்பாஷணை செய்யும்கால் கிச்சல் அல்லது கூச்சம் என்னும் பதத்திற்கு

ஆங்கிலப்பதம் தெரியாமற் தட்டுண்டுதடுமாறி கிச்சிலிவிக்கேஷன் (Kitchlification) எனப்பேசிக்கொண்டார்களாம்.

ஆதலான் இவ்விதமாய் அன்பு குறைவாய்பேசுவதனால் கெடுதியேயொழிய நன்கல்லவென்று மாத்ருபாஷாபிமானி என்பவரால் தெளிவாய் கூறிக்கிடக்கின்றன. ஆகவே நமது கல்வியின் முக்கியமான குறைகளுக்கும் முன்கூறிய பணமே நமது முன்னேற்றத்திற்கு பணம், கல்வி, அவசியமேற்படுவது போற் சம்பந்தம், (கொள்வனை, கொடுப்பனை) முதலியன எதிர்நோக்குவாம். அதாவது, ஆரியரால் நான்காவது ஜாதி பேதத்தோடு. ஐந்தாவதொன்று உற்பவித்தது போல் தனவான், கல்விமான், வறிஞன் என மூன்று வகுப்பாரைக் குறிக்கின்றன.

ஏனெனில் தனவந்தனுக்கு கல்வி இல்லாவிடினும் பணமிருக்கிறதென்றும், கல்விமானுக்கு பணமில்லாவிடினும் கல்வியும் உத்தியோகமும் அமையப்பெற்றி ருப்பதினால், ஒன்றையொன்று எதிர்நோக்காவண்ணம் விவாக முதலிய வற்றை நடத்திக்கொள்கின்றனர். ஆனால் வறிஞனை கவனிப் பாராருமில்லை. இதுபற்றியே மானிடவர்க்கங்களில் தாழ்த்தப் பட்டவர்களென்பது கிடையாதென்று ஸ்ரீமான் கண்ணப் பரவர்கள் உபந்நியாசித்திருக்கின்றனர்.

அதுவுமன்றி வறிஞர்கள் பெண்கொள்வதும் கொடுப்பதும் தங்களைப்போ லொத்த ஏழைகளிடமே, கொஞ்சம் பணம் உள்ளவர்களிடம் கடன்பட்டாலோ விவாகம் நடந்த மூன்றாம் மாதம் கடனைக் கொடுக்கின்றாயா, அல்லது வீட்டைவிட்டு வெளியேபோகின்றாயா என அவர்களைத் தெருவில் திண்டாடும்படிவிட்டுவிடுகின்றனர் 'கடன்படல்' என்ற வியாசத்தை வாசித்த நண்பர்கள் ஏழைகளுக்கேற்படும் துன்பங் களையும் நன்கறிவார்கள். ஆனால் இவர்களுக்கு பிறக்கும் குழந்தைகளும் நிரக்ஷரகு க்ஷியாய் நாலைந்து வயதிலேயே புறதேசங்களுக்குத் தொழிலுக்காக அனுப்பப்படுகின்றனர். அக்குழந்தைகளோ நிரக்ஷரகுக்ஷியாய் சிறுவயதிலிருந்தே துற்சக வாசங்களால் கெட்டலைந்து போகின்றனர். இவ்விதமான துக்கசாகரமாபீ நிலைமைகளை நமது மரபினர் ஒவ்வொரு வரும் கவனிப்பதவசியம்.

ஓர் பலனற்றமரக்கிளையை பலனுள்ள மரத்தோடு பிணைத்துக்கட்டுவதினால் அதன் பலத்தினாதல் தழைத்து ஓங்கிவளர்ந்து மதுரமான கனிகளையும் பலனையும் தருகின்றன. மிஸ்டிரஸ் ஆழ்வாரென்பவர்களால் கலப்பு விவாகம் நடந்துவருகிறதென்று நமது 'ஆதிதிராவிட'னில் எழுதியுள்ளதை வாசிக்க மிக்க சந்தோஷமே. அதனால் ஜாதிபேதம் அடியோடழிகிறதென்றும் அறிகிறோம். அவ்விதகலப்பு விவாகத்தோடு தனவான், கல்விமான், வறிஞரென்ற உயர்வு தாழ்வில்லாத விவாகம் நடைபெறுமானால் ஒற்றுமையே உருவாகத் திரண்டு ஜாதிபேதத்தைக் கருவருக்குமென்பது திண்ணமேயாம். இச்சிறியோன் அறிந்தும் அறியாமலும் பாஷாபிமானத்தோடும் குலாபிமானத்தோடும் எழுதிய வியாசங்களிலேற்படும் சொற்குற்றம் பொருட்குற்றமிருப்பினும் மன்னித்து குற்றங்களைந்து குணத்தைக்கைக்கொள்ளும்படி இதனைவாசிக்கும் நண்பர்களை கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் நமது குலத்தவர்களுக்காக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் சங்கமும் அதிலிருந்து ஜனித்திருக்கும் இளம் '*ஆதிதிராவிட*'னையும் நீடுழிவாழ்க காருண்ய கருணாகரப்பராபரன் கருணைபுரிவாராக. சுபம். சுபம்

எஸ்.மனுவேல்தாசன்

மலர் 2 இதழ் 5 பக் 78 - 79

மலர் 2 இதழ் 6 பக் 93 - 95

மலர் 2 இதழ் 7 பக் 109 - 110

மலர் 2 இதழ் 8 பக் 122 - 123

# ராமநாதபுரம் ஜில்லாவில் ஆதி திராவிடர்களைப் படுத்தும் இம்சைகள்

***ரா****மநாதபுரம் ஜில்லாவில் ஆதிதிராவிடர்படும் இம்சைகள்***

கடந்த தை மாதம் முதல் தேதியன்று ராமநாதபுரம் ஜில்லாவைச் சேர்ந்த கல்லல் என்றும் கிராமத்தில் மேற்படி ஜில்லா வேப்பங்குளம் ஆண்டவன் அம்பலமும் மேலப்பூங்குடி சுப்பையாரிவும் இன்னும் சிலரும் கூடி ஆதிதிராவிடர்கள் அனைவரையும் வரவழைத்து நீங்கள் தாழ்ந்த ஜாதியாரா யிருப்பதால் கலியாணத்துக்கு பந்தல் போடக் கூடாதென்றும் அங்கு சாஸ்திரம் செய்யக்கூடாதென்றும் கலியாணம் என்கிற பதத்தை உபயோகிக்க கூடாதென்றும் மேற்படி நீங்கள் தங்க ஆபரணமாவது பட்டுவஸ்திரங்களவது வணியக் கூடா தென்றும், வெள்ளை வஸ்திரத்தை முட்டுக்கு மேலேயே அணிய வேண்டு மென்றும், ஆதிதிராவிட சிறுவர்கள் படிக்கக் போகக் கூடா தென்றும், குளங்களில் தண்ணீர் எடுக்காதென்றும் வீடு கட்டினார்... கட்ட கூடாதென்றும் இவர்களுக்குள் மரணம் அடைந்து விட்டால் மடங்கி விட்டதென்றும் தெரிவிக்கும் படியாக சில நிர்மூட நிபந்தனைக் கொண்டு வந்து அதை அங்கீகரித்து அடிமைப் பத்திரங்கள் எழுதியொப்பம் வைக்கும்படி வற்புறுத்தினார்களாம்.

---

*இராமநாதபுரம் மாவட்டத்தில் 1930ஆம் ஆண்டு கள்ளர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது எட்டுக் கட்டுப்பாடுகளைத் விதித்தனர். மீண்டும் 1931 ஆம் ஆண்டு ஜுன் மாதம் மீண்டும் பதினோருக் கட்டுப்பாடுகளை. ஆதிதிராவிடர் / தேவேந்திரகுலவேளாளர்கள் மீது விதித்தனர் (J. H. Hutton 1961 : 204. 205)

அப்படி பலவித இம்சைகள் செய்தாகவும் இன்னும் பற்பல இடங்களில் இவ்வித இம்சைகள் செய்துவருவதாக தெரிய வருகிறது. அடிப்பட்டவர்கள் மேற்படி ஜில்லாவை சேர்ந்து

---

In December disregard of which led to the use of violence by the Kallar against the exterior castes, whose huts were fired, whose granaries and property were destroyed, and whose livestock was looted. These eight prohibitions were as follows:

(i) that the Adi - Dravidas shall not wear ornament of gold and silver;

(ii) that the males should not be allowed to wear their clother below their knes or above the hips;

(iii) that their males should not wear coats or shirts or baniyans;

(iv) no Adi-Dravida shall be allowed to have his hair cropped;

(v) that the Adi-Dravidas should not use other than earthenware vessels in their homes;

(vi) their women shall not be allowed to cover the upper portion of their bodies by clothes or ravukvais or thavanies;

(vii) their women shall not be allowed to use flowers or saffron paste; and...

(viii) the men shall not use umbrellas for protection against sun and rain nor should they wear sandals.'

In June 1931, the eight prohibitions not having been satisfactorily observed by the exterior castes in question, the Kallar met together and framed eleven probibitions, which went still further than the original eight, and an attempt to enforce these led to more violence. These eleven prohibitions were:

206

1. The Adi-Dravidas and Devenrakula Velalars should not wear clothes below their knees.

2. The men and women to the above said depressed classes should not wear gold jewels.

3. Their women should carry water only in mud pots and not in copper or brass vessels. They should use straw only to carry the water pots and no cloths should be used for that purpose.

4. Their children should not read and get themselves literate or educated.

5. The children should be asked only to tend the cattle of the Mirasdars.

மதகுப்பட்டி போலுசை அறிக்கை செய்தனர். ஆதிதிராவிட சகோதர்களே! நாகரிகம் குறைந்த இந்த 20ம் நூற்றாண்டில் இப்பேர்பட்ட அறிவிலிகளுக்கு இடம் பொடுப்பார்களானால் நமது ஜாதி கதி அதோகதியாரு மென்பதற்கு யாதொரு ஆட்சேபனையுமில்லை. இவர்கள் அறியீனத்தால் இப்படி செய்கிறார்கலோ அல்லது சுயப்புலிகள் தூண்டுகோலோ அறியோம். இதுபற்றி நமது குலாபிகளும் தேசாமிமானிகளும் முன்வந்துழைத்து நம் ஜாதியிறை இம்சிதறு வரும் அறவீனர் களுக்கு தகுந்த புதிதி புகட்டும்படி மிகவும் தாழ்மையோடு... கேட்டுச் கொள்கிறேன்.

கல்லல்

என்னருமை திருக்குலப் புதல்வர்களே. கடந்த 1919ம் வருடம் பிப்ரவரி மாதம் 15 திகதி வெளிவந்த நமது குலக்குழந்தை யாகிய *'ஆதி திராவிட'*னில். 205ம் பக்கத்தில் மேற்கண்ட தலைப்பெயரிட்டு அடியில் ஆதன் என கைநாட்டமிட்டிருந்ததை நண்பர்கள் ஒருவரும் மறந்திருக்கமாட்டீர்கள். நிற்க கனம் ஆதனவர்கள் யிதே விஷயத்திற்காக மேல்கண்ட நகரமாகிய கல்லலில் போய் சுயநலங்கருதாது பொதுநலத்திற்குழைத்து வருகிறாரென்று என் நண்பர்கள் அறிந்திருப்பீர்கள்.

---

6. Their men and women should work as slaves of the Mirasdars in their respective Pannais.

7. They should not cultivate the land either on waram or lease from the Mirasdars.

8. They must sell away their own lands to Mirasdars of the village at very cheap rates, and if they don't do so, no water will be allowed to them to irrigate their lands. Even if something is grown by the help of rain-water, the crops should be robbed away, when they are ripe for harvest.

9. They must work as coolies from 7 a.m. to 6 p.m. under the Mirasdars and their wages shall be for ment Re. 0-4-0 per day and for women Re. 0-2-0 per day.

10. The above said communities should not use Indian Music (Melam, etc.,) in their marriages and other celebrations.

11. They must stop their habit of going on a horse in procession before tying the Thali thread in Marriage, and they must use their house doors as a palanquin for the marriage processions and no vehicle should be used by them, for any purpose.'

அந்நண்பர் பொதுநலத்திற்குழைத்தும் இவ்விலங்கையில் ஆதிதிராவிட முன்னேற்றத்திற்காக இளஞ்சூரியக்கன்றைப் போல் பிரகாசமாய் எழுந்திருக்கும் *'ஆதி திராவிட'*னுக்கு அறிவித்து அதனை கண்ணுற்ற ஆதி திராவிடப் புதல்வர்களை கலங்கவிட்டு மறைந்திருப்பதை நினைத்து துக்கிக்காதவர்களிலர். அவர்கள் நாளடைவில் கடந்தயிரண்டொரு மாதமாய் அனேகருடைய சிந்தையில்கூட நினைவில்லாமல் போய்விட்டது.

அப்படியிருந்ததை கடந்த மாதம் வெளிவந்த *ஆதிதிராவிடனில்* 45ம் பக்கத்தில் ஆதித்திராவிடர் களிதனைக் கவனிப்பார்களா என்று தலைப்பேயருடன் வந்து அடியில் கலகா, சிலோன், என்று கைநாட்டமிட்டிருந்ததை நண்பர்கள் கண்கூடா கண்டிருப்பீர்கள். ஆனாலிதைக் கிளர்ச்சித்த கனம் ஸ்ரீமான் ஏ.ஏ. ஆபிரகாமவர்களுக்கு என் முழு நன்றியறிதல் செய்து, என் செவிக்கெட்டியவரையிதை வரைய முன்வந்துளன் ஆன்றோர் பொறுக்க.

1920ம் வருடம் பெப்ரவரி மாதம் 2தேதி அனுப்பிய மனுவுக்கு, மேல்கண்ட கல்லலுக்கருகாமையிலிருக்கும் மதகுபட்டி போலீஸ் டேஷனிலிருந்து பெப்ரவரி மாதம் 21தேதி விசாரணைக்கு வந்தார்கள். மேல்கண்ட நகரில் வந்து இருந்த இருதிறத்தார் களையும் அழைத்து அன்னகர்வாசிகளின் உள்ளத்தில் எள்ளளவுயின் சொல்லில்லாத வரைச்சொல்லாராகிய கள்ளர் களை (அன்னகரில் அவர்களை கள்ளர்வீடென்றுதான் வாழையடி வாழையாய் அழைத்துவருகிறார்கள்) கேட்ட கேள்வியாவது, இந்த யேழைகளாகிய பஞ்சமர்களை நல்லவஸ்த்திரங்கட்ட கூடாதென்று, நகைகள் போடக் கூடாதென்று அவர்களிட்ட நவதானியங்களை கொள்ளையிட்டு அவர்களை கடூரமாய் இம்சிக்கிறீர்களென்று அவர்களேவிய மனுவின் மூலமாய் தெரிந்தோம் என்று கேட்டார்கள்.

அதற்கவர்கள் நாங்களிவர்களோடு ஒருவிதமான சந்தர்ப் பத்திற்கு போகவே கிடையாது. யெங்களை வீணாய் பத்திரிகைகளில் பிரசுரம்பண்ணி கேவலப்படுத்துகிறார்களென்று பூனையைக் கண்ட எலியைப்போலும் சிங்கத்தைக்கண்ட யானையைப் போலும் கீரியைக்கண்ட சர்ப்பம்போலும் நடுங்கி தாழ்ந்த குரலோடும் சொன்னார்கள். அவ்வினயங்களெல்லாமறிந்த

கவர்மெண்டார்கள் தெரிவித்ததாவது இனிமேலிவர்களுக்கு இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பங்கள் நேர்ந்ததாக எங்களுக்கெட்டினால் நீங்கள் அனேகவிதமான கஷ்டத்துக்குள்ளாவீர்களென்று தெரிவித்து அருகில் நின்ற ஆண்டவனென்னும் பேர்வழங்கிய சுப்பையா கள்ளனை அம்பலமென்னும் பேரைமாற்றி கள்ளனென் றெடுத்துக்கொள்ளவும். ஏனெனில் அவர்களுடைய உத்தியோகத் திற்காக அம்பல மென்றேர்பட்டது. பார்த்துச்சொன்னதாவது.

ஏ. தாண்டனே. நீயே யிந்தயேழைகளுக்கு இந்த கஸ்டநிஷ்ட டூரங்கள் செய்வதாகத் தெரிகிறது. ஆனால், இனிமேற்கொண்டு இவர்களிடம் யாதாமொரு சச்சரவுகள் நேர்ந்தால் இந்த பஞ்ச மர்களிடம் பீ சட்டியைக் கொடுத்தடிக்கச் செய்வேனென்று சினந்து கடூரமாக தெரிவித்து விட்டுச்சென்றார்கள்.

அதன்பின் 1920ம் வருடம் பெப்ரவரி மாதம் 24தேதி கல்லல் ஆதிதிராவிடர்களெல்லாம் ஒன்றுசேர்ந்து மேற்கண்ட மதகுபட்டி போலீஸ் ஸ்டேஷனில் இவர்கள் வேளாண்மை யிட்டிருந்த நெல்லை வாரம்பிரிக்கும் படியாக உத்திரவு கேட்கப் போனார்கள்.

அச்சமயம் கனம் சூப்பெரண்டவர்கள் சொன்னதாவது நீங்கள் முன்னேவிய மனுவிற்கு மார்ச்சு மாதம் 3ம் திகதி குன்றக்குடி கோர்ட்டில் வியாச்சியமிருக்கின்றது ஆசராகும்படி தெரிவித்தார்கள்.

மார்ச்சு மாதம் 3ம் திகதி குன்றக்குடி கோர்ட்டில் விசாரணைகள் பின் வருகுக.

கனம் மாஜிஸ்டிரேட் அவர்கள் நமது வாதிகளாகிய கள்ளர்களில் மனுவில் குறிப்பிட்டவர்களை அழைத்து கூறியதாவது, இந்த மனுவில் குறிப்பிட்ட கல்லல் நகரில் வசிக்கும் ஆதிதிராவிடர்களை நல்லசேலைகள் கட்டக்கூடாதென்றும் தங்க நகைகள் போடப்படாதென்றும் மரத்தால் தாலிப்போட வேண்டுமெனவும் இன்னுமனேக விதமான புதுச்சட்டங்களை யேற்படுத்தியது என்ன காரணத்தைக் கொண்டெனவென்று கேட்டார்கள்.

அதற்கவர்கள் நாங்களிப்பேர்பட்ட சட்டங்களொன்றும் யேற்படுத்தவில்லை யென்றுமிவர்கள் யெங்களை வீணாகக்

கேவலப்படுத்துகிறார்களென்று மின்னுமனேகமாக நற்குணம் வாய்ந்த உத்தமசீலர்களைப் போலுரைத்தார்கள், இவர்களுண் மையை நியாயாதிபதியவர்களறிந்து,

அகத்தினழகு முகத்தில் தெரியும் மென்பதை யொப்ப அவர்கள் தெரிவித்தவார்த்தையாலும் காட்டிய அபிநயத்தாலும் அறிந்து அந்த உண்மையை சூனியர்களுக்குரைத்த உத்தம தீர்ப்பாவது.

நீங்களிந்த பஞ்சமர்களை நல்ல வஸ்த்திரங்கட்டவிடாது பெண்கள் மார்மேல் சேலை போடவிடாது மரத்தால் தாலி போடவேண்டுமென்றும் புது சட்டம் விதித்திரல்லீர் நல்லது. முதலாவது உங்களுடைய பெண்களை நல்ல நாணயமான சேலைகட்டாமல் பலவித நகைகள் போடவிடாமல் மார்மேல் சேலைபோடவிடாது முன்னடத்தினீர்களானால் இவர்களு மவ்விதம் நடப்பார்கள்.

அஃதன்றி இவர்களிவ்விதஞ் செய்யார்களென்றும் இன்னுமனேக விதமாக அவர்கள் வெட்கித்தலையைக் கீழே போடும்படியாக பேசினார்கள். இறுதியாக தெரிவித்ததாவது. நாங்களிதற்கு முன்னொருதரம் வந்து சமாதானங்கூறிவந்தோம். இன்னுமப்படியே செய்து வருகிறீர்கள். நீங்கள் போக்கிரிப் பயல்கள். உங்களுடைய போக்கிரிப்புத்திபோகாது. உங்களுக்குச் சிறைச்சாலைக்குப்போய் சிறைச்சாலைச் சாதஞ்சாப்பிட கெட்டக் காலங்கிட்டி இருக்கின்றது. உஜாராய் பிழையுங்களென்று ரைத்தார்கள்.

அங்கு நடந்த ஓர்விந்தையையும் கூறாதிருக்க மனமில்லை. மேல்கண்ட கல்லலில் பேச்சுக்காரர் வேலைக்காக வந்திருக்கும் கனம் சீனிவாசக ஐயங்காரவர்களும் மேல்கண்ட குன்றக்குடி கோர்ட்டில் ஆசராயினார்கள். அன்னவரைப் பார்த்து கனம் ஜட்ஜீ அவர்கள் கேட்டதாவது. ஏன் சீனிவாச ஐய்யரே. இந்த யேழைகளாகிய பஞ்சமருடைய நவதானியத்தை ஏன் வாரம்பிரிக்காது வைத்திருக்கிறீர் என்று கேட்க அவ்வமயம் மேல்கண்ட ஐயர் வாய் நிறைய தாம்பூலம் வைத்திருந்தபடியால் பதில்சொல்ல நா வராமல் விழித்துக்கொண்டிருந்தார். அப்போது மேஜிஸ்டரவர்கள் மேற்படி ஐயர்வாளைப்பார்த்து, என்ன ஐயரே வாயில் ஒரு கத்தை புகையிலையை அதக்கிக்கொண்டு

கேழ்க்கும் கேள்விக்கு விடையளிக்காதிருக்கிறீர்களென்று சற்று சினந்து கேட்டார். அவ்வமயம் ஐயர் பயந்து நடுநடுங்கி கைகால் பதறி வாயில் அதக்கிங்கொண்டிருந்த புகையிலையை தன்னைமறந்து விழுங்கிவிட்டதைக்கண்டு அங்கிருந்தவர்களெல்லாம் நகைத்தும் அன்னகரமுழுதுமிது ஒரு விளம்பரமாச்சு.

வியாக்ஷியமுடிந்து வீடுவரவும் மேல்கண்ட கள்ளர்கள் இந்தயேழைகளை முன்னடத்திய கஷ்டநிஷ்டூரங்களிலும் பதின்மடங்கு அதிகமாய் நடத்தமுன்வந்து நாளது வருடம் மார்ச்சு மாதம் 9ம் திகதி அந்த நெறுக்கப்பட்ட ஆதி திராவிடர்களில் இரண்டு பேரை அடித்து நகைகளெல்லாம் அபகரித்துவிட்டார்கள். ஐயோ இந்த விதிக்கு நாம் யாரிட முறையிடுவோம். அதே திகதியில் அவர்களினத்தாராகிய செல்வரசன் கோட்டையிலிருந்து அங்கு வந்திருந்தவர்களையு மடித்து நகைகளையெல்லாம் கொள்ளையடித் துவிட்டார்கள். மேல்கண்ட செல்வரசன் கோட்டையன்பர்கள் நகைபறி கொடுத்தும் இன்னுமாழ்ந்த நித்திரையிலிருக்கிறார்கள். இதனைக் கண்ணுறும் கண்ணியமுள்ள புண்ணிய சீலர்களே அவர்களுக்கு நற்புத்தி கூறுக.

மேற்கண்ட நகைபறிபோனதற்கு கனம் காருண்ய கவர்மெண்டார்க்கு அறிவித்து, ஏப்பிரல் மாதம் 13ம் திகதி வியாக்ஷியம் நடந்தது. கள்ளர்கள் வாய்தா கேட்டுக் கொண்டார்கள். அப்படியே, காரைக்குடியிலும், அரியக்குடி கோர்ட்டிலும் மறுவாய்தா காரைக்குடி கோர்ட்டிலும் இப்படியாக கடந்த ஐந்து வியாக்ஷியத்திலும் கள்ளர்கள் வாய்தா எடுத்து கடைசியாக திருப்பத்தூர் கோர்ட்டில் 31/6/20 நடந்த வியாக்ஷியம் பின்வரும்.

கொ.நா.அ.,
தென்னாடு திருக்குல கோலியர் மஹாஜன சங்கம்.

மலர் 1 இதழ் 8 பக் 205
மலர் 2 இதழ் 5 பக் 81 - 82
மலர் 2 இதழ் 6 பக்கம் 95 - 97

இக்கட்டுரையின் தொடர்ச்சி பின்வரும் இதழ்களில் வெளிவரும் என அறிவிக்கப்பட்டுள்ளது, ஆதலால் பார்வைக்கு கிடைத்த இதழ் 7, 8, 9, 10, 11 தொகுதிகளில் இதன் தொடர்ச்சி இடம் பெறவில்லை,

## ஆதி திராவிட சகோதரிகளுக்கோர் விண்ணப்பம்

ஓம். ஆதிதிராவிடர்களாகிற நாமெல்லோரும், மேல்ஜாதி யாரென்று சொல்லிக் கொண்டிருக்கப்பட்ட பலரால் பலவித துன்பங்களையனுபவித்து முன்னேற்றத்தையடையாதிருப்பது நம்மவரியாவருக்குக் தெரிந்தவிஷயமன்றோ? இத்துன்பங்களை நிவிர்த்திப்பான் வேண்டி நம்மையாளும் ஆங்கிலேய அரசாங்கத்தாரும், பொதுஜனத் தலைவர்களுள் சிற்சிலரும் முயற்சித்தும் இம்முயற்சியானது பட்டணங்களிலும் அநேகமாகக் கிராமாந்தாங்களிலும் அதற்குரிய பயன் தராமலிருக்கிற தல்லவா? இத்துன்பங்கள் நம்மைவிட்டு ஒழிந்து அழிய வேண்டியதாயிருந்தாலுபாயமொன்றுளது. அது தற்போது பயன்தராமற் போனாலுஞ் சில வருஷங்கள் சென்றேனுங் கட்டாயம் பயனைத்தரத்தக்கதேயாம்.

அதுயாது என்றால், எல்லாம் வல்ல கடவுளது கருணை பெற்றுவிளங்கும் ஆதிதிராவிட சகோதரிகளது பெரு முயற்சியே காரணமா யிருக்கின்றதொழிய வேறின்றென எமக்குத் தோன்றியிருப் பாதாலதை யிங்கறிவிக்கத் துணிந்தேன். இந்த அறிவிக்கையின் வண்ணம் இதுமுதல் ஆதிதிராவிட சகோதரிகளாகின்ற நீங்கள் பழகி வருவீர்களேயானால் வரும் 1940 45 வருஷத்திற்குள் நமது சந்ததிகள் இக்கொடுந்துன்பங் களினின்று நீங்கி மனிதர்களாக பூமியில் விளங்குவார் களென்பது திண்ணமேயாம். ஆகையால் எமது சகோதரிகளே! உங்களது எண்ணமுந் தியானமும் ஒவ்வொரு க்ஷணமுமெவ்

வாறிருக்க வேண்டுமென்றால் எங்களுக்குற்பத்தியாகுஞ் சந்தானங்கள் கல்வி, அறிவு, ஆச்சாரங்களால் பூரண மேன்மை யையடைந்து புஜபலபராக்கிரமத்தோடு கூடிய க்ஷத்திரியத்துவம் பொருந்தி, மேல்ஜாதியாரென்று சொல்லிக் கொண்டு நம்மை இம்ஸிப்பவர்களது துஷ்ட கொள்கைகளானது ஆடிக்காற்றிலகப் பட்ட இலவம்பஞ்சைப்போல் இன்னதிசை யெனத்த லைகாட்டாது ஓடி அழிந்து ஒழியும்படியான வல்லமையை உடையவர்களாகவே பிறக்க வேண்டும், பிறக்க வேண்டுமென்று நீங்கள் உறக்கத் தினின்று அதிகாலையில் எழுந்தவுடனும் மீண்டும் இரவில் உறக்கத்திற்குப் போகு முன்னுங் கால்மணிநேரமேனும், உங்களது உதிரம், எலும்பு முதலானதாதுகளில் ஊடுருவிப்பாயும்படியாக திடமுடனெண்ணித் தியானிப்பதோடு முக்கியமாக நீங்கள் கர்ப்பிணியாக இருக்குங்காலத்தில் உங்களது கர்ப்பத்திலிருக்குங் குழந்தை களுக்கு மிந்த எண்ணம் ஊடுருவி இருக்குமாறுச்சதா சிந்தித்துக் கொண்டிருக்க வேண்டுமென்பதேயாம்.

இதல்லாமல் வீரச் செயலையுடைய ஸ்ரீராமர், கிருஷ்ணர் முதலானவர்களுஞ் சரஸ்வதி, சீதை, கண்ணகி முதலானவர் களதுஞ் சரித்திரங்களைப் படிக்கவும், பேசவும், நினைக்கவும் பழகிவாருங்கள். உங்களுக்கு ஓய்வுள்ள காலங்களிலெல்லாம் யாம் குறித்த விஷயங்களை மறவாது உறுதியாகக்கவனித்து வாருங்கள். உங்களது படுக்கை அறைகளிலும் மற்றவிடங்களிலும் ஸ்ரீராமர், கிருஷ்ணர், சரஸ்வதி, இலக்ஷிமி, தமயந்தி, சீதை முதலான பக்தியையும், மனஉல்லாசத்தையும், வீரச்செயலையுங் தரத்தக்கப் படங்களை அமைத்து உங்களது மனமாரக் கண்டுகளியுங்கள். இவ்விஷயங்களைத் தினங்காலையிலோர் முறையேனும் படித்துப்பாராது வேறெவ்வித அவசர வேலைகளையுங் கவனி யாதேயுங்கள். படிக்கத் தெரியாதவர்கள் படித்தவர்களைக் கொண்டேனும் படிக்கச் செய்துச் செவியாரக் கேட்டுச் சிந்தியுங்கள். இவ்விஷயங்களைச் சத்தியமென உறுதியாக எண்ணி நாம் சீக்கிரத்தில்நற்பயனையடைய எல்லாம் வல்ல கடவுளா சீரளிப்பாரெனத்திடமாக நம்பியிருங்கள். இதுவே முக்கிய உபாயமாம். இதை எமது ஆதிதிராவிட சகோதரிகள் மறவாது முயற்சியோடு பழக்கத்தில் கொண்டுவரும்படியாகக் கேட்டுக்கொள்ளுகின்றோம். ஓம், சுபம் சுபம் சுபம்.

ஸ்வாமி அத்வைதாநந்தா

**நமது குலகுருவாகிய ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமி சகஜானந்தம் அவர்களின் குறிப்பு.**

மஹாத்மா சுவாமியவர்கள் எழுதிய இவ்வியாசத்தில் தற்போது முன்னேற்றம் பெறாவிடினும் 1940 45ம் வருடத்திற்குள் முன்னேற்றம் பெறலாமென்னும் கருத்தோடு எழுதியிருக்கிறார்கள். ஆனால் இதனைப் படித்துப் பார்த்த அந்தக்கணத்திலேயே எனக்குள் தோன்றுவதாவது நமக்குக் கல்வி, அறிவு, ஒழுக்கம், வீரம் முதலியன நிறைந்த நல்ல புதல்வர்கள் தோன்றவேண்டுமென இதனைக் கருத்தூன்றிப்படிக்கும் சகோதரர்கட்கும் சகோதரிகட்கும் தோன்றுமல்லவா? அவ்வுணர்ச்சியின்றோற்றமே நமது முன்னேற்றத்தின் தோற்றமெனக்கருதுகின்றேன்.

ஒருவருக்குண்டாகும் இன்பதுன்பங்களாகிய வாழ்க்கைக்குக்காரணம் நல்வினை தீவினையாம். அவைமனோவாக்கு காயங்களின் அசைவாம். அவற்றுள் முதல் மனம் ஒன்றைச் செய்ய வேண்டுமென நினைக்கிறது. பிறகு வாக்கு அதனை வசனிக்கிறது. பின்னர் காயம் அசைகிறது. அசைவால் நல்வினை தீவினை தோன்றுகின்றன. அவற்றால் இன்ப துன்பங்களாகின்ற வாழ்க்கைதோன்றுகின்றன. ஆகவே வாழ்க்கைக்கு அடிப்படை நினைவாதலின் அந்நினைவில் நமது முன்னேற்றத்திற்கு முக்கியமும் முதலுமாகிய நல்ல சந்ததிகளைப் பெறவேண்டுமென்று நினைத்தலே மிகவும் இன்றியமையாததாகும். "பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த மக்கட் பேறல்லபிற" என்று நங்குலப்பெரியார் திருமொழியாகிய இதனுள் யாமறிவதில்லை என்னும் பதங்கள் கல்வியறிவு வொழுக்கங்களிற் சிறந்த மக்கட்பேறு எத்துணைவிழுமியதென்பது கருத்தூன்றுமவர் கட்கு நன்குபுலனாகும்.

அதனோடு பெரியோர் கூறுகின்றார்கள் எனக்கூறாமல் 'யாமறிவ தில்லை' என நமது நாயனாரவர்களேயாம் என தமது துணிபைக் கூறியிருத்தலின் சிறந்தமக்கட்பேறே ஒருவர் பெறும்பேறுகளிற் சிறந்தது என்பது வெள்ளிடைமலை. அதற்கு ஏது நமது குருசுவாமிகள் கூறியவண்ணம்இடையறாது நினைத்தலேயாம் "உள்ளியது எய்தல் எளிது மன் மற்றுந்தான் உள்ளியது உள்ளப்பெறின்". இதன்பொருள் நினைந்ததை மறுபடியும் மறுபடியும் நினைப்போமாயின் என்பதாம். இவ்வருமைத்திருக்குறளுக்கிணங்க பலமுறை நினைத்தலால் நம்மக்கட்பேற்றோடு இப்பொழுது அந்நினைவால் நினைவிற்கு விஷயங்களாகிய கல்வியறிவு வொழுக்கங்கள் நமக்கு முண்டாதலின் இப்பொழுதே முன்னேற்றம் பெற்றுவிடுவோமாதலால் சகோதர சகோதரிகளனைவரும் இவ்வியாசத்தைப் பன்முறையும் படித்தும் நினைத்தும் ஒழுகியும்

முன்னேற்றம் பெற எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரியப்பிரார்த்திக்கின்றேன்.

*சகஜாநந்தம்**

**மலர் 2 இதழ் 6 பக் 89 - 91.**

*ஆரணி அண்ணாமலை*

---

*சுவாமி சகஜாநந்தார் (1891 1959) வடஆர்க்காடு மாவட்டம் ஆரணி தாலுகா, புதுப்பாக்கம் கிராமத்தில் 1891 ஆம் ஆண்டு பிறந்த அண்ணாமலை சகஜாந்தார் தமிழக ஒடுக்கப்பட்டோர் சமூகத்தின் முக்கியத் தலைவராவார் வ.உ. சிதம்பரம் பிள்ளையின் தோழரான இவர் சிதம்பரம் நந்தனார் கல்விக் கழகம் உருவாக அடித்தளமிட்டவர். தாழ்த்தப்பட்ட மக்களை 'ஆதி இந்துக்கள்' என்று மட்டுமே அழைக்க வேண்டும் எனக் கோரியவர். சட்டமன்ற மேலவையில் 1926 ஆம் ஆண்டுமுதல் 1945 ஆம் ஆண்டுவரை உறுப்பினராகப் பணியாற்றினார். சிதம்பரம் கோயில் நுழைவுப் போராட்டத்தில் பங்கேற்றார்.

## ஆதி திராவிட மகா ஜனங்களுக்கோர் வேண்டுகோள்

எமதன்பார்ந்த ஆதிதிராவிட சகோதரர், சகோதரிகளே!

கடந்த ஆகஸ்ட்டு மீ 15 திகதி 'ஆதி திராவிடன்' சஞ்சிகையின் கண் 89ம் பக்கத்தில் வெளிவந்த நமது குருநாதாவாகிய ஸ்ரீலஸ்ரீ மஹாத்மா அத்வைதாநந்த சுவாமிகளின் விண்ணப்பத்தை இன்னொரு முறை வாசித்துப் பாருங்கள். சுவாமிகள் சொல்லியிருக்கும் ஒவ்வொரு வாக்கியத்தையும் மனத்திலூன்றி ஆலோசித்துப் பாருங்கள்.

சுவாமிகள், தற்காலம் நாமிருக்கும் நிலைமைகளையும், நமது காருண்ய கவர்ன்மெண்டாரால் நமக்குக் கிடைக்கவிருக்கும் நன்மைகளின் பலன் துரிதமாக நமக்கு கிட்டுமென்ற நம்பிக்கையில்லை என்பவைகளையும் ஆழ்ந்து யோசித்தே நம் பிற்கால நன்மைக் கேதுவாயிருக்கும் நற்போதனைகளை நமக்கு திருவாய்மலர்ந்தருளியிருக்கிறார்கள். அவர்களெடுத்துக் கொண்ட விஷயமானது மிகவும் சிறந்ததும் ஒப்புக்கொள்ளக் கூடியதுமானதே.

அஃதாவது, ஆதிதிராவிடர்களாகிய நாம் மேல் ஜாதியா ரென்று சொல்லிக்கொள்ளுபவர்களைப் போல் அறிவையுடைய மானிட உடலை உடைத்தாயிருந்தும் நம்மை எவ்விஷயத்திலும் முன்னேற்றமடைய விடாது நசுக்கி, நாயினுங் கேடாக நடத்தி, சதாவும் தாழ்ந்த நிலையிலேயே வைத்து வரவேண்டுமென்ற

நோக்கத்துடன், மானிடப்பிறப்பில் நான்கு வகுப்பாகப் பிரித்து அதில் நம்மை கடையினும் கடைஜாதியாராக ஏற்படுத்தி, நமக்கு கடவுளில்லை என்றும், கோவில் குளங்களில்லை என்றும், நம்மைத் தொடக்கூடாதென்றும் நம்முடைய நிழலே அன்னவர்கள் மேல் படக்கூடாதென்றும் நாம் கல்விகற்கக் கூடாதென்றும், நல்லுடை, நகை நாணயங்களணியக்கூடாதென்றும், பாதரட்சை குடை முதலானவைகளை நாம் உபயோகிக்கக் கூடாதென்றும் நாய், பூனை, எலி, ஆடு, மாடு, கொசு, ஈ, எறும்புகள் செல்லும் அன்னவர்கள் வீதிகளில் நாம் செல்லக்கூடாதென்றும் இன்னம் சொல்லொணா பல ஆபாசக் கதைகளை எழுதி வைத்துக் கொண்டு நம்மை இம்சித்து வருகிறார்களென்பதை இப்பூவுலகி லறியாதாராருமில்லை.

அப்பொய்க் கட்டுரைகளை நாமும் நம்பி, அன்னவர்கள் சொல்லுக்கடங்கி, நம்முன்னேற்ற விஷயமாக இதுகாறும் யாதாமொரு பிரயத்தனங்களுஞ் செய்யாது, பல்லாண்டுகளாக அன்னவர்களுக்கு அடிமைகளாகவேயிருந்து அமைதியாகவும், பொறுமையாகவும், ஒதுங்கியே நடந்து வந்திருக்கின்றோம். ஆயினும் இந்நிலமையிலிருந்து கஷ்டமடைந்துக் கொண்டிருக் குஞ்சமயம் நம்மை ஈடேற்றுவான்வேண்டி, ஐரோப்பிய கிறிஸ்தவ பாதிரிமார்கள் நமக்கு உதவி செய்ய முன்வந்துள்ளார்கள். அன்னவர்களின் பேருதவியால் நம்மில் மிகச்சிலர் உயர்தர கல்விகற்று முன்னேற்றமடைந்திருந்தாலும் அன்னவர்கள் நம் ஜாதியை மறைத்து,

'நாங்களும் மேல்ஜாதியர்கள்' என்று சொல்லிக்கொண்டு ஒளித்துத் திரிகின்றார்கள். மற்றுமநேக கோடி ஆதிதிராவிடர்கள் இன்னமும் முன் நிலைமையிலேயேயிருந்து வருந்துகின்றார்கள். இது யாவருமறிந்த விஷயமே. காருண்யம் நிறைந்த நமது இங்கிலீஷ் அரசாக்ஷியாருக்கும் நம்நிலைமைகளை விரித்துரைத்து நன்மை புரியும்படி முன்வந்தவர்கள் யாருமில்லை. அதனிமித்தம் அரசாக்ஷியாரும் நாம் முன்னேற்றமடைய வேண்டிய விஷயங்களில் சிறிதும் கவனஞ் செலுத்தாது மௌனம் சாதித்து விட்டார்கள்.

ஆயினும், இன்றைக்கு மூன்றரை ஆண்டுகட்டு முன்னர், தமக்கென வாழாப் பிறர்குரியாளர்களும், பல பெருங் குணங்களும் ஒருங்கே கொண்டுள்ளவர்களும், அஞ்சா நெஞ்சம் படைத்த

மாபெரும் வீரர்களுமாகிய ஹானரபில், திவான் பஹதூர், சர், பி. தியாகராய செட்டியாரவர்களும், (பிராமணரல்லாதாவரின் முன்னேற்றத்திற்காகப் பன்முறை இங்கிலாந்து தேசம் சென்று பேருழியம் புரிந்து உயிரையும் அர்ப்பணம் செய்த) டாக்டர் டி.எம். நாயர் பெருமானவர்களும் நம் முன்னேற்றத்தைக் கருதி உழைக்க முற்பட்டனர்.

நமது காருண்ய கவர்ன்மெண்டாருக்கு நம்முடைய நிற்பாக்கிய நிலமைகளை உள்ளபடியுரைத்து நம்மை ஏனைய ஜாதியாரோடு மிணைத்துச் சம நிலமைக்குக் கொண்டுவரும் படியானப் பிரயத்தனங்களெது உண்டோ அவைகளை செய்து முடிக்கத்தக்க சிரத்தையெடுத்து உழைத்ததின் பயனாய் காருண்ய கவர்ன்மெண்டாரும் கண்விழித்து, நம் மீது கருணை வைத்து நம்மை தற்கால நிலமையினின்றும் மேன் நிலமைக்குக் கொண்டுவர கங்கணங்கட்டிக்கொண்டார்கள்.

இத்துடன் பொதுஜனத் தலைவர்களில் (உண்மையான மனத்துடனுழைக்கும்) சிலரும் நம்முன்னேற்ற விஷயமாய் உழைக்கும்படி முன்வந்துள்ளார்கள். இன்னவர்களின் சகாயத்தால் தற்போது நம்மரபினர்களில் சிலரை சட்டநிரூபண சபையிலும், நகர பரிபாலன சபைகளிலும் அங்கத்தவர்களாக தெரிந்தெடுக்கப்பட்டுள்ளார்களென்பது யாவருமறிந்த விஷயமே. ஆயினும் காருண்ய கவர்ன்மெண்டார் நம்மவர்களுக்களிக்க விருக்கும்முழுச்சுதந்தரங்களையும் இன்னம் பல மேலான ஸ்தானங்களையுமடைய நம்மவர்களில் உயர்தரக்கல்வி தேர்ச்சியடைந்தவர்களதிகமில்லாக் குறைவினால் நம்முடைய முன்னேற்றம் பின்னேற்றமாகவே யிருக்கிறது. இதை உத்தேசித்தே, நாம் ஏனைய ஜாதியாருடன் சம நிலைக்கு வருவதற்கு இன்னும் 20, 25 வருஷங்களாகுமென்று நம் குருநாதர் நமக்குப் போதிக்கிறார்.

இஃது உண்மையே. அதை நாமும் ஆதரிக்கின்றோம். அஃதாவது தற்போது நம்மரபினரில் உயர்தர கல்வி தேர்ச்சியுடையார்கள் சிலரேயாயினும் அன்னவர்களும் ‘நாங்களும், உயர்ஜாதியரைச் சேர்ந்தவர்க’ளென்று சொல்லி ஒளித்துக் கொண்டிருக்கிற படியால், அன்னவர்கள் தற்போது நம் முன்னேற்ற விஷயமாய் முன்வந்துழைப்பதற்கு சாத்தியப்படுமோ, படாதோவென்பது

ஒரு சந்தேகம். அத்துடன் தற்போது நமக்குள்ளிருக்கும் சிறிய கல்வியறிவை அபிவிருத்தி செய்துகொண்டு நாம் இதர ஜாதியா ரோடும் சமநிலமைக்கு வந்துவிடலாமென்றெண்ணித் துணிந்து வேலை செய்தபோதிலும் அதுவும் கைகூடுவதற்குப் பல்லாண்டுகள் செல்லும். பண்டைக்காலந் தொட்டு மேலேறாவண்ணம் கீழாகத் தாழ்த்தி வருத்திவந்த நம்மை, சிறிது காலத்திற்குள் இதர ஜாதியாரோ டிணைத்து சம நிலமைக்குக் கொண்டுவருவ தென்றால் இலகுவான காரியமா? அதற்கு விசேஷமாய் வேண்டப் படுவதான உயர்தர கல்வியறிவை நாமடைய வேண்டுமே. கல்வியினாலன்றோ நாம் பிறரோடும் சமத்துவமாயிருக்க சாத்தியப் படும். உதாரணமாக, கல்வியினாலன்றோ நம் குலப் பிரதி நிதியாகிய ஹானரபில் கனம் எம்.சி. ராஜா அவர்களும் இன்னும் சிலரும் மேல்ஜாதியார்களென்று சொல்லிக்கொள் பவர்களோடு சமநிலமையிலிருக்க சாத்தியப்பட்டது. ஆகையான் நாம் எவ்வித கஷ்டத்திலிருந்த போதிலும் நமக்குள்ளிருக்கும் வீண் செலவுகளை சுருக்கி நம் பிள்ளைகளுக்கு உயர்தர கல்வியை யூட்ட நாம் ஒவ்வொருவரும் கங்கணங்கட்டி வேலை செய்ய வேண்டும். இதுவே நம்முடைய முதன்முதல் வேலையாயிருக்கட்டும்.

தற்காலம் காருண்ய கவர்மெண்டாரால் நமக்கு கிடைக்க விருக்கும் சகாயங்களில் தற்போது நாமடைவது மிக சொற்பமே யாயினும் நம் பிள்ளைகள் அதன் முழுப்பலனையும் அடைவார் களென்பதற் கையமில்லை. இதுவே சுவாமி அவர்களினபிப்பிராயம். ஆகையான் நம் முன்னேற்றத்திற்கு சாதகமாயுள்ள கல்வியறிவை அன்னவர்களுக்கு சரியான வண்ணமூட்ட நாம் பின்னடையக் கூடாது. 10 - 7 - 20ல் நடைபெற்ற இலங்கை இந்திய சங்கத்தின் மாதாந்த பொதுக்கூட்டத்தில் இதுவிஷயமாய் யாரும் வற்புறுத்தி பேசியிருப்பதை அன்று அங்கு விஜயஞ்செய்திருந்தவர் களிறிந்திருப்பார்கள். ஆதலான் எமதன்பார்ந்த சகோதர, சகோதரிகளே! நம் முன்னேற்றத்திற்கு அடிப்படையாகவிருக்கும் கல்வியறிவை நம்முடைய பிள்ளைகளுக்கு முற்றுபெற கற்கும்படி பகீரதப் பிரயத்தனஞ் செய்யவேண்டுவதே நம்முடைய முதல் கடமையாக யிருக்கவேண்டுமென்று பின்னும் உங்களை வற்புறுத்துகிறேன்.

நம்மில் 100க்கு 99 பேர் குடியை கெடுக்கும் குடியில் பழகி கெட்டழிந்து தயங்குகிறார்கள். இன்னும் பலர் நன்மை

தின்மையான காலங்களில் கடன்வாங்கிப் பணம் படைத்த பாக்கியவான்கள் செய்யும் செய்கைகளுக்கொப்ப, டம்பமாக வீண் செலவுகள் செய்து பின்பு அக்கடனை கொடுக்க வகையற்று வருந்துகிறார்கள். இன்னும் பலர் டிராமா, பயஸ்கோப், முதலிய விஷயங்களில் வீண் செலவுகள் செய்கிறார்கள். இன்னும் பலர் வேசி தாசிகளை வைத்துக்கொண்டு காசுபணங்களைச் செலவு செய்து அவைகளால் கிடைக்கும் புண், சீக்குச் சிறங்குகளை வாங்கிக் கொண்டு தானும் கெடுவதுமல்லாமல் தன் பெண்சாதி பிள்ளைகளுக்குங் கொடுத்து கெட்டலைந்து கீழாகவேப் போகிறார்கள்.

இன்னவர்கள் இத்தாலுண்டாகும் கஷ்டநஷ்டங்களை எத்தனையோ துடவைகளில் பட்டனுபவித்து நன்குணர்ந்தவர்களே யாயினும் அவைகளை அச்சமயத்தில் மட்டும் கவனத்தில் செலுத்தி அப்பால் 'பழைய குருடி கதவைத் திரடி' என்ற பழமொழிக் கிணங்க நடந்து கொள்ளுகிறார்கள். இன்னவர்களுக்கு எத்துணைதான் செப்பினாலும், எழுதினும் ஆற்றில் கரைத்த புளிபோல் அன்னவர்கள் செவிகளிலேறுகிறதேயில்லை. அந்தோ! என்ன பரிதாபம். 'மெல்லமெல்லப் பாயுந் தண்ணீர் கல்லுங் குளிரச்செய்யும்' மென்பதற்கிணங்க இன்னமும் அன்னவர்களின் நன்மையைக் கருதி பாடுபடுவோம்.

இத்துற் விஷயங்களுக்கு வீண் செலவிடும் பணங்களைக் கொண்டு நம் பிள்ளைகளை போதுமான கல்வி கற்பிக்கும்படி ஏன் பாடுபடக்கூடாது? இதை இனியேனும் உங்கள் புத்திக் கெடுத்து ஊன்றி சிந்தித்துப் பாருங்கள். நம்முடைய வகுப்பைச் சேராதவர்களும், எந்த விஷயங்களிலும் நமக்குக் கீழாகயிருந்தவர் களுமான சில வகுப்பார்கள் கடந்த 30, 40 வருடங்களுக்குள் எவ்வளவோ மேன்பாடடைந்து அதி உன்னத நிலமையிலிருப் பதை நம்கண்கூடாக கண்டிருந்தும் நாம் ஏன் அதே நிலமையிலிருந்து அவதிப்படவேண்டும். இது நம்முடைய அடாத செயல்களினா லல்லவா? சகோதிரர்களே! உங்கள் சொந்த புத்தியைக் கொண்டு குணப்படயேதுவில்லையாயினும் உங்கள்பால் சித்தமகிழ்ந்து சிரமமெடுத்துப் பாடுபடும் பிறர் புத்தியை கேட்டேனும் அன்னவர்களின் வழியை பின்பற்றலாகாதா?

பிதா மாதாக்களுடைய வழியையே பிள்ளைகளும் பின்பற்று மென்பது சத்தியம். ஆகையான் நம்முடைய பிள்ளைகளுடைய

முன்னேற்றத்தையும் நன்மையையும் கருதி நாமே அன்னவர் களுக்கு முன் மாதிரியாக நன்மாதிரியாய் நற்குண நற்செய்கையில் நடந்து காண்பிக்க வேண்டுமென்பதை உணருங்கள்.

'தொட்டில் பழக்கம் சுடுகாடுவரையும்' என்பதற்கொப்ப நாம் நம்முடைய பிள்ளைகள், சிறுவயதாயிருக்கும்போதே அன்னவர்களுடைய இளமனதில் பதியும்படி கற்பிக்கும் கற்பனைப்படியே அன்னவர்கள் சாகும்பரியந்தம் சாதிக்கும்படி நேரிடும். ஆதலால் அன்னவர்களின் பிற்கால நன்மையைக் கருதி அவர்களுக்கு கல்வி, நாகரீகம், ஒற்றுமை, சுத்தம், கடவுளை வழிபடல் முதலிய விஷயங்களை கற்பிக்க நாம் மிக்க சிரத்தை எடுத்து பாடுபடல் வேண்டும்.

இச்சமயம் எமது வீட்டிற் கடுத்த வீட்டில் குடியிருக்கும் ஓர் சோனகரின் (முஹம்மதியர்) இரண்டு வயது குழந்தை செய்யும் வினோதத்தை இங்கெடுத்து காட்டாமலிருக்கக் கூடவில்லை. அஃதாவது அக்குழந்தை எம் வீட்டிற்கு அடிக்கடி வந்து அதன் மழலைச் சொற்களால் எங்களை களிப்புறச் செய்யும். 'ஆண்டவனைத் தொழுவ' தெவ்விதமென்று கேட்டால், எமது வீட்டிலிருக்கும் ஓர் சிறு நாற்காலியை எடுத்து தன் முன் வைத்துக் கொண்டு அதை தண்ணீர் குழாயாகப் பாவித்து, தண்ணீர் திறந்து கால் கைகளை சுத்தஞ் செய்வதைப்போல் செய்து பின்னால் ஒருபக்கமாக நின்று தன்னிரு கரங்களையும் மேலேயுயர்த்தி கண்களை மூடி வாயாலேதோ பிணத்திக்கொண்டு பின்பு கீழேவிழுந்து எழுந்திருந்து எங்களை களிப்புறச்செய்யும். இதுவுமன்றி அது ஒன்றிலிருக்கும்போதும் எழுந்திருக்கும்போதும் 'ஹல்லா' வென்று சொல்லிக்கொள்ளும்.

இஃது உண்மையான விஷயம். அக்குழந்தையின் பெற்றோரின் செய்கைகளையல்லவா இதுவும் பின்பற்ற நேரிட்டது? மேலும் சில குழந்தைகள் தங்கள் பெற்றோரோடும் கோயில்களுக்குச் சென்று அங்கு நடக்கும் விஷயங்களையும் சங்கீதம் தேவார முதலிய கீதங்களையும் படித்துக்கொண்டு, வீட்டிலுமதேவி தாமாகநடித்து படித்துகாண்பிக்கிறதை நம்கண்ணால்கண்டு களிப்புறுகின்றோமே. இவையாவும் அன்னவர்களின் தாய் தந்தையரின் நற்குணநற்செய்கையின் பயனல்லவா? இவ்விதமே சிலகுழந்தைகள் துற்குண துற்செய்கையில் பழகி துன்பமடை

கின்றார்கள். இவையாவும் அன்னவர்களின் தாய்தந்தையரின் துற்பழக்கவாசனையே.

மேலும் நம் மரபினரில் சில கிழட்டுப் பிணங்கள், தங்களறி வீனத்தினால் தங்களுடைய பேத்தி பேரன்மார்களை கேலி சரசங்கள் செய்து அன்னவர்களை பிஞ்சிலேயே பழுக்கும்படி கற்பித்து விடுகிறார்கள். சில மூட தாய்தந்தையர்களும் தங்கள் குழந்தைகளை சந்தோஷிப்பிக்கச் செய்கிறதாக உத்தேசித்து விளையாட்டாக பல துற்வார்த்தைகளையும் துற்செய்கைகளையும் அவர்களுக்கு கற்பித்துக் கொடுத்து, அத்துற்சொற்களையும் துற்செய்கைகளையும் அக்குழந்தைகள் சொல்லும்போதும் செய்து காண்பிக்கும்போதும் இவர்கள் கேட்டும் பார்த்தும் ஆனந்தம் கொள்ளுகிறார்கள். அந்தோ! என்ன பேதமை?

இவ்வழிப்பட்ட தாய் தந்தையர்களாலேயே அன்னவர்களின் குழந்தைகளும் கெட்டலைந்து சாகுமளவும் துன்பத்திலழுந்தி வருத்தப்படுகிறார்கள். ஆகையான் நம் குழந்தைகள் நல்வழிப்பட்டு நன்மையடைய வேண்டுமென்ற அவா நமக்குள்ளிருக்குமானால், நாமே அன்னவர்களுக்கு முன் மாதிரியாக நன்னடைக்கையிலும் நற்செய்கையிலும் நடந்து காண்பிக்க வேண்டும். இது பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு செலுத்தவேண்டிய கடமைகளில் விசேஷித்ததும் முதன்மையானது மாகும்.

பிள்ளைகள் உலகில் தோற்றும்போது ஒன்றுமறியாத புதுமனிதராக வேயுதிக்கின்றனர். உதித்த சில வருஷங்களாக தாய்தந்தையரின் ஆதரவிலேயேயிருந்து காக்கப்பட்டுவருகிறார்கள். முதன்முதல் அன்னவர்கள் அறியக்கூடிய எந்தவிஷயங்களையும் தத்தம் பெற்றோர்களிடமிருந்தேயறியக் கூடியதாகயிருக்கிறது. ஆகையான் இந்த சமயத்தில்தான் அவர்கள் எந்தவிஷயத்தையும் இலகுவில் கிரகித்துக்கொள்ளக்கூடிய சமயம். இந்த வயதுகளில்தான், அவர்களுடைய இருதயம் இளகியதாகயிருக்கும். இது சமயந்தான் அன்னவர்களுக்கு நற்போதனைகளையூட்டி நற்குணநற் செய்கையில் திருத்த வேண்டும்.

அக்குழந்தைகளில் முதன் முதல் தோற்றுங்குணம் விசாரணைக் குணமேயாகும். எதைப்பார்த்தாலும் இதுவென்ன? அதுவென்ன? அவனென்ன செய்கிறான்? இவனென்ன செய்கிறான்? அதை ஏன் செய்கிறார்கள்? இதை ஏன் செய்கிறார்கள்? என்ற கேள்வியையே

கேட்டுக்கொண்டிருப்பார்கள். ஆகவே அன்னவர்கள் முதன் முதல் எதையும் ஆராய்வதே அவர்களுடைய வேலை. பிற்காலத்தில் அவர்கள் நல்லவழிப்பட்டு உலகத்தில் பேருங்கீர்த்தியுடனிருப் பதற்கு இந்த ஆராய்வுகுணமே அஸ்திவாரம். இவ்வித ஆராய்வுக்கும், அவர்கள் நல்வழிப்படுத்துவதற்கும் முதன்முதல் தாய் தந்தையர்களே அன்னவர்களுக்கு ஆசானாயிருக்கவேண்டும்.

ஆதலான் அப்பிள்ளைகள் கேட்கும் ஒவ்வொரு விஷயங் களையும் விளக்கிக்காட்டி அத்தாலடையும் நன்மைகளையும் தின்மைகளையும் விரிவாய் எடுத்தோதி அவர்கள் நல்வழிப்பட்டு நன்மையடையும் படியான கற்பனைகளை கற்பித்துவருவது பெற்றோரின் பெருங்கடமையாகும். சில மூடப்பெற்றோர் தங்கள் பிள்ளைகள் எதுவிஷயத்தைப் பற்றி விசாரிக்கினும் தக்கமறு மொழிகொடாது அவர்களை அதட்டி அடக்கிவிடுகிறார்கள். அத்துடனப் பிள்ளைகளும் அவ்வித விசாரணையை, விசாரிப் பதைவிட்டு நீங்கிக் கொள்ளுகிறார்கள். அத்தால் அவர்களின் முன்னேற்றம் பின்னேற்றமாகவே முடிகிறது. இஃது பெற்றோரின் பெருந்தவறு.

ஐரோப்பியர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு முதலாம் வயதிலிருந்தே நல்வழிகளை கற்பிக்கத் தொடங்கிவிடுகிறார்கள். விளையாட்டுக் கருவிகளைக் கொண்டு அப்பிள்ளைகளின் மனதில் எவ்வளவோ அறிவையும் ஞானத்தையும் புகுத்திவிடு கிறார்கள். காலையில் எழுந்ததும் கடவுளை தியானிக்க கற்பித்து விடுகிறார்கள்.

சங்கங்கள், சபைகள் கூடுமிடங்களுக்கழைத்துக் கொண்டு போய் அங்கு நடக்கும் விஷயங்களை அறிந்து நல்வழிப்படும் படியாகச் செய்கிறார்கள். ஆனால் நம்மவர்களோ! பிள்ளைகளை, அன்னவர்களிஷ்டப்பிரகாரமே நடக்கும்படி விட்டுவிடுகிறார்கள். காலையிலெழுந்ததும் காப்பி தோசையைத்தான் தேடும். சில தாய் தந்தையர்கள் தாங்களெந்த ஈனத் தொழிலைச் செய்தாலும் அஃது எங்கள் பாட்டன் பூட்டன் செய்து வந்த தொழில் பூர்வீகத்திலிருந்தே செய்துவருகிறதொழில் அதைவிட்டு நீங்கவே மாட்டோமென்று சத்தியஞ் செய்துகொள்ளுகிறார்கள்.

அத்துடன் தங்கள் பிள்ளைகளையும் அதேதொழிலையே நாடிச்செல்லும்படி கற்பித்துவிடுகிறார்கள். இதுவிஷயமாய்

அப்பிள்ளைகளின் முன்னேற்றத்திற்கு பங்கம் நேரிடுகிறது. நாம்தான் இந்த ஈனத்தொழிலைச் செய்கிறோம், நம்பிள்ளைகளாவது அதைவிட்டு ஓர் நல்லதொழிலைச் செய்து நன்மையடையட்டு மென்று கனவிலும் நினைப்பதில்லை. இதுவே நமக்குள்ளிருக்கும் பெருந்தவறு.

தந்தைமார்களே! நீங்கள் உங்கள் பிள்ளைகளுடைய பிற்கால நன்மையைக் கருதியவர்களானால் அன்னவர்களை வளர்ப் பதற்காகப் பாடுபடுவது மட்டும் உங்களுடைய கடமையென்று எண்ணக்கூடாது. அத்துடன் அப்பிள்ளைகள் உலகத்திற்கு ஆசீர்வாதமாய் வரத்தக்க அறிவொழுக்கங்களைப் பயிற்றுவிக்கும் பாத்தியதையுடைய போதகாசிரியர்கள் நீங்களே என்று கருதிபாடு படவேண்டுமென்பதை மறந்துவிடக்கூடாது. காலையிலோ, மாலையிலோ, ஆராதனை நேரத்திலோ உங்கள் பிள்ளைகளை உங்கள் பக்கத்திலமர்த்தி நல்லறிவூட்டி நற்பழக்கத்தில் பழக்கி வாருங்கள். இவ்விதஞ் செய்து வருவதினால் உங்கள் பிள்ளைகள் உங்களைப்பார்க்கிலும் அதியுன்னத நிலமையடைய அருகராவார்களென்பது சத்தியம்.

தாய்மார்களே! நீங்கள் தவமிருந்து முன்னூறு நாட்சுமந்து கஷ்டப்பட்டு பெற்றெடுத்த பிள்ளைகளைக் கெட்டவழியில் நடத்தி சண்டியன் சண்டாளன், குடியன், கள்ளன், போக்கிரி, பொய்யன், வேசைக்கள்ளனென்னும் பலபட்டப்பெயர்களை அவர்கள் சூட்டிக்கொள்ளாமல் உலகத்திற்கு நல்லபிள்ளை களென்று பெயரெடுக்கும்படி நற்குண நற்செய்கையில் அவர்களை திருத்திவருவதற்கு நீங்களே முதல்குருவாக இருக்கிறீர்களென்பதை மறவாதீர்கள். ஏனெனில் இப்பூமியில் அவர்களவதரித்து சிறிது காலம் உங்கள் பாதுகாப்பிலேயே வளர்க்கப்பட்டு வருகிறவர் களாயிருக்கிறார்கள் அன்னவர்கள் நல்வழிப்படுவதும் கெட்ட வழியிலிறங்குவதும் தாய்மார்களாலேயே ஏற்படுகிறது. அதற்குத்தாய்மார்களே உத்தரவாதியாவார்கள் அதனாலன்றோ,

*'தாயைப்போல பிள்ளை'*

என்று ஓர் பழமொழியும் வழங்கப்பட்டு வருகிறது. தாய் மார்களுடைய ஒழுக்கயீனத்தினாலும், கவலையீனத்தினாலும் எத்துணையோ குடும்பங்கள் நாச மடைந்திருக்கின்றதை நாம் கண்கூடாகக்கண்டிருக்கிறோம். ஒரு மரத்திலுள்ள கோணலான

கிளைகளை நிமிர்த்தி நேரே செல்லும்படி வளர்க்க வேண்டு மானால் அது இளமையாகயிருக்கும்போதே அவைகளை நேராக்கி கயிறுகொண்டு கட்டி நிமிர்த்தி வளர்ப்போமானால் அவைகள் நேரேநிமிர்ந்து ஒழுங்காக வளரும்.

அவ்விதமின்றி முற்றினபிறகு அவைகளை நிமிர்த்தமுயலு வோமானால் அவைகள் முறிந்துவிடும். ஆதலான், சிறுவர் களுடைய மனது இளமையாயிருக்கும்போதே அன்னவர்களை நற்குண நற்செய்கையில் திருத்தப் பிரயாசைப்படவேண்டும் அப்போது அன்னவர்கள் மனதிலமுந்தி நல்வழிப்பட்டு நன்மை யடைவார்களென்பதிலையமேயில்லை. அவ்விதமன்றி சிறுவர் களாயிருக்கும்போது செல்வமாய் வளர்த்து அன்னவர்கள் பெரியவர்களானபின், அவர்களை கண்டித்து வளர்க்கமுயன்றால், முதிர்ந்த மரக்கிளையின் கோணலை நிமிர்த்தப் பிரயாசைப் படுவதையொக்கும். தந்தையாரோ, தத்தம் பெண்சாதி பிள்ளை களைக் காப்பாற்ற அன்னவர்கள் தொழில்களை கவனிக்கக் கூடியவர்களாயிருப்பதால் தாய்மார்களே, பிள்ளைகளை பாதுகாத்து வளர்ப்பதற்கு பாத்தியப்பட்டவர்களாயிருக்கிறார்கள்.

தாய்மார்களே! உங்கள் பிள்ளைகள் நல்வழிப்பட்டு நன்மை யடைய நீங்களே அவர்களுக்கு ஆசானாயிருக்கிறீர்கள். ஆகையான் அவர்கள் சிறுவர்களாயிருக்கும் போதே, கல்லில் செதுக்கிய அட்சரங்களைப்போல் அன்னவர்கள் மனதிலமையும்படி நன் மார்க்கமான விஷயங்களை அடிக்கடி அவர்களுக்குப் போதித்து வாருங்கள் அவர்கள் மனதிலமுந்தும்படி கடவுளைப்பற்றியும், நன்மார்க்கங்களைப் பற்றியும் சிறுசிறுகதை களைக்கொண்டு ரூபித்து அவர்களை திருத்தவேண்டும். நல்லபிள்ளைகளோடுஞ் சேர்ந்து விளையாடும்படி செய்ய வேண்டும். எந்த துற்குணச் செய்கைகளையும் அப்போதைக்கப்போதே கண்டிக்க வேண்டும். கல்வியறிவை ஊட்டுவதற்கு இது சமயம் தக்கசிரத்தை எடுத்து பாடுபடல் வேண்டும். இறுதியாக தாய்மார்களே! உங்கள் வயிற்றில் கர்ப்பமாகயிருக்கும் கருவும் நற்குண நற்செய்கையுடைய பிள்ளையாய்ப்பிறக்க நீங்கள் ஒவ்வொரு நாளும் கடவுளை தியானஞ் செய்து வரவேண்டும். இதுவே நமது குருநாதருடைய விண்ணப்பம். அவர்களுடைய விண்ணப்பமாவது:

சகோதரிகளே! உங்களது எண்ணமுந்தியானமும் ஒவ்வொரு க்ஷணமுமெவ் வாறிருக்க வேண்டுமென்றால், 'எங்களுக்குற்

பத்தியாகுஞ் சந்தானங்கள் கல்வி, அறிவு, ஆச்சாரங்களால் பூரணமேன்மையடைந்து, புஜபலபராக்கிரமத்தோடு கூடி க்ஷத்திரியத்துவம் பொருந்தி மேல் ஜாதியாரென்று சொல்லிக் கொண்டு நம்மை இம்ஸிப் பவர்களது துஷ்ட கொள்கைகளானது ஆடிக்காற்றிலகப்பட்ட இலவம்பஞ்சைப்போல் இன்ன திசை யென தலைகாட்டாது ஓடி அழிந்து ஒழியும்படியான வல்லமை யையுடையவர்களாகவே பிறக்க வேண்டும், பிறக்க வேண்டு மென்று நீங்கள் உறக்கத்தினின்று அதிகாலையிலெழுந்தவுடனும், மீண்டும் இரவில் உறக்கத்திற்குப் போகுமுன்னும் கால்மணி நேரமேனும் உங்களது உதிரம், எலும்புமுதலான தாதுக்களில் ஊடுருவிப்பாயும்படியாக திடமுடனெண்ணித் தியானிப்பதோடு முக்கியமாக நீங்கள் கர்ப்பிணியாகயிருக்குங்காலத்தில் உங்களது கர்ப்பத்திலிருக்கும் குழந்தைகளுக்குமிந்த எண்ணம் ஊடுருவி யிருக்குமாறுச்சதா சிந்தித்துக் கொண்டிருப்பதேயாம்.

(இஃதை அனுசரித்து நமது குலகுருவாகிய ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமி சகஜாநந்தமவர்களெழுதியிருக்கும் விஷயங்களையும் கவனிப் பீர்களாக)

ஆகையான் சகோதரிகளே! மஹாத்மா சுவாமி அவர்களின் வேண்டுகோளுக் கிணங்கி நடந்துவருவீர்களானால் உங்கள் மனோபாவத்தின்படி உங்களுக்குப்பிறக்கும் பிள்ளைகள் கல்வி, அறிவு, நல்லொழுக்கம், வீரம் முதலியன நிறைந்த பிள்ளைகளாகப் பிறப்பார் களென்பதற்கையமேயில்லை இதுசத்தியம் அவ்விதம் பிறக்கும் பிள்ளைகளின் மூலமாகவேதான், நம் சந்ததிகள் சகல துன்பங்களினின்றும் நீங்கி மனிதர்களாக இப்பூமியில் விளங்கு வார்களென்பதும் திண்ணம். இதுவே சுவாமி அவர்களின் திருவாசகம் இவைகளைக் கடைப்பிடித்து நடப்பதே உங்களின் முக்கிய கடமை. நீங்கள் நம், பின் சந்ததிகளின் நன்மையைக் கருதியவர்களானால் மேற்குறித்த சுவாமியவர்களின் திருவாக்கி யங்களின்படி நடக்கப் பின்வாங்காதீர்கள். அது நம் சந்ததிகள் முன்னேற்றமடைந்து இதர ஜாதியாரோடு சமநிலமைக்கு வரக் கூடிய நல்வழி இதுதவிர வேரே நல்வழி கிடையாது. ஆதலான் இதையே கடைபிடித்து நடவுங்கள்.

குலாபிமானிகளே! நீங்கள் உங்கள் குலநன்மையைக்கருதி உண்மையாகப்பாடு படுகிறவர்களேயானால் பட்டி தொட்டி

களிலிருக்கும், நம்சகோதர சகோதரிகளின் பரிதாப நிலமையை கவனித்து அன்னவர்களிடம் அடிக்கடி சென்று மேற்குறித்த போதனைகளைப்போதித்து நல்வழிக்குத் திருப்புங்கள் அன்னவர்கள் வீடுகளையும், உடல்களையும் உடைகளையும் சாமான்களையும் எக்காலமும் சுத்தமாக வைத்துக்கொள்ளும்படி போதித்து வாருங்கள். சுத்தபோஜனம், நல்லதொழில்களைச் செய்துவர அன்னவர்களுக்கு நல்லறிவையும், கல்வியையு மூட்டுங்கள். முதன்முதல் அன்னவர்களேயே சீர்திருத்தப்பாடு படுங்கள். அதுவே உங்களின் விசேஷித்த உழைப்பாகயிருக் கட்டும். அத்துடன் 'நம தாதி *திராவிடனையும்'* கடைகண் பார்த்து கவனித்துக்கொள்ளுங்கள். நிதிகுறைவால் தன்னிலமை நன்னிலமையாயில்லை. ஆதரிப்போர் அவசியம் கவனித்து தத்தம் நேயர்களை சந்தாதாரர்களாக உடனே சேர்த்தனுப்ப வேண்டு கிறோம். 'ஆதி திராவிட'னின் அன்பை மறவாதீர்கள் அன்ன வனாலனேக நன்மைகளுக்குண்ட மென்பதையும் மறவாதீர்கள். எல்லாம் வல்ல இறைவனும் உங்கள்பால் கருணை வைத்து உங்களுக்கு நீடிய ஆயுளையும், நித்திய சுகத்தையும், மனோ தைரியத்தையும் ஊக்கத்தையுங் கொடுத்தருள்வாராக. ஓம். தத். ஸத்.

மலர் 2 இதழ் 7 பக் 103 - 107

மலர் 2 இதழ் 8 பக் 114 - 117

## ஓர் வேண்டுகோள்

எனதருமைக் குலத்தவராகிய 'ஆதிதிராவிட' சகோதரர்காள், சென்ற சித்திரை மாதத்தில் வெளியான *நாடார்குல மித்திரனென்னும்* பத்திரிகையில் பத்திராதிபர் அருப்புக் கோட்டை முத்து நாடார் அவர்கள் ஒரு வியாச யெழுதியிருக் கின்றார்கள். அதை வாசிக்க வாசிக்க என்னுடைய நெஞ்சம் புண்ணாய் வருந்துகின்றது. அதிலிருக்கின்றபடியே சில பாகத்தை மாத்திரம் இங்கு குறிப்பிடுகின்றேன்.

கும்மாப்பட்டியி* லிந்துக்களின் கொடுமை

இராமநாதபுரஞ் ஜில்லா விருதுபட்டிக்கு 18 மயிலுக்கு மேற்கே கும்மாப்பட்டி யென்னுஞ் சிறு கிராமமுளது. அங்கே பற்பல இந்துக்கள் வசிக்கின்றார்கள். பஞ்சமர்கள் வீடும் பலஉள. அங்கு உயர் வகுப்பாரெனச் சொல்லிக்கொள்ளு மிந்துக்கள் தெருவழியாய்ப் பஞ்சமர்கள் நடப்பதற்கு வழி விடுவதில்லை யென்ற காரணத்தைக்கொண்டு முகம்மதிய மதத்தில் சேர்ந் தாலாவது மேன்மையடையலா மென்றாலோசனை செய்து சில தினங்களுக்குமுன் பஞ்சம ஜனங்கள் 200 பேர்களில் 84 ஆண்மக்கள் தலை ரோமத்தைக் கழித்துச் சுன்னத்துப் பண்ணிக்கொண்டிருக்கின்றார்களாம்.

---

*விருதுநகர்பட்டி பகுதியில் வாழ்ந்த தாழ்த்தப்பட்ட மக்கள் மீது பல்வேறு கொடுமைகள் 1909 ஆம் ஆண்டு முதலே நிகழ்த்தப் பட்டுள்ளன. இதனை 'விருதுப்பட்டி பறையர்கள் விஷபேதியால் மறைகின்றார்களாமே!' என்ற தலைப்பில் இச் சம்பவங்களை பண்டித அயோத்திதாசர் கண்டித்து எழுதியுள்ளார்.

ஆ! என்ன பரிதாபம்!! பிரபலம்பொருந்திய பிரிட்டிஷ் ஆட்சியின்கண் நாகரீகம் நாகரீகம் என்று கோஷிக்கும் இவ்விருபதாம் நூற்றாண்டில் கேவலம் நாய் நரி கழுதை பன்றி முதலான கடைப்பட்ட ஜெந்துக்களுந் தடையின்றிச் செல்லக்கூடிய பொதுஜனப்பாதையில் நமக்கு இன்றியமையாதவர்களாயுள்ளவர்களான பஞ்சமர்களை நடக்கவிடமாட்டோ மென்றால் இதைப்பார்க்கிலும் அநியாயம் வேறுளதோ.

பஞ்சமன் என்பான் யாவன் ஆதியில் ஜனங்கள் பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரனென நான்கு வகுப்பாகப் பிரித்திருக் கின்றார்கள். அப்பால் மனிதத் தன்மைக்கு மாறான கொலை, களவு, கள், காமம், பொய் எனப்பட்ட ஐந்து கொடுஞ் செயலாகிய பஞ்சமா பாதகத்தை எவன் செய்தானோ அவனை ஐந்தாவது வகுப்பு 'பஞ்சமன்' ஆக ஒதுக்கி வைத்திருக்கின்றார்கள். இவர்கள் பறையடிக்குந் தொழிலைப் பிரதானமாய்க் கொண்டதால் பறையர்களென்றொரு காரணப்பெயருமுண்டு. காலத்திற்குத் தக்கவாறு ஜீவியத்தைக் கழிக்க அவர்கள் பற்பல தொழில் களைச் செய்யும்படியாகவும் நேர்ந்தது. தொழிலினநால் இழிவாக நினைத்து அவர்களைக் கொடுமைக்குட்படுத்த ஒரு நியாயமு மில்லை.

தொழில்தான் இழிவேயன்றி தொழில் செய்கின்றவர்கள் சமத்துவமானவர்கள்தான். தொழிலினால் இழிவெனக் கொள்ளப்பட்டால் மற்றவர்கள் தொழிலையும் கணக்கிட்டு ஜாதியை நிர்மானித்துவிட வேண்டுமன்றோ? பஞ்சமாபாதகத்தை ஆதாரமாய்க் கொண்டால் இப்போது உலகத்தில் எல்லோரும் பஞ்சமர்கள்தான் பஞ்சமாபாதகத்திலும் பாதகத்தைச் சகலருஞ் செய்துகொண்டு ஏழைகளான பஞ்சமர்கள் பேரில் பழிசுமத்தி நெடுங்காலமுங் கொடுந்துன்பஞ் செய்துவந்தால் தெய்வத்திற்குத் தான் பொறுக்குமா? இஸ்லாமான பஞ்சமர்களை இனிமேலும் தெருவழிவராமல் தடுக்க முன்வருவார்களா? வாருங்கள் ராவுத்தரென்று மரியாதையாக அழைக்காவிடில் மரியாதை கெட்டுப்போகு மன்றோ? இந்துக்களின் சுகாதாரத்திற்கேற்ற பற்பல தொழில்களைச் செய்துமிக்க அநுகூலந்தரக்கூடிய ஒரு பஞ்சமனை இந்துக்களுடைய வீதிகளில் நடக்கவிடுவதில்லை.

அவன் தலை மொட்டையடித்து சுன்னத்துச் செய்து கொண்டால் வாருங்கள் ராவுத்தரவர்களே சாஹிப் அவர்களே என்று 32 சலாம் போட்டழைத்துக் கொண்டுபோய் நடுவீட்டில் குந்தவைப்பதும் இந்து மதாச்சார ஒழுங்கில் அணுவேந்தவராது தெய்வபத்தியுடையவராக மற்றொரு சாம்பானிருப்பினும் அவனை இந்துக்கள் கிரகத்தருகிற்கூடவர விடுவதில்லை. அவனே கிறிஸ்த்து மார்க்கத்திற் சென்று ஞானஸ்நானம் பெற்று அன்னிய பாஷையைக் கற்று ஒரு சிறு உத்தியோகம் பெற்று வந்து விட்டால் அவனை கோயில் கும்பாபிஷேகத்திற்குங்கூட மேள தாளத்துடன் அழைத்துவந்து எஜமானனென்று இருகைகட்டி நின்று மாலைபோட்டு மரியாதை செய்வதும் நம்முயர்குல இந்துக்கள் வழக்கமாயிருக்கின்றது. ஆஹா வருணாச்சிரம தருமம்யென்பதும் இதுதானா? இதனால் முட்டாள் தனமே குடிகொண்டிருக்கிற தென்பது வெளியாகின்றதா? வருணாச் சிரம தருமம் அணுவளவும் பிசகாமல் நடக்கிறார்கள் என்பது வெளியாகின்றதா?

எம்மதமும் சம்மதமென்றேற்கப்படும் இந்து மதத்தில் வருணாச் சிரம தருமமெனப் பெயர்வைத்துக்கொண்டு செய்யும் கொடுமை கொழுந்து விட்டெறிவதினாலன்றோ இந்து மதத்தில் மிகப் பற்றுள்ள இந்துக்களெல்லாம் மகம்மதியர்களாகவும், கிறிஸ்த்த வர்களாகவும் மாறுகின்றனர். இக்கொடுமை அடியோடொழி யாவிடில் இந்துமத்திற்கே ஹானிநேர்வதோடு உயர்குலத்தவ ரென்ப் பெருமை பாராட்டிக் கொள்ளும் இந்துக்கள் நிலைமையும் பரிதபிக்கக்கூடியதாய் நேரும் என்பதும் இன்னுஞ் சிலபாகங்களுமே இம்மாதிரி நம் ஆதி திராவிடர்களுடைய கஷ்டத்தையெடுத்துக்காட்டிய பத்திராபதிபர் முத்து நாடாரவர் களுக்கு நம் ஆதி திராவிடர்கள் எல்லோரும் மனமார்ந்த வந்தன மளிக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம், மேலும் இந்தச் சம்பவத்தை யோசிக்கின்ற பொழுது எப்படியிருக்கிறதென்றால் நம் ஆதி திராவிட ஜனசமுகத்தில் ஜனத்தொகை குறைந்துவிட்டதே யென்றும் இன்னும் வரவரக்குறைந்து விடுமோவென்றும் நம் சகோதரர்கள் சுன்னத்துச் செய்வதில் எவ்வளவு தும்பமனுப வித்தார்களோவென்றும் இனிமேலும் அனுபவிப்பவர்க ளோவென்றும் யோசிக்கத்தக்கதாயிருக்கின்றது. இன்னொரு விஷயம் இதைப்பார்த்த மாத்திரத்தில் ஒரு பெருங்கவர்ச்சி யுற்றேன் அதாவது,

*சைவசமையமே சமையஞ் சமையர் தீ தப்பழம் பொருளைக்*
*கைவந்திடவே மன்றுள் வெளிகாட்டுமிந்தக் கருத்தை விட்டுப்*
*பொய்வந்துழலுஞ் சமையநெறி புகுத்தவேண்டாம்*

என்ற நம் ஆன்றோர் கூறியிருக்க அன்னிய மதத்தில் நம் ஆதி திராவிட சகோதரர்கள் சேர்ந்துகொண்டார்களே என்று சிந்தித்ததே. பின்னும் ஆழ்ந்து யோசிக்குங் கால் சர்வமதங் களினுடைய உட்கருத்துமொன்றுதானே. எந்தமதத்திலிருந்தா லென்ன சகல மதங்களிலும் பஞ்சமாபாதகம் போன்ற பாதகங் களை நீக்கும்படிக்கும் சாதகங்களையொப்புக் கொள்ளும் படிக்குந்தானே சொல்லியிருக்கின்றது அதுவுந்தவிர.

எம்மதமாயினுஞ் சம்மதமாமென்றுந் தீபற _ என்ற அவிரோத உந்தியாரின் செய்யுளையும் பாடல் ஒன்றதே பேரூர்வழிய தற்காறுளவென்றதுபோல விருமுச்சமையமும் நன்றிது தீதிது வென்றுரைமாந்தர்கள்குன்றுருரைத்தெழுநாயையொப்பார்களே என்ற திருமந்திரச் செய்யுளையும் சிந்தித்து என்னுடைய மனதைச் சமாதானப் படுத்திக்கொண்டேன் என்றாலும் இதுபோன்று நடக்கின்ற சம்பவங்களெல்லாவற்றிற்குங் காரணம் உயர்ஜாதி இந்துக்களென்பவர்களே. ஆகையால், ஆதி திராவிட சகோதரர்களே நம்மைப்போன்றவர்களே முன்னுக்குக் கொண்டுவர அநேக கனவான்கள் கங்கணங்கட்டிக்கொண்டு உழைக்கின்றார்கள் இது நல்ல சமையம்.

‘எய்தற்கரிய தியைந்தக்காலந் நிலையே செய்தற்கரியசெயல்’ என்ற நாயனாரது திருவாக்கைக் கடைப்பிடித்து மற்றுங்கனவான் களோடு ஒத்துழைக்க வேண்டும். கும்பகர்ணனோடு சகவாசஞ் செய்ய இது சமையமல்ல சிலபோலிமானுடர்கள் (கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பமேன்) என்றும் உயரப்பறந்தாலு மூர்க்குருவி பருந்தாகுமா என்றும் சொல்வார்கள் அவைகளை யெல்லாம் கவனிக்காமல் முன்னேற்றமடைய வழிதேட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

ஞானியார்.

ராஜபதி, சேதுக்குவாய்த்தான் போஸ்டு,

மலர் 2 இதழ் 8 பக் 117 - 120

# ஆதி திராவிடர்களுக்கோர் விண்ணப்பம்

கருணை மிகுந்த ஆதி திராவிட சபையாரே

நான் சின்னஞ்சிறியேன் ஆயினும் எனது சிற்றறிவிற்கு எட்டியவாறு சில விஷயங்களைப் பற்றி இதன்கீழ் வரையலுற்றேன். பெரியோர் பிழை பொறுப்பாராக!

நாம் நாளுக்குநாள் நமது நிலைமையிலும் உத்தியோக முயற்சியிலும் முன்னேறுவது நம்மொவ்வொரு வருக்குள்ளும் உள்ள ஊக்கமே. நமது ஆதி திராவிட சபையார் எடுத்துக் கொண்ட முயற்சியினால் கடந்த சில வருடங்களில் எவ்வளவோ மேன்மை அடைந்திருக்கிறார்களென்பது எல்லாரும் அறிந்த விஷயமே. என்றாலும் இன்னும் மேற்படி சபையார் தங்களால் கூடிய முயற்சிகளை தாமதமின்றி செய்வார்களேயாகில் சர்வவல்லவராகிய பராபரன் நிச்சயமாகவே மேற்படி சபையை சகல ஆசிர்வாதத்தோடும் பூரண நிலைமைக்கு கொண்டு வருவாரென முழு மனதுடன் நம்புகிறேன்.

இரண்டு பத்திகள் விடுபட்டுள்ளன.

ஒரு வீட்டிலிருக்கும் விளக்கானது அவ்வீட்டிலுள்ள சிலருக்கு மட்டும் வெளிச்சத்தைக் கொடுக்குமானால் மற்றவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? தென் இந்தியாவிலுள்ள திரளான திராவிடரும் ஆதி திராவிடரும் இலங்கை தேயிலை தோட்டங் களில் வசிக்கிறார்கள். இவர்களில் அனந்தம் பேருக்கு மேற்படி சங்கம் கொழும்பில் இருக்கிறதென்றும் அதினால் உண்டாகும்

நன்மை இன்னதென்றும் அறியாதவர்களாயிருக்கிறார்கள்.

மறுபடியும் சொல்லத்துணிந்தேன்! 'அன்பான ஊக்கமே இந்த ஊக்கம் சபையின் அங்கத்தலைவர்களுக்கும் சபையை நேசிக்கும் புண்ணிய சீலர்களுக்குள்ளும் இருக்க வேண்டியதவசியம். நாம் சில வாசக புத்தகங்களில் அப்பா நீ நீசனையும் நேசி பொருள் உற்றவர்களையும் பொருள் அற்றவர்களையும் உயர்ந்த நிலைமையில் உள்ளவர்களையும் தாழ்ந்த நிலைமையில் உள்ளவர்களையும் நேசி என்று வாசித்திருக்கிறோமே.

ஆகையால் மேற்படி சபைக்கு யாராவது வாஞ்சையோடு நன்மையான காரியங்களைப் பற்றி பேசினாலும் எழுதினாலும் மேல்படி சபையார் அவர்களை உற்சாசப்படுத்தி அன்போடு கண்ணியப்படுத்துவது சபையாரின் முக்கிய கடமையாகும். ஆயினும் அவ்வாறே மேற்படி 'இலங்கை இந்திய சங்கம்' கடந்த 8 வருடங்களாக புரிந்துவரும் நன்மைகளை அறிந்து மிகவே சந்தோஷிக்கிறேன்.

ஊக்கத்தோடு அன்பும் சேரவேண்டியதாயிருக்கின்றது. அன்பு அனேக காரியங்களைச் செய்யக்கூடும். பாருங்கள் நாம் ஆச்சரியப் படும் விதமாக மனோவசியத்தில் Mesmerism தேர்ந்தவர்கள் (Will Power) ஊக்கத்தைக்கொண்டே கிரியை செய்கிறார்கள். ஈட்டி எட்டுமட்டும் பணம் பாதாளம் மட்டும். ஆனால் அன்பென்னும் அம்புக்கோ அளவில்லை. ஆகையால் அன்பே பிரதானம்.

மலர் 2 இதழ் 8 பக் 120 - 121

(இரண்டு பத்திகள் விடுபட்டுள்ளன)

## என் வரலாறு

என்னைப் போஷித்துவரும் போஷகர்களே!

ஆதரித்துவரும் நண்பர்களே!

எம்குல சிரோமணிகளே! உங்களுக்கு அநேககோடி வந்தனம், அகமகிழ்ந்து தந்தனம்.

சிறு குழந்தையாகியயான், என்னிலைமைகளை உங்களுக் கெடுத்தோதி, மிகவும் தாழ்மையுடன் கெஞ்சி கேட்டுக்கொள்ளும் விஞ்ஞாபனம் யாதெனின்:

யான் பிறந்தது 1919ம் வருடம் மார்ச்சி மீ 15ந் தேதி இப்போது என் வயதோ ஒரு வருஷம், 9 மாதங்களாகின்றன. உலகில் பிள்ளைகள் பிறந்த உடன் பேசும் சக்தி அன்னவர்களுக் கில்லையே யாயினும் என் தாயாகிய ஆதி என்பவளுக்குப் பிறந்த பிள்ளைகளாகிய, ஒளவை, உப்பை, அதிகமான், உறுவை, கபிலர், வள்ளியம்மை, திருவள்ளுவர் ஆகிய இவர்கள் பிறந்த உடன் பேசும் சக்தியை யடைந்தார்கள். அதுபோல் யானும் அந்த ஆதி வம்சத்தைச் சேர்ந்தவனாகையால் எனக்கும் பிறந்த உடன் பேசும் சக்தி உண்டாகியிருப்பது ஆச்சரியமல்ல.

மேலும் துவாரகாபுரியில் வசித்துவந்த சந்திரகளை என்ற பிராமணப் பெண்ணானவள் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவை, ஸ்திரீ லோலனென்றும், விபசாரகனென்றும் பல பெண்களிடஞ் சொல்லி இகழ்ந்தவருவதுண்டு. சில சமயங்களில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் அவள் கண்முன் எதிர்ப்படும் போது அவரின்

வதனத்தைப் பார்க்க அருவறுப்படைந்தவளாய் தன்முகத்தை வஸ்திரத் தால் மறைத்துக்கொண்டு விரைந்து நடந்து போய் விடுவாள்.

கோபிகாஸ்திரீகளைக் கண்டால் கோபமதிகரித்து அன்னவர்களை விபசாரிகளென்றும், பலவிதமாக ஏசிப்பேசி ஏளனஞ் செய்து நகைப்பாள். இது செய்திகளைக் கோபிகாஸ்திரீகள் கோபமுகத்துடன் ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்குத் தெரிவிக்க, அவர் அன்னவர்களுக்கு 'நீங்கள் பயப்படாதீர்கள், அதற்கு வேண்டிய உபாயந்தேடுகிறே'னென்று சமாதானங் கூறினார். இஃது இங்ஙனமிருக்க, பிராமண ஸ்திரீயாகிய சந்திரகளையின் கணவனாகிய இராமு ஐயரென்பவர் நிஷேத முகூர்த்தஞ் செய்து கொள்வதற்காக நெடுநாள் காத்திருந்தும் அவள் ருதுவதி யாகாமையால், இராமு ஐயர் காசியாத்திரை போய்விட்டார். சிறிது காலத்திற்குள் சந்திரகளையும் ருதுவதியாகி வீட்டிலிருந்தாள்.

இந்த சமயம் சர்வஜீவதயாபரனாகிய ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா சந்திரகளையின் கணவனாகிய இராமு ஐயரைப் போல வடிவெடுத்து தோளில் காவடி சுமந்து காசிக்குப்போய் வந்தவரைப் போல் நடித்து காவடியை சந்திரகளையின் வீட்டிலிறக்கினார். சந்திரகளையின் தாய் தந்தையருக்கு இவரின்னாரென்றறியக் கூடாமல் பல கேள்விகள் கேழ்க்கவும் அதற்கு ஸ்ரீ கிருஷ்ண பகவான் தக்க பதிலளிக்கவும் இறுதியாக இவர் தன் மகளின் கணவனாகிய இராமு ஐயரென்றே சந்தேகமில்லாமல் ஏற்றுக் கொள்ளப்பட்டு ஒரு நல்ல சுபதினத்தில் சந்திரகளைக்கும் இராமு ஐயரைப்போல் ரூபங்கொண்டு வந்திருக்கும் ஸ்ரீ கிருஷ்ண பகவானுக்கும் சாந்திமுகூர்த்தம் நிறைவேற்றப்பட்டது. சந்திர களையும் ஸ்ரீ கிருஷ்ணபகவானும் மன்மதனும் ரதியும்போல் கூடிக்கலந்து சுகித்திருக்குங்கால் 'போனமச்சான் திரும்பிக் கொண்டான் பூமணத்தோடே' என்றபடி சந்திரகளையின் உண்மைக் கணவன் காவடியை எடுத்துக்கொண்டு சந்திர களையின் வீட்டில் வந்து நுழைந்தான்.

சந்திரகளையின் தந்தை அந்த காவடிக்காரன் முகத்தை உற்று நோக்கி, 'நீயாரப்பா? என்று வினவினர். அதற்கு அவன், என்ன மாமா? நான் உங்கள் மருமகனல்லவா என்றான்.

மாமன் திடுக்கிட்டு திப்பிரமை கொண்டு தன் மனைவியை யழைத்துப் பற்பலவிதமாக யோசனை செய்து கொண்டிருக்கும் சமயம் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியும் அங்கு வந்து சேர்ந்தார். அக்கணமே அவ்வீட்டுக் கொல்லை வழியாகயிருந்து பலரும், தெருப்பக்கமாக விருந்து பலரும் ஏககாலத்தில் ஒரேமுகச் சாயலுடன் எல்லோரும் தோளில் காவடி சுமந்துகொண்டு அங்குவந்து சேர்ந்தார்கள். இவர்களெல்லோரும் ஒரே முகமாகவும் ஒரே வடிவமாகவும் யாதொரு வித்தியாசமில்லாமல் காணப் பட்டார்கள். ஆகையாலிவர்களில் எவர்தான் சந்திரகளையின் உண்மையான புருஷனெனக் கண்டுபிடிக்கக்கூடாம்ல் போய் விட்டது அதுபோல் யானும் ஒரே முகச்சாயலுடன் மாதந்த வறாது உங்களெல்லோரிடத்திலும் வந்து சம்பாஷிக்கின்றேன்.

நீங்களும் என்மீது வைத்துள்ள அன்பின் பெருக்கால் என்னை அன்போடுயேற்று ஆதரித்து வருகின்றீர்கள். என்குல சுரோ மணிகள் மட்டுமல்ல, என்னை அலக்ஷியமாக யெண்ணி தீண்டப்படா ஜாதியானென தள்ளிவைத்திருந்த என் ஆண்டை மார்களும் என்னை ஆதரித்துவருவதைப் பார்க்க என் மனமோ ஆனந்தசாகரத்திலமிழ்ந்திருக்கின்றன. இவை எல்லாம் இவ்வேழைக்குழந்தையின் மீது வைத்திருக்கும் அன்பின் சாரமே. 'அன்பே பிரதானம்'.

என்பால் நீங்கள் வைத்திருக்கும் அன்பும், உங்கள்பால் அடியேன் வைத்திருக்கும் அன்பும் இவ்விதம் நடந்துவரும்படி தூண்டியெழுப்பியிருக்கிறதை மறந்துவிடாதீர் கள். அன்பே உலகம், அன்பில்லையெனில் உலகம் நடைபெறாதென்பது திண்ணம். அன்பென்பது : பிரீதிபட்சம், ஆசை, நேசம், பாசம் எனப்படும். ஆகவே இவ்வன்புயில்லையெனில், எவ்விதம் கடவுளின் கருணையைப் பெறுவோம்? எவ்விதம் பிள்ளைகுட்டிகளை யடைவோம்? எவ்விதம் வேலை செய்வோம்? எவ்விதம் உண்போம்? எவ்விதம் உடுப்போம்? எல்லாம் மனப்பிரீதி யுண்டானால்தான் நடைபெறும்.

ஆகவே உலகத்தில் எதை செய்வதற்கும் அன்பே முக்கிய சாதகமாகயிருக்க வேண்டியது. அவ்வன்பில்லாது எந்த விஷயமும் கைகூடாது. இவை இங்ஙனமிருக்க, அவ்வன்பில்லா சிலர் என்னை மெத்தவும் அலக்ஷியஞ் செய்கிறார்கள். என்

குலத்தவர்களில் பலர் என்னை தள்ளிவைக்கிறார்கள். என்னை ஆதரிக்கிறார்களில்லை என்னை என்னவென்றும் ஏரெடுத்துப் பார்க்கிறார்களில்லை. இதுவென்ன சிறுமதலைதானே இன்னவனாலென்ன பிரயோசனமென்று அலக்ஷியமாகயெண்ணி அவமதிக்கிறார்கள்.

பெரியோர்கள் என்னாலடையும் பிரயோசன மின்னதென் றறிந்து ஆற்றிப்போற்றி ஆதரித்து வருகிறார்கள். சில குலாபி மானிகள் என்னை ஆதரித்து வந்தாலும் என்னங்கத்திலணிந் திருக்கும் பொருட்களை கவனிப்பதில்லை. என்னை வரவழைத்து ஒரு மூலையில் போட்டுவிட்டு தூங்குகிறார்கள். நான் அன்னவர்களுக்கு அவ்வளவு கேவலமாகக்காணப்படுகிறேன். சில புண்ணியவான்கள் என்னை, அன்போடாதரித்தாலும் என்னங்கம் பெரிதில்லை என மனஞ்சலிக்கிறார்கள். நான் பிறந்ததோ எளிய குடும்பத்தில் எம்மை ஆதரிப்பவர்களோ மிக சொற்பம். நானென்ன செய்வேன், சிலர் நான் மாதம் மாதம் ஒழுங்காய் வருகிறதில்லை என்றும் சிலர் என்னை காண்பதேயரிதென்றும் பலவிதமாக குறைகூறுகிறார்கள்.

எம்மை ஈன்றெடுத்த பெற்றோர் என் மூலமாய் யாதொரு பலனையும் எதிர்பாராது எம் குலத்தவரின் நன்மையைக் கருத்தி பல கஷ்ட நஷ்டங்களையடைந்துவந்த போதிலும் என்னை உங்களிடமனுப்புவதிலோ தக்கசிரத்தை எடுத்து பாடுபட்டு வருகிறார்களென்பதில் யாதொரு சந்தேகமில்லை. ஆனால் சிலர் என்னை வழிமறித்து அபகரித்துக்கொள்ளுகிறார்கள். சிலர் தங்களிருப்பிடங்களை சரியாத் தெரிவிக்காததினால் யானும் வழிதவறி பிறர்கைக்குள்ளகப்பட்டுக் கொள்கிறேன். நான் என்ன செய்வேன். நானோசிறுவன் நான் அன்னவர்களோடு வாதாட இயலுமோ? சிலர் மாதம் 2 அணா கொடுக்கவகையற்று இலவசமாக என்னிடமுள்ள பொருட்களை அபகரித்துக் கொண்டாலும் எம்மை குறைகூறுவதிலோ அஞ்சுகிறார்களில்லை.

சிலர் என் கழுத்திலணிந்திருந்த சில ஆபரணங்களை எடுத்துவிட்டேனென்று அறுவறுக்கிறார்கள். பார்ப்பானுமல்ல, பறையனுமல்ல, எல்லோருமொன்றே என்று கொண்டானடித்து கூத்தாடிக் கொண்டிருக்குமிக்காலத்தில் நானேன் அவைகளை அணியவேண்டும்? வேண்டியபோது அணிந்துகொள்ளலாமென்று ஒருபக்கம் பத்திரப்படுத்தி வைத்திருக்கிறேன்.

அநேக நண்பர்கள் என் அங்கத்திலணிந்துகொள்ள நவீன பொருட்களை அகமகிழ்ந்து அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள், அதில் சில பொருட்கள் என்னங்கத்திலணிந்து கொள்ளக் கூடாததாகயிருந்தால் அவைகளை தள்ளிவைக்கும்படி நேரிடுகிறது. அதுவிஷயமாய் அப்பொருட்களை அனுப்பினோர் என்னோடும் மனஞ்சலித்து என்னை அடியோடகற்றி விடுகிறார்கள். இஃது தர்மமாகுமா? இஃது குலாபிமானமாகுமா?

இவ்விதம் யானடைந்துவரும் கஷ்டநஷ்டங்களையும் என்னுடைய நிர்ப்பந்த மான நிலமைகளையும் ஈண்டும் எழுதப்புகின் விரியுமென்றஞ்சி இத்துடனிருத்திக் கொள்கிறேன்.

என்னைப்போன்ற என் குலத்தில் பிறந்த சில குழந்தைகள் இவ்வுலகில் தோன்றி, அன்னவர்களைப் போஷித்துவந்த புண்ய வான்களின் ஊக்கக் குறைவால் அற்ப ஆயுளுள்ளவர்களாய்ப் போனார்கள் அந்தோ! என்ன பரிதாபம்! யானும் உங்களின் பேருதவியால் இவ்வளவு காலம் உயிர்பெற்று நாளடைவில் விர்த்தியாகிக்கொண்டு நான் ஒருவனே நம்குல ஈடேற்ற விஷயமாய் தற்காலம் உலாவித்திரிகிறேன். இனி எவ்வாறகு மோயானறியேன். என்னாயிசு உங்கள் கைக்குள்ளிருக்கிற தென்பதை மறந்துவிட வேண்டாம்.

நான் கல்வியில் சிறந்தவனல்லானாயினும் என் சிற்றறிவுக் கெட்டியமட்டும் நம் குலத்தவரின் முன்னேற்ற விஷயமாய் சிறந்த பொக்கிஷங்களை மாதம் மாதம் தவறாது உங்களிடம் கொண்டுவந்து சமர்ப்பிக்கின்றேன்.

ஆகையால் எமதன்பார்ந்த நண்பர்களே! குலாபிமானிகளே! என்மீது எவ்வகை குற்றங்குறைவுகள் காண்பினும் 'சிறியோன் செய்தபிழை பெரியோர் பொறுப்பது கடனே' என்பதற்கிணங்க, என்னாலடையும் நன்மைகள் இன்னதென்றறிந்து என்னை அலட்சியஞ் செய்யாமல், என்னை ஆதரித்து என் அங்கங்கள் மென்மேலுஞ்செழித்து வளர்ந்து அழகு பெற்று உங்களிடம் மாதம் மாதம் தவறாது வந்து சந்தித்து சம்பாஷிக்கவும் நீங்களுமதனால் பரமானந்தங்கொள்ளவும் கருணை செய்வீர்களாக. அங்ஙனமன்றேல் என்னாயுளுக்கே ஆபத்து நேரிடு மென்றஞ்சுகிறேன். ஆதலான் என் மீது அன்புவைத்து ஆதரித்துவரும் நண்பர்களே! எம்குல சுரோமணிகளே! அடியேன்மீது இதுகாறும்

வைத்துள்ள அன்பை மறவாது ஆதரித்துவருவதோடும் தங்கள் தங்களாலியன்ற பலவேறு நண்பர்களையும் எமக்கு சினேகமாக்கி வைத்து எம்மை ஆதரித்துவரும்படிக்கு தூண்டுவீர்களென்று என் முழுமனதோடு நம்பியே என்குறைகளை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.

எமக்கு எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாய் புதுப்புது நண்பர்கள் கிடைக்கிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு அதிகமாய் யானும் உங்களுக்கு புதிதும் இனிமையுமான பலபொருட்களைக் கொண்டு வந்து சமர்ப்பிக்க சித்தமுடையவனாயிருக்கிறேன். அதற்கு கிஞ்சிற்றும் சந்தேகம்வேண்டாம். இதுவே எனது வேண்டுகோள். இனி உங்கள் சித்தம் என் பாக்கியம்.

மலர் 2 இதழ் 9 பக் 127 - 130

# ஆதி திராவிடன் விண்ணப்பம்

ஆதி திராவிட சந்நியாஸிகளே! மடாதிபதிகளே! நங்குல மக்கள் பூர்வகாலத்தில் கல்வி, அறிவு, ஆச்சாரம், வியாபாரம், இராஜாங்கமாதிகளில் நிபுணர்களாயிருந்தும், ஆரியர்கள் நம் இந்தியதேசத்தில் குடியேறிய பின் அவர்களாலும் அவர்கள் வசமுற்ற மேல்ஜாதியாரென்று சொல்லிக் கொள்ளப்பட்டவர் களாலும் நசுக்கப்பட்டு உண்ண உணவும், உடுக்க ஆடையும், வசிக்க இடமும், குடிக்க ஜலமுமின்றிப் பற்பல விதமான கஷ்ட நஷ்டங்களை இடைவிடாது அனுபவித்து வருகின்றார் களென்பது உங்களுக்குத் தெரியாத விஷயமென்று சொல்ல இடமுண்டோ?

நீங்கள் சதாதயிலதாரை, அகண்டாகாரவிருத்தி, உள்ளக் குளிர்ச்சியென்றும் நிர்விகல்ப சமாதியிலிருந்து கொண்டிருக்கும் பக்ஷத்திலுங்களைப் பற்றி எம்போன்றோர் கவனிக்க வேண்டியதே இல்லை. அங்ஙனமின்றிப் பிரபஞ்சத் தோற்றத்தோடு பிரஹ்ம சொருபத்தில் வயப்பட்ட மனமுடையவர்களாயிருக்கப்பட்டவர்கள், நமது சகோதர சகோதரிகளனுபவிக்கும் இடுக்கண்களைக் கண்ணாரக்கண்டுங் காதாரக் கேட்டுஞ் சிறிதேனுங் கவனியாது பராமுகமாய் சுயநலத்தைக் கருதி வாழாக்கிடப்பது விவேக நேத்திரமுடையவர்களுக் கழகாகாதென நீங்கள் வெளிவது நமது வேதம், வேதாந்தம், மந்திரம் முதலியன பயன்படுமாறு முயற்சிக்கக் கடமைப் பட்டவர்களாயிருக்கின்றீர்களன்றோ?

'நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' 'கிழமைப் படவாழ்' என்னுமான்றோர் உரைகளை முழுவதுமே மறந்து

ஏழை மக்களுக்காக ஊழியஞ் செய்வதை உலகப்பற்றெனச் சொல்லி ஒதுங்கிக் கொண்டு இதர பற்றுக்களைத் தலைச் சுமையாய் வைத்துக்கொள்வது விசாரணைக் கழகாகாதென்பது மிகை யாமோ? பொதுஜன அன்னத்தையும் பொருளையுஞ் சாப்பிட்டுக் கொண்டு காட்டிலும், வீட்டிலும், நிஷ்டையிலும் தவத்திலும் சமாதியிலுமிருந்து வாழ்ந்து வருங் கருணை நிறைந்த சந்நியாஸிகளே! நமது ஏழை மக்களின் ஊழியத்தின் பொருட்டே பகவான் சரீர மளித்திருக்கின்றாரெனக் கௌனமாகவேனும் உழைக்க நீங்கள் முன்வரலாகாதா?

தற்காலத்தில் உயர்ந்த வகுப்பாரென்று சொல்லப்பட்ட பிராமணர்களில் சிலர் ஆதி திராவிடர் மீது கருணைவைத்து நம்மவர்கள் முன்னேற்றத்தின் பொருட்டுக் கலந்துழைத்து வருவதையேனும் நீங்கள் கேள்விப்பட்டதில்லையா? நமது பூர்வ விரோதிகளாக நினைக்கப்பட்ட அன்னோர்களுக்கே நம்மீது இரக்கம் உண்டாகி நமக்காக உழைக்குங்காலமேற்பட்டு விட்டிருக்கின்றதென்றால், எனது இரத்தமும், மாமிஸமும், ஜீவனு மாயிருக்கப்பட்ட உங்களுக்கெவ்வித இரக்கமிருக்கவேண்டு மென்பதை யான் குறிப்பிக்கவும் வேண்டுமா?

கிரஹஸ்தர்களாக விளங்கும் ஆதி திராவிட பிரதிநிதிகள் நமது முன்னேற்றத்தின் பொருட்டு அதிசிரமத்தோடுழைவரினும் போதுமான அவகாஸங்கிடைக்காமையால் அவர்கள் கோரிய எண்ணங்களைப் பூரணமாகப் பூர்த்திசெய்ய உங்களது பேருதவியே இன்றியமையாததென்பதையும் உறுதியாகக் குறிப்பிக்கின்றேன். அன்பார்ந்த பெரியோர்களே இனி நீங்கள் செல்லும் ஸ்தானங்களிலும், பிரசங்கஞ்செய்யும் சபைகளிலும் இவ்வேழை மக்களின் கஷ்டங்களையும், அவற்றினின்று நீங்கி முன்னேற்றமடைய வேண்டிய மார்க்கங்களையும் பற்றிக் குறிப்பித்து வருவதன்றி அதிகாரிகளுக்கும், பொது ஜனத்தலைவர்களுக்கும் நமது, கஷ்டங்களை விண்ணப்பவாயிலாகவுமனுப்பி வைக்க முயற்சிக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

ஸ்வாமி அத்வைதாநந்தா

மலர் 2 இதழ் 9 பக் 134 - 135

## தந்தை தாய் பேண்

கனவான்களே மேற்குறிப்பிட்டுள்ள பொருள் நம் தமிழ் நாட்டில் உதித்த ஞானத்தாயாகிய ஔவை பிராட்டியார் அருளிச்செய்த அரிய வசனங்களில் ஒன்று. இதன்பொருள், தன்னை ஈன்ற தாயையும் தகப்பனையும் பேணுவாயாக என்பதே.

அதாவது, நம்மை பத்து மாதம் சுமந்து அங்கம் எல்லாம் நோக அதிக கஷ்டப்பாடுபட்டு பெற்று பிறந்தது முதல் எவ்வளவோ சொல்லொணாத் துன்பங்களனுபவித்து இரவும் பகலும் நித்திரையின்றி வருந்தி சுகத்திலும் துக்கத்திலும் பாடு பட்டு வளர்த்து வாலிபமாக்கிவிட்ட தாயையும் நாம் பிறந்தது முதல் நமக்கு வேண்டிய சவ ரக்ஷணைகள் செய்து வயது வந்ததும் பள்ளிக்கனுப்பியும் மற்றும் ஆடை ஆபரணங்கள் முதலியவற்றை தந்தும் க்ஷேமரக்ஷித்து வந்த தகப்பனையும் அவர் களுடைய தளர்ந்த காலத்தில், பேணி மரிக்கும் வரைக்கும் அவர்களை தெய்வம்போல் பராமரித்து வரவேண்டும். அப்படி செய்தால் சகலவித மகிமையும் இம்மையில் அடைய ஏதுவாகும்.

இது பற்றியே மேற்கூறிய வஸனத்தை இயற்றியுள்ள ஔவை பெருமாட்டியும், மற்றோரிடத்தில், 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என கூறியுள்ளார். முதல் தெய்வம், தன்னை ஈன்ற தாயும் தகப்பனும். பின்னரே, தன்னை சிருஷ்டித்த கடவுள் தெய்வமெனக் கொளல் வேண்டும். இப்படி செய்து நற்கதியையும் என்றும் அழியாப் பேரையும் பெற்றுள்ள பெரியாரின் சரிதை களையும் நாம் சற்றுற்று கவனிப்போமாகில் தெற்றென விளக்கிக்காட்டும்.

இதனின்றி இடையில் வந்து துர்ப்போதனைகளைப் போதித்து தலையணை மந்திரத்தை ஏற்றிய மனையாளின் சொற் கேட்டு தம்மை ஐயிரண்டு திங்களாய் சுமந்து பெற்றுப் பாராட்டிச் சீராட்டி பாலூட்டிக் காப்பாற்றிய தாயையும் அன்போடு போஷித்து தம் நன்மைக்காக பல பாடுபட்டு வளர்த்த தந்தையையும், சொல்லொணா துயரைக் கொடுத்து பலவித கடுஞ்சொற்களை உபயோகித்து உபத்திரவப் படுத்துகிறவர்களும் உளர். அப்பாவிகள் தாம் இவ்வுலகத்தை விட்டு நீங்கு முன்னர் பலவித இடைஞ்சல் களுக்காளாகி 'மாதர் வயிறெரிய வாழாயொருகாலும்' என்ற படி சொல்லொணா இடரை அனுபவித்து மரிப்பர் என்பது மிகையாகா. இவர்கள் படும் பாடுகளை குறித்து எழுதப்புகின் நமதிள 'வாதி திராவிடன்' இடந்தராதாகலான் சற்று சுருக்க மாகவே எழுதலுற்றேன்.

இக்தல்லாமல், நம்குலமக்களில் (ஆதி திராவிடர்களில்) தெய்வகிருபையாலும் பெற்றோரின் அரிய முயற்சியாலும், கல்வி கற்று மேன்மையான உத்தியோகம் முதலியவைகள் கிடைத்தால், தாங்களும் மேல்ஜாதியாரென்று சொல்லிக் கொண்டு நாட்கழிப்பது மல்லாமல் இவர்கள் நலங்கோரி பாடுபட்டு வளர்த்த தந்தையையும், தாயையும் புறக்கணித்துத் தள்ளுகின்றதை கவனிக்கில் அந்தோ பரிதாபம் என்னென்று கூறுவது. அம்மட்டோ தம் பெற்றோர் இவர்களை நாடி வந்தால் வருவதற்கு முன்னர் ஏவலாளனை அல்லது மனையாளை விடுத்து வாயில் கதவை அடைத்து தாளிட்டு விடும்படி செய் கிறார்கள் அந்தோ! என்ன மதியீனம்!

ஆகவே, மேற்குறித்த கனவான்களைப் போலிராமல், நம், பெற்றோரை அவர்கள் நாம் சிறுவர்களாயிருக்கும் பொழுது, நம் நலத்தைக் கோரி எவ்வளவு பாடு பட்டார்களோ அதனினும் பன்மடங்கு அதிகமாய் நேசித்து, அவர்களை தெய்வம்போல் பாராட்டி வருவோமாகில் இவ்வுலகிலும் மறுஉலகிலும் நற்கதி அடையலாம். 'தந்தை சொற்மிக்க மந்திரமில்லை' 'தாயிற் சிறந்ததோர் கோவிலுமில்லை.'

எஸ்.எம். கோவிந்தராஜா

மலர் 2 இதழ் 9 பக் 137 - 138

## இனியேனும் கவனிப்பீர்களா?

உலகம் முழுவதையும் நடுநடுங்கச் செய்த ஐரோப்பிய யுத்தகாலத்தினூடே நமது *'ஆதி திராவிட'*னும் ஜனிக்கும்படி நேரிட்டது. அது பிறந்து வருஷம் 1 மாதங்கள் 10 ஆகின்றன. 'ஊக்கமது கைவிடேல்', 'முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்' என்ற முதுமொழிகளைக் கடைபிடித்து இவ்விலங்கையில் ஸ்தாபித்திருக்கும் 'இந்திய சங்கத்திலுள்ள நம்மரபினரில் சிலர் நம்குல முன்னேற்றத்தைக் கருதி மெத்த உற்சாகத்துடனும், ஆவலுடனும் வேலை செய்து வருவதின் பயனாய் நமது *'ஆதி திராவிடன்'* பல இடஞ்சல்களுக்கு மூடே நாளுக்கு நாள் அபிவிர்த்தியோடும் உலாவித்திரிகின்றதை எம் நண்பர்களுக்கு மெத்த ஆவலுடனறிவித்துக் கொள்ளுகிறோம். ஆயினும் எவ்வளவுக்கெவ்வளவு அபிவிர்த்தியாகிக் கொண்டு வருகிறதோ அவ்வளவுக்கவ்வளவு செலவுகளும் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே போகிறது. அதன் காரணம் நமது நண்பர்கள் அறியாததல்ல.

தற்காலம் உலகமே தலைகீழாகயிருக்கிறதென்பதை நாமெடுத்துச் சொல்லவும் வேண்டுமோ? இதனிமித்தம் நமது *'ஆதி திராவிட'*னை நடாத்தி வருவதுமெத்த கஷ்ட சாத்தியத்திலிருக்கிறது. செலவுக்குத் தக்க வருமானம் போதுமானதாகயில்லை. இவ்வித இக்கட்டுக்குள்ளிருந்து எங்கள் நிலமைகளை எமது நண்பர்களுக்கு அடிக்கடி எடுத்தோதி வந்தபோதினும் எங்கள் வேண்டுகோளுக்கு செவிகொடுப்பதாகக் காணோம். சிலபரோபகாரிகள் மட்டும், சரீரபிரயாசையுடன் இது

விஷயமாய் பாடுபட்டுழைக்கிறதாகத் தெரிகிறது. அவ்வண்ணம் ஏனையோரும் பாடுபட்டுழைப்பார்களாகில் எங்களுக்கு எவ்வளவோ உதவியாகயிருக்கு மென்பதை இங்கெடுத்துச் சொல்ல வேண்டியதவ சியமில்லை.

குலாபிமானிகளே! பரோபகாரிகளே!! முன்வாருங்கள். நமது *'ஆதி திராவிடன்'* பிறந்ததற்கு மேல் சிற்சில குலாபிமானிகள் நம்குல அபிவிர்த்தியைக் கோரி இரண்டொரு பத்திரிகைகளை வெளித்தோன்றச் செய்தனர். ஆயினும் அவைகளைப் போஷிப் பதற்குப் போதுமான போஷகர் களில்லாக் குறைவினால் அவைகள் குன்றின ஆயுளையுடை யவையாயின அந்தோ! என்ன பரிதாபம்.

தற்காலம் நம் குலத்தவர்களின் முன்னேற்றம் விஷயமாய் பாடுபட்டுழைத்துவரும் பத்திரிகை இது ஒன்றென்றே உத்தேசிக்க வேண்டியதிருக்கிறது. அதினும் இதனை நடாத்தி வருகிறவர்கள் அன்றாடம் தங்கள் தங்களின் சொந்த ஜீவனார்த்தத்தின் பொருட்டு ஒருநாள் முழுவதையும் அதற் கென்றே செலவிட்டபோதினும், தங்கள் தங்களுக்கு கிடைக்கும் சொற்ப நேரங்களையும் வீணாக்காது

*'மெய்வருத்தம் பாரார், பசிநோக்கார், கண்டுஞ்சார்*
*எவ்வெவர் தீமையு மேற்கொள்ளார் _ செவ்வி*
*அருமையும் பாராரவமதிப்புங் கொள்ளார்*
*கருமமே கண்ணாயினார் _ நீதிநெறி விளக்கம்.*

என்பதற்கிணங்க, தங்கள் சொந்த கஷ்டநஷ்டங்களையுங் கவனியாது, யாதொரு லாபத்தையும் எதிர்பாராது (சம்பள மில்லாமல்) நம்குல நன்மை ஒன்றையே கருதி விடாமுயற்சி யுடனுழைத்து வருவதாலும், தற்காலமிருக்கும் நமது நண்பர் களின் பேருதவியாலும் நமது *'ஆதி திராவிடன்'* இதுகாறும் ஊக்கத்துடனுலாவிவருகிறான். இன்னவனால டையும் பயனின்னதென ஊன்றிக்கவனித்து வருபவர்கள் மிகச்சிலர், அதனை கவனியாதவர்களோ பலர்.

நமது சஞ்சிகை வெளிக்கிளம்பியதற்குமேல் நெடுந்தூக்கத் திலிருந்த நம்மரபினர்களில் சிலர் உறக்கத்தினின்று மெழும்பி ஆங்காங்கு நம்குலத்தவர்களுக்காக உற்சாகத்துடன் பாடுபட்டு வருகிறதையும், அற்பசொற்ப கல்வி கற்றவர்களும் தங்களுக்

குள்ள கல்வியை அபிவிர்த்தி செய்துகொண்டு பத்திரிகைகளுக்கு வியாசங்களெழுத முன் வந்திருப்பதையும் பார்க்க ஆனந்தமடைகிறோம். இதனால் நம் *'ஆதி திராவிட'*னாலடையும் பயனின்ன தென்பதையறியலாம்.

ஆகவே, நாம் முன்னேற்றமடைவதற்கும் கல்வியை அபிவிர்த்தி செய்துகொள்ளுவதற்கும், உலகில் நடக்கும் விவகாரங்களை அறிந்து நல்வழியில் நடந்துகொள்ளுவதற்கும் பத்திரிகைகளே முக்கிய சாதனமென்பதை அறிவுடையோர் மறுக்கார். இவ்வித நன்மைகளை அளிக்கும் பத்திரிகைகளை ஆதரிக்கவேண்டியது யாருடைய கடமை? குலாபிமானமும், தேசாபிமானமும், மதாபிமானமுமுடைய பெரியோர்களின் கடமையன்றோ? அவ்விதமாயின், ஏன் பல பத்திரிகைகள் தோன்றி சிறிது காலத்திற்குள்ளழிந்து விடுகின்றன? போஷகர்களின் ஊக்கக்குறைவன்றோ? அந்தோ! என்ன பரிதாபம்!! இனியேனும் கவனிப்பீர்களா?

*'தங்குறை தீர்வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்*
*வெங்கறை தீர்க்கிற்பார் விழுமியோர் _ திங்கள்*
*கறையிருளை நீக்கக்கருதா துலகின்*
*நிறையிருளை நீக்குமெனின்று' _ நன்னெறி.*

அஃதாவது சந்திரனானது தனது மேனியினுள்ள இருளை நீக்கிக் கொள்ள நினையாமல் உலகவிருளை நீக்குதல்போல், மேனோர்கள் தமது மனத்துயரத்தையும் உடம்பின் தளர்ச்சியையும் நீக்குவதற்கு முயலாமல், பிறரின் மனத்துயரத்தையும் உடம்பின் தளர்ச்சியையும் நீக்குவர் என்பதே.

மலர் 2 இதழ் 10 141 - 143

## ஊக்கமது கைவிடேல்

**Standup ! Thou Image of True manhood show us the likeness of man**

மெய்யான மனுஷீகத்தின் சுயரூபமே எழுந்திரு! மானிட பிரதியுவமையை எங்களுக்குக் காண்பி!

ஆக்கலளித்தலழித்தவலென்ற முத்தொழில் நடாத்தும் மோனை முகிவில்லா சர்வஞ்ஞதவர் சிருஷ்டித்த தர்சிய சேதன வசேதன சிருஷ்டி களுக்குள் எண்சாண்டேகியாகிய மானிடனே மிகவுமதிசயத்திற் குரிய பிரதம சிருஷ்டி, சர்வேஸ்பரன் தமது சாயலாக மனிதனைப் படைத்தா ரென்று கிறிஸ்துமதங் கூறுகிறது. இந்துமதமோ சர்வமும் பிர்மமென்று கூறி அஃதை உறுதிப்படுத்துகிறது. மானிடனியல்பாயமைந்துள்ள லக்ஷணங்களைப் பற்றி நாமறிந்திருக்க வேண்டியதவசியமன்றோ? தலையங்கத்தில் குறிப்பிடுகிற ஆங்கிலவாக்கியப்படி மெய்யான மானுஷீகத்தின் சுய ரூபமே எழுந்திரு மானிட பிரதியுவமையை எங்களுக்கு காண்பி,

மானிடனுக்கின்றயமையாதிருக்க வேண்டிய சுகுணா லக்ஷணங்களைப் பற்றிப் போதி என்று ஓர் ஆங்கில மேதாவியின் சப்தம் தொனிக்கின்றது. மனிதனிலமைந்திருக்கிற சத்ய பூர்வ அதிசயாச்சர்ய சக்திகளைப் பற்றி யெழுதப்புகின் இச்சஞ்சிகையிடந்தரா. சங்கிரஹமாய் பகரவேண்டுமாயின் இந்நகர் வீதிகளில் செல்லும்போது நமது கண்களை யேறெடுத்துப்பார்ப்போமாயின் மொட்டோ ரதம், மின்சார ரதம், தந்தி, டெலிப்போன், வாய்த்தந்தி முதலிய உபகரணங்கள்,

மின்சார தீபங்கள், புகைவண்டிகள், கப்பல்கள் முதலிய வனேக தோற்றங்கள் மானிடனின் அபார வித்யுத் சக்திகளை ஸ்பஷ்டமாக் கின்றன. மானிடனின் லக்ஷணங்களில் ஊக்கமே பிரதானம். எம்மனிதனிடத்தில் ஊக்கம் மிகுந்திருக்கிறதோ அவன் வைதீக லௌகீக விஷயங்களில் மேன்பாடுடையனாய் விகசிப்பன்

சர்வதயாநிதியை ஊக்கத்தோடு ஸ்மரித்தால் கேட்டவரங்கள் நிச்சயமாய் கிடைக்கும் கல்வியை ஊக்கத்தோடு கற்றால் துரிதயாய் வித்யாபாண்டித்ய மடையலாம். வர்த்தகம் கைத் தொழில் விவசாய முதலியவைகளை ஊக்கத்தோடு செய்தால் காரியசித்திபெற்று க்ஷேமமான பதவியில் வீற்றிருக்கலாம். ஊக்கமில்லா மானிடனைச் சஞ்சாரப்பிரேத மென்றழைக்கலாம். ஊக்கமென்ற பதம் எவர்க்கும் தெள்ளிதில் புலப்படுமாறு அஃதின் அர்த்தங்களை ஈண்டு வரைகின்றேன். விடாமுயற்சி, உறுதி, ஸ்திரம், தாளாண்மையென்று ஊக்கத்தையழைப்பார். இதைப்பற்றியன்றோ 'ஊக்கமது கைவிடேல்' என்று நமது மூதாட்டி ஔவை போதித்தனள், தெய்வப்புலமைத் திருவள்ளுவ நாயனாரும் 'முயற்சி திருவினையாக்கும் முயற்றின்மை இன்மை புகுத்திவிடும்' என்று கூறினர், உறுதிபயப்ப கடைபோகா வெனினும் இறுவரை காலுமுயல்ப.

இறுமுயிர்க்கும் ஆயுண் மருதோழுக்கறிதனறேல் ஆவண வுமுண்டுசில வென்று பிறிதொறு பண்டைய கவிஞரும் பகர்ந்திருக்கின்றனர். இன்னுமநேக புராதன புலவர்கள் பாரத மாதாவின் புதல்வர்களுக்கு ஊக்கத்தைப்பற்றிய நற்போத னையாக தாங்களியற்றிய நீதி நெறிவிளக்கம் நான்மணிக் கடிகை, சிறுபஞ்சமூலம், திரிகடுகம் அறநெறிச்சாரம், நன்னெறி முதலிய காவியங்களில் அநேக வெண்பாக்கள் அநேக நூற்றாண்டு களுக்குமுன் பாடிவைத்திருக்கின்றனர். இவைகளேட்டு பிரதிகளாயிருந்தமையால் சிலரே அவைகளைக் கற்றிருந்தனர். பஞ்சமர் முதலிய ஜாதியினர் கல்வி கற்றரிதற்குரியல்ல ரென்று அழுக்காறும் மமதையும் நிறையப்பெற்றவராய் மேல் ஜாதிகளென்று தங்களைச் சொல்லிக்கொள்கிற பல ஆங்காரிகள் பிரஸ்தாப சுகிர்த போதனைகளை பிரசித்தப்படுத்தாது விட்டனர்.

அன்றியும் பால்யவிவாகத் தினாலும் கணிகைகமனத் தினாலும் பெரும்பாலார் தங்களுடைய மூதாதைகளைப் போல

புஜபலபராக்கிரம சாலிகளாயிருக்கிறதற்கு பதிலாய் தேகம் வரண்டு பலங்குன்றினோராய் அகாலமிருத்யுவுக்குள்ளானவராய் உருமாறினர். இவர்களிடத்தில் ஊக்கம் எங்ஙனம் இருக்கும் இத்தன்யரின் உதிரத்தில் ஜெனிக்கிற சிசுக்களுக்கு ஊக்க மிருக்கக் கூடுமென்று சொல்வாருமுளரோ? ஆகலான் பிராதீன காலத்தில் கல்வியிலும் நாகரீகத்திலும் கைத்தொழிலும் வர்த்தகத் திலும் கிருஷிகத்திலும் சகல தேயங்களும் நடுநாயகமாய் தேகோமயமுடன் ஒளிர்ந்த இப்பரதகண்டம் காலாவட்டத்தில் ஊக்கங்குன்றின பிள்ளைகளைப்பெற்று, வல்லபங்குறைந்து, நல்குரவுற்று ஜாதிவேற்றுமையால் ஒற்றுமைகெட்டு, ஆளப் படுந்தே சமாயுருமாறியது.

ஆனால் ஐரோப்பா, அமெரிக்கா முதலிய கண்டத்தினர் மகோன்னத நிலைமையில் பிரகாசிப்பதற்குப் பிரதான சாதனம் அவர்களிடத்தில் ஊக்கமென்ற பயனிறை லக்ஷணம் இயல்பா யமைந்திருப்பதினாற்றான். அவர்கள் பிறப்பிலே அத்தன்மை வராயமைந்துவிடுகின்றனர். அங்கே சாதிவித்தியாசமென்ற பைசாசம் தாண்டவமாடாததினாலும் சமத்வம் சகோதரத்வம் முதலிய சுகிர்த உணர்ச்சிகள் இயங்கப்படுவதினாலும் ஏழை களுக்கு தாராளமாய்க் கல்வி கற்பிக்கப்படுவதினாலும் பால்யவிவாகமில்லாததினாலும் ஊக்கம் நிறைந்தவர்களாய் தலைமுறை தலைமுறையாக விகசித்துவருகின்றனர்.

'மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்டுஞ்சார்
எவ்வெவர் தீமையுமேற்கொள்ளார் - செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்புங்கொள்ளார்
கருமமே கண்ணாயினார்.

என்ற மொழிப்படி சுமுத்திரையாய ஒழுகி வருகின்றனர்.

'எது வரவேண்டுமதுவருக எம்மை விடுத்தேதகலவேண்டு மதுவகல'

என்ற மூதுரையை சிரமேற்கொண்டு அச்சம், அதைர்யம், தளர்ச்சி சோம்பல் முதலிய வெறுக்கற்பாலன வெத்தன்மையன வென்றறியாதாராயினர். அதின் பயனாக அன்னோர் ஊக்கத்திற்கு ஊறணியாகி, சாஸ்திரீக, வர்த்தக கைத்தொழில் முதலிய விஷயாம் ஷங்களில் முன்னேற்றமடைந்து, குபேர சம்பத்துடையராகி ஏனைய தேசங்களைப் பிடித்தரசாளுந் தேசத்தினராயாகி விட்டனர். பாரதமாதாவின் புதல்வர்களின் பரிதாப நிலைமைக்கு

ஜாதி வித்தியாசமே பிரதம காரணமென்று முந்தின வியாசத்தில் கூறினேன். ஊக்கமின்மையும் இதர காரணங்களிலொன்றென்று ஈண்டு விபரித்தேன்.

ஆகலின் ஊக்கத்தை யெங்ஙனம் அபிவிர்த்தி செய்யலா மென்பதைப் பற்றி சிலபுபாயங்களை குறிப்பிடுகிறேன். முதலாவது நமக்கினிமேல் பிறக்கிற பிள்ளைகள் நல்ல ஞானமும் ஊக்கமுமுள்ளவர்களாயிருக்க வேண்டுமானால் தாய்மார்கள் சுகாதார விதிகளின்படி ஜீவித்து தங்களுடைய கர்ப்போதரக் கனிகள் ஞானத்தையும் ஊக்கத்தையும் பிறப்பிலே பூரணமாய் சுவீகரிக்கும்படி அவைகளைப் பற்றி மேதாவிகளியற்றிய பிரபந்தங்களையும் பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் அடிக்கடி வாசித்து ஒரே சிந்தனையாய் கிரகிக்க வேண்டும். அவைகளைப் பற்றிய பிரசங்கம் உபன்னியாசம் முதலியவைகளை கவனமாய் செவிமடுத்து கிரகிக்க வேண்டும். அப்போதுதான் அவர்களுடைய பிள்ளைகள் ஞானம் ஊக்கம் முதலிய சுகுணா லட்சணங்களையுடை வர்களாய் பிரகாசிப்பர்.

திருஷ்டாந்தமாக நப்போலியன் பெனாபார்ட் என்ற பிரான்சிய சக்கிரவர்த்தி சாதாரணயுத்த வீரராயிருந்து அஞ்சா நெஞ்சத்தவராய் யுத்தகளங்களில் பயமென்பதையறியாதவராய் ஜெயசீலராய்த் தோன்றி இறுதியில் சக்கிரவர்த்தியானதற்கு காரணமென்ன? நான் என் தாயின் உதிரத்திலிருக்கும்போதே யுத்தகளங்களின் குண்டு சப்தங்களைக் கேட்டுக் கொண்டி ருந்தேனென்ற நப்போலியன் ஏனெனில் பகை வர்கையில் சிக்காதபடி கர்ப்பிணியான அவருடைய தாய் சேனாதிபதி யாகிய தன்பத்தாவுடன் அசுவ வாகனாரூடளாய் யுத்தகளங் களில் திரிந்தனள். பாரதமாதாவின் புதல்வர்களில் பெருந் தொகையினர் பத்திரிகைகள் சஞ்சிகைகளையபிமானிக்காத வெறுக்கப்பட தக்ககுணத்தையாபரணமாகப் பூண்டிருக்கின்றனர்.

இரவல், இலவச, ஹோஸ் பத்திரிகைகளை தாராயமாய் பார்ப்பர். இவர்கள் மகோன்னத, நிலைமையடைகிறதற்கு இன்னனைய இழிகுணம் இவர்களைவிட்டகல வேண்டும். மேனாட்டினரின் க்ஷேமத்திற்கு பத்திரிகை சஞ்சிகையின்றி யமையாசாதனங் களன்றென்று மறுப்பாரெவருளரேல் முன் வந்து மறுப்பெழுதக்கடவர். ஆதலின் *'ஆதி திராவிடன்'*

என்ற இச்சஞ்சிகையை தமிழ் பாஷையினர் மிகவே ஆதரிக்கக் கடமைப் பட்டிருக்கின்றனர். கற்றறி மேதையர் வியாஸங்களை விஷேடமாய் ஊக்கத்தைப்பற்றிய வியாஸ சரித்திரங்களை யெழுதியனுப்ப வேண்டும். ஒவ்வொருவரும் கையொப்ப நேயர்களாக வேண்டும். அப்போது பாலச்சந்திரனை நிகர்த்த இவ்*'வாதி திராவிடன்'* வளர்ப்பிறையையொப்ப விருத்தி பெற்று அநேக பக்கங்களையுடையதாய் வாரந்தோறுந் தோன்றி தமிழுலகை மகிழ்வித்து ஊக்கமுடையதாயாக்கும்.

தேவதத்தன்.

மலர் 2 இதழ் 10 பக் 144 - 147

# ஆதி திராவிடரும் இந்து ஆலயங்களும்

சென்னையின் கண்ணுள்ள எமது ஆதிதிராவிட மக்களுள் பலர் வைதீக சற்கருமங்களை அனுஷ்டித்து ஆச்சார சீர் திருத்தங்களையடைந்திருக்கப்பட்டவர்களாயிருக்கின்றார்களென்பது பொது ஜனத்தலைவர்களியாவருக்குந் தெரிந்த விஷயமாயிருத்தலால், இத்தலைவர்களுள் பலரும், சீர்திருத்த சங்கங்களின் தலைவர்களும், வைதீக ஆச்சாரத்தோடு கூடிய ஆதி திராவிடர்கள் இந்த மதத்தைச் சார்ந்தவர்களாயிருந்தும், இந்து ஆலயங்களில் அவர்களைப் பிரவேசிக்கக் கூடாதென்று நிபந்தனை செய்து வருவது தகுதியன்றென்றும், ஆலயப் பிரவேசஞ் செய்து வைக்க வேண்டுமென்றும் பல பிரசங்க மேடைகளில் நூலாதாரங்களோடு பேசுவதையும், பத்திரிகைகளில் எழுதிவருவதையும் இப்பரதகண்ட முழுவதுந் தற்காலம் சாக்ஷிபகரும்.

ஆகவே இதனைத் தெரிந்த ஆதி திராவிடர்களும், தாங்களனேக வருஷங்களாக எண்ணி முயற்சித்துவந்த இவ்விவகாரத்தை நடத்தப்போதுமான சாமகிரியின்மையால் தடையுற்றிருந்ததை முன்னிட்டுப் பெரிதும் விசனித்து வந்தவர்களாகவே யிருந்தாலும் இவர்களது கொள்கைக்கேற்பப் பொது ஜனத்தலைவர்களின் தற்கால நன்னோக்கத்தை அறிந்து பலவித தியாகத்திற்குமஞ்சாது சென்னை மயிலை ஸ்ரீ கபாலீஸ்வரராலயத்திலும் திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதியாராலையத்திலும் பிரவேசித்து ஈசுவர வழிபாடு செய்ய வேண்டுமெனச் சென்னையிலுள்ள ஆயிரங் கணக்கான ஆதி திராவிடச்

சகோதரர்கள் திடக்கொள்கையோடு கூடியவர்களாயிருந்து வருகின்றார்களென்பதை அறிந்து யான் வியப்படைந்து வருகின்றேன். ஆகையால் இருக்கு வேத காலத்திலில்லா ஜாதி பேதக் கற்பனையாலும், மனிதனை மனிதனாக நேசிக்காத காட்டு மிருகக் குணத்தாலும் விளைந்த இக்கேடானது கருணையும் நீதியுங்கலந்தோங்குமாறு நம்மை ஆட்சிபுரியும் பிரிட்டிஷ் ராஜாங்கத்தில் தலைகாட்டாது பறந்தோடுமாறு செய்து வைப்பதே நமது கடமையென இரத்தக் கொதிப்போடு எவ்வித தியாகத்திற்கு மஞ்சாது திடவைராக்கிய கொள்கையோடிருந்து நடத்தப்போவதுதான் ஆதி திராவிடர்களது வீரத்தன்மை போலும்? கற்பணா ஜாதிபேத ஊழலாலுண்டாகுங் கஷ்ட நஷ்டங்களில், நாம் இந்து ஆலயப் பிரவேசமின்றியிருத்தலு மொன்றென்று ஆதிதிராவிடர்களது இருதயத்திலூடுருவிப் பாய்ந்து கொள்கையைத் தீர்மானித்திருப்பது திருவருளின் சம்மதமென்றே யானிதனை நினைக்கிறேன். பாரதமாதாவின் பழம்புதல்வர்களாகின்ற ஆதி திராவிடர்களது 'இந்து ஆலயப்பிரவேச' மென்னும் மிக்கொள்கையானது பகவத் விஷயமாயிருத்தலால் வெகு சீக்கிரத்தில் சத்துவருண சகிதமாய் முடிவுபெற எல்லாம் வல்ல பரம்பொருளும், நம் பாரதமாதாவும் ஆசிபுரியப் பிராரத்திக்கின்றேன்.

ஆதிதிராவிட ஈசுரபக்தர்

மலர் 2 இதழ் 10 பக் - 149.

## சங்கங்களும் அங்கங்களும்

**ஆ**தி திராவிட சகோதர சகோதரிகளே! இந்திய சீமான்களே!! சீமாட்டிகளே!!!

நம் முன்னோர்கள் காலத்தில் நம் தேயத்தின் பல பாகங்களில் பல சங்கங்களை ஏற்படுத்தி அவைகளினுதவியால் அடுத்துள்ள பிரஜைகளுக்குப் பலவரிய நன்மைகளை செய்து வந்துள்ளார் களென்பது உலகமறிந்த சத்தியமாகும். ஆனால் அவ்வாறேற் படுத்திய சங்கங்களில் பல வாழாது பாழடைந்துவிட்ட தென்பது ஸ்பஷ்டம். ஆயினும் இக்காலத்திலோ இவ்விலங் கையிலும், இந்தியாவிலும் எண்ணிலடங்காத சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டு அவைகளின் ஸ்தாபர்கள் முதலிய அங்கத்தவர்களின் அரும்பிரயாசையினாலும் தளராவூக்கத் தினாலும், சலியாவுழைப்பினாலும் பாமர சனங்களின் பரிதாப நிலைமையை யகற்றவும், பகுத்தறிவற்ற சிலரால் ஏற்படுத்தப் பட்ட ஜாதித்துவேஷத்தை யோட்டவும், பாராளும் மன்னனிடம் பாமர ஜனங்களின் முன்னேற்றத்திற்கவசியமான விஷயங் களுக்காக பரிந்து பேசி வாங்கித்தந்தும், தரவும் முன்னிற்கிறார் களென்பது மூதறிவாளரறிந்த விஷயமாகும். ஆனால் சில சங்கங்களோவெனில் தங்களின் நாமதேயத்திற்கும், நாட்டினருக்கும் நேர்விரோதமான வழியில் நடத்தப்பட்டும்,

பலரால் தூஷிக்கப்பட்டும் வருகின்றனவென்பதை நாம் ஈண்டுக்குறிப்பிட மிகவும் விசனிக்கிறோம் ஏனெனில், சங்கங்களின் ஸ்தாபர்களாகிய தலைவர்களும், அதனை ஆதரிக்கும்

அங்கத்தவர்களுமே அதற்கு காரண கர்த்தாக்களாகின்றனர். எவ்வாறெனில், ஒரு சங்கத்தை ஸ்தாபிக்க முன்னிற்பவரோ, அல்லது ஆலோசனை செய்வோரோ 'சங்கம்' என்னும் பதத்திற்கு தகுந்த பொருளறிந்தவராயிருக்க வேண்டியதோடு தானென்னும் அகந்தையற்றவரும் தான் எவ்வகையிலும் எல்லோரிலும் தாழ்ந்தவரென்று கருதக்கூடியவரும் தன் தாய் நாட்டையும், தாய் பாஷையையும், தன்னுடன் சகோதரர்களாகி ஏனைய மக்களையும் விருத்திக்குக் கொண்டுவர தனது முப்பொருளாகிய உடல், பொருள் ஆவியை தத்தம் செய்யக் கூடியவராயும் குறைவில்லா அன்புடையவராயுமிருக்க வேண்டும்.

இவ்வாறான வீர தத்துவமுடையவர்களே தலைவர்களெனக் கருதப்படுவார்களென்பதை சொல்லவும் வேண்டுமா! திருஷ்டாந்தமாக நமது பாரித்தலைவர்களான (காலம் சென்ற) நாயர்பெருமான் அவர்களையும் ஆனரபில் சர் (Sir) பி.தியாகராயரையும் அவர்களது அன்பு நிறைந்த குணங்களையும், அரும்பெரும் வேலையையும் சற்றூன்றிப் பார்ப்போமானால், நமக்கு நன்கு புலப்படும். நமது நாயர் பெருமான் அவர்கள் நம் குலமக்களின் முன்னேற்றத்திற்காக தமதுயிரையும் தத்தம் செய்தாரன்றோ? நிற்க, நமது தியாகராயபெருமான் சிலபோலிகளால் பார்ப்பன துவேஷியென்று பெயர்ரெடுத்தபோதிலும், பார்ப்பன சூட்சியிலகப்படாத பாரதமாதாவின் புதல்வர்களால் புகழப்படுகிறாறன்றோ இம்மகானன்றோ உண்மைத் தலைவரென கூறல் சாலவும் பொருத்தமுடைத்தாம். தான் என்னும் அகந்தையும், தான் கற்றுள்ள கல்வியின் மேல் செறுக்கும் கயவர்களுக்கொப்பான முரட்டுப் புத்தியும், முன்கோப முதலிய தீயகுணங்களையுடையவர்கள் தாங்களும் தேசத் தொண்டர்கள் என்னும் பெயருடன் வெளிவந்து தங்களது நயவஞ்சகவலையை விரித்து பாமர ஜனங்களை வாரியெடுத்து வழிதப்பி பரிதபிக்கத்தக்க படுகுழியிற் தள்ளிவிடுகிறபடியால் பாரிலுள்ள பலரால் தூஷிக்கப்படுகின்றனர்கள்.

ஜெ. ஏசுவடியான் ஜான்.

மலர் 2 இதழ் பக் 150.

## ஜாதி பேதம்

**ஸ்ரீ** வைஷ்ணவ சைவ சமய சம்ப்ரதாயங்களிலுஞ் ஜாதி பேதமா? ஐயோ!

கடற்சூழ்ந்த இந்நிலவுலகின் கண், 'சாதி யிரண்டொழிய வேறில்லை'யென நம் மூதாட்டியாரருளியத் திருவாய் மொழியை அறியாதார் யார்? 'அரிதரிது மானுடராதலரிது' யென்னும் பாட்டைப் பாடிப் பாடிப் பிரசங்கிக்கும், பண்டிதர் களும், சில சமயங்களில் 'ஜாதிபேத'மென்னும் பேய்பிடித்தாடிப் பாமரராகின்றனர். நிதானத்தோடுங்கூடிய விசாரணை சிறிதுமின்றி, ஜாதி பேதத்திற்குக் காரணம், சமயங்களும், அவைகளை நிலைநாட்டிய மஹான்களும், அதற்கு சம்பந்தமாய்த் தொன்றுதொட்டு விளங்கிக் கொண்டிருக்கும், இதிகாச புராண உபநிடதங்களுமே, யென எல்லாவற்றையும் ஒரே ராமபாணத்தினால் நிர்மூலப்படுத்த வாதாடுகின்றனர். 'பிறக்கும்பொழுது ஒவ்வொருவனும்; சூத்திரனேயாவன், பிறந்தபின் செய்கைகளினால் சிறந்து விளங்குவன்' என சத்ய மறை கத்தா நிற்கின்றது'

இந்த வாக்கியத்தை யெழுதிவந்த மஹான் பொய்யரா? அல்ல தவ்வாக்கியந் தான் பொய்யா? ஒருக்காலுமில்லை மெய்தான், பிறக்கும்பொழுதே ஒவ்வொருவனும் 'சூத்திரனே' என்றால், சூத்திரத்துவமாத்திரம் அப்பொழுது பிறந்த குழந்தைக்கு எங்கிருந்துவரும்? என்று ஒரு கேள்வி. நாம ரூபமில்லாத கடவுளுக்கு 'பரட்பரமம்' என்ற உபசாரத்தைப்போன்றது, அச்சூத்திரனென்ற

பதம். ஆனால் 'பறையனே' என்று மாத்திரஞ் சொல்லவில்லை. ஏன்? உலகத்திலே நாலுவித அந்தஸ்துகளையே, முன்னனைய, மனு முதலிய பெரியோர்களேற்படுத்தினார்கள். 'பறை' எனும் பதம் பொறாமை சொருபத்தோடு பின்னாற்றோன்றிய ஆபாசமனுக்களேற்படுத்திய வைந்தாமந்தஸ்தல்லவா! உண்மை யாகிய நாலோடுங்கூடி ஐந்தாய் என்றும் நிலையாகி நின்று விட்டது. பிரம்மவித்தையை முழுதுமறியாத 3/4 பார்ப்பான்கள் 'யக்ஞோபவீதம்' (பூணூல்) தரித்துக்கொண்டு தங்கள் பிள்ளைகுட்டிகளுக்கெல்லாம் வாழையடி வாழையாய் உபனயன முதலிய சாங்கயங்களேற்படுத்தி, நாங்களெல்லாரும் பிராமணர்கள் என்று சொல்லிக்கொள்ளும்படியாகத் தரித்து விட்டார்கள்.

மேற்படி 3/4, 1/2 மற்றும் 1/4 பார்ப்பனர்களால் அடிமைகளென்று தாழ்த்திவிடப் பட்ட சூத்திரக்கண்மணிகள் தங்கள் நன்மையின் பொருட்டு தங்களினத்தவர்களிற் சிலபாமரயேழை ஜனங்களை பறையர்களென்று தாழ்த்தி நாலு வேதங்களோடு வியாசர் மஹாபாரதத்தையும் சேர்த்து ஐந்தாம் வேதமென சேர்த்துவிட்டதுபோல சேர்த்து விட்டனர். உண்மையாக பார்க்குங்கால், பறையர்களும் சூத்திரர்களே. அச்சூத்திரர்களும் பிராமணர்களே, அப்பிராமணர்களும் பறையர்களும் ஒரு தாய்வயிற்று குழந்தைகளே, ஒரே சகோதரர்களே. கறுத்தப் பாப்பானையும் செவத்த பறையனையும் நம்பக் கூடாது என்கிறார்களே வீணாகவா?

இது வெகுகாலத்திலிருந்து உபயோகப்பட்டுவரும் வாக்கிய மல்லவா? இதைப்பற்றி அடுத்தவியாசத்தி லெழுதுவாம். 'ஏகம் சத்விப்ரா பஹுதா வதந்தி' என்ற சுலோக தாத்பர்யபிராகரம் ஸ்ரீ வைஷ்ணவ சைவ சமையங்களைப் பின்பற்றி அததன் ஆசாரப்பிரகாரம் அனுட்டித்து மகா பக்தர்களாய் விளங்கும் பண்டிதராதியர்கள் 'மேல்ஜாதி' என்று அழைக்கப்படுபவார்கள். பிராமண வைஷ்ணவனா? பஞ்சம வைஷ்ணவரா? சூத்திரரா? கோத்திரரா? பாத்திரரா என்று வித்தியாசம் பாராட்டுகிறார்கள். அப்படியே சைவ சமயத்திலும் முற்றுந்துறந்த மகா யோகி யொருவர் 'பஞ்சமர்களென்று தாழ்த்தப்பட்டவர்களின் வீட்டிற் பிறந்திருந்தால், கொஞ்சமேனும் அச்சமின்றி' சுவாமியார் பஞ்சமராயிருந்தாலும் நல்ல பக்தர் என்று சொல்லுகின்றனர்.

உண்மையாகவே பிரமவித்தையை தெரிந்த ஓர் நிஜ பிராமணனுக்கு 'யக்ஞோபவீதம்' என்னும் பூணூலென்னத்திற்கு மாம்பழத்தின் வித்து கொட்டை மாமரத்தையே தந்து மாம் பழத்தையே தருவதுபோல பிரமவித்தை, பிராமணருக்கே பிறந்து தாழும் பிரம்மவித்தையாற் சிறந்து ஓரரசன் காலமானபிறகு அவ்வரசன் மகன் அரசனாவதுபோல விளங்கிய 'பிள்ளைப் பெருமாளையங்கார்' ஆசார்யசம்பந்தமானபின் 'அழகிய மணவாள தாசர்' எனும் பேர்பெற்றவர் தாம் திருவாய் மலர்ந்தருளிய திருவரங்க கலம்பகத்தில்:– பாதி யழுகிய கால்கையரேனும்

*பழிதொழிலு மிழிகுலமும் படைத்தோரேனும்*
*ஆதியா யாரவணையா பென்பராகி*
*லவரனறோ நாம் வணங்க மடிகளாவார்*
*சாதியா லொழுக்கத்தாற் தக்கோரேனுஞ்*
*சதுர்மறையால் வேள்விகளாற் மிக்கோரேனுஞ்*
*போதி நான்முகன் பணிய பள்ளிகொள்ளும்*
*பொன்னரங்கம் போற்றுதோர் புலையராவர்*

என்கிறார், இந்த மஹானுக்கு எவ்விதத்திலுஞ் ஜாதி பேத மில்லை. ஆனால் சில போலி வைஷ்ணவர்களும், சாதிபேத மென்னும் பகுதியில் விழுந்துத்தவிக்கும் சண்டாளர்களும் மேற்படி பாசுரத்திற்கு பலதப்பு அர்த்தம் பண்ணுவார்கள். ஆனால் நாமோ சத்தியமாகவும் சாஸ்திர முரனின்றியும் நல்ல அர்த்தம் பண்ணுவோம். இவ்வியாசம் விரியுமென்றஞ்சி அதை விடுத்தனம்.

மேற்கூறியிருக்கும் பாடலின் கருத்து ஈஸ்வர பக்தியுடைய வர்கள் 'யாவரினும் பெரியோரென்பதே ஆம்! மேற்படி பாடலில், சாதிபேதத்தையும் குறித்திருக்கின்றதே, என சிலர் புலம்புவர். 'பிறக்கும் போதே மாசற்ற குழந்தையானது, வளரவளர பெரிய மனிதனாகி மும்மலங்களினால் பிரேமையுற்று, தனக்குத்தானே, பழிதொழிலையும், யிழிகுலத்தையும் (Lowest Rank) படைத்துக் கொண்டு, பக்குவ அபக்குவனாக விளங்கி, மேன்மையடைந்தோ, கெட்டோ போகின்றான் என்பதை அப்பாசுரம் வற்புறுத்தி விளக்குகிறதெனவறிந்து, அவர்கள் ரோதனத்தை விடட்டும்.

மேற்குறித்த மஹானுக்கு எந்தவிஷயத்திலும் சமானமில்லாத சிலபல ஆபாச பேர்வழிகள் நாங்களும் பிராமணர்கள்தான்

ஸ்ரீவைஷ்ணவர்கள்தான் என்று பட்டாங்கடித்து, போலிவேஷம் போட்டுக்கொண்டு, 'ஞானிகளாடுங்கூத்தோடே, நானுமாடு கின்றேன் என்பது போலாடுகின்றனர். சைவசமயக்குரவர்களையும், அவர்கள் திருவாய் மொழிகளையும் கவனிக்கிலிப்படியே, சமமான அர்த்தங்களை போதித்து சாதிபேதமென்னும் விஷ சற்பத்திற்குப்பெரிய திருவடிகளாய் விளங்கிக்கொண்டிருக்கும் புலையர், சண்டாளர், மிலேச்சர், நீச்சர், முதலிய பட்டதாரிகள் (Rank) அந்தஸ்தில் ஒரே தன்மை வாய்ந்தவர்கள்தான் இப்படிப் பட்டவர்களும் பிராமணராகலாம் என்ற மறையோரும் (வேதம் தெரிந்தவர்கள்) மறைகளும் சொல்கின்றனர்.

ஆனால் இப்பொழுது 'பிராமணர்கள்' (நாரத, கிருஷ்ண, வேஷதாரிகள் நாடகத்தில் வருவதுபோல) என்று, காளை மாட்டுக்கு மூக்கணாங்கயிறுமாட்டியது போல மார்பில் வெறும் பூணூலை ஜம்பமாய் மாட்டிக்கொண்டு திரியும் நம் சகோதரர்கள், பார்க்காத ஹோட்டல்கள் (Hotels), சீர்மை Tin சாமான்கள் (Provisions) Retail Depots எங்குமில்லை. அப்படியிருந்தும் நெடுங்கால வழக்கத்தினால், விலைமாதொருத்திக் கிழவியான காலத்தும் தன்கொலைப்பாதகத்தொழிலை விடாததுபோல, போலி பார்ப்பன குலம்வழுவாமல் நிற்கின்றனர் அந்தோ!!! ஆச்சரியம். ஸ்ரீமதே ராமாநுஜாய நம ஸ்ரீராமநுஜரும், பிராமணர்தான். 'பண்டைக்குலத்தைத் தவிர்த்துப் பல்லாண்டு பல்லாண் டென்று கூறுதுமே' என்னும் பாசுரத்திற்கு, லாக்லோபத்தோடு, அர்த்தலோபமும் பண்ணும் பாமரர்களும் பிராமணர்கள்தான். 'மமதேவதா' வாகி விளங்கிய உடையவருக்கு, 'எமகாதக' ராகுமிவர்களோ சரி! ஐயோ என்ன பாபம். இந்த போலிகள் செய்யும் அக்ரம செயல்களினால்லவா மனம் வெறுத்து நம்மவர்கள், கிறிஸ்தவர்களாய் விடுகின்றனர் புத்தரைச் சாருகின்றனர்.

சகோதரர்களே, நாம், சமயதூஷணை, இவ்விடத்தில் செய்வதாக நீங்கள் நினைக்கவும் சொல்லவும் கூடாது. நாம் அப்படிசொல்லவரவில்லை 'எமக்கெம்மத முஞ்சம்மதம்' இந்து சமயிகளிலே அநேகர் புறசமயிகளாய் விடுவதும் விட்டதும், 'சாதி'யென்னும் பிசாசின் பொருட்டே என்ற சொன்னதேயன்றி வேறல்ல. அனுஷ்டிக்கும் விதம் அனுஷ்டித்தால் எந்த சமயத்திலும்

ஜாதிவித்தியாசமின்றி வாழலாம். நம்பிராதாக்க ளாகிய வேஷபிராமணர்களும். (காற்றாடிக்கு, வால் தொங்குவதைப் போல) பல பட்டங்களைத்தாங்கி நிற்கும் சூத்திர சகோதிரர் களும், சத்தியத்திற்கு மாறாக நடப்பதினாற்றானே இந்த சங்கட்டமெல்லாம். கிறிஸ்தவர்களானும், அங்கேயும் ஜாதி கடையை சிலர் திறந்துவிடவில்லையா? 'ஜாதி கிறிஸ்தவர்கள்' 'ஜாதியற்ற கிறிஸ்தவர்கள்' என்ன லக்ஷணம்? எட்டேகால் (அவ) லக்ஷணம்தான்.

இனியேனும் இவர்கள் எந்த விஷயத்திலும் தங்களுக்கு எல்லாவிதத்தாலும் சமானமாய் விளங்கும், ஆதி திராவிடர் களைத் துன்புறுத்தாமற்படி நடந்துகொள்வ தோடுங்கூட நம்மவர்களும் இந்தியமஹா ஞானிகளையும் காலமிடங்கட் கேற்றபடி சத்தியமாய் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட மதங்களையும், திருவாய்மொழி முதலிய, பிரபந்தங்களையும், இகழாமற்படிக்கும் தர்மத்திற்கு மாறாக நடக்காமல் 'ஒற்றுமை' யோடு நம்குலம் விளங்க நடப்பார்களென்றும் நம்புகின்றனன். ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணமஸ்து.

நீலகிரி க.த. சந்திரகாச பாகவதன்,

திராவிட குலாபிமானி.

மலர் 2 இதழ் 10 பக் 151 - 152

மலர் 2 இதழ் 11 பக் 164 - 165

## ஆதி திராவிடன்

உலகில் எல்லா வகுப்பார்களும் தத்தம் அபிவிர்த்தியைக் கோரி பல துறைகளி லுமுழைக்க முற்பட்டுள்ள இக்காலத்தில், இந்தியாவில் ஓர் முக்கிய பெரும் வகுப்பினராகிய பஞ்சமர்க ளென்றழைக்கப்பட்ட ஆதி திராவிட வகுப்பார்களும் தம்மேன்மையை நாடி உழைக்கத்தலைப்பட வேண்டுமென்பது முக்கியமாகும். இருபதாவது நூற்றாண்டின் இறுதியாகிய இவ்வமயம் உலகமே சுதந்தரதாகங் கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு வரும் அடிமை வாழ்க்கையினின்றும் தம்மை விடுவித்துக் கொண்டு சுதந்தர சுகத்தை வனுபவிக்கப் பெரு முயற்சிகள் செய்துவருகின்றனர். ஒவ்வொரு தேசத்திலும் அத்தேசத்தில் பிறந்த எம்மனிதனாயினும் அவன் தன் முயற்சியால் மேலுக்கு வந்து தேசத்தில் மரியாதையும் புகழும் சமசுதந்தரமும் அடை வதற்குச் சாதகமான சௌகரியங்கள் அமைந்திருத்தல் வேண்டுமென்பதை கற்றுணர்ந்த உலகம் ஒப்புக்கொள்ளுகிறது.

ஒருவனது யோக்கியதையைப் பாராட்டாது கவனிக்காது அவனது பிறப்பாலேயே அவனைத்தாழ்வாகக் கருதும் வழக்கத்தை சிறிது அறிவு முதிர்ச்சியடைந்தார் யாவருமேநல்லதெனக் கூறத் துணியார். பலங்குறைந்த சிறுபகுதியினருடையவும் சுதந்தரம் பாதிக்கப்படாது பாதுகாக்கப்படவேண்டுமென்பதும் வலியிழந் தாருக்கு வலுவுடையார் வேண்டுவன உதவி அவர்களை வலுவடையச் செய்யவேண்டுமென்பதும் தற்போது பாராட்டப் படும் நீதிகளாகும். இதைப்போன்ற சீரிய நோக்கங்கள் நாட்டில் ஆங்காங்கே தோன்றி வேரூன்றிப்படர்ந்து வருகின்றன.

இச்சமயத்தில் நம் நாட்டில் இந்தியர்களில் பெரும்பாலார் ஆதிதிராவிடர்களென்ற ஓர் பிரிவாரை மிகத்தாழ்மையாகக் கருயிவதும் நடத்துவதும் காண கன்னெஞ்சமும் கரைந்துருகாது நில்லா. பூர்வத்தில் நந்தேசத்தில் யாதொரு பிரிவுகளுமின்றி ஜனங்களனை வரும் ஒரு சமூகத்தினராய் சகோதர பாவத்தோடு வாழ்ந்து வந்தார்களென்பதும், அவ்வொற்றுமை குலைந்து இராக்காலத்தில் தான் தற்போது நம்மில் இந்தியர்களில் காணப்படும் பல பிரிவுகளும் ஏற்பட்டனவென்பதும் பண்டை நூல்கள் பலவும் ஒருமுகத்தாய்க்கூறுகின்றன.

ஆனினும் இடைக்காலத்தில் ஏற்பட்ட ஜாதிப்பிரிவுகள் தற்போது பாராட்டப்படுவதுபோல் பிறப்பைக்கொண்டு ஜாதிகள் பிரிவடையாது. முதலில் அவரவர்கள் செய்தொழில்களாலேயே ஜாதிப்பிரிவுகள் ஏற்பட்டுவந்தன. அக்காலத்தில் எந்த ஜாதியில் பிறந்தவனாயினும் ஒருவன் அவனது தொழில் வேற்றுமையால் வேறு ஒரு ஜாதியானாகலாம். மேலும் அப்பொழுது ஜாதிகள் ஒன்றுக்கொன்று ஏற்றத்தாழ்ச்சிகளைக் கூறாது. ஒருவர்க் கொருவர் கொள்வன கொடுப்பன முதலிய சம்பந்தங்கள் செய்து கொண்டு யாவரும் ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இதை நிரூபிக்கப் பலச்சரித்திர சம்பவங்களை எடுத்துக் கூறலாம்.

இத்தகைய நல்மாக்ஷியுடன் இருந்து வந்த ஜன சமூகமானது இப்பொழுது காணப்படுவதுபோல் நெல்லிக்காய் மூட்டை களாய் தனித்தனிப்பிரிந்து ஒருவருக் கொருவர் தூற்றிநிற்கும் திசையை சுயநலம் மிக்க நயவஞ்சகமுடைய சிலவகுப்பாரது செயலால் இன்று அடைந்ததென்பதற்கையமில்லை. விரிக்கிற் பெருகும் எவ்விதத்திலோ நம்நாட்டில் இற்றைக்கு ஆதி திராவிடர் களென்ற வகுப்பார் பிறரால் பலவகையிலும் தாழ்வுபடுத்தப் பட்டுப் போயினர். சில ஜாதியார்கள் இவர்களை மிருகங் களிலும் கேவலமாக நடத்திவருகிறார்களெனின் இதைவிடக் கொடுமை வேறுகூறமுடியுமோ? உண்ணுவதிலும் உறங்குவதிலும் படிப்பதிலும் வாழ்வதிலும் பலகட்டுப்பாடுகளால் சில வகுப்பார்கள் ஆதி திராவிடர்களை இறுகப் பிணைத்து வந்துள்ளார்கள். இவ்வித கட்டுகளினின்றும் விடுபட்டு பிறவகுப்பார்களைப் போல் இவர்களும் மேன்மை யெய்தவேண்டுமாயின், 'தன்கையே தனக்கு உதவி' என்றபடி பிறரை எதிர்பார்க்காது

தங்குலத்தார் பலர் ஒன்று கூடி தம்மவரை அறிவிலும், ஒழுக்கத்திலும், செல்வத்திலும், சீரிலும் முதன்மையடையச் செய்ய பலவகையிலும் பாடுபட வேண்டும்.

இச்சீரிய கருத்தைக்கொண்டு சமீபத்தில் தேசத்தில் ஆங்காங்கே 'ஆதி திராவிடர்' சபைகள் ஏற்பட்டுழைக்கத் தலைப்பட்டுள்ளதைக் காண மிக்கமகிழ்வுண்டாகிறது. முதலாவதாக, ஓர் குலத்தார் முன்னேற்றமடைய வேண்டின் அக்குலத்தில் கல்வியறிவு பரவ வேண்டுவதவசியம். மேலும் கற்றுணர்ந்தார் பலர் ஒன்று சேர்ந்து குலத்திற்கென தனிப்பத்திரிகைகளை ஸ்தாபித்து அதன் மூலமாய் அக்குலத்தாரின் அபிவிருத்திக்கும், ஒற்றுமைக்கும், முன்னேற்றத்திற்கும் அவசியமான நல்லுபதேசங்களை அவ்வப் போது திறமையாகவும் தெளிவாகவும் வலியுறுத்திக்கூறிவர வேண்டுவதாவசியம். இக்காலத்தில் ஒரு தேசம் அல்லது குலம் முன்னேற்றமடைய வேண்டுமாயின் அதற்கென தனிப் பத்திரிகை வேண்டுவது இன்றியமையாததாகும். பத்திரிகையைப் பற்றி எவ்வளவு புகழ்ந்து கூறினாலும் தகும். தனக்கென பத்திரிகை யொன்றையேனும் பெறாதகுலம் உலகில் கண்ணில்லாததாகவே கருதப்படும்.

இவ்வளவு பெருமைக்கும் பாத்திரமாக ஆதி திராவிட வகுப்பார்கள் தமக்கென ***'ஆதி திராவிடன்'*** என்ற இச்செழுமிய பத்திரிகையைப் பெற்றிருத்தல் பிறவகுப்பானாகிய எமக்கே பேருவகை யூட்டுகிறதெனின் ஆதிதிராவிடர்களுக்கிருக்க வேண்டிய ஆனந்தத் திற்களவுண்டோ. ஆதலின் இப்பத்திரி கையின் மூலமாய் ஆதி திராவிட சகோதரர்கள் தற்போது தாமடைந்துள்ள தாழ்மை ஸ்திதிக்குக் காரணமின்னதென் பதையும், அதினின்றும் தாம் மேன்மையடைய கைக் கொண்டு நடக்கவேண்டிய வழிகளின்னதென்பதையும் நன்குணர்ந்து அவ்விதம் நடந்து விரைவில் சிறப்படையவேண்டுவது அத்தியாவசியமாகும். இக்கருத்து நிறைவேறுவதற்குச் சாதகமாயும், பத்திரிகை நீடுநின்று செழித்துத்தழைத்தோங்கி வரவும் ஆதி திராவிடர்களில் தமிழ் படிக்கத் தெரிந்த ஒவ்வொரு ஆடவனும் பெண்ணும், அவசியம் இப்பத்திரிகையை வாங்கி வாசித்து வருதல் வேண்டும். ஆதி திராவிடர்களேயன்று ஆதி திராவிடர்களின் மேன்மையையும் அதன் மூலமாய் ஒற்றுமையுடன்

தேச நலத்தை நாடும் ஒவ்வொரு இந்தியனும் இப்பத்திரிகையை வாங்கி ஆதரித்து வாசித்தும், இயன்ற நல்வியாசங்களை வரைந்தும் இன்னும் பலவழிகளிலும் பத்திரிகைக்குத் துணைப்பட வேண்டுமென்று வற்புறுத்திக் கூறுகிறேன்.

ஒரு தேசம் க்ஷேமமடைய வேண்டுமாயின் அத்தேசத்தின் அங்கங்களாகிய ஜனசமூக வகுப்புகள் ஒவ்வொன்றும் பலப்பட்டு ஒன்றுபடவேண்டுமென்பதையாவரும் கவனிக்கவேண்டும். இற்றைக்கு இப்பத்திரிகையின் வயது இரண்டாகிறதெனறியச் சந்தோஷமெய்கிறோம். இதுவேபோல் இப்பத்திரிகை நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாகப் பல வகையிலும் சிறந்து பல்லாண்டு வாழ்ந்து நாட்டுக்கு நன்மை விளைக்க இறைவன் தண்ணருள் பாலிப்பாராக. சுபம்.

என். வெங்கடரமணன்

மலர் 2 இதழ் 10 பக் 152 - 154

# நமது கடமை என்றால் என்ன?

ஆதி திராவிட சகோதரர்களே!

நாமிவ்வுலகில் மானிட ஜன்மமடைந்ததின் பயனாய் நாம் செய்யவேண்டிய கடமை இன்னதென்பதையறியவேண்டிய தத்யாவசியம்.

நமது கடமை என்றால் பொருளை சம்பாதித்து தன்மட்டும் பெண்டு பிள்ளைகளோடு உண்டு உடுத்தி ஜோக் செய்து கொண்டு சந்தோஷசாகரத் திலமிழ்ந்திருப்பதல்ல அல்லது பெண்டு பிள்ளைகளையும் சுற்றத்தாரையும் கவனியாது தான் மட்டும் மதுபானமே அபிமானமென்று கூட்டாளிமார்களோடுங் கூடி குடித்து கூத்துப்பார்த்துக் கூத்தாடி குதூகலமடைந்து திரிவதல்ல. அல்லது தானே பெரியவன், யோக்கியன், விவேகி, குபேரன், கல்விமானென்று கருவங்கொண்டு நம்மினத்தவர்களை விட்டு நீங்கி, தான் மேல்ஜாதி, அவன் ஊர்பறையன், இவன் தோட்டிப்பறையன், அவன் குதிரைபாகன், இவன் சுயம்பாகி, அவன் பட்ளர், இவன் மேட்டி, அவன் தோட்டக்கூலி இன்னின்னார் முன் இந்த நிலைமையிலிருந்தவர்கள் இப்போது கால்சட்டை, தொப்பி, சப்பாத்து, டை அணிந்துகொண்டு திரிகிறானென 'குலத்தைக் கெடுக்கவந்த கோடரி காம்பு' போல் தன்குலத்தையே கேவலமாகச் சொல்லி, ஏளனம் பேசித்திரிவ தோடும், பத்திரிகைகளுக்கு மெழுதி பங்கப்படுத்துவதல்ல.

அன்றியும் கொண்ட பெண்ணிருக்க, பிறர் மனைவியையோ அல்லது கன்னிகையையோ எடுத்தோடி கூடிக்குலாவி கொஞ்சி

விளையாடிக் கொண்டிருப்பதல்ல. அல்லது நம் சந்ததியரின் நன்மையைக் கருதி பாடுபட்டுழைக்கும் பரோபகாரிகளை நிந்தையாகப்பேசி, அன்னவர்களின் மனதைப்புண்படுத்தி தொடுத்த காரியத்தை சோரவிட்டேகும்படி முயற்சித்து இனத் துரோகம், குலத்துரோகம் செய்வதல்ல, மீண்டும் தன் ஊரையும், பெற்றோர் பிறவிகளையும் சுற்றத்தாரையும் விட்டு பிழைப்புக்காக அசலூர்களுக்கேகி, யேதேனும் வேலை கிடைத்து கையில் கொஞ்சம் காசு சேர்ந்தவுடன், பெற்றோரையும் மற்றோரையும் மதியாது தான் நினைத்தவண்ணம் நடந்து நாடோடியாயிருப்பதல்ல.

ஒருவன் செய்யுங் குற்றத்தையோ துன்மார்க்கத்தையோ யறிந்தும் அன்னவனை நன்மதியூட்டி நல்வழிக்குத்திருப்பாது பலவாறு பலரிடமுஞ்சொல்லி படுகுழியிலாழ்த்தி பங்கப் படுத்துவதல்ல. இவனின்ன சமயத்தான், அவனின்ன சமயத் தானென்று வீண் வாதாடித்திரிவதல்ல. ஆனால் நாம் செய்ய வேண்டிய கடமை என்ன?

இவ்வுலகில் நமக்கு அருமையாக கிடைக்கப்பட்ட இம்மானிட ஜன்மத்தை யடைந்ததின்பயனாய் முதலாவதாக நம்மைப்படைத்து காத்து ரட்சித்துவரப்பட்ட ஈசனருள்பெற்று, ஜீவியாயும் நற்குண நற்செய்கை யுடையவராயும் இவ்வுலகில் வாழ்ந்திருதியில் மோக்ஷ வீட்டைய பரமசொருபியாயிருக்கும் பரம்பொருளை அநுதினம் காலை மாலை இருவேளையும் ஜெபித்துவரவேண்டும். அப்படி வனவருளால் கிடைக்கும் ஊதியத்தை வீண் விரையஞ்செய்யாமல் தன்மட்டும் மரியாதையாக காலங்கழிக்கக் கூடியவிதமாய் சிக்கனமாய் செலவு செய்து பிற்காலத்திற்கு தனக்கும் தன் பெண்டு பிள்ளைகளுக்கும் உதவக்கூடியதாயும், தன்னால் கூடுமானமட்டும் தான தருமங் களைச் செய்யவும், தன் சுற்றத்தார் தன் குலத்தவர்களுக்கு உதவக்கூடியதாயும், கொஞ்சம் மீதப்படுத்திவைக்க வேண்டியது நம்முடைய கடமைகளிலொன்றாக யிருக்கவேண்டும்.

மலர் 2 இதழ் 1 பக் 155

இக்கட்டுரை தொடரும் என அறிவுப்பு வெளியிடப்பட்டுள்ளது.

# கிருஸ்தவர்களின் பொறாமைக்குணம்

மதுரை ஜில்லாப் பசுமலை என்ற அமெரிக்கன் மிஷன் ஸ்டேஷனில் மதுரை அமெரிக்கன் மிஷன் சங்கத்தாரால் ஓர் ஹைஸ் ஸ்கூல் ஸ்தாபிக்கப்பட்டு வெகு வருஷகாலமாக நடந்து வருவது யாவருமறிந்த விஷயமே.

இப்பாடசாலையில் சென்ற நாலைந்து வருஷகாலமாக, எம்.ஏ., எல்.டி., பட்டதாரியும் சகல சுகுண லக்ஷணங்களும், அமையப்பெற்றவரும், மகா சமர்த்தரும் யாவர்மீதும் அன்பு வாய்ந்தவரும், ஏழைகள் பேரில் பேரனுதாபியும், வேலையில் மிக்க சுறுசுறுப்புள்ளவரும், அதிக உழைப்பாளியும், உண்மை நிறைந்தவரும் தேவதாபக்தியில் சிறந்தவரும் மனச்சாக்ஷியுள்ள சத்தியவானும், தக்க ஸ்திதியுடையாரும் அமெரிக்கன் மிஷனில் கியாதி பெற்ற ஓர் சுதேசக்குருவின் புதல்வரும் ஆதி திராவிடரு மான மிஸ்டர். ஜெ.ஐ. மாணிக்கவாசகம், பி.ஏ., எல்.டி., எட்மாஸ்டராக ஏற்படுத்திப் பாடசாலையின் கல்வி அபிவிர்த்தி உன்னதபதவியடையுமாறு வெகு ஸ்திரமாக நடத்திக்கொண்டு வரப்பட்டது.

இக்கனவான் வேலையில் மிக்க கவலைக்கொண்டு வெரு பிரயாசையுடன் நடத்திவருவதைப்பற்றி மேலோர் புகழ்வதைக்கண்டும், பசுமலையில் தற்காஸ்து மூலம் மதுரை ஜில்லாக் கலெக்டர் துரையே நேரில் வந்து வீடு கட்டுவதற்கு ஓர் நேர்த்தியான காலியிடங்கொடுத்து அதில் ஓர் சிறந்த பங்களா சொந்தத்தில் கட்டி வாசஞ் செய்து வருவதையும்

சென்னையில் பெருங்கியாதிபெற்றுள்ள ஹைய்க்கோர்ட்டு வக்கீலின் புத்திரியை மணஞ் செய்து மிகுந்த நாகரிக சிறப்போடு அநேக சாமான் தட்டு முட்டுகளுடன் டம்பமாக வாழ்ந்து வருவதையும், கவர்ன்மெண்ட்டு உத்தியோகஸ்தர் களாலும், மற்றும் கனதனவான்களான பிரபுக்களாலும் அதிக செல்வாக்கான மதிப்பையடைந்து கியாதிபெற்று மிக்கச் ஜொலித்திலங்குவதையுங் கண்டும் மனஞ்சகியாமல் பொறாமைக்குணங்கொண்டு சாத்தானின் ஆவியை நிறையப் பூண்டு இவரைக்கெடுத்து ஊரைவிட்டு ஓட்டிவிட வேண்டு மெனக் கபடச்சிந்தைக் கொண்டு,

சாத்தான் யூதாசுள் புகுந்து வேலைசெய்தமாதிரி, இவரை அடுத்தும் சிநேகமேரைகாட்டியும் வந்தப்பசுமலை, மதுரை வாசிகளான கிருஸ்தவ நாடார்களும் சில ஜாதியாரும் சேர்ந்து சதியாலோசனை செய்துப்பலவித பொய்ச்சங்கதிகளைக் கதை கட்டி மானேஜருக்கும், ஸ்தலம் மிஷநெரிக்கும், மனுக்கள் செய்துகொண்டதை கண்ணுற்றதக்க அநுபோகசாலிகளான மிஷநெரிமார்கள் கூடி விசாரணைசெய்து நன்காலோசித்தும் பொறாமைக்குணம் பூண்டவர்களாயிருந்து வீணாக இவ்விதபொய்மனு எழுதியிருப்பதைத் தெரிந்து, மனுதாரிகளை எச்சரித்துப்பொறாமைக் குணங்களை விட்டுக் கிருஸ்தவர் களைப்போல் சமாதானமாக இருக்கும்படி புத்திசொல்லி மனுவையும் தள்ளிப்போட்டார்கள்.

**கிருஸ்தவ சகோதரர்களே! இதனை கவனியுங்கள்**

அதோடு விடாமல் காலம்வரும்போது காரியத்தை முடிக்க வேணுமென்று கங்கணங்கட்டிக்கொண்டு வேளை சமயம் வரும்வழிகளை வெகுவாய்க்கவனித்துக் கொண்டிருந்தார்கள். முந்திய மானேஜரும் மிஷநெரிகளும், இடம் பெயர்ந்தும் சுயதேசம் போகவும், அநுபோகமில்லாத பால்யரான மானேஜரும் மிஷநெரியும் வந்து தோன்றவும் பொறாமைக்குணம் நிறையப் பூண்டிருந்த பழைய ஆட்கள் ஆசாடாதி வேடங்களைத் தரித்துப் புது மானேஜரைப் பலவிதமாகச் சிநேகமேரைக் காட்டிக் கைவசப்படுத்திக் கொண்டு, ஒரு துலுக்கமாணவனைக் கைவசப்படுத்தி தன்னிடம் ஸ்கூல் பைனல் பரீட்சைக்குச் சிபார்ஸ் செய்வதாகச் சொல்லி 50 ரூபாய் லஞ்சம்

வாங்கினதாகப் பொய்க்கேஸ் கட்டி மானேஜரைப் பிரியாது செய்துகொண்டதோடு, ஸ்கூல் இன்ஸ்பெக்டரிடமும் புகார் செய்து, (பி.ஏ., எல்.டி.,) டிப்போலமாவை எடுத்துப்போடும்படி அரும்பிரயாசப்பட்டும் பொய்ச்சாக்ஷித் தயாரித்து கேவலம், அஞ்ஞானிகளைப்போல ஆவேஷங்கொண்டலைந்தார்கள்.

கேசை விசாரித்த மானேஜரும் இன்ஸ்பெக்டரும் கூடி நன்காலோசித்து, இது ஜாதி வித்தியாசமும் பொறாமைக் குணமும் நிறையப்பூண்டொழுகிய செயலென்றறிந்து இவர்மீது இவ்வித வீணாக அவமரியாதையான கேஸ்களை உண்டு பண்ணி இவரைக் கெடுத்துப்போடச் செய்த காரியமென்றும் இவர்களினது எண்ணங்களையும் கண்டுகொண்டார்கள்.

இவ்வித கெட்ட எண்ணங்களும் சதியாலோசனையும் நிறைந்துள்ள வெளிவேஷக்கள்ளக் கிறிஸ்தவர்கள் நடுவிலிருந்து காலந்தள்ளுவது மகாமோசமாகு மென்றெண்ணி, ஆறுதலும் சமாதானமுமாக ஜீவிக்கும்படியாக த்தாமே ராஜிநாமாசெய்து வேலையைவிட்டு விலகிக்கொண்டார். பாருங்கள். கிறிஸ்தவர்களின் குணலக்ஷணங்களை. இவர் பசுமலை ஸ்கூலைவிட்டு விலகிக் கொண்டதால் ஆதி திராவிட மாணவர்களுக் கெல்லாம் பெரு நஷ்டமே, ஆதி திராவிடருக்குப் பேருபகாரியும் ஆதரவாகவு மிருந்த படியால் அநேக ஆதி திராவிட மாணவர்கள் கற்றுத்தேற இடமாயிருந்தது. இவர் வேறிடம் போகவும் அநேக மாணவரும் ஸ்கூலை விட்டுப்போட்டதும் பெரு விசனமே. கிறிஸ்தவ நாடார்களில் பலர் இவ்விதக்கெடுதல் சித்தமுள்ளவர்களாயிருந்து பலவிடங்களிலும் ஆதி திராவிடருக்கு இடையூறு செய்து வருவதாகவே எங்கும் பெரும்முறைப்பாடாயிருக்கிறது.

கிறிஸ்தவ நாடார்கள் தாங்களும் தங்களினத்தவர்களு மாத்திரம் எல்லாடிப்பார்ட்டுமென்டுகளிலும் மேன்மைப் பெற்று வாழவேண்டுமென்றும் மற்றவர்கள், சீரும் சிறப்புமாக வாழ்வதைக்கண்கொண்டு பார்க்கக்கூட மனஞ்சகியாத குணம் பூண்டவர் களாயிருந்தது மிகவும் விசனப்படத்தக்க காரியமே. ஐரோப்பிய பாதிரிமார்களை எளிதில் கைவசப் படுத்தித்தங்களின் செல்வாக்கை உண்டுபண்ணிக் கொள்வதில் மிக்கத்திறமை வாய்ந்தவர்கள் தங்களுக்கு மேலாக ஒருவரு மிருக்கக்கூவடா தென்பது இவர்களின் பிறவிகூ லக்ஷணமாக யிருக்கிறது.

கிருஸ்தவ நாடார்கள் தென்னிந்தியா, இலங்கை பர்மா முதலான அநேக'விடங்களில் பரவி எல்லா மிஷன்களிலும் நிரம்பிப்போயிருக்கிறார்கள், இவர்கள் சென்றிருக்குமிடங் களிலெல்லாம் இவ்விதமாகவே பலருக்கும் முக்கியமாக ஆதி திராவிடருக்கும், பலவித இடைஞ்சல்களையும் அதிகக் கஷ்ட விஷயங்களையும், பலமான கட்சி விரோதங்களையும் உண்டு பண்ணி வருவதாகப் பெரும் முறைப்பாடாகயிருக்கிறதுயா வருமறிந்த விஷயமே.

**ஸ்ரீமான் எஸ்.டி.எப்**

**மலர் 2 இதழ் பக் 48**

**மலர் 2 இதழ் பக் 63 - 64**

## மாத்ரு பாஷாபிமானம்

**பா**ஷாபிவிருத்தியைக் கருதி கதையெழுதுபவர் நல்ல தமிழில், தமது 'கற்பிதங்களை' (கட்டுக்கதைகள்) எழுதத் தயவுடன் வேண்டப்படுகின்றார்கள்.

இதை வாசிக்கும் சோதரி சோதரர்காள்! 'குறைகூறுவ தெளிது, நிறைவுறுவதரிது' என்றிருப்பதால் சிறியவன் எழுதிய இவ்விஷயத்திலுறுங் குறை கவனியாது, குணத்தைக்கொண்டு மாத்ரு 'பாஷாபிமானி'களாக முற்படுவீர்களாக.

கடையில், யாதாமொருவன் 'மாத்ரு பாஷாபிமானி'யாக வேண்டுமாயின், அவன் தன் தாய்பாஷையில் எழுதியுள்ள கிரந்தங்கள், பத்திரிகைகளைப் படித்தல் வேண்டுமன்றோ? நந்தமிழ்நாட்டில் செந்தமிழில் எத்தனையோ தின, வார, மாதப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் உலாவுகின்றனவே. வாங்கிப் படிப்போர் எத்துணைபேர்? மிகச் சிலரேயாம். 'இந்தியாவுக் கோர் புதிய சகாப்தம்' தோன்றிருக்கின்றதெனப் பத்திரிகைகள் கூச்சலிடுகின்றன. அவ்வுண்மையை மெய்ப்பிக்க வேண்டு மாயின், ஆங்கிலங் கற்றோர், கற்கிறவர், கற்பவர், கற்பிக்கிறவர் யாவரும் தமிழ்ப் பத்திரிகைகள் கிரந்தங்கள் முதலியவற்றைப் படித்து அவற்றை ஆதரிக்கவேண்டும்.

ஆதி திராவிட மக்கட்கோர் வார்த்தை சோதரீர்! நமது அதியுன்னத, அதிபூர்வ, அருந்தமிழில் நமக்கு அறிவைப் புகட்டி, நம்மை 'மாத்ருபாஷாபிமானி'கள், 'தேசாபிமானி'களாக்கக் கங்கணங்கட்டிக்கொண்டு நமக்கோர் செல்வச் சிறுவன்

தோன்றியிருக்கின்றான். *'ஆதி திராவிடன்'* என்பது அவன் பெயராகும். அவன் அழகிய, இனிய, மழலைச் சொற்கேட்டு, மகிழ்வதற்கு சஞ்சீவியே போன்ற அச்சஞ்சிகையை வாங்கி படிக்கக் கோருகின்றனன்.

எல்லாம் வல்ல இறைவன் நம்மவர் யாவர்க்கும் நல் அருள் நன்கே நல்குவாராக.

மாத்ரு பாஷாபிமானி

மலர் 2 இதழ் 2 பக் 42 - 43

# உரைகள்

## நாகப்பூரில் கூடிய எல்லா இந்திய தாழ்ந்த வகுப்பார் மகாநாடு தலைவராகிய மாட்சிமிக்க கோலாப்பூர் மகாராஜா* அவர்களின் அரிய பிரசங்கத்தின் குறிப்புகள்.

### எல்லாருஞ் சமம்

*தொடக்கூடாத வகுப்பாரின் பரிசுத்தமான மனதை இன்று நமது முன்னிலையில் நாம் காண்கிறோம். ஒருவரையும் தொடக் கூடாதவர் என்று அழைப்பது உண்மையில் ஒரு பாபமான காரியம்.*

---

*சத்ரபதி சாகு மகாராசர் (1874 1922) மகாராஷ்ட்டிரா மாநிலத்தில் சுதேச அரசாக செயல்பட்டு வந்த கோலாப்பூரின் அரசராக 1890 ஆம் ஆண்டு முதல் ஆட்சி செய்து வந்தார். சமூகப் புரட்சியாளர் ஜோதிராவ் ஃபூலேவின் சமூக சீர்த்திருத்தக் கருத்துக்களால் ஈர்க்கப்பட்டவர். ஃபூலேவின் சத்திய சோதக் சமாஜத்தின் புரவலாகச் செயல்பட்டவர். பார்ப்பனரல்லாத மாணவர்களுக்கு தனி தங்கும்விடுதிகள் கட்டினார். பார்ப்பனரல்லாதோருக்கு கல்வி, வேலைவாய்ப்பில் முதன்முதலில் முன்னுரிமை வழங்கியவர். தன் சொந்தக் குடும்பத்தில் சாதி மறுப்பு மணம் செய்து வைத்தவர். மகார் வகுப்பு தாழ்த்தப்பட்டவரின் தேநீர் கடையில் தன் அமைச்சரவை சகாக்களுடன் தேநீர் அருந்துவார். இதுபோன்ற பல சமூக தடைகளை உடைத்தெறிந்தவர். இறுதிக் காலத்தில் ஆரியசமாஜத்தில் இணைந்தவர். சாதியொழிப்பை உயர் சாதிகளே தொடங்கவேண்டும் என்ற கருத்தை தொடர்ந்து வலியுறுத்தியவர். தென்னிந்திய நல உரிமைச்சங்கத்தோடு நல்லுறவு வைத்திருந்தார். இவர் 6 மே 1922 ஆம் ஆண்டு மறைந்தார். இவருடைய மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் ராமநிய்யங்கர் (பனகல் அரசர்) தலைமையில் 2 மே 1922 ஆம் ஆண்டு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. இக் கூட்டத்தில் தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் செயல்பாடுகளை நன்கு உணர்ந்தவர் சாருமகராஜ்” என்று புகழப்பட்டார்.

நீங்கள் அத்தகையவர்களல்லர் என்பதை நான் அறிவேன். அவ்வார்த்தை (தொடக்கூடாதவர்) வழக்கத்திலி ருப்பதால் நான் உபயோகித்தேனே யொழிய வேறில்லை. நீங்கள் தொடக்கூடாதவர்களல்லர் அஃதன்றியும், உங்களைத் தொடக்கூடாதவர்களென்று அழைப்போர்களைக் காட்டினும், நீங்கள் மிக வீரத்தன்மை யாகவும், மிகவும் தன்னல மிழப் போராகவும், மிக அறிவள்ளவர்களாகவும், ஒழுங்காக நடப் போர்களாகவும் இருக்கின்ற இந்தியமக்கள். நாம் எல்லோரும் ஒரே நிலையிலுள்ள சகோதரர்களென்னும் உறுதிப்பாட்டுடனும், நமக்குள் ஒவ்வொருவரும் மதிக்கத்தக்க ஒரே விதமான பொது சுதந்தரங்களை உடைத்தாயிருக்கின்றோமென்னும் உறுதிப் பாடுடனும் நாம் வேலை செய்ய வேண்டும்.

பொய்யர்கள் ஜனங்களை வெகுகாலம் ஏமாற்றமுடியாது; ஜனங்கள் தங்களுடைய அனுபவத்தால் பொய்யர்கள் இன்னா ரென்றும் மெய்யர்களின்னாரென்றும் அறிந்துகொள்ளுவார்கள். நான் இந்த மகாநாட்டில் தலைமை வகிக்கும்படி அழைக்கப் பட்டிருந்தபோதிலுங்கூட, நான் எந்த ஒரு வகுப்பின் தலைவனு மல்லவென்றும், எந்த ஒரு வகுப்பையுஞ் சேர்ந்தவனல்ல வென்றும் சொல்லுகின்றேன். அன்றியும், நான் அவர்களுடைய தலைவர்களென்று யார் பொய் நம்பிக்கை கொண்டு என்னைப் பின்பற்றுகிறார்களோ அவர்கள் புத்தியை மாற்றும்படி செய்கின்றேன். என்னுடைய எண்ணங்களும் என்னுடைய செய்கைகளும் என்னையன்றி வேறு எவரையும் தெரிவிப் பனவல்ல. சரியான முன்பின் யோசனையின்றி என்னுடைய சுற்றத்தார்களும் நண்பர்களும் என்னைப் பின்பற்றக் கருதி, போலியாக நடிக்காமலிருப்பார்களென்பது என்னுடைய நம்பிக்கை. இத்தகைய விஷயங்களில் அவர்கள் சுயநிர்ணயம் செய்துகொள்ளுவதற்கு அவர்களுக்கு நான் தாராளமாக இடங்கொடுக்கின்றேன்.

### மதச்சண்டையின் இழிவு

இந்திய குடிகளாகிய நாம் எந்த வகுப்பு, எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்த போதினும், நாம் எல்லோரும் இந்தியர்கள் என்பதை ஒருபோதும் மறக்கக்கூடாது. ஒவ்வொரு தனி மனிதரைப்பற்றிப் பேசும்போது மத விஷயம் சிறிது

சார்ந்திருக்கலாம். ஆனால், தேசீய காரியங்களில் அது ஒருபோதும் ஒரு தடையாக இருக்கக்கூடாது. மதம் என்பதைப்பற்றி எல்லோராலும் பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்ட கருத்து என்னவெனில், எல்லாம்வல்ல இறைவன்பால் செல்லும் வழி என்று அருத்தம். முக்கியமான பல நகரங்களிலெல்லாம் ஒரே இடத்திற்குப் பல வழிகள் செல்லுகின்றன. அதுபோன்றே, நமது சமயப்பொதுக் கருத்தும் இருக்கின்றது. இந்த உதாரணம் உண்மையாக இருக்கும்பட்சத்தில் பல மதங்களும் ஒரே இடத்திற்குச் செல்லும் பல பாதைகள் போன்றிருக்கின்றன.

கடவுளைக் காணவேண்டுமென்னும் ஒரே நோக்கமுடைய ஜனங்கள் பல வழிகளைத் தேடிக்கொண்டதனாலேயே, அவர்கள் ஒருவருக்கொருவர் ஏன் வெறுக்க வேண்டும் என்பதைக் காணும் போது ஒருவர் உண்மையில் ஆச்சரியப்பட வேண்டியிருக்கிறது. பல சந்தர்ப்பங்களினால் பல மதங்கள் தோன்றியிருப்பதை ஒருவன் சிந்தித்துப் பார்க்கலாம். ஒருவன் ஒரு குறித்த மதத்தைப் பின்பற்றினதனாலேயே அவன் கடவுளை அடைந்ததாக ஒருவரும் சொல்ல முடியாது. தன்னுடைய மதந்தான் உண்மையான மதமென்றும், மற்ற மதங்களெல்லாம் பொய்யென்றும் ஒருவரும் சொல்லுதற்கு உரிமையுடையவரல்லர். 'காருண்யம்' (அன்பு) தான் சமயத்தின் உண்மையான அஸ்திவாரம். தன்னைத் தான் புகழ்ந்துகொள்ளுதல் தாழ்மைக்குக் கொண்டு வந்துவிடு மென்று கபீர் மகான் சொல்லியிருக்கின்றார்.

ஆகவே, உண்மையான சமயம் எவற்றையெல்லாம் உள்ள டக்கியிருக்கின்றதென்றால், நீங்கள் உங்கள் சகோதரர்களுக்காக உழைத்தல், ஒருவன் கடவுளைத் தம் முன் காணுதல், அவரை வணங்கி வழிபடுதல் ஆகியவற்றையே. இந்த விடயங்களை எல்லா மதங்களும் ஒப்புக்கொள்ளுகின்றன. பிறருக்கு நலஞ் செய்தலே அறன் என்றும், பிறருக்குத் தீங்கிழைத்தலே பாபம் என்றும் எல்லோரும் செப்புகின்றனர். பல சமயங்களின் முக்கிய மான கொள்கைகள் அங்ஙனம் ஒற்றுமைப்பட்டிருக்கும்போது, ஒரு மதத்தினர் மற்றொரு மதத்தினரை வெறுத்தல் உண்மையில் பெரும்பிழையாகும்.

இந்த நாட்டில் அவ்விதம் அநேகரிருந்தனர். அவர்களெல்லாம் ஒரு சார்பான லௌகீக ஆதிக்கம் பெறவே அங்ஙனமிருந்தார்கள்.

மகாபெரிய அக்பர் சண்டைகளோ அல்லது மகாபெரிய சிவாஜி சண்டைகளோ, மதத்தின் சார்பாகவோ அல்லது ஜாதிச் சார்பாகவோ நடைபெறவில்லை. அநேக மகாராஷ்டியர்களும் ராஜபுத்திரர்களும், மற்ற இந்து அதிகாரிகளும் வீரர்களும் அக்பர் ஆதரவில் செழித்தோங்கினார்கள். அதுபோலவே விஜயநகரம் சேனைகளிலும், சிவாஜி சேனைகளிலும் அநேக மகமதியர்களிருந்தார்கள். இவர்களெல்லாம் தங்களுடைய சொந்த மனிதர் மீது சண்டைசெய்ய வேண்டியிருந்தபோது, தங்களுடைய ஒழுக்கத்திலும், கௌரவத்திலும் ஒருகாலும் தவறி நடந்தார்களல்லர். எல்லா மதங்களின் உண்மைக்கருத்தை நான் மேலே விளக்கிக்காட்டி னேன். ஒரு தேசம் அம்மாதிரி நடந்து கொண்டால் அது அதன் விருத்தியை நிச்சயமாகக் காட்டுகிறது

## கடவுளை அடையும் உண்மையான வழி

ஆனால், எல்லா மதத்தின் உண்மைக் கருத்தும் கிடைக்கப் பெற்ற நாம் ஒவ்வொரு மனிதனையும் கடவுளின் உருவமாகப் பாவிப்பதற்குப் பதிலாக, நமது மனிதக் கூட்டத்தின் பெரும் பகுதியினரை, போலிச் சாத்திரங்களை நம்பி, மிருகத்தைக் காட்டினுந் தாழ்வாகக் கருதி வருகின்றோம்; அத்தகையவர்களாகிய நாம், எவ்வளவு கஷ்டப்பட்டுக் கடவுளைப் புகழ்ந்து துதித்தாலும், பாட்டுகளைப் பாடினாலும், புராணங்களைப் படித்தாலும், வெறுங்காலுடன் (பாதரட்சையின்றி) நெடுந்தூரம் யாத்திரை செய்தாலும், அக்கடவுளரின் முன்னிலையில் சாஷ்டாங்கமாக விழுந்து கும்பிட்டாலும், நமக்கு கடவுள் சகாயஞ்செய்வா ரென்று ஒருகாலும் நாம் எதிர்ப்பார்க்க முடியாது. அத்தகைய பொய் (வழிகளால்) ஆடம்பரங்களால் நாம் அக்கடவுளை அடைய முடியாது. அஃதன்றியும், அவருடைய அதிருப்திக்கு நாம் பாத்திரமாவோ மென்பது திண்ணம். அவருடைய ஆதரவை நாமாகவே அடையும் வழி ஒன்றுதான் உண்டு. அதாவது, அவருடைய குழந்தைகளையெல்லாம் சமமாகவும் சகோதரத்துவமாகவும் நடத்தும் ஒரே வழிதான்.

## சென்னை மாகாண விஷயமும் டாக்டர் நாயரும்*.

சென்னை மாகாணத்திலுள்ள தொடக்கூடாத வகுப்பார் எனப்படுவோரை, அவர்கள் சமயத்தையே தழுவும் ஒரே மதத்தினர் மிக மிருகத்தனமாகவும் கொடுமையாகவும்

நடத்துகின்றனர். சென்னைப் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் பால் மிக அநீதியாக நடக்கின்றார்களென்பது மிக அபகீர்த்தி வாய்ந்தது. ஆகவே, பார்ப்பனரல்லா தாரின் சுயமதிப்பையும் அவர்களுடைய சுதந்திரங்களையும் அவர்களுக்கு நினைப் பூட்டி, அவற்றை நிலைநாட்டப்பாடுபட்டதற்காகக் காலஞ் சென்ற டாக்டர் நாயருக்கு நாமெல்லோரும் நன்றியறிதலுள்ள வர்களாக இருக்க வேண்டும். பஞ்சமர்களின் முன்னேற்றத்திற்காக டாக்டர் நாயர் கஷ்டப்பட்டுழைத்தார். அவருடைய வீட்டு வேலைக்காரரெல்லோரும் அந்த வகுப்பைச் சேர்ந்தவர்களே; தாழ்ந்த வகுப்பார் முன்னேற்றத்தின் பொருட்டு மிகக்காருண்யத்துடன் வேலை செய்து வந்தவர்.

**சர் சங்கரன் நாயரை இந்தச் சமயத்தில் நான் குறிப்பிடாமல் இருக்க முடியாது.

## தேசம் எப்படி முன்னேற்றமடையும்?

### ஜாதிக்கட்டை ஒழித்த கலப்பு விவாதம் நடத்த வேண்டும்

*தரவாட் மாதவன் நாயர் (1868 1919) நீதிக்கட்சியின் முன்னோடி. பார்ப்பனரல்லாதோர், தாழ்த்தப்பட்டோரின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டவர். சாகுமகாராசருக்கும் தென்னிந்திய நல உரிமைச்சங்கத்துக்கும் நல்லறவு இருந்தது. சர்., இராமசாமி முதலியார், சர். பிட்டி. தியாகராசர், டி.எம். நாயர் ஆகியோர் சாருமாகராசருக்கு உற்ற நண்பர்களாக இருந்தனர். நாயரின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் சாகுமகாராசர் டாக்டர் நாயர் நினைவு உதவிக்கொடையை (Dr. Nair. Memorial Schloarship) நிறுவினார். சென்னை ஸ்பர்ட்ங் சாலையில் 1917 ஆம் ஆண்டு நடந்த தாழ்த்தப்பட்டோர் கூட்டத்தை கலைக்க உயர்சாதியினர் முயன்றபோது தடியுடன் களப்பணியாளராக வீதியில் இறங்கியவர் நின்றார்.

**சர். சங்கரன் நாயர் இந்திய தேசிய காங்கிரசில் தீவிரமாகப் பணியாற்றிய இவர் சென்னை மாகாண ஒடுக்கப்பட்டோர் சங்கத்தின் (Drepressed class mission society) தலைவராகவும், சென்னை சமூகமாற்ற அமைப்பின் (Madras social reform association) தலைவராகவும் பணியாற்றிவர். மலபார் திருமண மசோதா (Malahar marriage bill) உருவாகக் காரணமாக இருந்தவர். ஒருமுறை பாரதி இவர் பேசிய கூட்டத்தில் கலந்து கொண்டார். இவர் பேசியதை கண்டு ஆவேசமடைந்த பாரதி இவரை துரோகி (Traitor) என திட்டினார். பின் பாரதியை அவருடைய நண்பர்கள் சமாதானம் செய்தனர்.

ஜாதிக்கட்டை ஒழித்தால்தான் இந்தத் தேசம் அபிவிர்த்தி யடையுமென்று அபிப்பிராயப்படுகின்றேன். ஆகையால், இக் காலத்தின் முக்கிய தேவையென்ன வெனில், ஒரு வகுப் பாருக்கும் மற்றொரு வகுப்பாருக்கும் கலப்பு விவாகம் ஏராளமாக நடைபெற வேண்டும்.

ஒரு வகுப்பார் மற்றொரு வகுப்பார் வீட்டில் சாப்பிடும் முறையை எதிர்த்துப் பேசுவோரிருப்பினும் கூட, அம்முறை இப்போது உறுதியாக நிலைத்துவிட்டது. கலப்புவிவாகம் மிகவும் பரவும் வண்ணம் நாம் எதிர்பார்ப் பதற்குமுன், அத்தகைய விவாகம் முறைகேடானதென்றும் அத்தகைய விவாகம் செய்து கொண்டோரின் பிள்ளைகள் பரம்பரை சொத்துக்குப் பாத்தியமில்லாதவர்களென்றும் இப்போதுள்ள தடுக்கும் சட்டத்தை முதலில் நாம் மாற்ற வேண்டும்.

ஆகவே இந்திய சட்டசபையில் ஹானரபிள் மிஸ்டர் படேல்* கொண்டுவந்திருக்கும் கலப்பு விவாக மசோதாவை சட்டமாக்க வேண்டியது அவசியம்.

---

*விந்திலபாய் படேல் டெல்லி மத்திய சட்டசபையில் 1918ஆம் ஆண்டு கலப்புத் திருமணங்களுக்குச் சட்ட அங்கீகாரம் வழங்கும் மசோதவைத் தாக்கல் செய்தார். இம்மசோதா கலப்புத்திருமண மசோதா எனவும் படேல் மசோதா எனவும் அழைக்கப்பட்டது. இம் மசோதவை இந்திய சனாதனிகள் நாடு முழுவதும் எதிர்த்தனர். திலகரின் கேசரி இதழ் அனுலோமாத் திருமணங்கள் (மேல் சாதி ஆணக்கும் கீழ்சாதிப் பெண்ணுக்கும்) அனுமதிக்கப்பட்டால் பிரதியோமாத் திருமணங்கள் (கீழ்சாதி ஒன்றுக்கும், மேல் சாதிபெண்ணுக்கும்) நடைபெறுவதை தடுக்கமுடியாது என குரலிட்டது. ஆனால் இந்தியாவின் பார்ப்பன ரல்லாதோரும், சமூகச்சீர்த்திருத்தித் சிந்தனையாளர்கள் வரவேற்றனர். மேலும் இம் மசோதா பற்றி சவுத்பரோ குழு முன் அம்பேத்கர் அளித்த வாக்கு மூலத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "வகுப்பு வாரிப் பிரதிநிதிந்துவத்தக்கு எதிராகக் கூறப்பட்ட மற்றொரு முக்கியமான வாதம் அது சமூகப் பிரிவினைகளை நிரந்திரமாக்கி விடும் என்பதாகும். சமூகப் பிரிவினைகளை ஆதரிப்பவர்கள் தான் இந்த வாதத்தை கூறுகிறார்கள் என்பது தான் வேடிக்கை. இந்தக் காரணத்தைக் காட்டி வகுப்புவாரிப் பிரதிநித்துவத்தை எதிர்ப்பவர்கள் திரு.படேலின் சாதிக் கலப்பு திருமண மசோதாவை எதிர்ப்பவர்கள் என்பதைக் குழு தயவு செய்து கவனிக்க வேண்டும். அந்த மசோதா சாதிகளை உடைந்து விடும் என்று அவர்கள் வாதிட்டார்கள். எனவே வகுப்புவாரிப் பிரதித்து வத்துக்கு எதிராக இந்த வாதத்தைக் கூறுபவர்கள் உண்மையான மனத்துடன் அதைக் கூறுகிறார்களா என்பதை சந்தேகிக்க வேண்டியிருக்கிறது".

இந்த மசோதா நிறை வேறினால் பார்ப்பனரின் பெருமை தாழ்ந்துபோய்விடும் என்பதற்கு சந்தேகமில்லை. ஆகவே பார்ப்பனப் பத்திரிகைகள் இந்த மசோதா கூடாதென்று மிகக்கடுமையாய்த் தாக்குகின்றன.

பார்ப்பனரின் நன்மையை மட்டும் கவனித்தால், அவர்கள் இந்த மசோதாவை எதிர்த்துப் பேசுவது இயற்கையே. ஆனால் அவர்கள் ஒன்றை அறிந்துகொள்ள வேண்டும். அஃதாவது, தேசத்தின் பெரும்பகுதி நலத்தை (தங்கள் சுயநலத்திற்காக) அவர்கள் பலிகொடுக்கின்றார்கள். ஒரு மனிதனும் ஒரு ஸ்திரியும், கணவனும் மனைவியுமாக ஒன்று சேர்ந்து வாழ்வதில் வைதீகக் கூட்டத்தார் குற்றமொன்றும் கண்டுபிடிக்கவில்லை.

ஆனால், அத்தகைய செய்கையை ஒழுக்கச் சட்டத்தில் உயர்வாக ஏற்படுத்திக் கொள்ளும் பொருட்டு சமயசம்பந்த மான கிரியைகள் செய்து பந்தங்களை உறுதிப்படுத்திக் கொள்ளுவதற்கு அவர்கள் ஆட்சேபிக்கின்றார்கள். சமய அங்கீகாரத்தை அவர்கள் கொடாமலிருப்பதால், அவர்கள் பொதுஜன ஒழுக்கத்திற்கு விரோதிகளாக விருந்து, உணர்ச்சி யின்றி நடந்து வருகிறார்கள். எனது நண்பர் மிஸ்டர் அருண்டேலின் உதாரணத்தை இங்குக் காட்டாமலிருக்க முடியவில்லை. அவர் ஒரு பார்ப்பனப் பெண்ணை மணந்து கொண்டதால், வைதீகப் பார்ப்பனர்கள் அவர்மீது கடுங் கோபம் கொண்டிருக்கின்றார்கள். இது விஷயத்தில் நாம் கெட்ட எண்ணமின்றி அபிப்பிராயஞ் சொல்வோமாகில், இம்மாதிரியான கல்யாணங்கள் அநேக நடைபெற வேண்டு மென்றே நாம் சொல்லவேண்டியிருக்கும். சுயநன்மை ஒன்றையே கருதும் கொள்கையை நான் விரும்பவில்லை. ஏனெனில் அத்தகைய கொள்கை, தன்னலம் ஒன்றையே நாடுவோருடன் நம்மையும் இழுத்துக்கொண்டுபோய்ச் சேர்த்துவிடுகிறது.

அன்றியும் நமக்கு முன்னரே சினேகிதர்களாக இருப் போரின் கூட்டத்தினின்றும் அது நம்மைப் பிரித்துவிடுகிறது. அதிகச் செலவிட்டுச் சடங்குகள் செய்வதும், ஜனங்களின் பணப்பையை வடிகட்டிவிடுகிறதுதென்று கஷ்டப்பட்டுச் சொல்வோர் அநேகரிருக்கின்றனர். அங்ஙனஞ் செலவிடுதல், சமுதாய விருத்திக்கு இன்றியமையாம லிருக்கும் கல்வி போன்ற

முக்கியமான விஷயங்களை அப்புறப்படுத்திவிடுகிறது. ஆனால் இங்ஙனம் கஷ்டப்படும் ஜனங்களே, மிகப்பொருள்சிக்கனத்துடன் பதிவு (ரிஜிஸ்ட்டரேஷன்) மூலமாக கல்யாணங்கள் செய்து கொள்ளும் முறைக்கு இஷ்டப்படுகிறதில்லை. பதிவு செய்து கொள்ளப்படாத ஹிந்துக்களின் கல்யாணங்கள் சட்ட சம்பந்தமாக அங்கீகரிக்கப்பட்டவையல்ல.

இது, கல்யாணம் செய்துகொண்ட ஒரு இந்தியன் இங்கிலாந்தில் அல்லது பிரான்ஸில், அந்தத் தேசங்களின் சட்டப்படி, கல்யாணஞ் செய்துகொள்ளுதற்கு இடந்தருகின்றது. இத்தகைய முறையைப் பயன்படுத்திக் கொண்டவர்கள் அநேகர் இருக்கிறார்கள். அவர்களெல்லாம், தாங்கள் ஒரு காலத்தில் விசுவாசித்துக் கீழ்ப்படிதலுள்ள தங்கள் மனைவிகளை வெட்கமும் துன்பமும் நிறைந்த பாதாளக்குழியில் தள்ளி விடுகிறார்கள்; இம்மாதிரியான கஷ்டங்களை அநேக இந்திய பெண்கள் அனுபவிக்கின்றார்கள். இத்தகைய நிலைமையைப் பற்றி வைதீகக்கூட்டத்தார் ஆலோசனை செய்வதில்லை.

கல்யாணங்களைப் பதிவு (ரிஜிஸ்டர்) செய்துகொள்ளும் முறையானது, இத்தகைய மானக்கேடான வழிகளைச் சந்தேக மின்றி நிறுத்தி விடுகின்றது. கல்யாணம் பதிவு செய்து கொள்ளும் முறையானது, கலப்பு விவாகத்திற்கு நியாய வழிகாட்டியாக இருப்பதால்தான், வைதீகக்கூட்டத்தார் அவ்வழியின் குறுக்கே நிற்கின்றார்கள். அதை நாம் காண் கின்றோம். நிலைமையிலோ அல்லது கௌரவத்திலோ உயர்வாக விருக்கும் தகப்பன் வழியிலோ அல்லது உடன் பிறந்த வழியிலோ அல்லது இரத்தக்கலப்பு வழியிலோ உள்ளவர்களுடன், கலப்பு விவாகத்தினருக்குப் பிறந்த சந்ததியர்கள் பங்கு பிரித்துக் கொள்ளுதல் சரியல்லவென்று வாதிக்கப்படுகிறது. ஆனால் இது சரியான காரணமன்று. இத்தகைய காரணங்காட்டுவோர், கிறிஸ்தவராக மாறினவரோ அல்லது ஹிந்து ஒருவரோ பதிவு முறைப்படி கல்யாணம் செய்து கொண்டால் அவர்கள் குடும்பத்திலுள்ள சந்ததியாருடன் பங்கு பிரித்துக்கொள்ளலா மென்று இடங்கொடுக்கும் தற்போதுள்ள சட்டத்திற்குச் சம்மதித்திருப்பது, அதிசயமாக விருக்கிறது. இந்தியாவில் தாழ்ந்து கிடக்கும் வகுப்பாரை முன்னுக்குக் கொண்டுவருதற்கு

படேல் மசோதா தகுதியுடையது. ஆகையால், அந்த மசோதாவை ஆதரிப்போருக்கு நாம் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

## தாழ்ந்த வகுப்பார் உத்தியோகமும் உயர்ந்த வகுப்பார் பொறாமையும்

தொடக்கூடாத வகுப்பார் சிலர் வக்கீல் தொழில் செய்யும்படி அத்தொழில் பட்டம் பெற்றதற்கு அடையாள மான நற்சாட்சிப் பத்திரத்தை (சன்னத்து) நான் அவர்களுக்கு கொடுத்ததற்காக என்னைப் பரிகாசஞ் செய்தார்கள். வைத்திய தொழில், வக்கீல் தொழில் முதலியவை தங்களுக்குத்தாம் உரியவையென இந்தியாவிலுள்ள சில வகுப்பார் எண்ணி யிருக்கின்றார்கள். தொழிற்குத் தக்கபடி அதற்குத் தகுதியுடையவர்கள் தாம் அத்தொழில் வகிக்கவேண்டுமென்னும் கொள்கையை ஆட்சேபிக்க இடமில்லை; ஆனால் காலத்திற்குத் தக்கபடி அக்கொள்கை திருத்தப்படல் வேண்டுவது அவசியம். ஆரம்ப காலத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்தார்கூட, ஜனங்களுக்கு அரசியல்கல்வி கற்றுக்கொடுக்கும் பொருட்டுத் தாழ்ந்த கல்வி யோக்கியதையுள்ளவர்களுக்கும் கலெக்டர், ஜட்ஜ் முதலிய உத்தியோகங்கள் கொடுத்து வந்தார்கள்;

பரீட்சை வைக்காமலே சாதாரணமாகப் போதிய பொது அறிவுள்ளவர்கள் வக்கீல் தொழில் செய்யும் பொருட்டு அவர்களுக்கு சர்ட்டிபிக்கேட்டுகளும் கொடுத்து வந்தார்கள். இப்போதுங்கூட, பரீட்சையில் தேர்ச்சியடைந்தோர் அரிதாக இல்லாமலிருக்கும்போது, சரியான முறைப்படி பரீட்சையில் தேர்ச்சியடையாத அட்டார்னிதொழில் செய்வோரும் பிற வகையான உத்தியோகஸ்தர்களும் பிரிட்டிஷ் இந்தியாவிலி ருப்பதை நாம் காண்கின்றோம். தொடக்கூடாதவர்களுக்கு நான் கொடுத்த தொழில் யோக்கியதை அனுமதிப் பத்திரங்களை, பார்ப்பனர்களுக்கும், காயஸ்தர்களுக்கும், சரஸ்வதி வகுப்பாருக்கும் கொடுத்திருந்தால், அப்போது அதைப்பற்றி ஆட்சேபமான அபிப்பிராயம் கிளம்பியிராது. உண்மையில் பின்னர் கூறிய வகுப்பினர்கள் அத்தொழில் பட்டம் பெற்றபோது (அவ்வகுப் பாரிடம்) கோபமான உணர்ச்சி வெளிப்படவேயில்லை. மகாராட்டியர்களுக்கோ அல்லது தொடக்கூடாதவர்களுக்கோ

அத்தகைய பட்டங்கள் வழங்குவது, பெருங் கூச்சலுண்டாகும்படி செய்து வருகிறது; அதனாலே என்னைப்பற்றி ஆராய்ச்சி செய்து குணதோஷங் கண்டு பிடிப்போரின் பெருந்தன்மை இத்தகைய தென்பது நன்கு விளங்குகிறது.

தாழ்ந்த வகுப்பார் உத்தியோகம் பெறுதல்

உயர்ந்த வகுப்பார் பொறாமை கொள்ளுதல்

மாஹர்ஸ், மாங்க்ஸ் என்னும் வகுப்பார்கள் அரசாங்க இலாகாவில் சில உயர்ந்த வேலைகள் பெறாமலிருக்கும்படி இதுகாறும் தடுக்கப்பட்டிருந்தார்கள். அவ்வகுப்பாரில் மெட்ரிகுலேசன் பரீட்சையில் தேர்ச்சியடைந்தவர்கள் இப்போது உயர்ந்த உத்தியோகங்கள் பெறுவதைக் கண்டு, பார்ப்பன வகுப்பார் மிகவும் மன்க்குழப்ப மடைகின்றனர். மாஹர்ஸ், மாங்க்ஸ் வகுப்பார் கிறிஸ்தவர்களாக இருந்தால், அப்போது பார்ப்பனர், அவர்கள்பால் குற்றங்கண்டு பிடிக்க மாட்டார்கள். மாஹர்ஸ், மாங்க்ஸ் வகுப்பைச் சேர்ந்தோர் வக்கீல் தொழில் செய்வதற்கு நான் அவர்களுக்கு அனுமதி கொடுத்திருக்கின்றேன். கல்வியில் அவ்வகுப்பாரைக் காட்டினும் மிகவும் தாழ்ந்த நிலைமையிலுள்ள உயர்ந்த வகுப்பாருக்கே, சுதேச அரசாங்க நாடுகள் பெரும்பாலும் தொழிற்பட்டங்கள் (டிப்ளோமாஸ்) அளிக்கின்றன. ஆனால் நான் அத்தகைய செய்கை செய்தேனென்று யாரேனும் ஒருவர் குறை கூறினதாக நான் ஒருபோதும் கேள்விப்படவில்லை. தொடப்படாத வகுப்பாருக்கு நான் வக்கீல் தொழில் பட்டங்கள் அளிப்பதில் என்னுடைய முக்கிய கருத்து என்னவெனில், அவ்வகுப்பாருக்கு நியாய இலாக தொழில் தாராளமாக கிடைக்க வேண்டுமென்பதேயாகும். அத்தொழில் இதுகாறும், வழக்கம் என்னும் ஒரு கட்டுப்பாட்டு முறையை அநுசரித்து அவர்களுக்குக் கொடுக்கப்படாமலிருந்தது.

ஜாதிக்கட்டை யொழிக்க யார் முன்வர வேண்டும்?

தாழ்ந்த வகுப்பு ஜனங்கள் தாம் இதன்பொருட்டு வேலை செய்யவேண்டுமென்று இப்போது சாதாரணமாகவே சொல்லப்படுகிறது. ஆனால் அவர்களுடைய முயற்சிகள் அதிகமாகப் பயன்பெறாவென்று நான் நிச்சயமாக உணர்ந்

திருக்கின்றேன். ஜனசமுதாயத்தின் உச்சியிலிருக்கும் உயர்ந்த வகுப்பார்தாம் அந்த வேலையை ஏற்றுக்கொள்ள வேண்டும். சொல்லிலடங்காத இத்தனை நூற்றாண்டுகளாக, பிறப்பினாலேயே உயர்ந்தோரென்று சமுதாயத்தில் பெருமை அநுபவித்தவர்கள் தாம், ஜாதிக்கட்டை யொழிக்க வேண்டும். ஜப்பான் தேசத்தில் சமூக ஒற்றுமை ஏற்படவேண்டுமென்று கருதி, அந்நாட்டில் உயர்ந்த ஜாதியாரெனப்படுவோராகிய *சாமுகரை வகுப்பார் தாம் முன்னின்று வேலைசெய்து தங்கள் ஜாதிக்கட்டை யொழித்தார்கள். அதை நாம் காண்கின்றோம். ஜாதிக்கட்டை யொழிக்கத் தாழ்ந்த வகுப்பார் முயற்சி செய்தால், அவர்கள் முயற்சி அழிக்கப்பட்டுபோம் என்பது திண்ணம். உயர்ந்த ஜாதியார் ஜாதிக்கட்டை யொழிக்க முயற்சிகள் செய்தால், அம்முயற்சிகள் பிறர் கற்கக்கூடியவையாக விருக்கும். இவ்விதம் சமுதாயச் சீர்திருத்தம் நடைபெற ஆரம்பித்தாலொழிய தாழ்ந்த வகுப்பார், சமூகநிலையில் தங்களை உயர்த்திக்கொள்ளத் தாங்களாகவே இடையறாமல் உழைக்கவேண்டும்.

தாழ்ந்த வகுப்பார் தங்கள் நிலைமையை உயர்த்திக்கொண்டும், உயர்ந்த வகுப்பார் சிறிது கீழிறங்கித் தாழ்ந்த வகுப்பாருக்குச் சகாயஞ் செய்துகொண்டும் வருவார்களேயானால், உயர்ந்த வகுப்பார் தாழ்ந்த வகுப்பார் ஆகிய எந்த வகுப்பாரையும் அவதூறாகப் பேசவோ அல்லது வெறுக்கவோ இடங்கொடாமல், ஜாதிக்கட்டை நாம் ஒழிக்கக்கூடும். ஒற்றுமை உண்டாகும் பொருட்டு மராட்டியர்களுங்கூட தங்கள் ஜாதிக்கட்டை யொழிக்கும்படி வற்புறுத்தப்படலாம்.

(அன்பே வடிவாய் விளங்கும், கோலாப்பூர் அரசர் அவர்கள் அரிய சொற்பெருக்கின் குறிப்புகளை மேலே எடுத்துக்காட்டி இருக்கின்றோம். அவைகளை ஊன்றிப்படித்தால் 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்குஞ், சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்' என்ற உண்மை தெள்ளிதிற் புலப்படும்.

---

*சாகுமகராஜ் ஜப்பானிய சமுதாய அமைப்பின் உயர்தட்டு மக்களைக் குறிப்பிடுகிறார். ஜப்பானிய சமுதாய அமைப்பிலும் நால் வருண முறை உள்ளது. இரண்டாவது நிலையில் உழவர்களும், மூன்றாவது அடுக்கில் கைவினைக் கலைஞர்களும் இருந்தனர். இந்திய ஒடுக்கப்பட்ட மக்களைப் போல மனிதர்களாகக் கருதப்படாத ஜப்பானிய மக்களாக பராக்குமின்கள் இருந்தனர்.

இவ்வரசர் தம் நாட்டில் ஆதி திராவிடர்கட்கென்று தனிப்பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி யிருத்தலோடு இவர்கட்குப் பேருதவி செய்து வருகின்றனர். மற்றும் தீண்டப்படாது (Untouchability) என்ற கொடிய வழக்கம் தம் நாட்டில் இருத்தல் கூடாதென்ற சட்டத்தைப் பிறப்பித்துவிட்டார்.

சிலர் புகழுக்காகப் பேசுவார்கள்; ஆனால் பேசும் வண்ணம் நடக்க மாட்டார்கள். இத்தகையோர் பசுவின்தோலை மூடிக்கொண்டிருக்கும் புலிகள் என்று தெரிந்துகொள்ளுங்கள். ஆனால் இவ்வரசரோ, தாம் பேசும் வண்ணம் நடக்கும் உண்மை அந்தணர். இவர், 'நான் என் நாட்டில் எல்லோரையும் சமமாக நடாத்தப்போகின்றேன்; எல்லோருக்கும் உத்தியோகங்கள் கொடுக்கப்போகின்றேன்; இதற்கு விரும்பாதவர்கள் உத்தியோகங்களினின்றும் நீங்கிக்கொள்ளலாம் என்று அறிக்கை செய்துள்ளார். ஆகலான் ஆதி திராவிட சகோதரர்களே! இத்தகைய அரசர்களெல்லாம் உங்களுக்கு இது சமயம் உதவியாய் விளங்குகின்றனர்; நீங்கள் ஒன்றுக்கும் அஞ்ச வேண்டாம். உங்கள் முன்னேற்றத்தை நாடுங்கள். இறைவன் இவ்வரசர் பெருந்தகையார்க்கு நோயற்ற யாக்கையும் நீண்ட வாழ்க்கையும் கொடுப்பாராக!) - பத்திராதிபர் 'ஆதி திராவிடன்'.

**மலர் 2 இதழ் 5 பக் 70 - 76**

## நன்னெறி

அவைத்தலைவர்களே! பெரியோர்களே!

சிறியேன் இன்று உங்கள் முன்னிலையில் பேசத் துவங்கும் பொருள் 'நன்னெறி' என்பதே. நன்னெறி என்பதற்குப்பொருள் 'நல்ல வழி' என்பதாம்.

இப்பரந்த உலகத்திலே காணப்படும் வழிகள் இரண்டாம். அவை 'நல்ல வழி', 'தீய வழி' என்பனவாம். இவ்விரண்டனுள் முன்னையது நன்மையைப் பயந்து இன்பம் கொடுக்கும். பின்னையது கெடுதியைப் பயந்து துன்பத்திற்குள் அமிழ்த்தும். நாமெல்லாம் இன்பத்தை நாடுகின்றவர்களாய் இருக்கின்றோம்; துன்பத்தை ஒரு சிறிதும் விரும்புகின்றோமல்லோம்.

இனி, இன்பத்தை நாடுகின்ற நாம், இன்பமடைய வேண்டுமெனின் இன்பவடிவாய் உள்ள ஒரு பொருளை விரும்பிச் செல்லல் வேண்டும்; அப்பொருள் குறைவற்ற இன்பம் தன்னகத்து கொண்டதாய் விளங்குதல் வேண்டும். ஆகவே குறைவற்ற இன்பத்தைக் கொண்டுள்ள பொருள் யாது? அதுதான் கடவுள் என்று அறிஞர்களால் உறுதிப்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆகவே, அழிவில்லா இன்பத்தைப் பெற வேண்டுமெனின் இன்பப் பொருளாய கடவுளைப்பற்றுதல் வேண்டும். இதனாற்றான் திருவள்ளுவர் 'பிறவிப் பெருங்கடல் நீந்துவர், நீந்தார் இறைவனடி சேராதார்' என வலியுறுத்துவாராயினர்;

ஆகவே ஒவ்வொருவரும் இறைவன்றிருவடிகளை எய்த முயற்சித்தல் வேண்டும்; அங்ஙனமெனின் அவனை எவ்வாறு

அடைதல்வேண்டுமெனின், அவனைப்போன்ற நற்குணங்களை நாம் உடையாராய் இருத்தல் வேண்டும்; நல்லாரொடு உறவாட வேண்டுமெனின் அந்நல்லார் குணம் நம்பால் தோன்றல் வேண்டும்; தீயாருடன் திரிதல் வேண்டுமாயின் அத்தீயார்க்குரிய குணங்களும் நம்பால் இருத்தல் வேண்டும். அதைப்போன்றே, கடவுளிடத்துச் சாரவேண்டுமெனின், அவர் பெருங்குணங்களாய பேர் இரக்கமும், பேரன்பும், பேரருளும் நம்பால் உண்டாதல் வேண்டும்.

இனி, பேரிரக்கமென்பது நம்மினம் தாழ்ந்த உயிர்களிடத்து அன்பு செலுத்தி, அவைகளைத் தம்முயிரைப்போன்று நினைத்து ஒழுகுதல். இதையே தாயுமான சுவாமிகள், 'எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும் நின்தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே' எனக்கூறுவாராயினர். ஆகவே, ஒவ்வொரு உயிர்க்கும் வருந்துன்பம் தனக்கு வருதல் என்று எண்ணி அதனைக் கொன்று அதன் உணவைத் தின்னாது இருத்தல் வேண்டும். ஆனால் சில நூல்கள் யாகங்கள் வாயிலான் கொலைகள் செய்யலாமெனக் கூறுகின்றன. அவைகளெல்லாம் போலி உரைகளெனக் கொள்க. 'அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகத்து உண்ணாமை நன்று' என்ற நந் தமிழாசிரியர் திருவள்ளுவர் திருமொழிகளை இங்கு நினைத்துப் பார்மின்கள். மற்றும் கொல்பவர்கள் முன் இறைவன் எதிர்ப்படார். ஏனெனின் கடவுள் 'கொல்லாவிரதியர் நேர்நின்ற முக்கட்குருமணி.'

இனி, பேரன்பைப் பற்றிக் கூறுவாம். மக்களாய்ப் பிறந்த நம்முன் இடையறாத அன்பு கனிந்து விளங்கல்வேண்டும். கடவுள் எல்லா உயிர்களிடத்தும் இரக்கமுடையவராய் இருத்தலோடு, அவற்றினிடத்தே பேரன்பும் கொண்டிருக்கின்றார். நாமும் அதுபோலப்பேரன்பு உடையவர்களாய் இருந்தாற்றான் கடவுளை அணுக முடியும். பகுத்தறிவில்லா உயிர்களிடத்து எல்லையற்ற இரக்கமாய் அன்பும், பகுத்தறிவுள்ள மக்களிடத்துப் பேரன்பும் கொண்டு நடந்தால் நாம் கடவுளின் உண்மைப் புதல்வர்களா கின்றோம்.

அவ்வாறாக இவ்வுலகின்கண் சிலபோலிமாக்கள் பிறப்பான்றங்களை உயர்த்திக்கொண்டு, அறிவுடையாரையும்,

சிவனடியாரையும் இகழ்கின்றனர். என்னே! இவர்கள் அறியாமை! பிறப்பான் ஒருவர் உயர்ந்தாராவது, அறிவுடையோர் கொள்கைக்கும், அறநூல்கட்கும் முற்றும் முரணியது, மற்று ஒருவர்க்கு உயர்வு வருதல் வேண்டுமெனின், ஒழுக்கத்தானும் செய்கையானுமேவரும் இஃதுணர்ந்தே 'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்குஞ்சிறப்பொவ்வா செய்தொழில் வேற்றுமையான்' என்று திருவள்ளுவர் கூறுவாராயினர்.

ஆகலான் ஒருவன் எப்பிறப்பிற் பிறந்தானாயினும், அவன் ஒழுக்கத்தையுங் கல்வியைங்கண்டு, அவன்பால் அன்பாய் இருத்தல் வேண்டும்; இவ்வாறு இருப்பதை இறைவன் விழைவு. இவ்வுண்மையை உணர்ந்தே, அடியார்கள் அன்பர்களின் பிறப்பை ஒருசிறிதும் நோக்காது அவர்களின் அன்பின்றிறத்திற்கு மகிழ்ந்து ஏதும் வேற்றுமையின்றி அளவளாவி இன்புற்றார்கள். ஆதிசைவ பிராமணரான சுந்தரமூர்த்திகள் திருத்தொண்டத் தொகையின்கண் பிறப்பை நோக்காமல் எல்லா அடியார்களையும் ஒரு பெற்றித்தாய் வணங்கினார்; வேளாளராய அப்பர் அடிகள்,

அப்பூதியடிகள் என்னும் பிராமணரொடு ஏதும் வேற்றுமையின்றி உண்டு, பழகி, வணங்கப் பட்டு வந்தனர். திருஞானசம்பந்தரென்ற பிராமண அடிகள் பாணச்சாதியிற்பிறந்த திருநீலகண்ட யாழ்ப்பாணரையும், அவர் மனைவியாரையும் எப்பொழுதுந் தம்முடன் இருக்கச் செய்ததொடு பிராமணரான திருநீலநக்கரென்னும் வேறு சிவனடியார் திருமாளிகைக்கு எழுந்தருளியபோது, அவர்களொடு ஒருங்கிருந்து திருவமுது கொண்டு, இரவில் திருநீலநக்கரது தூய்மையான யாகவேதிகையிலே யாழ்பாணர்க்கும் அவர் மனைவியார்க்கும் இருக்கை அமைத்தனர்; இவ்விருவரும் அவ்வேதிகையிற் சென்ற உடனே அங்கு யாககுண்டத்தில் இடஞ்சுழித் தெரிந்த சிவாக்கினியானது இவர்களின் வரவான் மிகமகிழ்ந்து வலஞ்சுழித்தெழுந்து எரிந்ததென சேக்கிழார் சுவாமிகள் மலர்ந்தருளியிருக்கின்றனர்.

இதைப்போன்ற உதாரணங்கள் பல உள்ளன. ஆகலான் நமக்குள் உயர்வு தாழ்வுகள் நோக்காது அன்புடன் இருத்தல் வேண்டும். இங்ஙனமின்றி வீண் உயர்வு ஏற்றிக்கொள்பவர் இறைவனாற்றண்டிக்கப்படுவர்; இவ்வாறு உயர்வு தாழ்வுகள்

கற்பிக்கின்றவர்களை திருநாவுக்கரசு சுவாமிகள் 'சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்' என அழைக்கின்றனர். ஆகலான் யாவரிடத்தும் அன்புடன் ஒழுகுவேமாக! மலமும், உதிரமும், அழுக்கும், சளியும் குடரும், நிணமும், வழிரும் புழுப்பாண்டங் களாகிய மக்கள், தம்முள் ஒருவர் தம்மை உயர்வாகவும், பிறரைத்தாழ்வாகவும் நினைத்தொழுகுதலினும் பிறிதோர் அறியாமை உண்டோ! கூறுமின்கள்! இனி மக்களுக்குள்ளே ஒருவரிடத்துத் தகாத செயலும், தாழ்ந்த நடையுமிருக்கக் கண்டால் அவரிடத்து இரக்கமும் அன்பும் மிகுதியும் வைத்து அவரைத் திருத்தித் தம்மோடு வைத்து, நலம்பாராட்டி அன்பினால் அளாவுதலே நாம் செயற்பாலதாம். அங்ஙனஞ் செய்தலொன்றே இறைவன் றிருவருளைப் பெறுவதற்கு ஏற்ற வழியாம்.

இனி அன்பின் வழியாய் நிகழக்கூடிய 'விருந்தோம்பல்' நம்மனோர்க்கு இன்றியமையாதது. ஏனெனின் இஃது அறத்தின் பகுதியாய் உள்ளது. அன்றியும் வீடு அடைதற்கு வித்தாய்த் திகழ்கின்றது. இவ்வாறாக வந்த விருந்தினர் பசியோடு புறத்தே வருந்தியிருக்க, அதனை நினையாது அகத்தே தம் பாழ்வயிறு நிரம்பச் சோற்றையிட்டு மகிழ்வோர் மக்கட்பிறப்பினரென்று எண்ணப்படுவரோ; 'விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா மருந்தெனினும் வேண்டற்பாற்றன்று' என்ற தெய்வப்புலவர் திருவாக்கினால் விருந்தினரைப் புறத்தே வைத்து உண்ணலினும் அறக்கொடிது வேறில்லை யென்பது தெரிகின்றது. மற்றும் பசியென்று யார் வந்தார்களோ, அவர்கள் துன்பத்தை நீக்குதல் வேண்டும். ஏனெனிற் பசியோ மிகவுங்கொடியது,

எத்துணை உயர்ந்தோனாயினும், பசிவந்தாக்கால் தன் மானத்தை நோக்காது இழிந்த வழிகளில் இறங்கிவிடுகின்றான். விசுவாமித்திரர் மழையில்லாது போனமையான், பசியால் வருந்தி, அதனைத் தீர்த்துக் கொள்ளுதற்கு, எங்குந்திரிந்து, சிறிதும் உணவுகிடையாது போனமை பற்றி, நாய் இறைச்சியை உண்ண நேர்ந்தது. இதனாற்றான் 'பசிபிணியென்னும் பாவியது தீர்த்தோர் இசைச்சொல் அளவைக்கு என்நா நிமிராது' என்று ஓர் ஆசிரியர் கூறுவாராயினர்.

இனி நம்மினுந் தாழ்ந்த கூன் குருடு சப்பாணி முதலியவர் களிடத்தெல்லாம் இரக்கமும் அன்புங்காட்டுதலோடு, அன்பின்

முதிர்ச்சியான அருளுங்காட்டல் வேண்டும். அவர்களிடத்து யாதொன்றையும் எதிர்பாராமல், அவர்கட்கு இன்றியமையாது வேண்டும் எல்லா உதவிகளுஞ்செய்து, அவர்களைத் தூயராக்குதல் வேண்டும். அவர்கள் தாம் முற்பிறப்பிற் செய்த தீவினையால் உறுப்புகள் குறைந்தும், வலிவிழந்தும் பிறந்தும் வருந்துகின்றமையான், அவர்கள்போல நாமும் நடந்தால் நமக்கும் அவ்வாறே குறைந்த பிறவிகள் வரும் என்பதை நினைத்துப் பார்த்து அவரிடத்தெல்லாம் அருள்கனிந்து ஒழுகுதல் வேண்டும். இத்தகையோர்க்குச் செய்தலே உண்மையான அறமாம். உண்மையை,

> 'காணார் கேளார் கான்முடப்பட்டோர்
> பேணு நரில்லோர் பிணிநடுக்குற்றோர்
> யாவரும் வருக என்றிசைத்துடன் ஊட்டி'

என்ற அடிகளான் உணர்க. இவர்கட்கு விடுதிகள் கட்டி, உண்டி கொடுத்து, இயலுகின்றவர்கட்குக் கல்வியுங் கொடுத்துப் பாராட்டல்வேண்டும். ஆகலான் இவ்வறத்தில் நுழைவீர்களாக.

அன்பர்களே! இவ்வாறு இரக்கமும், அன்பும், அருளும் எல்லையின்றி மிகப்பெற்றோர், இக்குணங்கட்குத் தூய நிலைக்களனாய் விளங்கும் எல்லாம் வல்ல இறைவனால் பற்றப்பட்டு அவன்றிருவடிகளை அடைவரென்பது திண்ணம். இவ்வாறு இறைவனது உண்மைப் பெருநிலையை இனிதுணர்ந்து, அவ்வுணர்ச்சி வலியால் இரக்கமும், அன்பும், அருளும், முதிருமாறு, இவ்வுலகத்தின்கண் உள்ள எல்லா உயிர்களையும் இறைவனுக்கிருப்பிடமாய்க்கண்டு பழகவே எல்லாரும், துன்பத்தினின்றும் நீங்கிப் பேரின்பத்தின் வைகுவர். இதுதான் எல்லாச்சமயத்தாரானும், எல்லா நாட்டாரானும் உடன் பட்டுத் தழுவுதற்குரிய பெருஞ்சிறப்புவாய்ந்த 'நன்னெறி' என்ற ஒப்பற்ற வழியாம்.

அன்பர்களே! இதுகாறும் நான் கூறியவற்றிலுள்ள பிழைகளைப் பொறுத்தருள்க. ஓம்.

பழ. சிங்காரம்

மலர் 2 இதழ் 6 பக் 97 - 100

## வீரத்தாய்மார்

அவைத்தலைவரவர்களே! பெரியோர்களே! இன்று இங்கு பேசப்புகுவது வீரத்தாய்மார் என்பது. வீரத்தாய்மார் என்பதற்கு ஊக்கமும் வலிமை சான்ற போற்றத்தக்க செய்கைகள் அமைந்த பெண்மக்களென்று பொருள்படும். பல்வளங்கள் பொருந்திய நமது தமிழகம் பண்டைக்காலத்து சீரும் சிறப்பு முற்றிருந்ததற்குக் காரணம் அக்காலத்து அறிவிலும் ஒழுக்கத்திலும் பல மகளிர் தலை சிறந்து நின்று நல்ல மக்களைப் பெற்றமையே. பத்தியமைந்த பெண் தன்னுடைய பிள்ளைகளுக்குப் பத்தியை ஊட்டுகின்றாள். அறிவமைந்த பெண் தன் மக்களுக்கு அறிவை ஊட்டுகின்றாள். தாய்மார்மட்டும் அறிவும் ஆற்றலும் உடை யாராய் தம்மக்களை நல்வழியில் கவலையோடு பழக்கி வருவாராயின் அம்மக்கட் கூட்டம் உலகத்தே பெருமையும் புகழும்பெற்று விளங்கத்தடையென்னை? தாய்ப்பாலோடு வீரமோ அறிவோ, ஒழுக்கமோ, கல்வியோ, அன்போ கலந்து ஊட்டப் படுமாயின் அவை என்றும் அழியாது உயர்வும் உறுதியும் பெறுமென்பது திண்ணம்.

'இளமையில் கல்வி சிலையிலெழுத்து' 'தொட்டிற்பழக்கம் சுடுகாடு மட்டும்' என்பவை முதுமொழிகளன்றோ? அத்தகைய தாய்மாரையுடைய தேசங்களே உலகத்தார் கண்முன்னே உயர்ந்து தோன்றுவன ஜப்பானியர்கள் பேரறிவும் பேராற்றலும் போர்வீரமும் உடையாராயிருத்தற்குக் காரணமென்னை? அவர்கள் குழவிப்பருவத்தே தாய் தந்தையரிடத்தே பெற்ற பயிற்சியன்றோ? ஜப்பானியச் சிறுவன் கொஞ்சிப்பேசும்படி

முதற் கண்ணே தாய்மார்களால் கற்பிக்கப்படும் வார்த்தைகள் தேச அன்பும் தேச உழைப்புமேயாகும். அவனது விளையாட்டுப் பொருட்கள் யுத்தாயுதங்களின் போலிகள் அவனுக்கு ஊட்டப்படும் முதற் பாடங்கள் அவ்வாயுதங்களை உபயோகிக்கும் முறையும் வீரமும் தன்மறுப்புமே.

அவன் சிறுவயதிற் கற்றுக்கொண்டவை தன் நாட்டின் நன்மையின் பொருட்டு உயிரைப்பலி கொடுப்பதே பெரும்பு கழென்பதும் மானம் கெடவரின் இறப்பதே நல்லதென்பதுவாம். இத்தகைய பயிற்சி இளமைப்பருவத்தே அந்நாட்டுத் தாய்மார் களான் நிகழ்த்தப்பட்டு வருமாயின் அந்நாட்டை வெல்ல வல்லவர் உலகில் யாவர்? ஆகவே எங்கெங்கு நல்ல தாய்மார்கள் இருக்கின்றார்களோ அங்கங்கு நாகரீகமும் பெரும்புகழும் விளங்கு மென்பதற்கு ஐயமின்றாம். இதனாற்றான் நம்பண்டைத் தமிழகம் சீரும் சிறப்புமுற்றிருந்து அறிவிலும், ஒழுக்கத்திலும், வீரத்திலும், கல்வியிலும் நற்குணங்களிலும் தலைசிறந்த மக்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கிற்று.

பண்டைக்காலத்து விளங்கிய வீரத்தாய்மார்கள் பலதிறப் பட்டவராவர். சிலர் கல்வியில் வீரமமைந்தவராய்த் துலங்கினர், சிலர் போர்த்தொழிலில் பேராற்றலுடையாராய் விளங்கினர். சிலர் இறைவனை வழிபடும் திறத்திலும் அவனைப் பக்திச் சுவை நனிசொட்டச் சொட்டப்பாடும் முறையினும் பெரும்புகழ் பெற்றிருந்தனர். வேறுசிலர் மத ஆராய்ச்சியில் தேர்ச்சி பெற்றவர் களாகி உலகத்தார்க்கு நல்லறிவுச் சுடர் கொழுத்துவதில் பெரும் பெயர் பெற்று விளங்கினர். இவர்களுள் கல்வியிற்றலை சிறந்தார் வெள்ளி வீதியார், பாரிமகளிர், பேய்மகளினவெயானி, ஆதி மந்தியார் என் போராவர்.

புறநானூற்றில் கூறப்பட்டுள்ள அநேக மறப்பெண்களும், காவற்பெண்டும், நச்சென்னையாரும், போர்த்தொழிலில் வீரமமைந்த தாய்மாராவர் காரைக்காலம்மையார், ஆண்டாள், முதலியோர் இறைவனை வழிப்பட்டு நெக்குருகப்பாடி என்றும் அழியா இன்பம் எய்தியராவர் ஔவையார், மங்கையற்கரசியார் முதலியோர் மத ஆராய்ச்சியில் ஆழ்ந்தவர்களாகி உலகினர்க்கு நல்லறிவு புகட்டி நற்சமயம் வளர்த்தவராவர். ஆகலான் இத்தகைய பெண்மக்களிருந்தமையாற்றான் நமது தமிழகம்

சிறப்புற்றிருந்தது. இதுகாறும் வீரத்தாய்மார்கள் இவர் களென்பதும் அவர்கள் இத்திறத்தாரென்பதூஉம் கூறினாம் பிழைகளைப் பொறுத்தருள்க.

பழ. சிங்காரவடிவேலன்

மலர் 2 இதழ் 9 பக் 135 - 137

# செய்திக் குறிப்புகள்

## ஓட்! ஓட்! ஓட்!

ஆதி திராவிட சகோதரர்களே இவ்வமயம் சென்னை ராஜதானியிலுள்ள நியூஸ் பேப்பர்களில் பெரும்பாலும் ஓட் விஷயத்தைப் பற்றிக் கதறிக் கொண்டிருக்க நம் 'ஆதிதிராவிட'னில் மாத்திரம் ஒரு நண்பர்களாவது அல்லது வியாசம் வரைகின்றவர்களாவது அந்த விஷயத்தில் தலையிடவே யில்லை. இதையோசிக்கின்றபொழுது நமக்குத்தான் கவர்ன் மென்றார் சட்டநிரூபணசபையில் ஆறு இடம் கொடுப்பதாக வாக்களித்திருக்கின்றார்களே நாம் ஏன் இதில் தலையிட வேண்டுமென்று சிந்தித்துக் கொண்டிருப்பதாகத் தெரிகின்றது. அதுபெருந்தவறு ஏனென்றால் நம்மவர்களோ அறியாமை யென்னும் அந்தகாரத்தில் ஆழ்ந்து வெளியேற வழியறியாது கிடந்தனர்.

ஏதோ இவ்வமையம் சிலகனவான்களுடைய முயற்சியினால் சிற்சிற விடங்களில் சிற்சில சகோதரர்கள் மாத்திரம் விழித் திருக்கின்றனர். மற்றவர்கள் இன்னும் அறியாமையிலேயே கிடக்கின்றனர். அன்னவர்களுக்குப் பேப்பர் மூலமாகவும் பிரசங்கவாயிலாகவும் இடித்திடித்துக் கூறாவிட்டால் பசுத்தோல் போர்த்த புலிகளாகிய நம் விரோதிகளுக்கே ஓட்கொடுத்துவிடுவர். அப்படி கொடுக்கின் நாமிப்பொழுதிருக்கும் தாழ்ந்த நிலமையைப் பார்க்கிலும் பதின்மடங்கு தாழ்வோ மென்பதிற் சந்தேகமின்றாம். இப்பொழுது நம்மவர்களை தெருவிற்போகக் கூடாதென்றும் நிழல் படக்கூடாதென்றும் நாகரீகமான பெயரிடக்கூடா தென்றும் இன்னும் பலவிதமாகவும் இழிவு படுத்தி வைத்திருக் கின்றனர்.

ஆகலான் திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள ஆதி திராவிட சகோதரர்களே நம்மை இதுகாறும் நசுக்கி வந்த, வருகிற, வரக்கூடிய பார்ப்பனமாக்களுக்கு ஓட் கொடுக்காமல் அவர்களுடைய வலையில்சிக்குண்ட மற்றவர்களுக்கு ஓட் கொடுக்காமலும் நம்மை இவ்வளவு தூரம் விழிக்கச் செய்த நம் பாரித்தலைவர் சர்.பி.தியாகராஜ பெருமானது உத்தரவுப்படி எட்டயபுரம் திவான் ஷண்முகம் பிள்ளை* அவர்களுக்கும் இளவரசனேந்தல் ஜமீந்தாரவர்கட்கும்** ஓட் கொடுக்கும்படி உங்களைத் தயவாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லைச் செய்நன்றி கொன்றமகற்கு' என்ற நாயனாரது திருவாக்கைச் சிந்தியுங்கள்.

எச்சரிக்கை! எச்சரிக்கை!! எச்சரிக்கை!!!

முயற்சியுடையா ரிகழ்ச்சி யடையார்.

ஞானியார்,
தாலுக்கா போர்டு மெம்பர்
ராஜபதி, திருநெல்வேலி.

மலர் 2 இதழ் 9 பக் 138 - 139

---

*எஸ். டி. சண்முகம் பிள்ளை நீதிக்கட்சியின் வேட்பாளராக நின்று வெற்றிபெற்றுள்ளார். **இளையரசபீனந்தல் ஜமீன் கோயில்பட்டிக்கு அருகில் உள்ளது.

# திருச்சி ஆதி திராவிடர்களின் மஹாநாடு

உறையூர் திருத்தாந்தோணியில் ஆதிதிராவிடர்களின் மஹாநாடு சனிக்கிழமை *(20/3/20)* இரவு 7 மணிக்குமேல் நடைபெற்றது. அதற்கு தேவதானம் பென்ஷன் அவுல்தார் மிஸ்டர் என். அய்யண்ணா அக்கிராசனம் வகித்தார். கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின:

*1.* ஆதி திராவிட வகுப்பில் முனிசிபால், லோகல் போர்டுகளில் பிரதிநிதிகள் இல்லாமலிருப்பதினால் கீழ்க்கண்டவர்களை இக்கூட்டம் சிபாரிசு செய்கிறது.

a) திருந்தாணி லேட் ஓவர்சீயரும் மிராசுதாரருமான மிஸ்டர் எம். பாலகிருஷ்ணன் என்பவரையும், கண்டோன்மென்டில் தச்சுவாடிவைத்திருக்கும் மிஸ்டர் எம். முனிசாமியையும் முனிசிபால் கவுன்சிலராகவும்;

b) தேவதானம் பூசாரித் தெருவிலிருக்கும் மிராசுதார் மிஸ்டர் எம். சுப்பிரமணியம் என்பவரை டிஸ்டிரிக்ட் போர்டு மெம்பராகவும்,

c) பெரியபாளையம் தோல்வியாபாரம் மிஸ்டர் பி. சிவபிச்சை என்பவரை தாலுக்கா போர்டு மெம்பராகவும்,

d) உறையூர் மிஸ்டர் வி. ஜெகந்நாத அவுல்தாரையும், மிஸ்டர் ஆர். மருதை என்பவரையும் ஆனரெரி மாஜிஸ்திரேட்டாகவும்,

2. சிந்தாமணி முன்சிப் வேலை தற்சமயம் காலியாக இருப்பதால் அதற்கு தேவதானம் மிராசுதார் மிஸ்டர் எம். சுப்பிரமணியம் என்பவரை அந்த வேலைக்கு நியமிக்கும்படியும்,

3. மேற்கண்ட தீர்மானங்களை அதிகாரிகளுக்கு சேர்மன் அவர்கள் அனுப்பும்படிக்கும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

மலர் 2 இதழ் 3 பக் 46

# இலங்கை இந்திய சங்கம்

**நா**ளது மாதம் 10ம் தேதி திங்கட்கிழமையன்று இரவு சுமார் 10 மணியளவில் மேற்படி சங்கத்தினறையில் கனம் ஏ.சாம்ஜாண் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் ஓர் பொதுக்கூட்டம் கூட்டப்பெற்றது. அவ்வமயத்திற்கு ஏராளமான அதாவது சுமார் 100 ஜனங்களுக்கதிகமாக விஜயஞ் செய்திருந்தனர்.

முதலாவதாக உபகாரியதரிசியாகிய கனம் ஜெ.ஐ. மனாசே அவர்கள் கடந்த மாதத்திய வர்த்தமானங்களை வாசிக்க சபை யோரால் அங்கீகரிக்கப்பட்டு அக்கிராசனரால் உறுதிபண்ணப் பட்டது.

பின்னர், டாட்ரோட் 1. நிர்மண்டபத்தில் ஸ்தாபிக்கப் பட்டிருக்கும் 'தமிழ் வாசகசாலை'யின் ஸ்தாபகர், இந்நகரில் நம்மரபினர்கள் பற்பல சங்கங்களை ஆங்காங்கு வைத்துக் கொண்டிருப்பதைவிட மேற்கண்ட சங்கத்தோடு மேற்படி தமிழ் வாசகசாலையையும் இணைத்துவிடுவதே நலமெனக்கருதி ஓர் பிரரேபனைக்கொண்டுவர கனம் ஜெ.ஐ. தாசன் அவர்கள் ஆமோதிக்க சபையோர்களால் மனப்பூர்வமாக ஒப்புக் கொள்ளப்பட்டது. ஆகவே 'தமிழ்வாசகசாலை'யின் ஸ்தாபக ராகிய திருமிகு. ஜெ. ஏசுவடியான் ஜான் அவர்கள் 'ஒற்றுமை' என்னும் விஷயத்தைப்பற்றி கேட்போருள்ளம் ஆனந்த சாகரத்தில் மூழ்கும்படி உபந்நியாசித்தார்.

கனம் கே.பி. சிவன் அவர்கள் மேற்படி சங்கத்தினங்கத்தவர் களுக்கு நந்தம் ***'ஆதி திராவிடன்'*** பத்திரிகையை இனாமாக

அளிக்கப்பட வேண்டுமென்று ஓர் பிரரேபனைக்கொண்டுவர அதனை திருமிகு எஸ்.ஆர். முத்தையா அவர்கள் ஆமோதிக்க அவ்வண்ணமே சபையோர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பின்னர், திருமிகு எஸ்.ஆர். முத்தையா அவர்கள் 'நமது பத்திரிகை' என்பதைப்பற்றி மிகவும் தெளிவாக பேசி ஆசனம மர்ந்தார். கனம் எஸ். மிக்கேல் அவர்கள், திருநெல்வேலியில் நம்மரபினரது முன்னேற்றத்தைக் கருதி ஓர் மஹாஜன சபா நியமிக்க வேண்டுமென மனு செய்திருந்தார். அதனை ஆலோசனைத் தலைவர்களுக்கனுப்பி பின்னரதற்கு தகுந்த பதிலளிப்பதாக தீர்மானிக்கப்பட்டது. கனம் அக்கிராசனாதிபதி அவர்கள் 'விடா முயற்சி' என்பதைப்பற்றி சக்கரைப்பந்தலில் தேன்மாரி பொழிந்தாற்போல் மிகவும் சாதுர்யமாக உபந்நியாசம் புரிந்த முடிந்தபின்னர் மேற்படி இலங்கை இந்திய சங்கத்திற்கு, கனம் எஸ்.எம். சின்னதம்பி அவர்கள், கனம் சாமிதாஸ், கனம் டி.எம்.மோசஸ் ஆகிய இம்மூவர்களும் புதிய அங்கத்தவர் களாக சேர்த்துக்கொள்ளப்பட்டது.

இறுதியாக அக்கிராசனாதிபதியவர்களுக்கு வந்தனோப சாரத்துடன் கூட்டம் முடிவுபெற்றபின்னர் சிற்றுண்டி முதலியவைகள் பரிமாறப்பட்டு கூட்டம் கலைந்தது. சுபம்! சுபம்!!

பொ. கனகசபை

மலர் 2 இதழ் 3 பக் 49

## இலங்கை இந்திய சங்கம்

**நா**ளது மாதம் 10ம் திகதி வியாழக்கிழமையன்று இரவு சுமார் 10 மணியளவில் மேற்படி சங்கத்தினறையில் கனம் ஜெ.ஐ.தாசன் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் ஓர் பொதுக் கூட்டம் கூட்டப்பெற்றது. அவ்வமயத்தில் 200 ஜனங்களுக்குக் குறைவின்றி விஜயஞ்செய்திருந்தனர்.

முதலாவதாக உபகாரியதரிசியாகிய கனம் ஜெ.ஐ. மனாசே அவர்கள் தற்போது இந்தியாவிற்கு சென்றிருக்கின்றமையால் அன்னவருக்குப் பதிலாக கனம் எஸ்.ஆர். முத்தையா அவர்கள் கடந்த மாதத்திய வர்த்தமானங்களை வாசிக்கச் சபையோர்களால் அங்கீகரிக்கப்பட்டு அக்கிராசனரால் உறுதி பண்ணப்பட்டது. பிறகு மேற்படி சங்கத்தின் ஆதரவின்கீழ் ஓர் சங்கீதக் கூட்டம் நடத்தப்படவேண்டுமென்பதாக கனம் டி.எம். மோசஸ் அவர்கள் ஓர்பிரரேபணைக்கொண்டுவர, அதனை கனம் பி. கனகசபை அவர்கள் ஆமோதிக்க சபையோர்கள் யாவரும் ஏகமனதாய் ஒப்புக்கொள்ளப்பட்டு அக்கிராசனராலுறுதி பண்ணப்பட்டது.

இது நிற்க, சென்னையில் நம்மவர்களுக்காக அரும்பாடு பட்டுழைத்து வரும் திவான் பகதூர் பி. தியாகராஜா செட்டியார் பி.ஏ. அவர்களுக்கு 'சர்' என்னும் கௌரவ பட்டம் கிடைக்கப் பட்டமைப்பற்றி மேற்படி சங்கத்தின் பேரால் அன்னவருக்குக் கிடைக்கப்பட்ட மேன்மையான 'சர்' பட்டத்திற்காக வந்தனோபசார நிருபம் அனுப்பப்படவேண்டுமென ஸ்ரீமான் சனக சங்கர

கண்ணப்பரவர்கள் ஓர் பிரரேபணை கொண்டுவர அதனை கனம் கே.பி. சிவன் அவர்கள் ஆமோதித்தும், கனம் எஸ்.ஆர். முத்தையா அவர்கள் ஆதரித்தும், பேசிய பின்னர் சபையோர்கள் முழுமனதுடன் ஏற்றுக்கொண்டு அந்நிருபத்தை அனுப்பி வைக்கும்படியாக, கனம் அக்கிராசனாதிபதியவர்களைக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

பிறகு ஸ்ரீமான் சனக சங்கர கண்ணப்பரவர்கள் 'ஆதி திராவிடரின் முன்னேற்றம்' என்னும் விஷயத்தைப் பற்றி சுமார் 2 மணிநேரம் மிகவும் தெளிவாகவும், சாதுர்யமாகவும், கேட்போருள்ளம் ஆனந்த சாகரத்தில் மூழ்கும்படி உபந்நியாசித்தார். தவிர அன்னவர் பேசிய விஷயங்களை எழுதப்புகின் விரியுமென்றஞ்சி விடுத்தாம்.

இறுதியாக அக்கிராசனாதிபதியவர்களுக்கும், உபந்நியாசகருக்கும், சங்கத்தின்காரியதரிசியவர்களுக்கும், வந்தனோபசாரத்துடன் கூட்டம் முடிவுபெற்ற பின்னர் சிற்றுண்டி முதலியவைகள் பரிமாறப்பட்டு சுமார் 1.30 மணியளவில் கூட்டம் கலைந்தது. சுபம்! சுபம்!!

பொ. கனகசபை

மலர் 2 இதழ் 4 பக் 65 - 66

## இலங்கை இந்திய சங்கம்

**நா**ளது மாதம் 10ம் தேதி சனிக்கிழமையன்று இரவு 10 மணியளவில் சங்கத்தினறையில் ஸ்ரீமான் எஸ்.பி. கோபால்சாமி அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் மாதாந்தரப்பொதுக்கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு நூற்றுக்கதிகமான ஜனங்கள் திரளாக குழுமியிருந்தார்கள்.

முதலாவதாக உபகாரியதரிசி அவர்கள் கடந்த கூட்டத்தின் வர்த்தமானங்களை வாசிக்க சபையோர்கள் யாவரும் ஏகமனதாய் ஒப்புக்கொண்ட பிறகு அக்கிராசனராலுறுதி பண்ணப்பட்டது.

பிறகு கனம் எம்.ஏ. ஆபிரகாம் அவர்கள் 'ஒற்றுமை' என்னும் விஷயத்தைப் பற்றியும் கனம் எஸ்.வி. ஏசுதாசன் அவர்கள் 'நமது குறைகளும் அவற்றை நிவர்த்திக்க சில முறைகளும்' என்பதைப்பற்றியும் மிகவும் சாதுர்யமாகவும், தெளிவாகவும், கேட்போருள்ளம் ஆனந்தசாகரத்தில் மூழ்கும்படியாகவும், சக்கரை பந்தலில் தேன்மாரி பொழிந்தாற்போல் உபந்நியாசித்தார்கள்.

இதுநிற்க கனம் டி.எம். மோசஸ் அவர்கள் மேற்கண்ட சங்கத்தின் ஆதரவின்கீழ் நடைபெற்றுவரும் 'சங்கீத கூட்டத்தின்' பேரால் கோவிந்தன் என்னுமோர் சிறிய கதையை நவீன முறையில் அதாவது சம்பாஷணை ரூபமாக நடத்தப்பட வேண்டுமென ஓர்பிரரேபனை கொண்டுவர கனம் பி. கனகசபை அவர்கள் ஆமோதிக்க, கனம் ஏ. சாம்ஜான் அவர்களும், கனம் ஜெ.ஐ. மனாசே அவர்களும் ஆதரித்து பேசினார்கள். ஆகவே

மேற்படி பிரரேபனையைச் சபையோர்கள் யாவரும் அங்கீகரிக்கப் பட்டபின்னர் அக்கிராசனரால் உறுதிபண்ணப்பட்டது.

கனம் அக்கிராசனாதிபதியவர்கள் நம்மவர்களுக்கு முக்கியமாக வேண்டிய சாதனங்களில் கல்வியே அத்யாவசியம் என்பதாக மிகவும், விரிவாய் பேசிய பின்னர் இச்சங்கத்தில் கிறிஸ்தவர் களும், இந்துக்களும் கடந்த 8 வருட காலமாக மிகவும் ஒற்றுமையுடன் மததுவேஷங்கொள்ளாத மேற்படி சங்கத்தை மிகவும் சிறப்பாக நடத்தி வருகிறதைப் பற்றி மிகபுகழ்ந்து பேசினார். மேற்படி இலங்கை இந்திய சங்கத்திற்கு கனம் எம்.ஏ. ஆபிரகாம், கனம் அழகர்பாட, கனம் ஏ.எம். ஜேக்கப், கனம் கே.எஸ். சுந்தரம் ஆகிய இந்நால்வரும் புதிய அங்கத்தவர்களாக சேர்த்துக்கொள்ளப்பட்டது.

இறுதியாக கனம் அக்கிராசனாதிபதியவர்களுக்கும் உபந்நியாசர் களுக்கும் வந்தனோபசாரத்துடனும், ராஜவாழ்த்துடனும் கூட்டம் முடிந்தது.

பொ. கனகசபை

மலர் 2 இதழ் 5 பக் 83

## இலங்கை இந்திய சங்கம்

**நா**ளது மாதம் 10ம் தேதி செவ்வாய்க்கிழமையன்று இரவு 9.30 மணிக்கு சங்கத்தினறையில் ஸ்ரீமான் ஏ.எஸ். ஜான் அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் மாதாந்தரப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயத்தில் அங்கத்தவர்களும் ஏனைய கனவான்களுமாக திரளானபேர் வந்திருந்தார்கள்.

கடந்த கூட்டத்தின் நிகழ்ச்சிகள் வாசித்து உறுதிப் பண்ணப்பட்ட பிறகு இந்தியாவிற்காக அரும்பாடுபட்டுழைத்து விண்ணடைந்த லோகமானிய பால கங்காதர திலகர் பெருமானின் அகாலமரணத்தை முன்னிட்டு அவர்களின் குடும்பத்தாருக்கு ஓர் அநுதாபக் கடிதமொன்ற அனுப்பவேண்டுமென்பதாக ஸ்ரீமான் சனகசங்கர கண்ணப்பர் அவர்கள் ஓர் பிரரேபணை கொண்டுவர கனம் அக்கிராசனாதிபதி அவர்கள் ஆமோதிக்க சபையோர்யாவரும் எழுந்துநின்று அதனை ஒப்புக் கொண்டார்கள்.

இராஜாங்க சீர்திருத்தவிஷயமாக இவ்விலங்கையில் நம்மவர்களுக்கு கிடைத்திருக்கும் சுதந்திரம் போதாதென்றும் இன்னும் போதிய அளவு நமக்குச் சட்டசபையில் சுதந்திரம் கொடுக்கும்படி துரைத்தனத்தாருக்கு மனுசெய்து கொள்ள வேண்டுமென்று கனம் அக்கிராசனரவர்கள் பிரரேபிக்க கனம் கே.பி. சிவன் அவர்கள் ஆமோதிக்க எல்லோரானும் ஏகமனதாய் ஒப்புக்கொள்ளப்பட்டது. பின்பு கனம் எஸ். மனுவேல் தாஸன் அவர்கள் 'தொழில்' என்னும் விஷயத்தைப் பற்றிப் பேசி முடித்தார்.

மலர் 2 இதழ் 6 பக் 100

## திருமிகு ஞானியார்

**ந**மது நெருங்கிய அன்பரும், அருங்குணங்கள் அமையப் பெற்றவரும், கல்வி, அறிவு ஒழுக்கமுடையவரும், நம் ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்தவருமான திருமிகு ஞானியாரவர்கள் தூத்துக்குடி தாலூகா போர்டு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருத் தலை உணர்ந்து மகிழச்சிமிக்கடைகின்றோம்.* இவர் நம் பத்திரிகைக்காக அரும்பாடு பட்டுழைத்து வருகின்றார். தமிழ் நன்றாகப் படித்தவர், நன்றாய்ச் சொற்பெருக்கிடும் ஆற்றலுமுடையார், நம் சகோதரர்கள் முன்னேற்றத்திற்காக உழைத்து வருபவர், புலாலை மறுத்தவர், இத்தகையவரைத் தெரிந்தெடுத்தது போற்றற்பாலதாம்.

இவர் சென்ற மாதம் 20 உ யன்று முதன் முறையாகச் சபைக்குச் சென்றபொழுது இவரைப்பார்ப்பதற்கு நம் ஆதி திராவிட சகோதரர்கள் பலரும், பிற ஊர்க்காரர்களும் பெருந்திரளாய் வந்திருந்தார்கள்.

---

*தென்னிந்திய நல உரிமைச் சங்கம், சென்னை மாகாணத் தாழ்த்தப்பட்ட அமைப்புக்களின் தொடர்கோரிக்கைகள் காரணமாக மாண்டேகு. செமஸ் போர்ட் அரசியல் சீர்த்திருத்தங்களின்படி பிரித்தானிய பாராளுமனறத்தில் 23 டிசம்பர் 1919 ஆம் ஆண்டு சட்டம் 101 அறிமுகப்படுத்தப் பட்டது. தாழ்த்தப்பட்ட மக்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் மத்திய சட்டசபையிலும் (Lesislative Assembly Center) மாநில சட்டமன்ற மேலவையிலும் (Legislative council state) தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது. இதன் தொடர்ச்சியாக சென்னை வட்டார போர்டிலும் மாவட்ட முனிசிபால்டி போர்டிலும் பிரதிநிதித்துவம் வழங்க 1920 ஆம் ஆண்டு சட்டம் இயற்றப்பட்டது.

இவர் தம் சகோதரர் குறைகளை நீக்குவான் பொருட்டு இடையறா முயற்சி எடுத்துக் கொள்ளுதலோடு, இன்னும் உயரிய பதவிகளைப் பெற விரும்புகின்றாம். நம் பத்திரிகைக்கும் அதிராவூக்கத்துடன் பாடுபட வேண்டுகின்றாம். இவர் நிடு வாழ்வாராம்! ஆ! நம் வகுப்பைச் சார்ந்தவர் இப் பொழுது அநேக சபைகளுக்கு உறுப்பினராய் தெரிந்தெடுக்கப் படுதல் காலஞ் சென்ற டாக்டர் நாயர் அவர்கள் விதைத்த விதையாலன்றோ?

*(பத்திராதிபர்)*

**மலர் 2 இதழ் பக் 108 - 109**

## இலங்கை இந்திய சங்கம்

இச்சங்கத்தின் ஓர் விசேஷித்தக் கூட்டம் கடந்த மாதம் 21ம் திகதி சங்கத்தினறையில் ஸ்ரீமான் எஸ்.பி. கோபால்சாமி அவர்களின் அக்கிராசனத்தின்கீழ் நடைபெற்றது. அன்று அங்கத்தவர்களும் மற்றவர்வளுமாக திரளானபேர் குழுமியிருந்தனர்.

கனம் காரியதரிசி அவர்கள் கூட்டத்தின் நோக்கத்தைக் குறித்து பேசி முடித்து, தாழ்ந்த வகுப்பினருக்காக அரசாங்கத்தினரால் கொடுக்கப்பட்டிருக்கும் அநேக வழிவகைகளைப் பற்றி சொல்ல சென்னை சட்ட சபையிலும் நம்மவர்களின் நலவுரிமைகளை காத்துக்கொள்ளும்படியாக கொடுக்கப்பட்டிருக்கும் ஆறு ஆசனங்களில் ஒன்றுக்கு நம்மவரில் ஒருவராகிய கனம் எஸ்.ஏ.எஸ். தங்கமுத்து அவர்களை நியமிக்க சென்னை கவர்ன்மெண்டாரை கேட்டுக்கொள்ளும்படியாகவும், ஸ்ரீமான் எஸ்.ஏ.எஸ். தங்கமுத்து அவர்கள் கல்வியிலும், வாக்கு சாமார்த்தியத்திலும், பொதுநலவுரிமையான விஷயங்களிலும் நன்றாய் உழைக்கக் கூடியவரென்றும், அவ்வாறு உழைத்து நன்றாய் அப்பியாசமிருக்கிற தென்பதையும் நமது நலவுரிமைகளைப் பற்றி பேசுவதில் அவரை நியமிக்கும் வேலையில் தீர்க்கமாயும் கௌரவமாயும் செய்துகொள்ள தகுதியுள்ளவரென்று மின்னுமநேகமாக அவருடைய தீவிரமான வேலைகளையும் அதாவது அன்னவர் தென் இந்தியா நெருக்கப்பட்டோரின் சங்கத்திற்கு ஸ்தாபகரும் காரியதரிசியும் 'வழி காட்டுவோன்' வழிகாட்டீ என்ற இதழ் 1918ஆம் ஆண்டு வெளிவந்தது என்ற அச்சங்கத்தின் பேரால் நடத்தி வரும்

பத்திரிகைக்கு அவர் பத்திராதிபராயிருந்து அதிக ஊக்கத்து டனுழைத்து வந்ததைப் பற்றியும் விபரித்து சொல்லிமுடித்த ஓர் பிரேரேபணையை கனம் எஸ்.ஆர். முத்தையா அவர்கள் ஆமோதிக்க, கனம் எஸ்.எஸ். பெரியசாமி அவர்களும் கனம் கே.பி. சிவன் அவர்களுமாக ஆதரித்து பேசிய பின்னர் சபை யோர்கள் யாவராலும் ஏற்றக்கொள்ளப்பட்டு ஏகமனதாய் உறுதி பண்ணப்பட்டது. பின்னர் இவ்விஷயங்களைக் குறித்து சென்னை அரசாங்க அதிகாரிகளுக்கு எழுதி தெரிவித்துக் கொள்ளும்படியாக கனம் காரியதரிசி அவர்களை கேட்டுக் கொள்ளப்பட்டது (அவ்வண்ணமே கனம் காரியதரிசி அவர்கள் ஆங்கிலேயத்தில் எழுதி அனுப்பிய கடிதம் பின்னால் பிரசுரிக்கப்படும்.)

இது நிற்க, நாளது செப்டம்பர் மாதம் இவ்விலங்கையில் நடக்கும் இலங்கை நேஷனல் காங்கிரஸ்க்கு, நம்மவர்களின் நலவுரிமைகளைப்பற்றி பேசுவதற்காக மேற்படிஇலங்கை இந்திய சங்கத்தின் பேரால் கனம் லாரி முத்துகிருஷ்ணா அவர்களையும், கனம் ஏ.எஸ். சாம்ஜான் அவர்களையும் பிரநிதியாக அனுப்பப்பட வேண்டுமென கனம் கே.பி.சிவன் அவர்கள் கொண்டுவந்த பிரரேபனையை கனம் பி. கனகசபை அவர்கள் ஆமோதித்தனர். இது எல்லோராலும் ஏகமனதாய் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இறுதியாக கனம் அக்கிராசனாதிபதியவர்களுக்கு வந்தனோப சாரத்துடன் கூட்டம் முடிவுபெற்றது.

பொ. கனகசபை

மலர் இதழ் 7 பக் 110

(குறிப்பு) இம் மாதம் 11ம் தேதி சனிக்கிழமை நடைபெற்ற கூட்டத்தின் வர்த்தமானம் அடுத்தமாத சஞ்சிகையில் வெளிவரும்

## இலங்கை இந்திய சங்கம்

கடந்த செப்டம்பர் மாதம் 11 திகதியன்று மேற்படி மாதாந்தரப் பொதுக்கூட்டம் நடத்துவதற்கு போதிய நேரங் கிட்டாததால் அன்று தினம் கனம் பி.எம். அப்பாசாமி அவர்களைக் கொண்டு 'சிமியோன்'யென்னும் சரிதையை காலக்ஷேபம் நடத்தப்பட்டது.

நாளது மாதம் 10ம் தியன்று இரவு 9.30 மணிக்கு சங்கத் தினறையில் கனம் எஸ்.ஆர். முத்தையா அவர்களின் அக்ரா சனத்தின் கீழ் மாதாந்தர பொதுக்கூட்டம் நடைபெற்றது. அவ்வமயத்திற்கு அநேகர் விஜயந்தந்தார்கள். கடந்த கூட்டத்தின் நிகழ்ச்சிகள் வாசித்து உறுதிபண்ணப்பட்ட பிறகு கனம் எம்.ஏ.ஆபிரகாம் அவர்கள் 'சுகாதாரம்' என்னும் விஷயத்தைப் பற்றி மிகவும் சாதுரியமாக உபந்நியாசித்தார்கள்.

மேற்படி இலங்கை இந்திய சங்கத்திற்கு கனம் ஏ. ஞானப் பிரகாசம், பி. எபநேசர், சி.கே. ராமசாமி, ஜெ.என்.ராஜரத்தினம் ஆகிய இந்நால்வரையும் புதிய அங்கத்தவர்களாக சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

இறுதியாக கனம் அக்கிராசனாதிபதியவர்களுக்கும் உபந்நியாசகருக்கும் வந்தனோபசாரத்துடன் கூட்டம் முடிவு பெற்றது. சுபம்.

பொ. கனகசபை

மலர் 2 இதழ் 8 பக் 125

## இலங்கை இந்திய சங்கம்

**நா**ளது *9-11-20* தீபாவளியன்று இரவு மேற்பட சங்கத்தின் ஆதரவின் கீழ் 'பொது நிதிக்'காக சங்கத்தினங்கத்தவர்கள் கோவிந்தன் என்னுமோர் சிறிய சரிதையை நவீன நாடக முறையில் நடித்துக் காண்பித்தார்கள். அன்று தினம் அந்நாடகத் தினை கண்ணுற திரளாக ஜனங்கள் குழுமியிருந்தார்கள். தவிரவும் மேற்படி சங்கத்தினங்கத்தவர்களால் இதுவே முதலாவதாக நடத்தப்பட்டபோதிலும் யாதொரு குறைவின்றி விஜயஞ் செய்திருந்த கனவான்கள் யாவரும் ஆச்சரியப்படத்தக்க விதமாகவும் சந்தோஷசாகரத்தில் மூழ்கும்படியாகவும் ஒவ்வொரு ஆக்டர்களும் அவரவர்கள் ஆக்டை மிகவும் திறமையுடன் நடித்துக் காண்பித்தார்கள்.

மலர் 2 இதழ் 9 பக் - 139

## செல்வரசன்கோட்டை ஸ்ரீ நந்தனார் ஐக்கிய சங்கம்

கடந்த 1919 வருஷம் செப்டம்பர் மாதம் 5 திகதி பார்னஸ் பிலேஸ் (Barnes Place) 28 நி. தோட்டத்தில் மேற்படி சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு பின் நாலுமாதம் (அதாவது ஜனவரி) மாதம் வரையில் யாதொருவிக்கினமின்றி நடந்தேறிவந்தது. நிற்க. மேற்படி சங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருந்த தோட்டமும் வீடுகளும் விற்கிரயம் செய்யப்பட்டுபோனதையால் இச்சங்கம் கடந்த 9 மாதகாலமாய் அதன் ஒளிகுறைந்து மங்கி இருந்தவிடந் தெரியாமல் ஒளிந்திருந்தது. எனினும் குலாபிமானம் நிறைந்தவர்களாகிய கனம் மா.மு.வேலு, கனம் தோ.வெ.பெரியன், கனம் மா.மு. முனியன் என்னும் மூவரும் எடுத்துக்கொண்ட அதிரா முயற்சியின் பலனால் சிதருண்டிருந்த அங்கத்தவர்கள் ஒன்று சேர்ந்து 1920 வருஷம் செப்டம்பர் மாதம் 10 திகதி பகத்தளை றோட் (Bagetelle Road) 92 நிர். தோட்டம் இராப் பாட சாலையின் அறையில் தங்களது முதல் கூட்டத்தை கூடினார்கள். முதலாவதாக கனம் மா.மு. முனியன் என்பவரால் சங்கத்தின் முக்கிய நோக்கத்தை பற்றிவரைந்த நிருபத்தை வாசிக்கப்பட்டு கரகோஷத்தோடு ஏற்றுக்கொள்ளப்பட்டது:

பின்னர் மேற்படி சங்கத்திற்கு கனம் நா.வ. வடுங்கருப்பன் அவர்கள் அக்கிராசனாதிபதியாகவும் கனம் மா.மு. முனியன் என்பவர் காரியதரிசியாகவும், கனம் வ.சு. வையாபுரி என்பவர் பொக்கிஷதாரராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். பின்பு,

'ஆதி திராவிட'னின் உபபத்திராதிபர் ஆகிய கனம் பொ. கனகசபை என்பவரால் மேற்படி சங்கத்தாரின் ஐக்கியத்தையும் விடா முயற்சியையும் பற்றி ஓர் சுருக்கமான உபந்நியாசம் செய்யப்பட்டு கனம் உப பத்திராதிபர் அவர்களுக்கும் மற்றும் உத்தியோகஸ்தர்களுக்கும் மாலை சூடி சிற்றுண்டி பறிமாறப் பட்டு கூட்டம் கலைந்தது. இதற்காக விடாமுயற்சி எடுத்து உழைத்து முன்கொண்டுவந்த மேற்காட்டிய மூவரும் சங்கமும் அதின் அங்கத்தவர்களும் நீடுழி நிலைத்து நிமலன் அருள் பெற்று வாழவேண்டி எம்பெருமான் இணையடியை இறைஞ்சுகின்றேன்.

தா. சொ. அழகன்,

அங்கத்தவன்,

பகதலறோட், கொழும்பு.

மலர் 2 இதழ் 8 பக் 122

## காலஞ்சென்ற திருமிகு ஜெ.எம். நல்லசாமி பிள்ளையவர்கள்

பேரறிஞரும், பெருங்குணங்களும் ஒருங்கே அமையப் பெற்ற திருத்தகு ஜெ.எம். நல்லசாமிபிள்ளையவர்கள் விண்ண வர்க்கு விருந்தாயினர் என்ற நிகழ்ச்சியை உணர்ந்து ஆற்றொணாத் துயர் உறுகின்றோம்.

இப்பெரியார் நந்தாய்மொழியார் தமிழிலும் தமிழ் மக்கள் தத்துவமாம் சைவசித்தாந்தத்தினும், அரசமொழியாம் ஆங்கிலத்தினும் சிறந்தபுலவராவர்! ஆங்கிலம் படித்த அளவிலே, தாயை அறவே மறக்கும் கயவர் போன்றன்றித் தமிழையும், சித்தாந்தத்தையும் வளர்ப்பதே சீரிய தொண்டெனக் கருதி, இவர் *'சைவசித்தாந்த தீபிகை'* என்றதொரு விழுமிய பத்திரிகையை நடாத்துவராயினர். இவர் தம் அதிரா முயற்சியான் அப்பத்திரிகை செவ்வென சில ஆண்டுகள் நடைபெற்றது. பெற்றதின் பயனாக, மேநாட்டு அறிஞர் பலர் தமிழின் பெருமை யையும், தமிழ் மக்கள் வழக்க ஒழுக்கங்களின் சிறப்பையும், சைவ சித்தாந்தத்தின் நுணுக்கங்களையும் உள்ளவாறு அறியலுற்றனர். அஞ்ஞான்று இவர் எழுதுந் திறனைக்கண்டு மேனாட்டு அறிஞர் பலர் இவர்க்கு அன்பராயினர்! அவர்களுள் காலஞ்சென்ற தமிழாசிரியர் ஜி.யு. போப் அவர்கள் இவர் கெழுதகை அன்பராவர். இவ்விருவரும் தத்தமக்குள் எழுதிக் கொண்ட பொருள் சான்ற கடிதங்கள் பல. பலமுடங்கல்களில் போப் அவர்களுக்கு நேர்ந்த ஐயங்களை இவர் துடைத்துள்ளர்.

இப்பெரியார் ஆங்கிலத்தில் எழுதிய 'சைவ சித்தாந்த நுணுக்கங்கள்' (Studies in Saiva Siddhanta) 'சிவஞானபோதம்' 'சிவஞான சித்தியார்' மொழிபெயர்ப்புக்கள் நாம் இங்கு குறிப்பிடுதல் வேண்டும். இவைகள் இவர் அறிவின் கூர்மையையும், எழுதுந் திறனையும், பரந்த கல்வியினையும் உள்ளவாறு விளக்குவனவாம்; இவ்வரிய நூல்கள் ஒவ்வொரு அறிஞர் இல்லத்திலும் இருத்தல் வேண்டும்.

இனி, நந் தமிழ்நாட்டின்கண் சைவ சித்தாந்தப் பேரொளியைப் பரப்ப இப்பெரியார் எடுத்துக்கோடல் செய்த அருமுயற்சியை நினைக்குந்தோறும், இவர் பிரிவான் என் உள்ளம் உடைகின்றது. பல கழகங்கட்குஞ் சென்று பொருள் சான்ற சொற்பெருக்குகள் நிகழ்த்தியுள்ளார். தமியேன் இவருடன் பல இடங்கட்குச் செல்லும் பெரும் பேர் பெற்றேன். அதுகாலை இவர் சொற்பொழிவைக் கேட்டு மகிழாதார் இலர்; ஆ! இப்பெரியார் விதைத்த சைவசித்தாந்த பயிர் வளர்ச்சி பெருகுவதாக! தமியேற்கு சைவசித்தாந்தத்திலும், தமிழ் மக்கள் வழக்க ஒழுக்கங்களைக் குறித்தும் பல ஐயங்கள் நேரிட்டன. பல தமிழ்ப் புலவர்களைக் கேட்டேன் அவர்கள் என் ஐயங்களை முற்றுந் துடைத்தனரல்லர்; இறுதியாக இவ்வறிஞரே எனக்கு ஐயங்களை நீக்கி, நல்லறிவுச் சுடகொளுத்துவாராயினர்; அந்தோ! இனி யான் யாண்டுச்செல்வேன்?

இச்சான்றோர் இன்னுஞ் சிறிது காலம் இருந்திருப்பாராயின் நம் தமிழுக்குப் பேருதவியாய் இருக்கும்; இவர் பிரிவான் தமிழ் மக்கள் ஒரு பெரிய மாணிக்கத்தை இழந்தனர் எனக் கூறல் மிகையாகாது. ஆற்றொணாத் துயரை இவர் மகனார் திரு. ஜெ.என். இராமநாதன் அவர்கட்குச் செலுத்துகின்றேன். சைவ சித்தாந்தக்குன்றே! நீ விண்ணவர்க்கு சைவ அமுதூட்டச் சென்றனை கொல்லோ!

**கனக சங்கர கண்ணப்பன்**

மலர் 2 இதழ் 7 பக் 112 - 113

## விவாஹ அறிக்கை

திருநெல்வேலி ஜில்லா தளவாபுரவாசியும், நமது சங்கத்தின் ஆலோசனை தலைவர்களிலொருவரும், சங்கத்தின் விஷயமாகவும், நம் 'ஆதி திராவிடன்' சஞ்சிகையின் விஷயமாகவும் அரும் பெரும் பிரயாசையெடுத்து வருபவருமாகிய நமது சகோதரர் கனம் எஸ்.எஸ். பெரியசாமி அவர்களுக்கும், மேலப்பாளையம் கனம் மாடசாமி அவர்களின் சிரேஷ்ட புத்திரி வடிவம் மாளுக்கும் 1920 மே மாதம் 28தேதி சுக்கிரவாரத்தன்று திருமங்கல்ய தாரண முகூர்த்தம் நிறைவேறியது. சுபம்.

இலங்கை கடுகனாவைச் சேர்ந்த, கிறிமிட்டி வாசியும், நமது 'ஆதி திராவிடன்' சந்தாநேயர்களிலொருவருமாகிய கனம் வி.பி.எம். சின்னையாபிள்ளை அவர்களின் சிரேஷ்ட புத்திரி செல்வம்மாளுக்கும், ஊலுக்கொள்ளையில் வசிக்கும் கனம் கே.எம். பொன்னுசாமி அவர்களுக்கும், 1920ம் மே மாதம் 28 தேதி சுக்கிரவாரத்தன்று திருமங்கல்ய தாரண முகூர்த்தம் நிறைவேறியது. சுபம்.

மேற்காட்டிய தம்பதிகளை எல்லாம் வல்ல இறைவன் ஆசிர்வதிப்பாராக.

மலர் 2 இதழ் 4 பக் 66

## காலஞ்சென்ற ராவ் பகதூர் கே.வைத்தியலிங்கம் பிள்ளை அவர்கள்

அன்பும் அருங்குணங்களும், பிறர்க்கென உழைக்கும் பெருந்தகையும், ஒருங்கே பொதுளிய திரு. பிள்ளையவர்கள், தம் புகழுடம்பை நிறீஇ, பூத உடம்பை ஒரீஇ, விண்ணுலகம் அடைந்தமை உணர்ந்து, பெரிதும் வருந்துகின்றோம்; தலை சிறந்த இந்தியர்களில் இவருமொருவர்; இவர் முதன்முதல் தபாற்றுறையில் ஓர் எழுத்தாளர் (Clerk) பதவியிலமர்ந்து, இறுதியாக சென்னை பிரசிடென்சி போஸ்ட்மாஸ்டர் என்னும் பெரும்பதவியை அடைந்தனரெனின், இவர் ஆற்றலையும், நுண்ணறிவையும், என்னென்பேம். தபாற்றுறையில் இவர் செய்த சீர்திருத்தங்கள் பலவாகலின், அரசாங்கத்தார் இவர்பால் மகிழ்ச்சிகொண்டு, 'ராவ்பகதூர்' என்னும் பட்டமளித்தனர்; சென்னையில் மோட்டார் வண்டிகள் வாயிலான், தபாற் கடிதங்கள் விரைவில் கொடுக்கப்படும் முறை இவரானே புகுத்தப்பட்டது.

நமது சென்னை மாகாணத்தில் தபாற்றுறையில், இந்தியருள், பிரசிடென்சி போஸ்ட்மாஸ்டர் என்ற பெரும் பதவியை முதன்முதற் பெற்றவர் இவரே. இப்பெரும் பதவியினின்றும், நீங்கிய பின்னர் 'அந்தணர் என்போர் அறவோர். மற்றெவ் வுயிர்க்கஞ் செந்தண்மை பூண்டொழுகலான்' என்பதற்கேற்ப ஏழை மக்கள் செம்மை நலங்களைக்கோரி துவக்கப்பட்டிருக்கும் பிராமணரல்லாதார் இயக்கத்திற்சேர்ந்து, 'ஜஸ்டிஸ்',

'திராவிடன்' பத்திரிகைகட்குக் கௌரவ காரியதரிசியாக அமர்ந்து, எவல்யும் பகலும், இடையறாது, நம்பினோர்க்காக உழைத்தனர்.

சென்ற டிசம்பர் மாதத்தில் சென்னையில் இவர் தம் முயற்சி யானே பிராமணரல்லாதார் மூன்றாம் மாபெருங் கூட்டம், மா பெருஞ்சிறப்புடன் நடைபெற்றதெனின் இவர் வண்மையைக் குறித்து இன்னுமெழுதல் வேண்டுமோ. இக்கூட்டத்திற்குச் சென்று, இவர்தம் சீரியதொண்டின் சிறப்பைக்கண்டோர், இவரை என்னும் மறவார். ஆகலான் 'உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு' என்பதற்கேற்ப, இவரை நினைந்து நினைந்து உருகுவதற்கு, இவர் பேரான் ஓர் நினைப்புக்குறி நிலைநாட்டலே சிறப்புடைத்தாம். எல்லாம் வல்ல இறைவன், இவ்வந்தணரைத் தம்பாற் சேர்த்துக்கொள்வாராக; இவர் பிரிவான் வருந்தும் இவர் குடும்பத்தார்க்கு, நம் ஆற்றொணாத் துயரைத் தெரிவிக்கின்றோம்.

**மலர் 2 இதழ் 5 பக் 76 - 77**

## ஓர் மரண அறிக்கை

### திருமிகு. ச. வெள்ளைச்சாமியின் தேகவியோகம்

தென்னிந்திய இராமநாதபுரம் பரம்பரை திராவிட வம்சதிருக் குலத்தவரும், கண்டியில் பிரபல பால்வியாபாரியாயிருந்து காலஞ்சென்ற திருசங்கலி அவர்களின் மூன்றாவது புதல்வர். இவர் கண்டியில் பிறந்து சிறுவயதில் கற்கவேண்டிய பலகலையுணர்ந்த, நட்பின் உயர்வும், சுற்றத்தின் தன்மையும், சகோதரவாஞ்சையும் நன்றிமறவாமையும் ஜீவகாருண்மும் பரோபகாரசிந்தையுள்ளவராக விளங்கிவந்தார். இவர் பத்தொன்பது வருட காலம் ஸ்ரீமான் ஆர். வி துரையவர் களிடம் கிரககங்காணியாக ஊழியஞ் செய்துவந்தார். அவரின் ஊக்கமான நற்குணங்களை நெடுநாளாக கண்ணுற்ற துரை அவர்கள் தமது தொழில் துறந்து இங்கிலாந்துபோகும் வரையில் அவர் ஊழியஞ்செய்து வந்தால் அவருக்கு ஜீவகாலபரியந்தம் உதவக்கூடிய கைமாறுகருதாத உபகாரஞ் செய்வதாக வாக்களித்திருந்தார்.

துரையவர்கள் அவர் ஊழியத்திலிருந்து விலகவேண்டிய நாள் சமீபத்திலிருந்தது நல்ல சுகதேகியாக நாளை எண்ணிக் கொண்டு மனமகிழ்ச்சியாக வசித்துவந்தார். திடீரென்று கன்னத்தில் பொன்னுக்கு வீங்கி என்று வழங்கும் பிளவைக்கண்டு, பல பரிபக்குவங்கள் செய்தும் பலிதமாகாமல் கும்பெனித்தெருவு ரத்தினம் அவர்களின் ரணவைத்தியசாலைக்கு கொண்டுபோகப் பட்டு டாக்டர் அவர்களால் கூடியமட்டும் பிரயத்தனப்பட்டும்,

பூலோகவாழ்வு அனித்தியமென்ற மானிடதேகிகளுக்குணர்ந்த மண்ணுலகைவிட்டு செப்டம்பர் மாதம் 20தேதி திங்கட்கிழமை இரவு சிவபதமடைந்தனர். இவர் வயது 37.

இவரது பிரேதம், திருக்குல ஸங்க ஆஸ்ரமத்திற்கு கொண்டு வரப்பட்டு சுமார் 4 மணிக்கு இராமநாதபுரம் திருக்குல கோலியர் மஹா சங்கத்தவர்கள் புடை சூழ சவப்பெட்டியில் வைத்து அசுவம் பூட்டியரதத்தில், வெள்ளை புஷ்ப அலங்கார ஜோடினைகளுடன் மேளதாள வாத்தியங்களுடன் பஜனைபாட்டுகளும், தேவாரம், திருப்புகழ் இடைக்கிடையே பாடிக்கொண்டும் கரகோஷத்துடன் இடுகாடுக்கு கொண்டுபோகப்பட்டன. அவ்விடத்தில் தலைவாசலிலிருந்து சுற்றத்தவர்களால் திருச்சடலம் தோள்மேல் வைத்துத்தூக்கிக்கொண்டு தேவாரம் பாடிக்கொண்டுபோக, சவக்குழியில் வைப்பதற்கு முந்தி சங்கத்தலைவரான திருச்சி, நீதிசுந்தரம் பிள்ளை அவர்களால் ஓர் அரிய பிரசங்கம் நடக்க முடிவுரையாக செய்யவேண்டிய சகல சமய சடங்குகள் முடிக்க நல் அடக்கம் செய்யப்பட்டது.

சுமார் 300 பேருக்குமேல் வந்திருந்தார்கள். இவருடன் பிறந்தவர்கள் சகோதரர் ஐந்து, சகோதரிகள் ஐந்து. தகப்பானார் காலஞ் சென்ற பிறகு இக்குடும்பத்திற்கு தலைவராக இருந்து குடும்பத்தை சவரக்ஷணை செய்வதில் அதிக மேன்மையாக ஏக குடும்பமாக நடத்தி வந்தார். இவரின் பிரிவாற்றால் இவர் திருமங்கிலியம் முடித்து எட்டுவருடமாகிறது. இவருக்கு இரண்டு சிறுமிகள் பிறந்து முதலாவது குமாரத்தி ஐந்தாவது வயதில் சிவபதமடைந்தனள். தற்போது மூன்று வயது குழந்தை இருக்கிறது. கணவனை இழந்த மனைவிக்கு சகோதரனை இழந்த திரு அப்பாவு, திரு. ஆறுமுகம் அவர்களுக்கு சாக்ஷசாத் எம்பிரான் வேண்டிய தைரியத்தைக்கொடுக்க திருகுலத்தவர்கள் விரும்புகிறார்கள்.

கண்டுதுக்கித்தவன்.

மலர் 2 இதழ் 8 பக் 124

## மரண அறிக்கை

**ஸ்ரீமத் மேதா தக்ஷிணாமூர்த்தி ஸ்வாமிகளது தொண்டராகிய கனம் ஜெ. சீதாராம் பிரசாத் உபாத்தியாயர் காலஞ் சென்றார்**

ஸ்ரீமத் மேதா தக்ஷிணாமூர்த்தி ஸ்வாமிகளது தொண்டராகிய கனம் ஜெ. சீதாராம் பிரசாத் உபாத்தியாயரவர்கள் அனுபவ வைத்திய தேக ரகசியமெனும் இந்து பரம கோப்பியமென்ற, மஹாவைத்திய கிரந்தத்தை உலக உபகாரத்திற்காக வெளிவந்துலவச்செய்தவரும், சத்யவந்தராயும் மஹாகிரந்த கர்த்தாவனவரும் இப்புண்ணிய பூமியில் க்றேதேயுகா, த்றேதாயுகா, துவாபராயுகங்களில் சாதிவித்யாசமில்லையென்றும் பார்ப்பனர்கள் பண்டைய காலந்தொட்டு அவர்களே ஆயுள் வேத சாஸ்திரத்தை நடாத்தியதாகவும் துவாபரயுக அத்தியந்தத்திலிருந்து தன்னின மேம்பாடாகிய பிராமணத்திகம் தீண்டாத ஜாதியோரை கரத்தை பிடித்து நாடி பரிட்சை செய்வதால் கெட்டுப்போகிறதென்றும் கடவுள்யேழைகளடைய உபகாரத்திற்காக பிரயாசத்தோடு ஏற்படுத்தியவைத்ய சாஸ்திரங்களை அடியோடு மறைத்துவிட்டார்களென்று மேல் குறிப்பிட்ட பிராமணர்கள் செய்த கபட செய்கைகளை உறுதியோடு விளக்கி காட்டியவரும் இன்னும் உலக உபகாரத்திற்காக அனேக சாஸ்திரங்களை வெளிப்பிரசுரம் செய்வேனென்றுருதி வாக்களித்த உத்தமரும், பார்ப்பனர்கள் கிரகத்தில் உண்மையுள்ளவைகளை ஒளித்திருப்பதை கூடிய சீக்கிரம் வெளிப்படுத்த வேண்டுமெனவும் முக்கிய எண்ணத்தோடிருந்தவருமாகிய

ஸ்ரீமத்தக்ஷணாமூர்த்தி தொண்டராகிய சீதாராம் பிரசாத் உபாத்தியாயரவர்கள் சென்ற மாதம் இம்மண்ணுலகை விட்டு விண்ணுலகத்தேகியதை யறிந்து ஆறாத்துயருறுகிறேன்.

அத்துடன் அன்னவரின் அகாலமரணத்தையறிந்த அன்பர்கள் துயரமுறாமலிரார் சென்றதைக்குறித்து துக்க சாகரத்திலாழ்ந்து அன்னவர் சாலோக பதவியிலுற்று சந்தோஷமுறும் வண்ண மிறைவனை யிறைஞ்சுவோமாக.

கு. கண்ணாயுதம்

செல்வரசன்கோட்டை, ராமநாதபுரம்

மலர் 2 இதழ் 9 பக் 140

## ஒரு கடிதம்

**க**னம் தங்கிய ஐயா பத்திராதிபர் அவர்கட்கு,

ஐயா! தாங்கள் அன்புடன் அனுப்பிய சஞ்சிகைகளும் மற்றும் சபையின் சட்டதிட்ட முதலான வகைகளையும் கண்ணுற்றேன், நம்மிந்திய சோதர சோதரிகள் தவறுதலுண்டாகுங்கால், அவர்கட்கு வேண்டிய உதவிகள் புரியுமாறு செய்திருக்கும் ஏற்பாடுகளை வாசித்து அகமகிழ்ந்தேன்.

*'குடைநிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர்*
*நடைமெலிந்தோமாரூர் நண்ணினு நண்ணுவர்'*

என்னும் மூதுரைப்படி இவ்வேழை ஆதிகுலத் திருக்குலத்தாராகிய, கலிவாகு, வீரவாகு மற்றும் சக்கரவர்த்திகட்கு இத்தகைய இழிகாலமுண்டான நாள் முதல் இதுவரை ஜாதியெனும் தீராத சுழற் காற்றில் அகப்பட்டு அவதிப்படுபவர்களை ஈடேற்றுவான் வேண்டி இலங்கை இந்தியர் சங்கம் இதன் அங்கங்களாகிய தங்கங்களே! உங்கள் பெருமுயற்சிக்கு அதிக நன்றிபாராட்டுகிறேன். கடவுள் உங்களோடு இருப்பாராக.

'ஆதி திராவிடன் நிதிக்காக' தங்கள் பேருக்கு ரூபா *8.00* இன்றையத் தினம் மணியாடர் செய்திருக்கிறேன். இவ்வுலகில் இவன் ஜீவனோடிருக்கும் வரை தமிழ் வருஷாவருஷம் ரூபா *10* பத்து சங்கத்திற்கு அனுப்பி வைப்பேன். எனையாளும் ஈசன் கிருபையுண்டாகவேணும்.

அன்பை அதிகமாக நேசிக்கும்,
எம்.எஸ்.லாசரஸ்
*19, ஏப்ரல் 1920*

**குறிப்பு:-** இந்நண்பரது பேரன்பைக் குறித்து நாம் மிகவே சந்தோஷமடைகிறோம்; இதுவன்றோ குலாபிமானம்? ஆனால், இந்நண்பரைப்போன்று இன்னும் நமதாதி திராவிட கனவான்களில் சிலர் வருவரேல் எவ்வளவோ போற்றத்தக்கதாயிருக்கு மென்பதைச் சொல்லவும் வேண்டுமா? ஆகவே, இந்நண்பரது பெருந்தகைமைக்காக நாம் பெரிதும் நன்றியறிதலுடன் வந்தனம் செலுத்துகிறோம். அத்தன்மைத்தே குலாபிமானமுள்ளவர்களும், கல்வியிலும் செல்வத்திலும் மேம்பாடுடையவர்களுமாகிய ஒவ்வொரு கனவான் களும் வேண்டிய உதவிபுரிய முன்வருவார்களேயாமாகில் நந்தம் இள 'வாதி திராவிடன்' சஞ்சிகையானது இன்னுமிதனைவிட நன்னிலமைக்கு வருவ தோடு கூடிய விரைவில் நம் குல முன்னேற்றமடையவுமே துவாயிருக்குமென்பதிலா க்ஷேபமின்று.

*பத்திராதிபர்*

**மலர் 2 இதழ் 3 பக் 43 - 44**

## ஆதி திராவிடர்களிதனைக் கவனிப்பார்களா?

**க**ருணைமிகுந்த ஆதி திராவிட சபையாரே!

கடந்த பிப்ரவரி மாதம் 15தேதி வெளியான ஆதி திராவிடப் பத்திரிகையில் 205 நிர் பக்கத்தில் ராமநாதபுரம் ஜில்லாவில் கல்லல் என்னும் கிராமத்தில் உள்ள ஆதி திராவிடர்களை முற்றிலும் முன்னேறவிடாமல் அவர்களை நாசமாக்கவேண்டுமென்றும் மேற்படி ஜில்லா வேப்பங்குளம் ஆண்டவன் அம்பலமும், மேலப்பூங்குடி சுப்பையா ஆசாரியும் இன்னும் அவர்களைச் சேர்ந்தவர்களே இப்பூவுலகில் சுகஜீவிகளாயும் சிரஞ்சீவிகளாயும் சகல இன்பத்தையும் அனுபவித்து இந்தப் பொய்யான உலகில் வாழவேணுமென்று நினைத்து மேற்படி கல்லல் என்னும் கிராமத்தில் நமது ஆதிதிராவிடர்களை அறிவீனத்தினால் பலவித இம்சைகள் செய்ததாய் நமது பத்திரிகையில் காண என் மனம் வியா கூலத்தினால் தவிக்கிறது.

எனவே இது விஷயத்தைப் பற்றி சென்னை ராஜதானி யிலுள்ள நமது திராவிட சபையாருக்கும் அறிவித்து மேற்படி ஆண்டவன் அம்பலம் முதலியவர்களுக்கு தகுந்த புத்தி புகட்டும்படி முயற்சி செய்வீர்கள் என்று நம்புகிறேன்.

'சகல நாகரிகத்துக்கும் ஊற்றாகிய நமது பிரிட்டிஷ் கவர்ன் மென்டார் நம்மேல் நீதியாய் ஆண்டு நமக்குத்தயைசெய்யும்படி அவர்களை என்றென்றைக்கும் ஆண்டவர் ஆசீர்வதிப்பாராக'

கலகா, சிலோன்.

குறிப்பு:- மேற்கண்ட விஷயத்தையறிந்த நம் குலத்தவர்கள் யாவரும் விசனமுறாமலிரார். நாங்களும் வேண்டிய பிரயாசை எடுத்து வருகிறோம். ஆனால் மேற்படி கிராமவாசிகளாகிய நம் குலத்தவர் களிலனேகர் ஜீவனார்த்தமாக இவ்விலங்கைக்கு வந்திருக் கின்றவர்களுமதற்காக வேண்டிய பிரயாசை எடுத்துக்கொள்ள வேண்டியது முக்கிய கடமையாகும். அத்துடன் சென்னையில் ஸ்ரீமான் எம்.சி. ராஜா* அவர்களும் இதுவிஷயமாக சற்று ஊக்கத்துடன் உழைப்பாரெனக் கருதுகிறோம்.

*பத்திராதிபர்*

***நமது சஞ்சியையில் 45வது பக்கத்தில் "ஆதிதிராவிடர் களிதனை கவனிப்பார்களா?" என்று நிருபமெழுதிய கனம் ஏ.ஏ. ஆபிரகாம் (கலகா) அவர்கள் குறிப்பிட்டுள்ள விஷயங் களைப் பற்றி இவ்விடத்திலுள்ள அந்நகர் கனவான்கள் சென்னை கவர்னர் துரை அவர்களுக்கு ஓர்மனு செய்திருப்பதாக அறிகிறோம்.***

மலர் 2 இதழ் 3 பக் 45 46

---

*எம். சி. ராஜா சென்னை மாகாணத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தன் இளமைக்காலம் முதல் பணியாற்றிவர். ஆசிரியராகப் பணியாற்றிய போது தாழ்த்தப்பட்ட மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்குப் பங்களிப்பு செய்தார். பச்சையப்பன் கல்லூரியில் மாணவர்கள் சேர்க்கைக்கு இருந்த தடையை நீக்கப் பாடுபட்டவர். ஆதிதிராவிடர்கள் என்ற பெயர் மாற்றத்துக்கு காரணமானவர். சென்னை மாகாண சட்டமன்ற மேலவையில் பல ஆண்டுகள் தொடர்ந்து பணியாற்றிவர். இரெட்டைமலை சீனிவாசனுடன் இலண்டனில் நடைபெற்ற வட்டமேஜை மாநாட்டில் கலந்து கொண்டார்.

# ஆதி திராவிடன் மேல் வாழ்த்துப்பா

*1. கலி பஞ்ச சகஸ்திரத்திேனாடு பத்தொன்பதாமாண்டு தன்னில்*
*நலிவு பெறும் பூர்வ குடியாதித் திராவிடருள் நன்மை தோன்ற*
*பொலி வுறுநற் குணவிசித வூதியமோ தேனொழுக புனல் செரிந்து*
*மலிவுதரு இலங்கையினிற் பத்திரிகை யுதித்ததுவும் மகிழ்ச்சிமன்னோ.*

*2. அனந்த வித மானந்த வருநெறியை யெப்போது மகத்துனாட்டி*
*மனந்தனையே யழுக்ககற்றி மினுமினுக்க ளிப்புறச் செய்மாதவத்தோன்*
*வனந்தனிலே சுழன்றலைந்து மலைமலைத்து வருகில்வரமயங்குவோரை*
*இனந்தனிலே சேர்க்கவொரு சுக்குலத்தின் குலங்கண்டு இயம்பினானே.*

*3. மாபாலனாயுதித்த ஆதி திராவிடனோ மக்கள்தன்பால்*
*புபாலனாயுதித்துப் போயுலவித்தேசமெங்கம் புகழ்ச்சி தோன்ற*
*நாபாலச் செல்வகுருசுவாமி சகஜானந்தரும் வாழி எஸ்.பி.*
*கோபாலசாமியும் நன்குணங்களுரை நேயர்களும் குன்றாவாழி.*

எம்.ஏ. ஐஸக்தாஸ் கவிராஜ்

மலர் 2 இதழ் 4 பக் 63

# துணுக்குச் செய்திகள்

# ஆதி திராவிடன் மேல் வாழ்த்துப்பா

1. [illegible]

2. [illegible]

3. [illegible]

[illegible]

மலர் 1 இதழ் 4 பக் 13

## சர்.பி. தியாகராயச் செட்டிகாரு பி.ஏ.*

பண்டைக்காலத்து நம் தமிழகத்து நம் அரசர்கள் பெரியதொரு கூட்டங் கூட்டி, தம் குடிகளிற் சிறப்புற்றார்க்குத் தலைமையமைந்த பட்டங்கள் அளித்தல் வழக்கம். இவ்வாறு அரசன் செய்யுஞ் சிறப்புக்கு 'மாராயம்' என்று சொல்லப்படும்; அக்காலத்து, ஏனாதி, காவிதி, எட்டி முதலிய பட்டங்களும், அவைகட்கு உரிய பூக்களும், மோதிரங்களும் வழங்கப்பட்டன. இவைகளுள் ஏனாதி, படைத்தலைவர்க்கும், காவிதி அமைச்சர்கட்கும், எட்டி ஈகையிற்றலை சிறந்த வணிகர்கட்கும் அளிக்கப்பட்டன.

இம்முறைக்கேற்ப, இப்பொழுது நம்மைச் செங்கோலோச்சும், ஐந்தாம் ஜியார்ஜ் அரசர் பெருமானவர்களும், தாம் பிறந்த நாளிலும், புது ஆண்டின் தொடக்கத்திலும், தம் குடிகட்குப் பட்டங்களும், பதக்கங்களும் வழங்குகின்றார். இவ்வாண்டில் இவர் தம் பிறந்தநாளில், பார்ப்பனரல்லாதார் மாபெருந்தலைவராய் பெருமை சான்ற பி. தியாகராயச்செட்டிகாருக்குச் 'சர்' பட்டம் வழங்கியிருக்கின்றனர். இது போற்றற்பாலதாம். ஆனால் இப்பட்டம் இப்பெருந்தகையார்க்குப் பன்னெடும் நாட்களுக்கு முன்னரே அளிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

இவர் பண்டைக்காலந்தொட்டு, மிக்க புகழுடன் வாழ்ந்து வந்து, இடையில் வன்னெஞ்சர்களால் நசுக்கப்பட்ட நாமும்,

*தென்னிய நல உரிமைச் சங்கத்தின் தலைவரான பிட்டி தியர்ராசருக்கு (1852 1925) 01.01.1920 அன்று சர் பட்டம் வழங்கப்பட்டது.

நம் பிள்ளைகளும் முன்னேற்றமடைய வேண்டுமென்ற நல்லெண்ணங்கொண்டு 'குடி தழீ இய' (Democracy) ஆட்சியை விரும்பும் பார்ப்பனரல்லாதார் இயக்கத்தைக் கிளப்பிய அந்தணரா வர்; இவர் இற்றைக்கு 40 ஆண்டுகளாக இடையறாது பொது நலத்திற்கும், ஏழைகள் செம்மைக்கும் உபைித்து வருகின்றனர்; தாம் துவக்கிய காரியத்தை உறைத்து நின்று முடிக்கும் இயல்பு உடையார்; கல்வி, கைத்தொழில், வாணிகம், லோக்கல் செல்ப் கவர்ன்மெண்டு, அரசியற் சீர்திருத்தம், முதலிய துறைகளிற் நம் வாழ்நாட்களிற் பெரும் பகுதியைச் செலவழித்து வருகின்றனர்; இவ்வுண்மைகள், இவர் தென்னிந்திய வியாபாரச் சங்கத்தின், தலைவராகவும், சென்னை பச்சையப்பன் கல்லூரி நிர்வாக சபையின் உறுப்பினராகவும், சென்னை நகர பரிபாலன சங்கத்தின் தலைவராயும், பார்ப்பனரல்லாதார் இயக்கத்திற்குத் தாதையாகவும், இருக்கின்றமையான் விளக்கப் படும்.

இத்துணை அருங்குணங்களும், பேராற்றலும், ஒருங்கே பொதுளிய அன்பினில் விளைந்த செட்டியார் அவர்களுக்குச் 'சர்' பட்டம் அளித்தது சென்னையிலும், இவ்விலங்கைத் தீவிலும் வதிதரும் தமிழ் மக்கட்கு அளவு கடந்த மகிழ்ச்சியைப் பயப்பதாம். நம் தலைவராய பெருமைச்சான்று செட்டியாரவர்கள் நாத்தொலையில்லா யாக்கையராய்ப் பல்லாண்டு பல்லாண்டு வாழ, இறைவன்றிருவடிகளை வழுத்துகின்றாம்.

***சனக சங்கர கண்ணப்பன்.***

மலர் 2 இதழ் 4 பக் 64 - 65

# மதிப்புரை: ஆதி திராவிடர் பூர்வசரித்திரம்

இப்பெயர் புனைந்த அருமையான புஸ்தகமொன்று வரப்பெற்றோம். இதில் ஆதி திராவிடர்கள் பூர்வத்திலிருந்த மேன்மையான நிலைமைகளைப் பற்றியும் அப்பால் யாரால் எவ்விதமாய் தாழ்த்தப்பட்டார்களென்றும், ஒவ்வொன்றுக்கும் தக்க ஆதாரத்துடன் பூர்வ சரித்திரத்தைக் கொண்டும், கபிலர், சிவவாக்கியர், ஞான வெட்டியார், பத்ரகிரியார் முதலான அநேக மஹான்கள் சொல்லியிருக்கும் பாடல்களைக் கொண்டும், கற்கால பெரியோர்களின் உண்மை மொழிகளைக் கொண்டும் ரூபகாரப்படுத்தி மிகவிரிவாய் எழுதியிருப்பதோடு ஆதி திராவிடர்களின் தற்கால நிலைமைகளையும், அன்னவர்களின் முன்னேற்ற விஷயமாய் நடந்துகொள்ளவேண்டிய வழிவகைகளையும் யாவரும் இலகுவில் கிரகித்துக்கொள்ளும்படியான எளிய நடையில் எழுதப்பட்டிருக்கிறது. இஃது நம் ஆதி திராவிடர்கள் ஒவ்வொருவருடைய இல்லத்திலு மிருக்க வேண்டிய தவசியம். இப்புத்தகத்தை வாங்கி வாசித்துவரும் ஒவ்வொருவரும் தத்தம் பந்துமித்திரர்களுக்கும் தூண்டி இதனை வாங்கி வாசித்துவர முயற்சிப்பார்களென்று நம்புகிறோம். இப்புத்தகத்தின் ஆக்கியோர் சென்னை 'நியு ரிபார்மர்' பத்திராதிபராகிய ஸ்ரீமான் டி. கோபால செட்டியாரவர்களாவர்.

இதன் விலை அணா 6. சதம் – 37

தபால் சார்ஜ் சதம் – 6.

வேண்டியவர்கள் எங்களுக்கு 43 சதத்திற்கு ஸ்டாம்பு அனுப்பினால் பிரதி ஒன்று அனுப்பப்படும்.

ஆதி திராவிடன் பத்திராதிபர்.

அல்பர்ட்ரோட், பொல்வத்தை.

மலர் 2 இதழ் 8 பக் 125

## ஓர் வினா?

ஆதி திராவிடர்களில் பள்ளர்கள் என்பவர்களுக்கு ஒரு வினா?

சென்னை ராஜதானியிலுள்ள பள்ளர்களே! உங்களுக்கு பிள்ளைமார், மறவர், சான்றோர், கம்மாளர் இவர்களுக்கு இருக்குங் குருக்கள் மாரைப் போல் உங்கள் சாதியிலேயே குருக்கள் உண்டாய் இருந்தால் அவருடைய பெயர், ஊர், போஸ்ற்று, ஜில்லா, இவைகளை முழு விபரத்துடன் தெரிவிக்கவும்.

சந்திரசேகரன்

ஆத்தூர், திருநெல்வேலி.

மலர் இதழ் 9 பக் 139

## நாமும் நமது இந்திய சந்தா நேயர்களும்

**க**னவான்களே!

வருகிற மாதம் அதாவது பெப்ரவரி மாதம் 15ம் திகதியோடு நமது 'ஆதி திராவிடன்' தனது இரண்டாவது வருஷத்தை பூர்த்தி செய்து மூன்றாவது வயதாரம்பத்தை யடைகிறான். பரோபகாரம் நிறைந்த கனவான்களே இன்னும் ஒரே ஒரு மாதந் தானிருக்கிறது. ஆகலான் ஒவ்வொரு கனவான்களும் அடியில் வரைந்திருக்கும் விஷயங்களை சற்றுற்று நோக்கி தாமதப்படுத்தாது தயவுகூர்ந்து 3வது வருஷத்திற்குரிய சந்தா தொகையாகிய ரூபாய் 1–4–0 மணியாடரனுப்பி வைக்கும்படி வெகு தாழ்மையுடன் கேட்கிறோம்.

நமது சஞ்சிகையை இதுகாறும் சாதாரண வி.பி. போஸ்ட் மூலமாக அனுப்பி வந்தோம். ஆனால் கடந்த செப்டம்பர் மாதத்துவக்கத்திலிருந்து இந்தியாவிற்கு அனுப்பிவைக்கப்படும் வி.பி.பி. பார்சல்களை ரிஜிஸ்தர் செய்யும்படியாக இலங்கைத்த பால் அதிகாரிகளால் ஓர் புதிய அறிக்கை ஒன்று வெளியிட்டி ருப்பதைப் பற்றி கடந்த 3 சஞ்சிகைகளிலும் நாமறிவித்து வந்திருப்பதை நண்பர்கள் ஒவ்வொரு மறிந்திருப்பீர்கள். ஆகவே அவ்வாறு வி.பி. பார்சல்களை ரிஜிஸ்தர் செய்து அனுப்புகிற தாகயிருந்தால் ஒவ்வொரு சந்தாநேயரும் அணா 7 (ஏழு) நஷ்டமடைய வேண்டிய திருக்கிறது.

*அஃதாவது:*

| | |
|---|---|
| *சந்தாத் தொகை ரூபாய்* | *1–4–0* |
| *வி.பி.பி. கட்டணம் ரூபாய்* | *0–4–0* |
| *ரிஜிஸ்தர் கட்டணம் ரூபாய்* | *0–3–0* |
| *மணியாடர் கட்டணம் ரூபாய்* | *0–1–0* |
| *ஆக ரூபாய்* | *1–12–0* |

*ஆனால் அவ்விடமிருந்தே மணியாடர் செய்கிறதாகயிருந்தால்*

| | |
|---|---|
| *சந்தாத் தொகை ரூபாய்* | *1–4–0* |
| *மணியாடர் கமிஷன் ரூபாய்* | *0–1–0* |
| *ஆக ரூபாய்* | *1–5–0* |

*மட்டுமாகும்.*

**இதனால் ஒவ்வொருவருக்கும் அணா *7* லாபமாகின்றன.**

ஆகவே மூன்றாவது வருஷ சஞ்சிகைக்குச் சந்தாதாரர் களாகும் ஒவ்வொரு கனவான்களும் கடந்த மாதத்திய பத்திரிக்கையில் வைத்தனுப்பியிருக்கும். மனுப்பத்திரத்தில் (Application form) பதிவு செய்து எங்களுக்கனுப்பி, தங்கள் பெயர்களை ரிஜிஸ்தர் செய்துகொள்ளுவதோடும், சந்தாத் தொகையையும் மணியாடர் மூலமாகவே யனுப்பி எங்களை ஆதரித்து வரும்படியாக மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் அவ்விடமிருந்து அனுப்பப்படும் மணியாடர்கள் நமக்கு வந்து சேர சற்றேறக்குறைய *3* வாரங்களாகின்றமையால் இவ்வறிக்கையை தங்கள் பால் முன்னதாகவே தெரிவித்துக் கொள்ள நேரிட்டதென்பதையும் இது மூலமாயறிவித்துக் கொள்ளுகிறோம். ஆகையால் இன்னமும் நாளிருக்கிறதென

வாளாவிருக்காது ஒவ்வொரு கனவான்களும் முன்னதாகவே ரூபாய் 1-4-0 யும் மணியாடர் மூலமாயனுப்பி எங்களை ஆதரிப்பீர்களென்று நம்புகிறோம். இதுவே நண்பர்கள் செய்யுமோர் பேருபகாரமாகும். 'ஆதி திராவிட'னினபிவிர்த்தியைக் கோருமொவ்வொரு புண்ய சீலர்களும்

'செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமுமாற்றலரிது' -

என்றவாறு எங்கள் வேண்டுகோளுக்கிணங்கி நடந்து கொள்வீர்களென்று நம்புகிறோம்.

நிகழும் இரண்டாவது வருஷ ஆரம்பத்தில் வி.பி.பி. யலனுப்பிய சஞ்சிகைகளை திருப்பியனுப்பிவிட்டு மறுபடியும் வி.பி.பி.யிலனுப்பும்படி கேட்டுக்கொண்ட நண்பர்களாலடைந்த நஷ்டத்தையும் சிரமத்தையும் இச்சமயம் குறிப்பிடாமலிருக்கக் கூட வில்லை.

ஆகையான், வருகிற மூன்றாவது வருஷத்திலும் இவ் வண்ணம் நடக்காதவாறு நண்பர்களை மறுபடியும் மிக வணக்காமாய் கேட்டுக்கொள்கிறோம். இத்துடன் ஒவ்வொரு நண்பர்களும் ஒவ்வொரு புதிய சந்தாதாரரைச் சேர்த்தனுப்பினால் பேரும் புகழு மெஞ்ஞான்றும் நிலைத்திருக்குமென்பதிலையமில்லை. நமது 'ஆதி திராவிட'னும் முன்னிலு மதிகமான விஷயங்களோடு வந்துலாவுவானென்பதற்கும் சந்தேகமில்லை.

அத்துடன் இலங்கை சந்தா நேயர்களும் சற்று சிரமம் பாராது 3வது வருஷத்திற்குரிய சந்தா தொகையை அனுப்பி வைத்தால் மெத்த பெரிய உபகாரமாயிருக்கும்.

குலாபிமானிகளே! தேசாபிமானிகளே!! பரோபகாரிகளே!!! இதனைச் சற்று கவனிப்பீர்களாக.

பத்திராதிபர்

மலர் 2 இதழ் 11 பக் 156 - 157

மலர் 2 இதழ் 10 பக் 143 - 144

இக்கோரிக்கை இரண்டு இதழ்களிலும் வெளியிடப்பட்டுள்ளது.

## இரஞ்சித மஞ்சரி

**உ**லகில் ஒருவன் ஆயிரம் நீதி போதனைகளை ஜனங்களுக்கு எடுத்து துரைப்பினும் ஒரு நல்ல போதனையை தான் நடந்து காட்டுதலே சிறப்பு. வாயாற் சொல்லுவதை காதாற் கேட்டு 'பேஷ்! நல்ல போதனை' என்று மெச்சிப் பேசி உடனே மறந்துவிடுகின்றனர். செய்கையிற் செய்வதை கண்ணால் பார்த்து விட்டாலோ அவ்விஷயம் மனதில் பதிந்துவிடுகிறது. அது ஒருநாள் நடத்தையில் வந்து விடுகிறது. காதாற் கேட்டதைவிட கண்ணால் கண்டதே நீடித்து ஞாபகமிருக்கிறது.

ஒன்றை ஒருவன் அடையும் வரையில் அதைமிக அருமை யாகவும் பெரிதாகவும் கருதுகிறான். அது அவனுக்குக்கிட்டுவது அருமையாயிருக்கும் வரையில் அதன் மதிப்பும் பெருமையும் அதிகப்பட்டு வளர்ந்து கொண்டேபோகிறது. கிடைத்து விட்டாலோ அதற்கு முன்னர் அலக்ஷியம் வந்துவிடுகிறது. எவ்வளவு சுலபத்தில் கிட்டுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு மதிப்பு குறைந்து அவமதிப்பு அதிகமடைகிறது. கிட்டும் வரை பெரிது, கிட்டினபின் சிறிது.

ஒருவனுக்கு மனைவியாக வரப்போகிறவளைப்பற்றி விவாகமாகுமுன் எவ்வளவு வேண்டுமாயினும் கேலி செய்து அவன் முன் பேசலாம். எல்லாம் பரிகாசம் என்ற பெயரில் அடங்கிவிடுகிறது. விவாகமான பின்னரோ கணவன் முன் அவன் மனைவியைப்பற்றி யாதொன்றும் பரிகாசம் செய்வதற் கில்லை. தவறி ஏதாவது சொல்லிவிட்டால் வினையாக முடிகிறது.

இதுவும் விந்தையே.

ஒருவரது நட்பு நீடித்து நிற்க வேண்டுமாயின் அவரிடத்தில் யாதொரு லேலாதேவியும் வைத்துக்கொள்ளக்கூடாது. கூடியவரை சிநேகனது உதவியைப் பெறாதிருத்தல் வேண்டும். ஒருமுறை உதவியைப் பெற்றுக்கொண்டோமோ மறுமுறை உதவி செய்ய முன்வரமாட்டார்கள். உதவி வேண்டாம் வேண்டாம் என்று மறுத்துக்கொண்டிருந்தால் உதவி செய்கிறோம் செய்கிறோம் என்று முன்வந்து சொல்வர். வேண்டும் என்றாலோ சமீபத்தில் ஒருவரையுங் காணமுடியாது. இது உலகவியற்கை.

நண்பனிடத்தில் நெருங்கி நீண்டநாள் வசிக்கலாகாது. அப்படி வசித்தோமாயின் முன்பு அன்பு தவழ சாந்தத்தோடு அழகமைந்து காணப்பட்ட நண்பனது முகத்தை கோபத்தணலில் வெந்து கருகி சுளித்து யொலிவு குன்றி ஒடுங்கியதாய்க் காண வேண்டிய சந்தர்ப்பம் விரைவில் நேர்ந்துவிடும். அப்பொழுது நமது அறியாமைக்குப் பச்சாத்தாபப்பட வேண்டிவரும்.

ஒருத்தி தனக்கு கிடைக்காதவரையில் ரம்பை, ஊர்வசி, ரதி என அவளைப்பற்றிக் கனவு காண்கிறான். அவள் கிட்டி விட்டாலோ (தனக்கு மனைவியாக வாய்ந்தாலோ) அவள் அழகு இவனுக்குப் புலப்படுவதில்லை. அவளை குரூபியெனவே கருதி அன்னிய ஸ்திரீயை அழகியென நினைக்கிறான். இது உலக சுபாவம்.

ஒருவன் தனக்கு வந்த கடிதத்திற்கு பத்து தினங்களோ பதினைந்து தினங்களோ கழித்து பதிலெழுதுகிறான். அப்படி எழுதின உடனே தன் கடிதத்திற்கு மறுநாளே பதில்வரவேண்டு மென்று எதிர்ப்பார்க்கிறான். இரண்டு மூன்று தினங்கள் எதிர்பார்த்து பதில்வராமைக்கு வருந்தி கோபித்து உடனே பதிலெழுதவில்லை. சோம்பேறி என்று நிந்திக்க ஆரம்பித்து விடுகிறான். அச்சமயம் தன் செய்கை ஞாபகத்திற்கு வருவது கிடையாது.

பல நண்பர்கள் அகஸ்மாத்தாய் ஓரிடத்தில் ஒன்று கூடி போட்டோ எடுத்து விடுகின்றனர். போட்டோ எடுத்த பின்னால் மற்றொருக்கால் அவ்வாறு எல்லா நண்பர்களும் கூடும்

ஒருசமயம் வாய்க்குமென்று வாழ்நாட்களில் எதிர்ப்பார்த்தல் முடியாத காரியம். பலரும் பலதிசைக்குச் சென்று விடுகின்றனர். இதனிடையில் யமன் வாய்பட்டு மறைபவரும் பலர்.

ஒருவன் தன்னைவிட உயர்ந்த ஜாதியாய் என்றவர்களோடு கலந்து கொள்ள வேண்டும் என்ற விஷயத்தில் தீவிரமாய் முன்வந்து முனைந்து நிற்கிறான். அவனே தன்னைவிட தாழ்ந்த வகுப்பார்களைத் தன்னுடன் கலந்து கொள்ளப் பின்னடைகிறான். அதைப்பற்றி எடுத்துக்கூறுபவரது வார்த்தையைக் கேளாது ஒதுங்கி செல்லுகிறான். முன்னாலிருந்த அறிவு பின்னால் மழுங்கி விடுகிறது. கொள் என்றால் வாயைத் திறப்பதும் கடிவாள மென்றால் வாயைமூடுவதும் குதிரையின் வழக்கம். அதை மனிதரும் அனுஷ்டிப்பது விந்தையே.

என். வெங்கட்ரமணன்

மலர் 2 இதழ் 11 பக் 165 - 166

## விகடமா,? விநோதமா,? வேடிக்கையா?

தமது வித்வ சாமர்த்யத்தைக் காட்டும் நோக்கமாய் ஒருவர் இன்னொருவருக்கு ஆத்மதோழ நேத்ரசமான, பாத்ர சகாயமுள, ஆப்தமித்ரன் எனப்படாடோபமாயோர் இனிய, நீண்ட கடிதம் வரைந்தனுப்பினார். அதற்கு அவர் 'நண்பதாம்' என்பால், அன்பால் சின்னாட்களுக்குமுன் விடுத்த நிருபம் பார்த்தனன், படித்தனன், அதிலெழுதியுள்ள சில விஷயங்களால் பரவஸ முற்றனன். ஆயின், ஆடும் நடனத்தையும், பாடுங் கவிதைகளையும், நாடும் மனத்தினனாம் தாமும், மூவாசை கட்டறுத்து, மூவினைதனை ஜெயித்து, முன்னவனையே எந்நிமிடமும் ஸ்மரித்து நிற்கும் யோகப்பியாச மனத்தினனாம் யாமும் 'ஆத்மதோழராவ' திவயாங்ஙனம் என்பதுதான் விளங்கவில்லை எனப்பதில் கொடுத்தார்.

மலர் 2 இதழ் 7 பக் 113

(இரண்டாவது துணுக்கு சிதைந்த நிலையில் உள்ளதால் அப்பகுதி இடம் பெறவில்லை)

## மஹானின் மகிமை

சவுத் இந்தியாவில் கோயமுத்தூர் ஜில்லா மேட்டுப் பாளையத்திலிருக்கும் பிரபல கான்றாக்டரும் வியாபாரியுமான ஸ்ரீமான் எஸ். எ. கந்தஸவாமி பிள்ளையவர்கள் தற்காலம் பேரூருக்கடுத்த சுண்டக்காமுத்தூருக்குவந்திருக்கிறார். இவருக்கு ஓர் மஹானால் அருமையான மூலிகையும் மகிமைபொருந்திய தாயத்தும் கிடைத்து சகலருக்கும்உதவிவருவதும் இதனால் குழந்தையில்லாதவர்களுக்கு குழந்தைகள் உண்டாகியும் நீண்டநாளாக தீராதென்றெண்ணிய குஷ்டம், க்ஷயம் முதல் சகலவித வியாதிகளும் ஆச்சரியமாகும்படி குணமாக்கியும் காற்று கருப்பு பலவில கஷ்டம் மனக்கவலை வகையறாக்கள் அப்போதைக்கப்போது நீங்கி சகல சுகமும் உண்டாகிவருவதையும் பிரபலமான பேப்பர்களிலும் பார்த்திருக்கிறேன். அனேகர் இதன் மகிமையைச் சொல்லவும் கேட்டிருக்கிறேன்.

இந்தச் சமயம் நான் நேரில் காண இடம் கிடைத்தது. எனக்குண்டான அவசரமானதும் ஆபத்தானதுமான கவலையே நேரில் சொன்னேன். அன்றே ஸ்பெஷலாக தாயத்து ஒன்றை செய்துகொடுத்து அடுத்தநாளே அக்காரியம் அனுகூலமாகு மென்று வாக்குக்கொடுத்தார். அதுபோல் நான்அதை வாங்கிக் கொண்டுபோக உடனே அப்போதே அக்காரியம் அனுகூலமாகி சொல்லமுடியாத கவலையும் நீங்கி சந்தோஷத்தையடைந்தேன். ஆச்சரியமடைந்தேன். மஹான்களுடைய மகத்துவமே மகத்துவம். இதுதவிர ஒரு பெரிய செட்டியாருக்கு வயிறெல்லாம் வீங்கி

பெருமூச்சு விட்டுக் கொண்டிருந்த சமயம் மூலிகையை கொடுத்தார். ஒரே நேரத்தில் குணமாகி சுகமாயிருக்கிறார். பிராமண பெண் முகம் வேறுபட்டு பலவித இடையூறுகளிலி ருந்ததற்கு மூலிகை *5,6* நாள் சாப்பிட்டதும் ஆச்சரியமாகும் படி சரியான நிலைமை வந்துவிட்டது. அனேகர் இவைகளை நேரில்கண்டு திரளான ஜனங்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். அநேக நன்மைகள் நடந்துவருகிறது. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை தாயத்து யுபயோகித்துச் சுகத்தையனுபவிக் கிறார்கள். ஒவ்வொருவரும் ஏழை முதல் எல்லாருமே சுகத்தையடையவும் மஹானின் மகிமையும் கிருபையும் உண்டாகவும் ஒவ்வொருவரும் தாயத்தை உபயோகிக்க நமது விருப்பம், *2* வாரத்தில் மேட்டுப்பாளையத்திற்குப் போய்விடு வாரென்றும் தெரிகிறது.

**எஸ்.ஆர். . ஆறுமுகம்**

**மலர் 2 இதழ் 3 பக் 47**

## நோட்டீஸ்

(Dentist) பல்கட்டும் வேலை செய்கிற ஒருவன் நாளது மாதம் 1-தி யாக கலகாவில் வந்து அனேகம் ஆட்களுக்கு பல்கட்டுகிறதாக பணத்தை வாங்கிக்கொண்டு ஏய்த்துப் போட்டுப்போய்விட்டான். தேடியும் அகப்படவில்லை. அவன் சிங்களமனுஷன், உயரமானவன், மெலிந்தவன், சப்பாத்து கால்சட்டை உடுத்தியிருப்பான். இவன் அநேகமாய் சின்ன டவுன்களில் உலாவித்திரிந்து மனுஷரை ஏமாற்றுகிறான். ஆகையால் இப்படிப்பட்டவனைப் பற்றி எச்சரிக்கையாக விருக்கவும்.

ஏ.ஏ. ஆபிரகாம்

மலர் 2 இதழ் 6 பக் 85

## சான்று பட்டியல்

### நூல்களும் கட்டுரைகளும்

### தமிழ்

**அம்பேத்கர், பி.ஆர்.,** சூத்திரர்கள் யார்? அவர்கள் எவ்வாறு இந்தோ ஆரிய சமுதாயத்தில் நான்காம் வருணத்தவர்கள் ஆனார்கள்?, பாபாசாகேப் அம்பேத்கர் நூல் தொகுப்பு - தொகுதி : 13, டாக்டர் அம்பேத்கர் பவுண்டேஷன், புதுடில்லி, *1999.*

**அலாய்சியஸ், ஞான., (ப. ஆ)** அயோத்திதாசர் சிந்தனைகள் I - II, நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம், பாளையங்கோட்டை, *1998.*

------------ அயோத்திதாசர் சிந்தனைகள் - III, நாட்டார் வழக்காற்றியல் ஆய்வுமையம், பாளையங்கோட்டை, *2003.*

**இராஜதுரை, பு.,** சுயமரியாதை இயக்கத்திற்கு நாடார்கள் ஆற்றிய தொண்டு, இளமாறன் பதிப்பகம், விருதுநகர், *1992.*

**கருணாகரன், ந.அ.,** (கட். ஆ.) தென்னிந்திய நல உரிமைச் சங்கங்களும் அதன் இதழ்களும், நீதிக்கட்சி 75 ஆவது ஆண்டு (பவள விழா) மலர், திராவிடர் கழக வெளியீடு, சென்னை, *1992.*

**சக்குபாய், இரா.,** (ப. ஆ.) பெரியாரியம், பெரியார் ஆய்வுமையம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி, *2000.*

**சதாசிவன்,** டி., சென்னை மாகாணத்தில் பொதுமக்கள் கருத்து வளர்ச்சி, சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை, *1983.*

**சாமி, அ.மா.,** 19 ஆம் நூற்றாண்டுத் தமிழ் இதழ்கள் நவமணி பதிப்பகம், சென்னை, *1992.*

**சிவகுருநாதன், இ.,** இலங்கையில் தமிழ்ப் புதினப் பத்திரிக் கையின் வளர்ச்சி, பாரிநிலையம், சென்னை, *1991.*

**சுப்பிரமணியன், ந.,** இந்திய அரசியல் அமைப்பு வரலாறு, என்னெஸ் பப்ளிகேஷன்ஸ், மதுரை, *1988.*

**சுந்தரமூர்த்தி, இரா., அரசு, மா.ரா.,** (ப. ஆசி.) இந்திய விடுதலைக்கு முந்தைய இதழ்கள் தொகுதி - 2 உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, *1998.*

180651

STACKS

**தங்கவேலு, கே.,** தமிழ்த்தேசிய உணர்வின் முன்னோடி தமிழன் அயோத்திதாசப்பண்டிதர், நளினி பதிப்பகம், சென்னை, 1999.

**பாலகிருஷ்ணன், வெ. கோ.,** (மொ. ஆ.) தவத்திரு தர்ம தீர்த்த அடிகளாரின் இந்துமதக் கொடுங்கோன்மையின் வரலாறு, சாளரம், சென்னை, 2003.

**நெடுஞ்செழியன், க., சக்குபாய், இரா.,** சமூகநீதி, மனிதம் பதிப்பகம், திருச்சி, 1995

**மகாராசன்,** (தொ. ஆ.) ஈழத்தில் சாதி இருப்பும் தகர்ப்பும், கருப்பு பிரதிகள், சென்னை, 2007.

**மாறன்; முரசொலி,** திராவிட இயக்க வரலாறு, சுமங்கலி பப்ளிகேஷன்ஸ், சென்னை, 1991.

**முகிலன், க.,** (மொ. ஆ.) பி.ஆர். அம்பேத்கர் வாழ்க்கை வரலாறு., மார்க்சிய பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி, சென்னை, 1982.

**முத்துசாமிப்பிள்ளை, எஸ்.,** நீதிகட்சி வரலாறு, பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு சென்னை, 1992.

**ராஜதுரை, எஸ். வி., கீதா. வ.,** பெரியார் சுயமரியாதை சமதர்மம், விடியல் பதிப்பகம், கோவை, 1999.

**'வள்ளிநாயகம், ஏ.பி.,** அடிமைகளின் தலைவர் அய்யங்காளி, மருதா பதிப்பகம் சென்னை, 2004.

----------தென்னாட்டு அம்பேத்கர் தளபதி எம். கிருஷ்ணசாமி, தளபதி எம். கிருஷ்ணசாமி, சமூக விடுதலைக்கான அறக் கட்டளை, பள்ளிகொண்டா, 2004.

**வெகுஜனன்; இராவணா,** இலங்கையில் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும், சவுத் விஷன், சென்னை, 2007.

**வேங்கடசாமி, சீனி.,** பழங்காலத் தமிழர் வாணிகம், என். சி. பி. எச்., சென்னை, 1995.

**வேங்கடாசலபதி, ஆ. இரா.,** (தொ. ஆ.) பாரதி விஜயா கட்டுரைகள், காலச்சுவடு, நாகர்கோயில், 2004.

**ஸ்டாலின் ராஜாங்கம்,** தீண்டப்படாத நூல்கள், ஆழி பதிப்பகம், சென்னை, 2007.

**இதழ் கட்டுரைகள்**

**அலாய்சியஸ், ஞான.,** தமிழ்ப் பௌத்தம் : ஏடுகளும் இயக்கங்களும், **தலித்,** பக். 33 - 47.

ஈழத் தமிழர்களின் தேசிய இயக்கம், சமூகசக்திகள் பற்றிய விவாதத்திற்கான முன்னோடிக் குறிப்புக்கள், **உயிர்ப்பு,** தை 2001.

**ரவிக்குமார், து.,** எழுதா எழுத்து பத்திரிக்கைகளும் தலித்துக்களும் சில வரலாற்றுக் குறிப்புக்கள்., **தலித்,** பிப். 2004, பக். 2 - 11.

**முற்றுகை,** காலாண்டிதழ், இதழ் 1, சென்னை, 2008.

ஆங்கிலம்

**Dr. B.R. Ambedkar,** Dr. Babasaheb writings and speeches, vol 5, Education Department, Goverment Maharashtra, Bombay, 1989.

**Gailomvedt,** Cultural Revolt in a colonical society. The Non-Brahman Movement in Western India 1873 to 1980, Scientific Sociatlist Education Trust, Bombay, 1976.

**Irschick F. Eugene,** Politics and social conflict in south India. The Non - Brahman movement and Tamil Seperatism 1916 - 1929, university of califoronia Press, califoronia, 1969.

**T.P. Kamalanathan,** Mr. K. Veeramani, M.A., B.L., Is Refuted and The Historical facts about the Scheduled caste's struggle for Emancipation in south India, Ambedkar's Self Respect movement Tiruppattur, 1984.

**Managala murugesan N.K.** Self Respect Movement in Tamilnadu 1920 - 1940, Koodal publishers (Y.n.m)

**Manickam, S.** Slavery in the Tamil country, A Historical overview, The christian Literature society, Madras, 1982.

**Mohan,** P. E., Scheduled castes, History of Elevation Tamilnadu, 1900 - 1955, New Ere publications, Madras, 1993.

**Patil P.G.,** (Tr.) Slavery, collected work of mahatma Jotrirao Phhle vol II, Education Department, Government of Maharashtra, Bombay, 1991.

**Mane S.** Glimpses of socio cultural Revolts in India samrudh Bharat Publications, Mumbai, 2006.

**Varadarajulu Naidu,** The justice movement 1917, Dravidan kazhagan, Madras, 1932.

தமிழகத்திலிருந்து இலங்கைக்குப் புலம்பெயர்ந்த தாழ்த்தப்பட்ட தமிழர்களால் கொழும்பு நகரிலிருந்து வெளியிடப்பட்ட மாதஇதழ் 'ஆதிதிராவிடன்' (1919–1921). திராவிட இயக்கத்தின் முன்னோடி அமைப்பான நீதிக்கட்சியின் கருத்தியல்களோடு இந்த இதழ் தொடக்க காலகட்டத்தில் நல்லுறவு கொண்டிருந்தது. இவ்விதழ் வைதிகசார்பு கருத்துக்களை வெளியிட்டு வந்த போதிலும் சாதி ஒழிப்பு மனுதர்ம எதிர்ப்பு, தாழ்த்தப்பட்டோர் விடுதலை முதலிய குறிக்கோள்களில் எவ்விதக் கருத்தியல் சமரசத்தையும் மேற்கொள்ளவில்லை. தமிழகத்தில் நடைபெற்ற முதல் சாதிமறுப்பு மணம், மதமாற்றம் பற்றி சில புதிய தகவல்களை ஆதிதிராவிடன் பதிவு செய்துள்ளது. இத்தொகுப்பில் தாழ்த்தப்பட்டோர் அரசியல், கல்வி, சமயம், இலக்கியம், பெண்கள் முன்னேற்றம் தொடர்பாக ஆதிதிராவிடன் இதழில் வெளியிடப்பட்ட கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. மகாத்மா ஜோதிராவ் ஃபூலே இயக்கத்தைச் சார்ந்த மன்னர் சாகுமகாராசர் உரையின் தமிழ்வடிவம், ஃபூலே இயக்கத்திற்கும், தமிழகத்திற்கும் இடையேயான தொடர்பை விளக்கும் ஓர் அரிய ஆவணமாக இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.

BOOK
LAB
புத்தகக் கூடம்

ISBN 978-81-907453-4-5

சந்தியா பதிப்பகம்

விலை
ரூ.150/-